கேனோபநிடதப் பேருரைகள்

சுவாமி சின்மயானந்தா

சின்மயா மிஷன்

4, கதீட்ரல் கார்டன்ஸ்

சென்னை-6

பிரசுரம் :
புருஷோத்தம தாஸ்
4, கதீட்ரல் கார்டன்ஸ்
சென்னை-6

ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்ப்பு :
தி. சேஷாத்ரி

விலை ஒரு ரூபாய்

அச்சகம் :
தேவி பிரஸ், சென்னை-10

உள்ளுரை

			பக்கம்
I	நூன்முகம்	...	i
	பரம்பொருளுக்கும் நமக்கும் உள்ள உறவு	...	xvii
	கர்மத்தின் சட்டம்	...	xxxiii
	மனிதன் உயர்வும் தாழ்வும்	...	xxxxi
	உபநிடதங்கள்	...	xxxxx
	நடைமுறை	...	xxxxxviii
	உபாசனையும் பக்தியும்	...	xxxxxxii
II	கேனோபநிடதம்: முகவுரை	...	xxxxxxv
	சாந்தி மந்திரங்கள்	...	xxxxxxxii

கேனோபநிடதம்

1. முதல் அத்தியாயம் ... 1
2. இரண்டாம் அத்தியாயம் ... 32
3. மூன்றும் அத்தியாயம் ... 61
4. நான்காம் அத்தியாயம் ... 66

சுவாமி சின்மயானந்தா

ஓம்

குருப்யோ நம :

அணிந்துரை

சகோதர சாதகர்களே,

எம்பிரானின் பணியாக ஸ்ரீசுவாமி சின்மயானந்த சுவாமிகள் பூனாவில் 1951-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஞானப்(பிரசார) யக்ஞத்தை ஆரம்பித்தார்கள் இந்த யக்ஞம் பழைய சம்பிரதாய முறையில் அமைந்த ஒன்றாய் இராமல் ஆய்தல், தெளிதல் என்ற முறையில் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒன்றாகும். ஒருவர் பேசப் பலர் கேட்கும் யக்ஞம் அல்ல அது. ஆனால் உபநிஷதங் களுள் ஒவ்வொருவரும் தாமே முழுகி ஒளிந்து இருக்கும் முத்துக்களை வெளியேற்ற உதவியாக ஒவ்வொருவரும் சமமான பங்கு கொள்ளத்தக்க அரங்க மேடையாக அது அமைந்தது.

பிரும்மத்தைத் தேடிச் செல்லும் யாத்திரை அது. அந்த யாத்திரையில் சுவாமிகள் கப்பல் செலுத்தத் திசை காட்டும் கருவியாக உதவினார்கள். வேதாந்தப் பேரலைகளை ஆளக்கூடிய நன்கு அறிந்த மீகாமனாக முன் பின் அறியாத நடுக் கடற்பாதையில் நம்மைக் காத்தார்கள். இப்பொழுது நாம் ஒரு வழியைமட்டும் போட்டுக் கொள்கிறதிலேயே ஈடுபட்டிருந்தபோதிலும்

கூட நம்முள் ஒவ்வொருவரும் தன் அறிவு ஆற்றலுக் கேற்றவாறு ஒரு தனிவழி செல்ல இயலும்.

நாம் இதை ஆராய்ச்சி யக்ஞம் என்று சொல்லு கிறோம். ஏனென்றால், உபநிஷதப் படிப்பு தப்பான மதிப்பீடுகளை மறத்தலும் வாழ்வின் உண்மையான மதிப் பீடுகளைத் தேடிக் காணலுமாம்; மேலும், அன்று ரிஷிகளை இந்தப் புறப்பொருள் உலகின் அடிப்படை உண்மையை யும் இவற்றிற்குப் புறத்தேயும் பின்னலும் இருக்கும் தத்துவத்தையும் விசாரித்தறிய எந்த ஓர் ஊக்கம் தூண்டிற்றோ அந்த ஊக்க உணர்வை விசாரித் தறிவதுமாம்.

ஸ்ரீ சுவாமிஜி அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வந்த படி அடிப்படையில் ஒன்று கூடிப் படித்து விவாதிப்பது தான் அழுத்தம் பெறக்கூடியதாகும். மஹாஞான ஸ்ரீ சுவாமிஜி வழிகாட்ட நாம் அவ்விதம் கூடி விவாதித் தால் அது உபநிஷத மந்திரங்களைப்பற்றிய நம் அறிவை தெளிவுபடுத்தி ஒற்றுமைப்படுத்தவும், நம்முடைய அறிவை மேலும் கட்டி அமைக்கவும் உதவும் என்று நாம் நம்புகிறோம்.

பூனவில் நடந்த நூறு நாள் ஞான யக்ஞம் நம் ஒவ் வொருவருக்கும் அழைப்பு; அறைகூவலுமாகும். மகோன்னத முயற்சியொன்றில் பங்கெடுத்துக்கொள்ள நமக்குக் கிடைத்த அழைப்பு அந்த யக்ஞம். நாம் மீண்டும் கல்வி பெறவும் வாழ்வின் உண்மைப் பெருமை களில் ஈடுபடவும் நமக்கு ஒரு வாய்ப்பை அளித்தது.

யக்ஞம் உபநிஷதங்களுக்கு முன்னுரையாகவும் அவற்றைப்பற்றிய விவாதமுமாகும். தானே தனக்காக ஒவ்வொருவரும் அவைகளின் செய்தியை விசாரித்து அறிவதாகும். அது சமர்ப்பண மனோபாவத்தில் திட்ட

மிட்டு நடத்தப்பட்ட ஒன்று. இந்த உயர்ந்த சிறந்த முயற்சி வெற்றியுடன் நன்முடிவுபெற ஒவ்வொருவரும் பங்கெடுத்துக்கொண்டு ஒத்துழைக்கவேண்டியது இன்றியமையாதது.

ஆகவே எல்லோரையும் நாம், "இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும், உண்மையைத் தேடுகின்றவர்களுடைய திருத்தொண்டர் கூட்டத்தில் சேர்ந்து கொள்ளவேண்டும்," என்று அழைக்கிறோம்.

விழிமின்; எழுமின் — இலட்சியத்தை அடையும் வரை நிற்காதீர்கள்.

தில்லி
1—4—56

பக்தகோடிகள்

1. நான்முகம்

இன்று நாம் நேர்மை நெறி பண்பாடு இவற்றின் தரத்தில் மிகவும் இழிந்திருக்கிறோம். அத்துடன் நாம் சமயத்தையும் அடியுடன் மறந்துவிட்டோம் என்றால் அழிவை நோக்கி நாம் போகும் வேகம் மிகவும் விரைவு பெற்றுவிடும். நம் மதந் தளர்ந்திருக்கிறது என்று கொண்டாலும்கூட "மதச்சார்பற்று" இருப்பதைவிட அந்த மதத்தைக் கொண்டிருப்பது எவ்வளவோ நல்லதாகும். புத்திசாலித்தனமான செயல் முயன்று அம்மதத்தில் ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டுவருவதுதான். சரித்திர பழங் காலத்தில் நாம் பெருமை கொண்டிருந்தோம். பண்பாடு, நாகரீ கங்களின் உச்சியில் நின்றிருந்தோம். அந்தப் பெருமையை, மறுமலர்ச்சி பெற்ற மதத்தின் நிரூபிக்கப்பட்ட பெருமையில் நாம் மீண்டும் அடைய முடியும்.

இந்தியாவில் ஹிந்து மதம் என்றால் ஏதோ சில புனிதமான நம்பிக்கைகளின் தொகுப்பு, உண்ணுதல், உடுத்தல் உரை யாடுதல் முதலிய செய்கைகளில் நாம் கையாளவேண்டிய முறை களின் குறிப்பிட்ட சட்டம் என்ற அளவில்தான் பொருள்பட ஆகிவிட்டிருக்கிறது. நம் ஈசுவர மூர்த்திகள் தெய்வத் தன்மையி லிருந்து இழிந்து பக்தர்கள் விரும்பும் பொருள்களுக்கு "பெர்மிட்" தரும் கண்ட்ரோல் அலுவலகங்களாக மாறிவிட்டனர்.

இந்த வீழ்ச்சி சரித்திரத்தில் திடீர் என எதிர்பாராமல் ஏற்பட்ட பலனல்ல. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஹிந்து சமயம் அரசர்களின் ஆதரவையோ செல்வந்தர்களின் ஊக்கத் தையோ பெற முடியாமல் வேண்டாத குழந்தையாக இருந்து வருகிறது. ஒரு காலத்தில் வேதாந்திகள் அரசாங்கத்துக்கு அறிவுரை தரும் நல்ல நிலை இருந்தது. கடந்த சில நூற்றாண்டு களாக அறிவுரை தரும் மக்கள் பகுதி ஆளும் பகுதி இரண்டுமே

நேர்மை இழந்துவிட்டன. அதன் பயனும் இன்று இந்த நிலைக்கு வந்து சேர்ந்துவிட்டோம். படித்தவர்கள் உண்மையில் சீறுவது பொதுப்பட இந்த "மதமற்ற" நிலையை எதிர்த்துத்தான்.

ஹிந்து மதம் முழு வளர்ச்சிக்கான சாஸ்திரம். அதில் ஒரு உயிர்ச் சக்தி உண்டு. அதை நாம் எல்லோரும் பெற்றுப் பகிர்ந்து கொள்ளலாம். தனி மனிதன், சமூகம், நாடு, உலகம் இவை களின் எந்த அளவிலும் எழும் எந்தப் பிரசினைக்கும் அதில் ஒரு பதில் கிடைக்கும். நமக்கு இன்று "இவைதான் ஹிந்து மதத்தின் முதுகெலும்பு போன்ற பகுதிகள்" என்று சொல்லிக் கொடுக்கப் பட்டிருக்கின்றனவே அந்த அநேக நம்பிக்கைகளை நம்முடைய புனித நூல்களில் காண முடிவதில்லை. ஹிந்து மதம் வேதாந்த மதமாகும். உபநிஷதங்களின் 'நித்திய மதமாகும்.'

மனிதன் உண்மையில் அதாவது வளர்ச்சியின் எல்லை உச்சி முடிவில் கடவுளேதான் என்று உபநிஷதங்கள் ஐயந்திரிபற்ற செவிகளில் எடுத்துச் சொல்லுகின்றன. அவனுக்கு வாழ்க்கை யின் அன்றாட அனுபவங்களை ஒரு ஒழுங்கு முறையுடனும், விஞ்ஞானப் போக்கிலும் வாழும்படி போதிக்கப்படுகிறது. அப் பொழுதுதான் அவன்மேல் சொறிந்து கொட்டி அவன் உள்ளழ கையும், தெய்வத் தன்மையையும் மறைத்து நிற்கும் குறைபாடு களின் உருட்சிகளைத் தெரிந்தும், முயன்றும் நீக்கிக்கொள்ள இயலுகிறது. ஒருவன் மனதறிய முயன்று எவ்விதம மலம் நீக்கி தன் உண்மைத் தன்மையை அடையலாம என்று காட்டித் தருவதுதான் ஹிந்து மதம். ஹிந்து மதததின் கோவிலில் உண்மை ஒளி எரிகிறது. அதைத்தான் பெரியவாகள புராணங் கள், இதிகாசங்கள, சாஸ்திரஙகள் மறறும ஆயிரதொரு கற்பனைகள் வியாககியானஙகளின் அடர்ந்த மறைவையே பூசித்து வருகிறார்கள். மேலே அடாந்த இநத மறைவுகள் காடாய் வளர்ந்துவிட்டன. உண்மை ஒளி சிறிய ஒளி அதன் உண்மை அழகும், பெருமையும் நன்கு மறைககப்பட்டு விடட காரணத தால்தான், கல்லூரியில் படித்தும உண்மையறிவிலலாதவாகள் பழம்கால சமஸகிருத நடையும், மொழியும புரியாமல், கோவிலை

மறந்து அதன்மேல் மண்டிக்கிடக்கும் பூமாலை தோரணம் ஆலவட்டம் திரைச் சீலைகளைப் பார்க்கிறார்கள். உபநிஷத ஞானயக்ஞத்தின் கருத்து நம் மதத்தின் கிரந்தங்களிலேயே புகுந்து அவைகளின் கருத்துரைகளை நம் அன்றாடம் பிரசினைகளைத் தீர்க்க உதவும்படி கொண்டுவந்துதர முயலுவதுதான்.

மதம் அன்புடன் இடும் உத்தரவுகளை மதத்தின் பற்றுக் கொண்டவர்கள் ஏற்று நடக்கவில்லை என்றால் மதம் ஆற்றல் மலடாகிவிடுகிறது. மதம் என்ன அரசியல் சமூக அல்லது கலாசாரத் துறையில் எடுத்துக் கொண்டாலும் போற்றிப் பின்பற்றப்படாத எந்த கொள்கைதான் நமக்கு நன்மை பயக்க முடியும் ?

நம் பண்பாட்டைப் பற்றிய புத்தகங்களின் பழம் பேச்சு இறந்த பெருமைப் பேச்சு. அது இன்று நமக்கு உதவாது சுவைக்கு. வெளியார்:காணாத ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் காட்டுமிராண்டிக் குகை மனிதர்கள் நவீனகால மக்களைப்போல் பணபு அடையவேண்டும் என்று விரும்பினால் பேச்சுக்களாலோ அல்லது பண்பாடடைந்த மக்களின் பெருமை பேசும் இலக்கியத்தை வரிவிடாமல் படித்தோ அந்தப் புரட்சியைக் கண்டுவிட முடியாது. அவாகள் நாகரீக வாழ்வின் நன்மைகளை அறிநது கொள்ளல் வேண்டும். அவற்றின்படி வாழவும் வேண்டும். ஒனறைப் பறறிய அறிவின் பயன் செயல்படும் போதுதான் கிட்டமுடியும். நாகரீகமடைய விரும்பும் அவர்கள் தஙகள் அநாகரீகக் கருத்துக்களையும் செயல்களையும் அறவே விட்டுவிடல் வேண்டும். உண்மையில் "விட்டுவிடல்" இல்லாமல முன்னேற்றம் இல்லை. பிள்ளைப் பருவத்தில் விளையாட்டுக்கள் தரும் புகை இன்பத்தை விட்டுவிடத் தயாராகாத போனால் நாம் சிறந்த செயலபுரியும் காளைகளாக வளரமுடியாது. மீணடும் காளைப் பருவத்தின் வேகப் போக்கை ஒழிக்காத போனல மதிப்புப் பெற்ற முதுமையின் உயாந்த தளயகளை அடைய முடியாது.

உலகாயத வாழக்கையின் நிர்த்தரமான மிருக ஆசைகளை விட்டுவிட்டு அவற்றிற்குப பதிலாக உண்மையான சுயவாழ்க்

கையின் உயர்ந்த மதிப்பீடுகளை விரும்பி ஏற்கத் தயாரில்லை என்றால் நாம் மதத்தின் வரப்பிரசாதத்தைப பெறமுடியாது. சமையலைபபற்றிய புத்தகத்தை எவ்வளவு தெளிவாகப படித்தாலும், படித்த அளவில் பசி தீரப்போவதில்லை. மருந்தின் பெயரைத் தியானம் செய்து ஜபம் செய்தாலும் வியாதி தீராது. அதை உள்ளுக்கு உண்டாலதான் வேண்டிய நன்மை கிட்டும். அதே போல மதம் நன்மை பயக்க அது காட்டித் தரும் உண்மைகளை வாழ்ந்து பாரத்தேயாக வேண்டும்.

வாழ்க்கை குறுகியதுதான். அதற்குள்ளேயே மனிதன் எல்லா மதங்களுக்கும் உண்மைப் பகுதியான அந்த நித்திய இன்பத்தையும் ஆனநதத்தையும் அடைந்துவிட முயல வேண்டும். உபநிஷதங்கள் கூறும் உண்மையின் ஒளியில் நாம் நம்முடைய சமுதாய வாழ்வில் மதம் ஏற்படுத்தித் தந்திருக்கிற நிறுவனங்களின் உண்மைக் கருத்தை அறிந்து கொளளமுடியும். இறுதியில் நாம் பூரண வளர்ச்சியின் சாஸ்திரத்தை அறிநது கொள்ளுவோம். அதுதான் ஹிந்துமதத்தின உண்மைப் பொருளாம்.

எனவே நாம் ஹிந்து மதததின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள முயலுவோம். நமக்காக மட்டுமல்லாது உலகம் பூராவுக்குமாக ஒரு முடிவு செய்து கொள்வோம; நமமுடைய பழம் பெரும் மதம் எடுத்துக கூறும உணமையை நமபினால் அதன்படி இயன்றவரை நடபபோமாக. நாம் ஹிந்துக்களாக உண்மையிலேயே ஆகி நம் நாடான இநதியாவை நாம் எவ்வளவு பேர் இருக்கிறோமோ அவவளவு புததர்கள், சங்கரர்கள் விவேகானந்தர்கள் கொண்ட நாடாககுவோம்.

மதம் என்பது என்ன?

மதம் மனிதனுக்குப் பெருமை தரும் ஒன்று. அது மிருகங்களின் இயற்கை உணர்வு அல்ல. மிருகம் உண்கிறது, உறங்குகிறது, இன்பம் துய்க்கிறது. அத்துடன் அதன் வாழ்க்கையின வளைவு சரி. மனிதன இதையெல்லாம் பெற்றுவிட்ட பிறகும் திருப்தி அடைவதில்லை. வாழ்க்கையின சிறநத ஒரு நோக்கத்தை நிறைவேற்ற மட்டுருத ஆசை கொள்ளுகிறான். அவனுக்கு அத்தியாவசியமான இந்தத தேவைகள கிடைக்காதவரை அவன் முழுவதும ஈடுபட்டு அவற்றைப பெற உழைக்கிறான். இவை கிடைத்த உடனே அவன் தன்னுள்ளே எழும் உள் விசாரணைக் குரலைக் கேட்கத் தயாராகிவிடுகிறான்.

இந்த விசாரணைப் பழக்கம் ஆத்ம ஆசை நன்கு வளர்ந்த மனிதனுககுததான் ஏற்படுகிறது. அதாவது மனிதர்களுள்ளும் இரண்டு கால்கள் கொண்ட பிராணிகள் இருந்துவிடலாம். புலிகள், ஓநாய்கள், மான்கள், பாம்புகள், தேள் எல்லாம் இருக்கலாம. அப்படிப்பட்ட மனிதர்கள் வளர்ச்சிப் படியில் அடித்தளங்களில் உள்ளவர்கள். அவர்கள் உள்ளே ஏற்படும் ஆன்ம ஆராய்ச்சி விசாரணைகளின் சநதேகங்களையும், சங்கடங்களையும் கேட்கக் காது இல்லாதவர்கள், சந்தேக வியாதி இல்லை. அவர்களுக்கு மருநதும் வேண்டியதில்லை.

ஆனால் முழு வளர்ச்சியடைந்த மனிதனை ஆன்ம விசாரணையின் ஆர்வம் முடுக்கி அவன உணர்ச்சிகள், அறிவு இவற்றின் எல்லைவரை போகுமபடி துரத்துகின்ற ஆத்மாவின் அந்த அமைதியற்ற ஆட்டத்தில அவனை உள்தத்துவமான என்ற புதிரைக் கண்டு அதனை சிறிதும் புதுமையில்லாம ஆழ்கிறான். 'நான் எங்கிருந்து வநதேன்? எங்கே போகிறேன? ஏன வந்தேன்? அர்த்தமற்ற வெற்றுச் சம்பவமா உயிர்பெற்று வந்தது? அர்த்தமுண்டா, நோக்கமுண்டா?' என்றெல்லாம் கேட்டுக் கொள்கிறான்.

மனிதன் முற்றிலும் வளர்ச்சியடைந்திருக்கவேண்டும்; அவன் அனுபவங்களை விழிப்புடன் ஏற்று வாழ்ந்திருக்கவேண்டும்; வாழ்க்கைச் சம்பவங்களைத் துருவி ஆயும் கண்கள் கொண்டு விழிப்புடன் நோக்கியிருக்கவேண்டும். அவன்தான் உள்ள வளர்ச்சியைப்பெற்று "ஆத்மாவின் பதற்றத்தை" உணர முடியும். மதம் அந்த மனிதனுக்குத்தான பேசுகிறது. அவனைத்தான் விளக்கம் தந்து நம்பிக்கை காட்டி அழைத்துச் செல்கிறது. அவன்தான உண்டு, உறங்கி, குடித்துச் சிரித்து அழுவதைவிட மிகச் சிறந்த தெய்வீக நோக்கம் கொண்டது, அன்றாட வாழ்க்கை என்று அறிந்துகொள்கிறான.

ஒவ்வொரு உண்மை மதத்துக்கும் இரண்டு அங்கங்கள் உண்டு. ஒன்று செய்யவேண்டிய கிரியைகளைப்பற்றிய விதிகள்; மற்றொன்று வேதாந்த சூட்டுக்கள். நம்மில் பலர் முன்னதையே மதம் என்று ஏற்கிறோம். வேதாந்தமற்ற (கிரியைகள் வெளிச் சட்டங்கள் மட்டுமே கொண்ட) மதம் திருட்டு நம்பிக்கையாகி விடும். அப்படியே மதத்தின் அந்தப் பகுதியில்லாத வெறறு வேதாந்தம் பைத்தியக்காரத்தனமாகும். வேதாந்தம் கிரியைகளுக்கு நோககம் கறபிக்கிறது. ஆற்றல் தந்து லட்சியத்தையும் ஏற்படுத்துகிறது. இரண்டும் சேர்ந்தே மதத்தின் முழு அர்த்தத்தையும் வெளிப்படுத்துகின்றன.

மதம் உண்மையில் வாழ்க்கையின் இலட்சியம். அதன் தன்மையைப்பற்றியே தெளிவாக விசாரணை செயவதையே தன உள் கிடையாகக் கொண்டிருக்கிறது. அது ஆன்மீகப் பயிற்சிகளின் பரநத வழிமுறைகளின் விவரணமுமாம். அவற்றை எந்த நிலையிலுள்ள மனிதரும் தாம் வளர்ச்சி ஏணியில் இருக்கும் படியிலிருந்தே ஆரம்பிக்கலாம்; காட்டப்பட்டிருக்கும் இலட்சியத்தை நோக்கி அங்கிருந்தே யாத்திரை தொடங்கலாம்.

மற்ற எந்த மதத்தைக் காட்டிலும் வேதாநதம் சத்தியப் பொருளைப்பற்றி விரிவாகவும, தெளிவாகவும் பேசுகிறது. ஞானிகளுடைய நேரடியான நெருங்கிய அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு வேதாந்தம் பேசும் பேச்சுக்கள் பரம்

பொருள் மனிதன் உள்ளே இருக்கிறது என்ற முடிவுக்கு நம்மை அழைத்துச் செல்லுகின்றன. மனிதன் தன்னை அறியும்வகையில் ஏற்பட்டுள்ள சில தப்பான அபிப்பிராயங்களை நீக்கிக் கொண்டுவிட்டானானால் தானே எங்கும் ஊடுருவி நிற்கும் சத்தி யப்பொருள் என்று நன்றாய் அறிந்துகொள்வான். மனிதன் கட்டுக்குளளும் எல்லைகளின் பிடிக்குள்ளும் சிக்கி உழல்கி றான். அதனால் அங்கலாய்க்கிறான். எல்லா உண்மை மதங் களுமே அவனுக்கு மிகவும் தேவையான மன நிம்மதியையும் ஆறுதலையுமே தருகின்றன.

ஒரு உவமை சொல்லலாமா? ஒரு மனிதன் கொஞ்சம் தன் மூளையை இழந்துவிட்டான். மாடியில வநத அவன் பால்கனிக்கு வந்து சேர்ந்துவிட்டான். மேலே மேகங்கள் திரண்டுவருகின் றன. மழைக் கால இரவில் இரத்தத்தை உரையவைக்கும குளிர் கௌவிக்கொண்டு வருகிறது. அவன் கலங்குகிறான். அழு கிறான். உழல்கிறான். பயமும், வருத்தமும் அவனைக் கவ்வி அலற வைக்கின்றன. அதே சமயம் அவனுக்குப் பின்னால் உள்ளே செல்லும் வாயில் பாதி திறந்து நிற்கிறது. உள்ளே நல்ல படுக்கை, நல்ல சாப்பாடு எல்லாவற்றையும் தயாராக வைத்துக் கொண்டு அவன் காதலி நிற்கிறாள். அவன் திரும்பினால் போதும். தன் சொந்தமான வசதி நிறைந்த வீட்டையும் அதன் இனிமையையும், இன்பத்தையும் அறிந்துகொள்ளலாம். இஷ் டப்பட்டவுடன் தடங்கல் இன்றி நடந்து உள்ளே சென்று ஆனந்தமாய் அனுபவிக்கலாம். அப்படித்தான் நாமும் வாழ்க்கை யின் பால்கனியில் நிற்கிறோம். நம் அருமை மதம் உள்ளே அழைக் கிறது, 'மாடியின் வெளிப்பகுதியை விட்டுவா. ஒளி நிறைந்த உள் ஹாலுக்கு வா. உனக்கு எல்லா இன்பங்களும் கொடுத்து உன்னைப் பார்த்துக்கொள்வேன்' என்று. ஆனால் மூளை புரண்ட வீட்டுக்காரன் மதத்தின் அழைப்பைக் கேட்கிறான் இல்லை. சம்சாரியாக அல்லலுறுகிறான்.

தொல்லை நீங்கும் வழி சுலபமே. உள்பக்கம் கண்ணைச் செலுத்தினால் போதும். நாம் வெளிப் பொருள்கள் பக்கமே திரும்பி அமைதியையும் ஆனந்தத்தையும் தேடுகிறோம்.

குறைந்து அழியும் குணம்கொண்ட பொருள்கள் நாம் வேண்டும் அழியாத நித்திய ஆனந்தத்தைத் தரமுடியாது. அது இயற்கை யாகவே ஆகாத ஒன்று அங்கே அல்ல; அது இங்கே, உள்ளே பெறப்படவேண்டிய பொருள். "தலையை நேர் மறுபக்கம் திருப்பு. உள்ளே பார். நீ தேடும் பொருள் அதோ உன் எதிரே." பெரும் மதங்கள் எல்லாம் இந்த உண்மையைத்தான எடுத்துச் சொல்லுகின்றன. ஞானிகளும் யோகிகளும் உண்மை, உண்மை, உண்மை என்று ஒப்பம் கொடுக்கிறார்கள்.

பொறிகள் அறியும் புறப்பொருள்கள் உண்மையில் இன்ப அமிசம் கொண்டவையல்ல. சுவை தருவதுபோனறிருக்கும சிறிய இனபமும் சீககிரமே புளித்துவிடும; கசநதுவிடும். புறப் பொருள அனுபவங்களே வருத்தம கொணடவைதாம். மதம் அவற்றின் தனமையையோ நிகழச்சியின முறையையோ மாற்ற முயலுவதிலலை. உலகம் நிததிய விதிகளுக கட்டுபபட்டு இயஙகிக் கொண்டுதான் இருக்கும். மதம தனனை நமபும் மனிதனுக்கு வாழ்க்கையை அதிக விறுவிறுபபுடன் சநதிக்க உதவியளிக்கிறது. அவனுக்கு ஒரு மனத்தின் சம நிலையையும ஆனமீக அசஙகாத தன்மையையும அளிக்கிறது.

புறப்பொருள்கள் மாறாத நிலையிலும் அவை தரும் உணர்ச்சி யனுபவங்கள ஆளுககு ஆள மாறுகின்றன. ஒரு உதாரணம எடுத்துககொளளலாம். ஒருவா தன் மனைவியுடனும, இரண்டு பையனகளுடனும ஒரு வீட்டில் வசிககிறார். அவாகள ஒரேவித உணவை உணகிறார்கள. ஒரே ரேடியோ அவர்களுக்குக் கானம தருகிறது. ஒரே விசிறி அவாகளுககுக் காற்று தருகிறது. ஒரு ஞாயிறு மாலை அவர்கள் எல்லோரும இந்தவிதம அமர்ந்திருக்கும் போது அவர்கள் உணர்ச்சிகள் எல்லாம் ஒரே விதமாக இருக்குமா? இருக்காது என்றால் என்ன காரணம்? 'எல் லோரும் ஒரே விதமான அனுபவம் பெற இயலுமா?' எனறு கேட்கப்போனால அனுபவம எனபதே எனன எனற கேள்வி எழும. ஒரு புறபபொருள (அல்லது புறபபொருள்கள்) மனிதன் மனதிலும், புத்தியிலும் குறிப்பிட்ட இட நேரத்தில் பட்டு

எழுப்பும் எதிரொலியே அனுபவம் அல்லவா! அதே பொருள் மாறும் காலங்களில அதே மனிதனுக்கு மாறுபட்ட அனுபவத்தைக் கொடுக்கலாம். அனுபவங்கள் எத்தனைமைத்தாயினும் மனது எதிரொலி எழுப்பவேண்டும் என்பது பொதுவான உண்மை.

உலகம் நாம் கட்டுப்படுத்த முடியாத ஒரு சட்டத்தின் கீழ் வளைந்து வருகிறது. புறப் பொருள்கள் நம் மனதில பட்டே எதிரொலி எழும்பவேண்டும். அதுதான் நம் அனுபவ உணாச்சிக்கு வித்து. ஆகவே நாம் நம் மனதை எல்லாப பொருள்களுக்கும், எல்லாக் காலங்களுக்கும் ஒரே மாதிரி உடன் பாடான எதிரொலியே எழுப்பத் தயார் செய்து விட்டோம் என்றல் பிறகு மனதில் ஏற்படும் எதிரொலிகள் எப்பொழுதும் உடன்பாடானவையாகவே இருக்கும. அப்படி மனதைப் பயிற்சி செய வித்துக கொண்டவனுக்குத்தான் இந்த உலகில் ஆனந்தமும, அமைதியும் கைவரும். வெளியுலகம குறைபாடுகளும, துனபங்களும் கொண்டிருக்கும்போதும்கூட, அவ்விதம் பயிற்சி கொண்டிருந்தோமானல் நாம தனித்திருந்து நமமைச் சுற்றிச் சீறி அடிக்கும் புயலையும, சுழலையும் பாதிக்கப்படாமலேயே நின்று கவனிக்கும் ஆற்றல்பெற்று விடுவோம். மாட்சிபெற்று உள் சுதநதிர உணர்வுடன் கண்ணீரையும் கேவல்களையும் கூட படாமலே நின்று சாட்சியாக நோக்குவோம். ஆம்; இது, நாம் உண்மையில் மதத்தைப் பின்பற்றி அது காட்டும் பயிற்சிகளைச் செயது எபபொழுதும் அசங்காத ஒரு மனச் சமநிலையை அடைந்தால்தான் சாத்தியமாகும்.

மனத்தின் உண்மைவேலை. அதன வரப்பிரசாதங்களின் ரகசியத் திட்டம இவைகளை அறிந்துகொண்ட பிறகு நாம் அதை நன்மை கிடைக்கும என்ற நமபிககையுடனேயே அணுகலாம். துன்பத்தை இன்பமாகவும், தோலவிகளை வெற்றிகளாகவும், நஷடஙகளை லாபங்களாகவும் மாற்றித் தரும் மந்திரக் கல்லைப் பெறும்பொழுது, அதைவிட வேறு என்ன வெகுமதியை நாம் எதிர்பார்க்கப போகிறேம்? உணமையாக மதத்தை மதிக்கும் இதயம் படைத்தவன் வெற்றிக்கு வெறியாட்டம் ஆடவும்,

தோல்விக்குத் தற்கொலை புரிந்துகொள்ள ஓடவும், கோபம் வந்தால் கொலை புரியவும், பொருமையில் பொங்கவும, ஏழ்மையைக்கண்டு ஏங்கவும், சந்தோஷம் வந்தால் கூத்தாடவும் மறந்து விடுவான். எந்த நிலைமையிலும் அவன் அசங்கமாட்டான். பதறறமடையமாட்டான். அவன இதயம அமைதி, சமாதானம, சுகத்தின் ஆழ்கடலாக இருக்கும்.

அப்படிப்பட்டவன் தெய்வமனிதன், அவன் சாது, மகாத்மா, திர்க்கதரிசி. மதம் அப்படிப்பட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர்கள், விவேகானந்தர்கள், சங்கரர்கள், புத்தர்கள், கிறிஸ்து, முகம்மது நபிகள் நிறைந்த உள்ளம் படைத்து வாக்களிக்கிறது.

எல்லா மதங்களும் காட்டும் வழி ஒன்றுதான். தப்பான 'தான்' எண்ணத்தை விடு. அது ஏற்படுத்தும் மாற்றங்களை அகற்று. அழுகைகளும், அவதிகளும் அந்த "நான்" பேயின் செயல்களே. அந்தக் கடவுளின் பாதத்தில் அன்புடன் சமாப பித்துவிடு. இடைவிடாத விசாரணையில் "அகத்தை" லயப படுத்து. மெய் பொய் விளங்கியவுடன் அகக் கனவு மடிகிறது. தன் தனமையில் உள்ள எதிரிடைகளை ஒழித்து தெய்வவாழ்வின் உடன்பாட்டுச் சக்தியால் அதை நிறைத்துப புரட்சி செய்வதன் மூலம் அகத்தைத் தெய்விகமாக மாற்று. எழு, விழி. லட்சியத்தை அடையும்வரை தயங்காதே.

மதம் விஞ்ஞானங்களின் தலையான விஞ்ஞானம். அது நம் உண்மை நிலையின் தன்மைக்கு பரிபூரண சச்சிதானந்த நிலைக்கு அழைத்துச் செல்கிறது. அஞ்ஞானத்தால் ஏற்படும் பிடிப்பை நீக்கும் மதம்—வேதாநதம்.

மிகவும் முக்கியமான உபநிஷதங்களுள் ஒன்ருன கடோப நிஷத்தில் ஒரு சாதகன யமனின வாசலுக்கே போய் விடுகிற கதை சொல்லப்படுகிறது. அவன் யமனைக் கண்டு பரம ஞானத்தைப் பற்றிக் கேட்கிருன். அதுதான் உண்மையான வேதாந்த மாணவனுக்கேற்ற ஊக்கமாகும். சாவும், வாழ்வும மாறுபாடு தெரியாதபடி அவ்வளவு நெருங்கியவை. சாவையும் தேடிப்

போகும் முயற்சிதான் உண்மையான வாழ்வாகும். உண்மையும், உழைப்பும் கொண்ட சாதகனுக்குச் சாவு என்பதே கிடையாது.

அந்தக் கருத்தில்தான் நம் முனிவர்கள், மகாத்மாக்கள், அவதார புருஷர்கள், தேவ தூதர்கள் எல்லோரும் அமரர்கள் என்று நாம் கருதுகிறோம். சாஸ்திரஙகளும் எடுத்துப் பேசு கின்றன. ஸ்ரீராமகிருஷ்ணர், பகவான் ரமணர், எல்லோரும் அமரர்கள். ஏனெனில் அவர்கள் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தெரிந்து அதன்படி நடந்தாாகள். அவர்கள் உடலழிந்தும் வாழ்கிறார்களே. அது எப்படிச் சாத்தியமாயிற்று?

இதை விளக்குகிறேன். ஒரு முறை பூனாவில் உப்பு மலையில் வாழும் இளைத்த எறும்பு ஒன்று அகமதாபாத்தில் மீரட்டிலுள்ள சர்க்கரை ஆலையிலிருந்து வந்த ஒரு கொழுத்த எறும்பைச் சந்தித்தது. மீரட் எறும்பு அழைக்கப் பூனா எறும்பு சம்மதித்துச் சில நாட்களுக்குக் காணக்கூடிய ஆகாரத்தை எடுத்துக்கொண்டு மீரட்டுக்குச சென்றது. நாட்கள் சென்றும் அது இளைபபு நீங்கக காணோம். அழுது வடிநதுகொண்டிருந்தது. சுரத்தாகக் காணப்படவில்லை. அதைக்கண்டு வருந்திய மீரட் எறும்பு காரணம் வினவ பூனா எறும்பு 'எலலாம் சரிதான். உங்கள் ஊர், சாப்பாட்டின் ருசி எனக்குப் பிடிக்கவில்லை' என்றது. சர்க்கரை ருசி இல்லையா? மீரட் எறும்பு நன்கு கவனித்துப் பார்க்க ஆரம் பித்தது. பூனா எறும்பு வாயில் உப்புத் துண்டுகள் ஒட்டியிருப் பதை அறிந்த அது மெதுவாக அவைகளைத் துப்பச் செய்தது. பிறகு? பூனா எறும்பு சாக்கரையின் உண்மை ருசியை அறிநது வியநதது. இவ்வளவு ருசியுள்ள பொருளை அது சுவைத்ததே யில்லை!

நாமும் வாழ்வில் பூனா எறும்பாக வாழ்கிறோம். இதயத்தின் கரிப்புப் பொருளை உமிழ்; தெய்வ வாழ்வின் சர்க்கரை தித்திக் கும். பயம், கட்டு மட்டுகள், ஏமாற்றங்கள், எல்லாவற்றையும் ஒழியுங்கள்; ஆனந்தமான, எல்லையற்ற, நம்பிக்கை நிறைந்த வாழ்வை வாழலாம். வேதாந்தம் அதைத்தான் சொல்கிறது.

உபயுத் துண்டுகளை ஒதுக்குங்கள். சர்க்கரை மலையில் சாவாத இனிப்பைச் சுவைககலாம.

நம்முள்ளே தனித்தனி இரு பிரகிருதிகள் இருககினறனர். ஒன்று தெய்வம். மற்றொனறு மனிதன். மனிதன் கட்டுண் பான், அழிவான். தெயவம கட்டுமட்டற்றது. அமரப் பொருள். நாம் எதிர்மறைகளுடன அதாவது மனிதப் பிருகிருதியின் இயறகைகளுடன ஒட்டுகிறோம். பூஞ எறுமபின் தொல்லையை அனுபவிக்கிறோம. அதிலிருந்து நாம் ஒதுஙகினால் தெய்வத் தன்மையை அடைவோம். வேதாந்தத்தின சித்தாநதம் இதுவே. உபநிஷத ஞான யகஞங்கள் மனிதன் அழிந்தால் தெய்வ மாகலாம் என்பதை உறுதிபபடுததும முயற்சிகளே. நம்முள்ளே ஓர் எதிரி இருககிறான். அவன்தான் நம பேதைமைக்கும் அல்லல் களுககும் காரணம் எனின எவவளவு சீக்கிரம நாம் அவனைக் கண்டு பிடித்து வெளியேற்றி அழிககிறோமே அவ்வளவு சீக்கிரம் நாம் நம் இலட்சியத்தை அடையலாம். அநதச சத்துரு யார?

சாஸ்திரங்களும், கிரநதஙகளும் கூவிச் சொல்கின்றன. அதுதான் நம அகங்காரம். கீழ்த்தளத்தில் உள்ள 'நான்' என்ற உணாவு. அதை அழி. அல்லல் தொலையும. அதுதான் சம்சாரி. அதுதான தொலலை தருவது. அகஙகாரமதான் சத்துரு என்றால் நாம் அவனைத் தேடிக காணுவோம். அவனை அறிவோம். அறிந் தால் பிறகு சண்டையிடுவதறகுத் திட்டம் வகுக்கலாம்.

ஒவ்வொருவரும் "இந்த நான் என்ற உணர்வு எது; அது எவைகளால் ஆனது?" என்று கேட்டுக்கொள்ளுங்கள். நன்கு சிநதித்தால் வாழ்வின் பல பொருளகளின் (சம்பவங்களின்) நினைவுகளின தொகுதி எனறு அறிவீர்கள். நான் இன்னார் மகன் படித்தவன்; இப்படி வாழ்ந்தேன், நேசித்தேன், வெறுத்தேன்... ஆம்; கடந்த காலத்தில் நாம் பெற்ற அனுபவங்களின் நினைவு தான் நான். அந்த அகங்காரம் வருங்காலத்தைப் பற்றிக் கொண் டிருக்கும் ஆசைகளையும் சேர்த்துககொள்கிறது. ஆகவே அது இறந்த பழம் காலம் பிறவாத எதிர்காலம் இரண்டிலுமே காணப் படக்கூடிய ஒன்று. இன்று உள்ளதல்ல அது.

ஆகவே இந்த அகங்காரம் மாயை ; இடுப்பில்லாத ஒன்று. கனவு, நிழல் ஒன்றுமில்லாதது. ஒரு காற்றுருவம். சாவும சங்கடமும் நம மெய்ப்பொருளின் இந்த நிழலுக்குத்தான் உண்டு. நாம் அதனுடன் ஒன்றி அந்தக் கஷ்டங்களை ஏற்றுக்கொள்கிரும். இந்த நிழலிலிருந்து தனித்து வா. உன் மெய்மையை அறி. உளளே உளள கொடுங்கோலனைத் தொலைப்போம். அது நம் உள்ளங்களில் இராம ராஜ்யத்தை ஏற்படுத்தும். இதுதான் வேதாந்தம் தரும் சீரிய போதனையாம். மதங்கள் எல்லாம் இந்தப் பிசாசை அழிக்கும் வழிகளைத்தான் சொல்லித் தருகின்றன. ஆன்மப் பயிற்சி ஒவ்வொனறும் அதை அழிக்கச் செய்யும் முயற்சியே. சாஸ்திரங்கள் எல்லாமே வெற்ருயிருப்பது உண்மையல்ல என்று அறிவிக்கவே பாடுபடுகின்றன.

நம் மனம் ஒரு ஏமாற்று வித்தையை மந்திர ஜாலத்தைச் செய்துவிட்டது. உண்மையின் மேல் பொய்யை ஏற்றி அதைப் பிரித்து அறியமாட்டாமல் உண்மையை மாறுபாடாகப் புரிந்து கொள்கிறது. கயிற்றுப் பாம்பு உதாரணம் நன்கறிந்த ஒன்று. இருட்டில் கயிறறைப் பாம்பு என மிதித்த ஒருவன் 'பாம்பு கடியி'ன் பொய்யான மனத்துயருக்கு உள்ளாகிருன். எவ்வளவு சொன்னுலும அந்த "ஏமாறி வருநதுபவன்" நிம்மதி பெறுவதில்லை. ஆனுல் அந்த இடத்திற்குள சென்று வெளிசசத்தில் கயிறறைப் பாாத்துவிட்டாலோ அந்த நிமிஷமே பாம்புக் கடியின் பதறறம் பறநதோடிவிடுகிறது.

பாம்பு என்ற எண்ணம் அவள் உள்ளம் பிறப்பித்த ஒன்றே. கயிற்றின் அறிவொளி உதயமானதும் அந்த எண்ணம் அற்று விட்டது. "கயிறு என்று அறியாமை" ஒழிந்தவுடன் அறியாமை தந்திருந்த பாம்பும் அகன்று விட்டது. அதே போல் நாம் உண்மை தெரிந்து கொள்ளாதபடியால் அதன மேல் ஏறி விடுகிறது. அகங்காரம் பொய். ஆத்மாவின் அறிவு ஏற்பட்டவுடன அகங்காரம் அழிந்து விடுகிறது. ஜீவனின துயாகளும் ஒழிநது விடுகின்றன. அகங்காரத்தைப் பிரித்து எடு. சாந்தியைப் பெறு. அதுதான நம் உண்மைத் தன்மையாம்,

பழங்கால அனுபவங்களின் நினைவுத் தொகுதியும் வருங் காலத்தில் நாம் அடைய விரும்பும் ஆசைகளின் கனவுமே அகங்காரமாகும். இவ்விரண்டையும் மறந்து நாம் நிகழ் காலத் தில் மட்டுமே நன்கு வாழத்தெரிந்து கொண்டு விட்டால் அகங் காரம் அழியும். ஆத்மா ஜீவன் என்கிற அகங்கார நிலையிலிருந்து ஒதுங்கி ஆத்மாவிலேயே இருந்து இன்புறும் நிலைதான் சமாதி நிலை. யோகங்கள் எல்லாம் தம்முடைய இறுதியின்ப இலட்சிய மாகக் கொண்டுள்ள நிலையதுவே. யோக முறைக்குப் பலவழிகளை சாதகர்களுக்குத் தக்கவாறு காட்டலாம். ஆனால் சேரிடம்—ஆன் மாவை அறிதல்தான். நம்முடைய இறுதி, இலட்சியம்.

யோகத்தின் ஓரிரு முறைகளை எடுத்துச் சோதித்து யோகி களின் அகங்காரத்தை ஒழிப்பதில் அவை எவ்வாறு வெற்றி பெறுகின்றன என்று பார்க்கலாம். "பலனைக் கருதாமல் செயல்புரி. உன் சாதனைகள் மிகச் சிறந்தவையாக இருக்கும்!" என்று பகவத்கீதை கட்டளையிடுகிறது. அது எபபடி ஆகும என்று ஆழ்ந்து சிந்திக்காது மேல் எழுநதவாரியாகப் படிப பவர்கள் வியபபுறுகின்றனா.

நீ உதாரணததின மூலம் அது எபபடி சாத்தியமாகும் என்று விளககலாம். ஒரு கமிஷன வியாபாரி ஒரு பெரிய தொழி லதிபரிடம போகிறார். லட்சககணககான ரூபாய்களுககுப் பொருள வாஙக அவர் பேரம் பேசப் போகிறார். அதில் ஏராள மான ரூபாய்கள் கமிஷனுககக் கிடைகக ஏதுவுண்டு. பேரம் செயயும் நாளுககு முதல் நாள் அநத வியாபாரி தான அடைய விருககும் ஏராள லாபத்தைப்பறறி எண்ணுகிறா. எனனென்ன செயயலாம்! மிகவும் இனிமையான கறபனைகளில் அவர் தன் மனத்தின் ஆற்றலை இழநது மயக்க நிலையை அடைந்துவிடு கிறார். பயனின இன்ப நுகர்ச்சியில வலிவான கற்பனையில் மனதிழநத நிலையில் அவர் 'கார் தொழிலதிபரிடம் பேரம் பேசுவதில் வெற்றி பெறுவிட்டால்!' என்ற எண்ணம் வேறு அவரை ஆட்டி உலுக்கிவிடுகிறது. அந்த நிலையில் அவர் அங்கே சென்றால் சொல்ல வேண்டியதை சரியாகச் சொல்லாமல்

கடைசியில் தோல்வி அடைந்துவிடுகிறார். மற்றொரு வியாபாரி இருக்கிறார். அவர் பயனைப்பற்றி எண்ணிக் கனவுகண்டு அதன் இன்பத்தைக் கற்பனை செயது அதில் மனம் அழிகிறா இல்லை. ஒரு அமைதியுடனும் மன நிம்மதியுடனும், சமநிலையுடனும் செல்லுகிறார். அவர் தோற்றம், துடிப்பான எடுத்த பேச்சு, எல்லாம் தொழிலதிபர் மனதைக் கவர்கின்றன. காரியம் அழகாக முடிந்துவிடுகிறது.

சந்தை அலுவல்களிலேயே 'பயனை' மறந்த செயல் நல்ல முடிவைத் தரும் எனறால் மனிதனுடைய சிறந்த உயர்ந்த சமூக, தேசீய அலுவல்களில் அது எவ்வளவோ உண்மையாக வேண் டும். ஏற்பட இருக்கும் முடிவைப்பற்றி எண்ணுதே. செயல்படு. நம் திறமைகளையும், ஆற்றல்களையும் பிறவாத வருங்காலத்தைப் பற்றிய வீண் கனவில் அழிக்காதே. நிகழும் தற்காலத்தில் செய லாற்று. ஆனால் அது ஈசுவரனே நடத்துபவன் என்று உறுதி யாய் நம்பினாலொழிய முடியாது. அவர் நடத்தும் நாடகத்தில் நாம் நடிகர்களே. விருப்பங்கள், திட்டங்கள் அவருடையவை. நாம் ஊழியர்கள். "பயன்" அவருடையது. வேலை நம்முடையது, இந்த எணணம் வலுத்து நாம் அவாபால் நெருங்க நெருங்க நம் செயல்களும் அவர் விரும்பியவையாக ஆகும். அவா திட்டங் களை நாம் மிகவும் உறுதியுடன் நிறைவேற்றிவைப்போம்.

யாரும் சும்மா இருக்க இயலாது. செயல் புரிவதைப் பயனை எண்ணிச் செய்யவேண்டாம். செயலே மனிதன் வளர ஒரு வாய்ப்பு. அகங்காரம் ஒழிந்தால் பயன் சிறக்கும். அதிகரிக் கும். இந்தச் சாது உங்களுக்கெல்லாம் பிருமம வித்தையைச சொல்கிறார் என்ற பெருமையில் செய்யக்கூடாது எம்பெரு மான் தன் எல்லையற்ற கருணையில் தன் விருப்பத்தை நிறை வேற்ற உபகரணமாக அவர் (சாது) வளர்ச்சிக்காகவே உபயோ கிக்கிறார் என்று பணிவுடன், நம்பிச் செய்யவேண்டும். ஆன்ம வளர்சசிக்கு உங்களில் ஒவ்வொருவருக்கும், கேட்கும் இவ்வளவு பேரும் சொல்லும் உத்தரகாசியும் தேவையான ஒரு திட்டத்தின் அமிசங்களே.

இப்படி என்றும் அவருடைய விருப்பத்துக்கு உட்பட்டு அவர் கருவியாக இயங்க இயங்க தவருன அகங்காரம் மறந்து விடும். அகங்காரம் தன் வாழவை அழித்துவிட்டால் பிறகு எஞ்சு வது கோடியான தெய்வ அனுபவமதான். அவர் பாதத்தில் விழுந்து சரணுகதியடை. அகங்காரம் உணர்வு சமாப்பிக்கப்பட்டு விட்டால் மனிதக் குறைபாடுகள் முடிகின்றன. ஆத்மார்ப்பணம் செய்த பக்தன் தெய்வமாக ஆகிவிடுகிருன்.

யோகங்கள் எல்லாம் யோகியின் ஜீவ உணர்வை அழிக்கவே வழி கூறுகின்றன. அது அழிந்தவுடன் தெய்வ உணர்வு எழு கிறது உணர்ந்துகொள், மீண்டும் பார், நான் ஏழை, நான் அழியும மனிதன், நான் பணக்காரன், கெட்டிக்காரன், சம்சாரி என்றெல்லாம் கனவு காண்பதை நிறுத்து. அதற்கு வழி உள் ஒளியைக் காண்பதுதான். உடனே அதைக் காண ஆற்றலில்லா விட்டால சுலபமான "சரணுகதி" முறையைப் பின்பற்றுவோம். உயர்ந்து நின்ருல் நிழலும் பெரிதாயிருககிறது. பாதியாய வளைந் தால் நிழல் பாதியாகிவிடும். உட்கார்ந்தால் இன்னும் சிறிய தாகும். அவா பாதத்தில் விழுநதுவிடு. நிழல எங்கே? நம் முள்ளே இருக்கும் ஆத்மாவுககுள் அடங்கிவிடு. பொய் அகங் காரத்தையும் உண்மை ஆத்மாவையும பிரி. மனதை நினைவு நம்பிககைகளிலிருநது அகற்று. உளளததிலிருநது விருபபங் களைத துடைதது அலம்பு. விருப்பமறற நிலை, முழு வளர்சசி நிலை. அகஙகாரமறற நிலை, தெய்வ நிலை. ஞானம், சரியான வாழக்கை முறை அவற்றின் மூலம் இந்தப் பரம லட்சியத்தை அடை.

பரம்பொருளுக்கும் நமக்கும் உள்ள உறவு

முக்கியமான உபநிஷதங்களில் அநேகமாக நன்கு வளர்ச்சி யடைந்த சிஷ்யன் பூர்ணமான ஆசிரியரை அணுகும் காட்சி வருகிறது. உபநிஷதங்களின் சுருக்கமான கடமையும், கருத்தும் செறிந்தவையுமான மந்திரங்கள் சிஷ்யர்களுடைய உடல் மன ஆத்ம வளாசசியை விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துக்கூற மறப்பதில்லை. அவர்கள் எல்லோருமே உடல் மனம் ஆன்மா மூன்றிலுமே நன்கு வளர்சசி யடைந்தவர்கள். ஆரோக்யம் படைத்தவாகள். உடல்நல ஒளியும், பிரம்மசசாரித் தேசும் கொண் டவாகள். வாழ்க்கையின் சிறு அனுபவஙகளைக்கூட விழிபபாக இருநது அறிவதிலும் அவற்றைப் பற்றிச் சிநதித்து முடிவுகள் திரடடுவதில உன்னிப்பும், திறமையும கொணடவர்கள். இமயமலையில் ஒதுங்கி ஆசிரமம் கட்டி வாழும் ஆசிரியரை அந்தக் காலத்தில் தேடி அடைநத மாணவன் வாழ்க்கை பயனற்றது என்று உணர்ந்தவனுகயிருந்தான். படும் பாட்டுக்கும், எடுத்துக் கொள்ளும் சிரமத்துக்கும் தக்க பலன வாழ்க்கை வாணிபத்தில் கிடைப்பதில்லை என்று புரிநதுகொண்டிருந்தான்.

தகுதிவாய்ந்த அந்த மாணவன் சுறுசுறுப்பு, திறமை, துடிப்பு, முதலியவை பெற்று ஞான ஆசை கொண்ட அந்த மாணவன ஆசிரியரை அணுகிக்கேட்டான் ; "ஆசிரியர் பிரானே! அழியாத இனபம்கொணட பரிபூரணமான வாழ்க்கை எனக்குக் கிடைக் குமா? உண்டும் உடுத்தும், வமிச விருத்தி செய்தும் முயற்சி களில் ஈடுபட்டும அழுதும் சாவதைவிட வேறு புனிதமான கொள்கை கிடையாதா வாழ்க்கைக்கு? பிறப்பு என்ற நிலையில் லாத இடத்திலிருந்து ரகசியமான சாவு என்ற இடத்துககுப் போய்ச் சேரும் யாத்திரைதாகு வாழ்க்கை? கட்டுமட்டுக்கள் நீங்கிப்பரிபூரண சுதந்திரத்தையும்ஆனநதத்தையும அனுபவிக்கும் ஒரு உலகம் உண்டா?" அப்படி இதயத் துடிப்பைக் கொட்டிய

வர்களிடம் தான் உபநிஷத ஆசிரியர்கள் ஒருவரைப் பார்த்தாற் போல் "தத்துவம் அஸி" (அது நீயாக இருக்கிறாய்) என்று சொல்லித் தந்தனர். இந்த மஹா வாக்கியத்தில் 'அது என்பது நீ என்னைக் கேட்கும அது! சாதகனே, அது நீ உன்னுள்ளே தேடுவதுதான்' என்று பொருள்படுகிறது.

சாதாரண மனிதனுக்கு உடல்தான் அவன். உடலையே நான் என்று அவன் மிகவும் ஆழமாகவும், அழுத்தமாகவும் கொள்கிறான். உடலுக்கும் உடல் தரும் இன்பத்துக்குமே உழைக்கிறான். அவன் வேறொன்றையும் அறியமாட்டான். அப் படிக் கீழ் வாழ்வு வாழும் மனிதன் பரம்பொருளுடன் தனித் திருந்து அடிமை புரியும் உறவைத்தான் கொள்ளமுடியும்.

அடுத்த மேற்படியில் உள்ளவர்கள் உடலுக்கு அப்பால் உள்ள மனம் புத்தியை உணர்ந்தவர்கள். அவர்கள் தம்முள் உள்ள மனம்-புத்தி மயமான மனிதனை உணர்கிறார்கள். ஆகவே அவர்கள் தங்களை அழியும் புழுக்களாகக் கருதத் தயாரில்லை. சிறந்த புனிதமான, ஏன தெய்வ சக்திகொணட மனம்-புத்தியின் அழியாத ஆற்றல் பெற்றவர்கள் எனறு அறிந்துகொண்டிருக்கி றார்கள. அவாகள் விஞ்ஞானததையும், கவிதையையும், சீர்தூக்கு கிறார்கள். சிநதனையாளாகளையும், புதிதாகக கண்டுபிடித்தவா களையும் போற்றுகிறார்கள். மனிதன் இயற்கைமேல் போரிட்டுப பெற்ற வெற்றியை உணர்கிறாகள. இவறறையெல்லாம் பார்த்து மனிதன் பெற்ற ஆற்றலும, பெருமையும் கடவுளுடை யதைவிட அதிகக் குறைவானதல்ல எனறு பெருமைப்படுகிறார் கள். இந்த வளர்ச்சியுள்ளவர்களுக்கும், பரம்பொருளுக்கும் உள்ள உறவு முழுமைக்கும் அதன பகுதிக்கும உள்ள உறவாம்.

இநத இரண்டு வகை மக்களை மனதில் எண்ணித்தான் ஸ்ரீ மத்வாசசாரியாரின் த்வைதமும், ஸ்ரீ ராமனுஜாசசாரியாரின் விசிஷ்டாத்வைத வாதமும் பேசுகின்றன. பரமனும், பக்தனும் தனியானவர்களே. பக்தன் பரமனிடம் அன்பு, மரியாதை இரண்டும் கொண்டு அர்ப்பணித்துக கொள்ளும் உறவைத்தான் ஏற்க முடியும் என்று முடிவு செய்கிறது முன்னது. மனிதனின் பரம லட்சியம் கடவுள பாதம் அடைந்து என்றுமே அஙகே அவன்

திருச் சேவையில் ஈடுபட்டிருப்பதுதான் என்று பேசுகிறது அது. பின்னது வேறு வழியாக விவாதித்துவிட்டு பக்தன் பரமனின் ஒரு அங்கம் என்று முடிவு காட்டுகிறது.

வேதாந்தம் மனிதனே கடவுள் என்று துணிகிறது. அது மனிதன ஆத்மத்தனத்தில் பெறும் இறுதியானதும், உயிர் போன்றதுமான அனுபவங்களைப் பேசி ஐயம் திரிபுக்கு இடம் இல்லாமல அந்த முடிவை வெளியிடுகிறது. த்வைத விசிஷ்டாதவைத வாதிகள் இதைக் கேட்டுக் கண்டிப்பாக இது கற்பனை எனறுதான் சொல்வர். ஏன் எனில் த்வைத வாதி உண்மைப் பொருளை உடல் தளத்திலிருந்து நோக்குகிருன். விசிஷ்டாத்வைத வாதி மனம் புத்தித் தளத்திலிருந்து நோக்குகிருன்.

வேதாந்தம் பயிலவரும் மாணவன் நன்கு வளர்ந்தவன். அவன உடல, மனமயமான மனிதனின் புனிதத தனமையுடன் திருப்தி யடையத தயாரில்லை. மனம புத்தியைவிட மிகவும் சூட்சுமமான ஒனறு தனக்குள் இருநது ஒளிந்து விளையாடுவதை அவன மஙகலாய் உணர்நதிருககிருன். அதைப்பற்றிக் கேட்கிருன அவன தன் ஆசிரியனிடம். ஆசிரியனும அவன் உணர்ந்ததை அழுத்தம் செயகிருர். தகக ஆதாரஙகள் காட்டி உயிரின் உயிருககே அழைததுச் செல்கிருர். அதுதான் ஆத்மா-சாதகனே அதுதான். குருவின் சங்கேதச சொற்களின் முழு ஆழத்தையும் அறிந்த சிஷயன் அந்தப் பேருண்மைப் பொருள்தான் என்று அனுபவததில் உணருமபோது அவன் பரிபூரண ஞானம் கைவரப் பெற்றவனுக ஆகிருன். அந்த நிலையில் அவன் உடலையும், மனதையும் தான் என்று ஏன் நினைக்கிருன்? இனி வேறு வேறு எனற "இரண்டு" எண்ணத்துக்கு இடம் ஏது? வேதாநத மாணவன உணமையைத் தேடினுன். அனுபவததில் உண்மையாகவே ஆகிவிட்டான். அபபடிப்பட்ட மாணவனுககுப் பேசுவதுதான் சங்கரரின் அதவைத சாஸ்திரம். பேருணமையுடன் நாம் கொண்ட இந்த மூன்று வகை உறவைத்தான் இராமா காதையில் பெரும் ராம பக்தனுன ஹனுமான் ராமச் சந்திரனுடன்தான் கொண்டுள்ள உறவைப் பற்றிப பேசுவதுதன் மூலமாக எடுததுக் காட்டுகிருா. ஹனுமான் சொலலுகிருா:

" எம்பிரானே ! உடலுணர்வில் நான் மறந்திருக்கும்போது தான் உன் அடிமை. மனம் புத்தித் தளத்தில் நான் இருக்கும் போது அதாவது ஜீவனாக இருக்கும்போது உன் பகுதியாக விளங்குகிறேன். என் உண்மை ஸ்வரூபத்தில் நான் நீயே !"

அப்படியே நாம் பரமனுடன் கொள்ளும் உறவும் நம் உணர்வு நிலையைப் பொறுத்து இருக்கும். பெரிய ஞானிகூட குளிர் சூடு தரும் அல்லல்களால் உடல் தரும் துன்பங்களுக்கு வருந்தலாம். அப்பொழுது அவர் ஈசுவரன் காலில் விழுந்து அவன் அருளுக்கு வேண்டுவார். சில சமயம் அவரே மனம் தரும் பதற்றம், உணர்ச்சி செய்யும் கூற்றுக்கு இலக்காகி சிந்தனையின் சிறந்த பயன்களாகக் கவிதையோ மற்று வேறு ஆக்கமோ செய்யலாம். கடவுளுக்கே சமமான சிருஷ்டி ஆற்றலை அவர் அப்பொழுது பெறுகிறார். சமாதி நிலையிலோ ! இந்த உறைகளிலிருந்து எல்லாம் நீங்கி உளளுக்கும் உளளே இருக்கும் ஆன்மாவில் லயமாகிவிடுகிறார். அப்பொழுது 'சிவோஹம், சிவோஹம். நான் அதுவே' என்று உணர்கிறார். ஜீவனும் பரமனும் சேர்ந்து ஒரே பொருளே !

இதில் ஒரு சிறப்பு. மூன்று வாதங்களும் ஒன்றுக்கொன்று எதிராக இல்லை. வளர்ச்சியின் உச்சியை அடைய இந்த மூன்று கட்டங்களையும் தாண்டியாக வேண்டும். " புத்தி சர்க்கஸ் " செய்யும் பண்டிதர்கள்தான் அதையோ, இதையோ உண்மையானது என்று நிலைநிறுத்த வாதம் இருக்கின்றனர். ஆத்ம சாதனைப் பாதையில் இறங்கி நடப்பவர்கள் இந்த மூன்றையும் வழிநடை களைப்பாற்ற அமைக்கப்பட்டிருக்கும் அன்ன சத்திரங்கள் என்று உணர்வார்கள். முதலில் நீ மத்வர் தரிசனம் செய்து கொண்டு பிறகு ஸ்ரீ ராமானுஜர் பூஜையை முடித்துக் கொண்டுதான் வேதாந்த அரண்மனைக்கு வர வேண்டும். அங்கே நாமே சங்கரர் என்று உணரலாம்.

ஆகவே நாம் சண்டையை நிறுத்தி யாத்திரையைத் தொடங்குவோம். நாமே பரமபொருளுடன் நம் உறவை நேரில் அறிந்து கொள்வோம்.

பாதை

நாம் இன்று உபநிஷதங்களைப் படிக்க ஆரம்பிக்கிறோம். பொருள்கள் ரசாயனம் போன்று இந்தப் பிரும்ம வித்தையும் ஒருவகை விஞ்ஞானமே. மற்ற விதைகளுக்கும் இந்தப் பிரும்ம வித்தைக்கும் ஒரு மாறுபாடு உண்டு. பிரும்ம விதை வித்தைகளுக்கெல்லாம் வித்தை. பிரும்மவித்தையின் பொருள் மற்ற வித்தைகளின் (விஞ்ஞானங்களின்) பொருள்களை விளக்குகிறது.

ரசாயன வித்தையில் அடிப்படை "அணுவை" க் கண்டு பிடிக்கச சோதனைகள் நடக்கின்றன. இயற்கையில் அதிலிருந்து மற்ற அணுக்களை எல்லாம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு அணுவைக் கண்டுபிடித்துவிட்டால அந்த வித்தைக்கு அதற்கு மேல் போக்கு இல்லை. அப்புறம் அதன் அலுவல் எல்லாம் பல சேர்க்கைகள் தரும் பயனை அறியவேண்டியதுதான். அந்த அடிபபடை அணுவை, அழியாத அணுவை மற்ற அணுக்களின் ஆதாரமான அணுவைக் கண்டுபிடித்ததும் ரசாயன வித்தையில் நாம் தேடவேண்டிய பொருள கிடைத்துவிட்டது.

பிரும்ம வித்தையில நாம் எல்லா உயிருக்கும் மூல ஸ்தானததை, தனிபபெரும் உண்மையைத் தேடுகிறோம். உலக மும் நம் அனுபவங்களும் எந்த உண்மையில் எழுந்து, வாழநது கணத்துக்குக் கணம் அழுநதுகின்றனவோ அந்த உணமையைக கணடுகொண்டால மட்டுமே நாம் திருபதி அடைவோம். அதுதான் ஆதார அடிப்படை. மாறும் தோறறஙகளுக்குப் பின்னுலுள்ள உணமைப் பொருள். ஏழையின ஏழ்மை, பணக்காரர்களின் பண உள்ளம, பெருமைகொண்டவாகளின ஆற்றல எல்லா வற்றையுமே தெளிவுறுததக்கூடிய அநத லட்சியத்தை அந்த ஒரே லட்சியத்தை அறிய முயல்கிறோம். பொறிகள, உணாவுகள், உடலகள், மனம எல்லாவறறின் இயககத்தையுமே அதுதான

தெளிவுறல் செய்கிறது. நாம் ஆழ்ந்து ஆழ்ந்து உயிரின் அடித் தளத்துககுப் போக விரும்புகிறோம். ஸ்தூலத்திலிருந்து சூட்சுமத் துக்கு, வெளியுலகத்திலிருந்து உள் உலகத்திறகு நாம் பிரயாணம் செய்கிறோம். பொருள் எவ்வளவுக்கெவ்வளவு சூட்சுமமா கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதைப்பறறி (செயல்களில்) பேசுவது கடினம். அந்தப் பேச்சைப் புரிநதுகொள்வதும் அப் படியே. அந்த நிலையில் அறியச் செய்யும் நம் முயற்சி பயனடைய நாம் தொடர்ந்து இயைந்த ஒரு முறையைக் கையாளவேண்டும்.

உபநிஷதங்களில் ஊர் பேர் தெரியாத ரிஷிகள் இயைபில்லாத உண்மைகளைச் சொல்லிவிடவில்லை. உபநிஷத முடிவுகள் ஏகாதிபத்திய உத்தரவுகள் அல்ல. ரிஷிகள் படிப்படியாக நம்மை அந்தப் பெரும் உண்மைக்கு அழைத்துச் செல்கிறார்கள். சாவி போட்டுக் கதவு திறப்பதிலிருந்து ஆரம்பித்து உண்மைக் கோயிலின் கருப்பக் கிரஹம்வரை உடன் வருகிறார்கள்.

விளக்கக் கடினமான ஒன்றைச் சொற்களால் விளக்குவது என்பது எளிதல்ல. மனம் புத்தி இரண்டால் மட்டும பிரும்ம வித்தியை அறிந்துகொண்டுவிடலாம் எனற எண்ணத்துடன் உபநிஷதங்களைப் படிக்கக்கூடாது. ஆறறலகளுக்கெலலாம் ஆற்றலான அந்த உண்மையின் கோயிலுக்குள போகுமபோது மனம் புத்தி என்ற செருப்புகளையும கழற்றி வைத்துவிடவேண்டி யிருக்கும். மிகவும் பணிவுடன் நுழையவேண்டியிருககும். கல்லூரி மாணவன் தற்பெருமையுடன் நம் மனம புத்தியின ஆற்றலில் கர்வம் கொண்டு வரக்கூடாது. அப்படி வந்தால் வேதாநதத்தின் உண்மைக் கருதது ஒளிந்துவிடும். கூர்மைபெற்ற மனம் புத்தியைக்கொண்டு உயாந்த ஒரு கொள்கைககு உழைககத் தயாராக வரவேண்டும்.

உண்மை பலாத்காரமாக நம்மீது திணிக்கப்படுகிறது. தர்க்க ரீதியில் வாதித்துப் புறவுலக நிலைமைகளை அலசி அதன் பயனாக படிபபடியாக வியாதி தரும் பொய்மைப் பொருள்களி லிருநது விலகி மெய்மைப்பொருளை அடைகிறோம. தெய்வத்தைத் தேடும் ஆன்ம வாழ்வு ஏதோ நொண்டி முடஙகள வேலை என்று

நினைக்கிறார்கள்; பேய்பிடித்த மனது அல்லது கோணல் புத்தி கொண்டவர்கள் அல்லது ஏமாற்றங்களால் மனதொடிந்தவர்கள் இவர்கள் சொன்னதையும் மண்டபம் என்று கருதுகிறார்கள். அது சரியல்ல. மதம் தெரிந்தவர்கள் பேசும் பேச்சல்ல அது. தகுதியற்றவர்கள், மத்தி மட்டங்கள், அசட்டுக் கோணங்கள் இவர்களுக்கு அல்ல மதம். சிறந்த மதச் சம நிலையுடையவர்களுக்குத்தான் மதம். ஆன்மீக, மன உடலளவுகளில் சரியான வளர்ச்சி உள்ளவர்தான் அதையறிந்து பயிலமுடியும். கோழைகள் இந்த வித்தையில முன்னேற முடியாது. நல்ல உடல் மனக் கலங்கள் தெளிவு சுறுசுறுப்புடன் கூட ஆத்மப் பசிகொண்டவர்கள்தான் வழி நடக்க முடியும். நன்கு வளர்ந்து வாழ்க்கையை நன்கு வாழ்ந்த உள்ளங்கள், ஆர்வம் கொண்ட உள்ளங்கள்தான் வைராக்கியத்தை அடைய முடியும். வேதம் பயில, மாணவன் தகுதியை ஆசிரியர் கவனிக்கவேண்டும் என்ற விதி தப்பர்த்தம் செய்யப்படுகிறது. வேதம் மேதாவிகளுக்குத்தான் என்பதில்லை. சாதாரணமான நானும், நீங்களும் அதற்கு உரியவர்களே. இன்று பேசும்பொருளில் வேத வியாசரே பிராமணரில்லை. செம்படவப் பெண் பிராமணரிடம் பெற்ற பையன் அவர். தர்ம சாஸ்திரக் கருத்தில அவரைச் "சண்டாளன்" என்று சொல்லவேண்டும. அது சரியாகாது. பிறவியால் மனிதரைப் பிரிப்பது ஆபத்து. அவர் புரட்சி செய்து வேதங்களைத் தொகுத்துத் தந்ததால் அல்லவா இன்று நாம் உபநிஷதங்களைப் பற்றிப் பேச முடிகிறது. உலகம் போகும் நிலையில் பழைய சிரவண முறையை நமபினால் வேதம அழிந்தேவிடும் என்று அன்று கண்ட அவர் அவைகளைப் பிரித்துத் தொகுத்து வைத்தார், நான்கு வேதங்களாக. காலத்தின தேவை அது. அவ்வப்பொழுது இப்படி ஆசிரியர்கள தோன்றித் தேவையான மாற்றங்களைச் செய்து வருவது சரித்திரம் சொலலும் உண்மை. அவர்களிடம் அதற்குத் தகுந்த ஆற்றல், நம்பிக்கை, தைரியம், தீர்க்கதரிசனம் முதலியன இருந்தன.

அதேபோல ஸ்ரீ சங்கரர் காலத்தில் மடம் நிறுவத் தேவை ஏற்பட்டது, அவர்களுக்கு முன் மடம் என்று ஒன்று கிடையாது.

பரவும் புத்த மதத்தைத் தடுக்க ஹிந்து மதத்துக்கு மடம் தேவைப்பட்டது. அதனால்தான ஸ்ரீ சஙகரர் மடம் நிறுவினார். அதில் ஒரு சநநியாசி வேதாநத ஆசிரியராக அமாநது தொடர்ச்சியாக, வருகிறவர்களுக்கு வேதாந்தம் கற்றுக் கொடுத்து வந்தார். ஆசிரியரும் மாணவர்களும் வருஷத்தில் எட்டு மாதம் கிராமங்களில் சுற்றி வேதத்தின் பாடத்தைக் கற்றுத் தந்து வந்தனர்.

அப்படித்தான் தேவைப்படும் காலத்தில், தகுந்த ஆசிரியர்கள் ஏற்பட்டு மதத்தின் தேய்ந்த பகுதிகளை நீக்கினர். ராமாயணம் முதன் முதலில் ஹிந்தியில் மொழி பெயர்க்கப் பட்டபோது அப்பப்பா வட இநதியாவில் என்ன அமக்களப் பட்டது? இன்று? அந்த மொழி பெயர்ப்பில்லாவிட்டால் வட இந்தியர்கள் அந்த மஹா புராணத்தை மறநதே இருப்பர். இன்றும் 'உபநிஷதம் நடுச் சந்தியில் பேசப்படும் பொருளா?' என்று திடுக்கிடும் பார்வை குறுகியவர்கள் எவ்வளவுபேர் இருக்கின்றனர்? அவர்கள் உபநிஷதம் பேசத் தலையின் அளவை நிர்ணயித்துக்கொண்டு தேடியவண்ணம் இருகக வேண்டியது தான். நம்மிடையே நல்ல வேளையாகத் தீரக்க ரிஷிகள தோனறினர். அவர்கள், "இன்னும் கால் நூற்றாணடு விட்டுவிட்டால் ஹிந்து மதமே மறைந்துவிடும். அபபடி விடககூடாது" என்று காண அறிவும் ஆற்றலும் கொணடிருந்தனர். சினமயா அநதக் கூட்டத்தினரின் தொண்டரே! ஹிந்து மததனை மறுமலர்சசி கொள்ளச் செய்வதுதான் நம தொண்டு. படிததவர்களிடையே உபநிஷதம் காட்டும் லட்சியஙகளைப் பரப்புவதுதான் ஞான யக்ஞத்தின் நோக்கமாம்.

எந்த வித்தையையும் பயிலுவதற்கு முன அநத விததையின் சில அடிப்படை உண்மைகளை அறிநது கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அந்த (விஞ்ஞான) விததைகளை அறிநது கொள்ள முடியும். அதே போல உபநிஷதஙகளை விசாரிததறியச் சில அடிப்படை 'வேதாநத பரக்ரியை'களைத தெரிநது கொள்ள வேண்டும. உபநிஷத முடிவுகள எலலாம அந்த அடிபபடைச சிததாந்தங்களின் மேலதான் நிறுவபபட்டிருககின்றன, அதே

போல பிரும்ம வித்தையின் மாணவர்களும் சில ஆதாரத் தகுதிகள் பெற்றிருத்தல் அவசியம். அவைகளை 'சாதன சதுஷ்டயம்' என்ற இலக்கணப் பெயரில் சொன்னால் ஆச்சரியம் ஏற்படுமே தவிர உண்மையில் அவை ஒன்றும் புதிது அல்ல. அந்த நான்கும் பின்வருமாறு :—

1. மெய்யைப் பொய்யிலிருந்தும், உண்மையை இன்மையிலிருந்தும், பொருளை நிழலிலிருந்தும் பிரித்தறியும் ஆற்றல் மிகவும் தேவையானது. அது நம்மிடம் இல்லை என்று சொல்ல முடியாது. சிந்தனையின உயர்நத தளததில் உபயோகப்படுதத அறிந்திராவிடினும் நாம் மிருகங்கள் புழுக்கள் அல்லவே. அன்றாட வாழ்க்கையில் இநதப் பிறித்தறியும் ஆற்றலை உபயோகிக்கத் தெரிந்தே யிருக்கிறோம்.

2. வைராக்யம் என்ற குணம் : பொய்யான துயா தரும் பொருளகளிலிருந்து மனதை அகறறி வைததிருக்கும் ஆற்றலாம். வைராககியம் என்ற சொல் யாரையும் அசசுறுத்த வேண்டியதில்லை. நம்மில் வைராக்கியம அறறவர் யார் இருக்கின்றனர்? புத்தி ஒரு பொருளை உணமையில்லை, நிழல போன்றதே என்று உறுதியாய் அறிநதுவிடடால் மனது அதைவிட்டு ஒதுங்கி விடுகிறது. உள்ளது எனற துணிவும கொள்ளுதல நலம என்ற ஆவலும்தான விருப்பப் பிடிபபுக்கு ஆதாரம். கனவில் அரச குமாரியை மணந்தவன் விழிததவுடன் அவளை மறநதுவிடுகிறான. பொருளின் பொய்மையை உணாநது அதன் விருப்பததை அகறறுவதே வைராகயம் எனபபடும். வைராகயம் உளளவன வேதாந்தம் படிக்கத் தகுதி கொணட மாணவன ! சுருதி மனிதனிடம உளள இந்தக குணததைப பயன்படுத்திககொண்டு உலகத்தின பொயத்தன்மையை உணர வைக்கினறது. அவன வைராககியம அதிகரிககிறது ; வலுப் பெறு

கிறது. உலகைவிட்டு நம்மை அகற்றும் எதிர் மறைச் செயலைமட்டும் உபநிஷதம் செய்துவிட்டு, நிறுத்தி விடுவதில்லை. இன்னம் பூரணமான பெரிய உலகத்தை அது கதவு திறந்து காட்டுகிறது.

நம்மிடம் இந்தப் பெரும் குணங்கள் ஏற்கனவே உண்டு. ஆனல் அவை பயன்பட இடம் இல்லை. உபநிஷதங்கள் இரும்புத் திரையை அகறறுகின்றன. சாந்திச் சமவெளி உண்மையின் உன்னதப் பிரதேசம் வெளியாகிறது. அமைதியும், அழகும் கொண்ட அந்த உலகம் ஆளில்லாமல் இருநதுவிட்டது. பாலும் தேனும் பாய்ந்துவரும் அந்தப் பரந்த வெளி–ஆத்மீக இந்தியா மீண்டும் அதன் ஆத்மீக சாம்ராஜ்யத்தைப் பெறுதல் வேண்டும். நாம் அதைச் செய்யமுடியும். நாமே சீர்பெற வாழ்ந் தால் அநதச் சேதியை மக்களிடம் பரப்பலாம். யக்ஞம் நாம் செய்யும் உண்மையான முயற்சியே. உபநிஷதங்கள் கூறும் அநத நம்பிககை நலவுலகத்தை அறிய நாம் எடுக்கும் முயற்சியே.

இந்த யாகக் கல்லூரியை அடைய மற்றும் இரு பெரு தகுதிகள்: (3) சாதனு சம்பத்து—அதாவது புத்தியின் சிறப்பு, இதயத்தின் சீர்மைக் குணங்கள். (4) சர்வ வல்லமையும் பூர்ணததுவமும் கொண்ட அப்பொருளை அறியவேண்டும் என்ற அணையாத ஆசை.

நாம் அடைய முடியாத பொருள் இருக்க முடியாது. ஏதோ ஆன்மீக வாழவும் சமயப் பற்றும் வாழக்கையில ஏமாற்றம கண்டவர், துயருற்றவர், தோல்வி கண்டவர்—இவாகளுககே எனற எண்ணம் வலுவடைந்து வருகிறது. இது உண்மையே அல்ல. வேதாந்தம் நல்ல உடல் நிலையும், மன வலிவும் புத்தித திறமையும் பெறற உலகியல் மனிதருக்காகவும் உளள பொருளேதான்.

தகுதி கொண்ட ஒரு வேதாந்த மாணவன் உலகம் எங்கிருந்து வந்தது, எங்கே போகும் என்ற கேள்வியுடன் தன் விசாரணையை ஆரம்பிப்பான். வெளி உலகத்தைப் பற்றிப்

பேசிய பிறகு நாம் நம் உடலை அதாவது ஐம்புலன்களை இந்திரியங்களை அறிய முயலுவோம. படிப்படியாக சாதகன் வெளியுலகத்திலிருநது தன்னுல் இருககும் மையப் புள்ளிக்கு வந்து சேருவான். பிறவிக் குருடனுககு 'உருவம்' தெரியாது. குருடன் பீரங்கி புகைகிறது என்றுதான் எண்ணுவான். நாககும், மூக்கும், சுவைக்கவும், நுகரவும் தேவைப்படுகின்றன. இந்த ஐந்து இந்திரியங்கள் (புலன்கள்) இல்லாவிட்டால் நமக்கு உலகம் இல்லை உலகம் இருந்தும் இல்லாப் பொருளாக நமக்கு ஆகி விடும். அதாவது புறவுலக அறிவு புலன்கள் மூலமே பெறப் பெறுகிறது.

பிறகு சாதகன் மனம் புத்தி எப்படி வேலை செய்கின்றன என்று விசாரிப்பான். ஆனந்தம் எஙகிருந்து பொங்கி வருகிறது என்று கண்டு பிடிக்க முயலுவான். அப்படியே ஸ்தூலத்திலிருந்து படிப்படியாக சூட்சுமததுக்குச் செல்வான். வேதாந்தத்தில் இந்த ஸ்தூலப் பட்டைகள் எல்லாம் 'கோசங்கள்' என்று சொல்லப்படுகின்றன. வாளின் உறைபோல அவை உள் பொருளைத் தொடாமல் சுற்றி நிற்கும் உறைகள்தான். நம் உடல் சரீர கோசம். அதைவிடச் சூட்சுமமானது பிராணமய கோசம். அடுத்து சூட்சுமமானது மனோமய கோசம். வேதாந்தம் பேசும் சூட்சுமம் வியாபகத்வத்தை அதாவது பரவும் ஆற்றலை அடிப் படையாகக் கொண்டது. மனதைவிடச் சூட்சுமமானது புத்தி உறை. அடுத்தது ஆனந்தமய கோசம். அங்கேதான் ஆனந்த அலைகள் எழும்பும் மூலஸ்தானம் இருக்கிறது.

வேதாந்தத்தில் சூட்சுமத்துக்கெல்லாம் சூட்சுமமான பொருளை அடைந்து அறிந்து கொள்வதுதான் முயற்சி. ஆன்ம சாட்சாத்காரமான அந்த நேரத்தில் மற்ற ஸ்தூலமான கோசங்கள் விழுந்துவிடுகின்றன. அப்பொழுது நம் உண்மைத் தத்துவம், அநதப் பேருண்மை எங்கும் ஊடுருவி நிற்கும் அறிவுத் தத்துவ மாக உணரப்படுகிறது.

உயிரின் உயிர்த் தத்துவ சக்திகளை நாம் உணர்ந்து அறியும் பொழுது, உலகின உயிர்களுக்கெல்லாம் மூலச் சுனையில் நாம்

ஆழும்பொழுது உலகமே நம்முன் தங்கியிருப்பது தெரியவரும்; ஆன்ம சாக்ஷாத்காரம் கொள்ளும் அந்த நேரத்தில் வாழ்வின் அனுபவ மலை யுச்சியில் நாம் ஆற்றல்களுக்கெல்லாம் ஆற்றலை, மையத்துகளும் மையத்தை, பிரபுக்களுக்கெல்லாம் பிரபுவை உணர்கிற அந்த நேரத்தில், துயரங்கள் ஏமாற்றங்கள் வெற்றிகள் தோல்விகள் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டு, பூர்ணத்துவதின் மௌன ஆனந்தத்தையும் தெய்வீகத்தின் அமரத்துவத்தையும் அ ும்.

அந்தப் மெய்ப்பொருளை அறிய முயலுவோம். மெய்ப் பொருள் ஒன்று உண்டாயின் அதற்கும் எனக்கும் உள்ள உறவு யாது? நாம் சுற்றி எங்கும் பார்க்கும் பெயர்களும், உருவங்களும் கரநது பரந்து நிற்கும் அந்த மெய்ப் பொருளின் திட்டத்தில் எஙகே இடம் பெறுகின்றன? ஜீவன் என்கின்ற 'நான்' தத்துவம் எது? 'ஜகத்' எது, கடவுள் எது? ஈசுவரன், ஜீவன், ஜகத்து மூன்றையும் பற்றி முற்றிலும் அறிய இந்த மூன்றின் பரஸ்பர உறவைபபற்றி அறியவேண்டும். பரம மெயப் பொருளைத் தெரியவேண்டும். தனித்தனி 'நான், நான, நான்' என்று முனைநது பேசும் ஜீவன்களின் பரஸ்பர உறவு நன்கு விளங்க வேுண்டும.

ஜகத்தாகிற தோற்றம் தரும் உலகிலுள்ள ஜீவன்கள எல்லாவற்றுடையவும் அறிவுகளின் தொகுதியே ஈசுவரனுக அறியப்படுகிறது; அது இராமன், கிருஷ்ணன, சிவன, கிறிஸ்து முகம்மது எனறெல்லாம் நாம் பேசும் ஈசுவரன் அலல. அது ஒரு பூரணக கருத்தாகும். ஈசுவரத் தததுவமாகும். அவதாரஙகள் எலலாம் அந்தப பொருளின் தோற்றங்களே. "கடவுள் ஜகத்தின காரண சரீரம்."

ஸதூலத்திறகும் அந்த சூட்சுமப் பொருளுக்கும் உள்ள உறவை அறிநது கொளள வேணடும். அது சுலபமான வேலை யிலலை. ஏன் எனின சொற்கள் அதை முடிவாகப் பேசி விட முடியாது. ஆகவேதான் வேதாந்தம் உதாரணங்களையும் உருவக விவரணஙகளையும கையாண்டு சாதகனுக்கு விளகக

முயலுகிறது. இந்த எடுத்துக் காட்டுகளும் பொருளின் ஓரிரு அமிசங்களை மட்டும் எடுத்துப் பேசுமே தவிர எலலா அமிசங் களையும தெளிவாகக் காட்டிவிட முடியாது. உதாரணமாக வேதாந்தம் கடவுள் எனகிற உண்மைத்தத்துவம் 'ஆகாயம்' போலிருக்கிறது என்று பேசுகிறது. அதிலிருந்து நாம் தெளிந்து கொள்வது: உண்மை எங்கும் பரவி நிற்கிறது. மற்றப் பொருள் களுடன் ஒட்டாமல் இருக்கிறது. வெளி (ஆகாசம்) பொரு ளுடன் இணைவதில்லை. குற்றங்கள செய்யப்பட்ட போதிலும் வெளி ஒரே நிலையில் சுத்தமாகவும் அமைதியாகவும் இருக்கிறது. அதில் யாகம் ஒன்று நடந்து விட்டதனுல் அதன் புனிததன்மை அதிகப்படப் போவதுமிலலை. குற்றம் நடந்து விட்டால் அது கறை கொள்ளப் போவதுமில்லை. இந்த அடிப்படையானதும் முக்கியமானதுமான சுத்தத் தன்மையை வலியுறுத்தவே பரம பொருள் ஆகாசம் போன்றது என்று காட்டப்படுகினறது. அதைவிட்டு, சொற்களைப் பிளநது பொன முட்டை யாகிற பொருளைத் தேட முயற்சி செய்து "அதில் சூரியன் சநதிரன் இருக்கின்றனர். மேகங்கள அலைகின்றன" என்று எல்லாம் கூறவேண்டியதில்லை.

அப்படியே ஜீவனுககும், பரமனுககும் உள்ள உறவு ஒரு உவமை மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது. இந்த உவமைகள், எடுத்துக்காட்டுக்கள், விளக்க உருவங்கள், எல்லாம் யோசிக்க யோசிக்க ஒரு இனிமையான கருத்து ரசம் தருகிறது. ஜகத, ஜீவன், பரமன மூன்றின் உறவும் ஒரு துணியின் உதார ணத்தின் மூலம் விளக்கப்படுகிறது. ஒரு துணியில், துணிக்கு உபயோகித்த, அதே நூலால் பூக்கள் பின்னப்பட்டிருக்கின்றன. அப்படி அதே நூலால் பூக்கள் பின்னபபடட ஒரு துணியை எடுத்துக் கொண்டு பார்த்தால் அதில் நூல் பின்னப்பட்டிருக் கிறது. நூலாலேயேதான் அதில ஒரு குடும்பம உ சாப்பிட உட்கார்ந்திருப்பது போல் பின்னபபட்டிருக்கிறது. அதைப் பார்த்து நாம் அந்தக் குடுமபத்தைப்பற்றி ஒரு மனோபாவம் கொள்ளுகிறோமே அதே போலத்தான் சமுத்திரஙகள், கண் டங்கள், மலைகள் முதலியன கொண்ட ஜகத்தும் இருக்கும்.

இப்பொழுது பிரித்துப் பாரககலாம். அந்த டீ சாப்பிடும் குடும்பம் நூலில்தான் உருவம் பெறுகிறது. நூல் பிரிக்கப்பட்டு விட்டால் ஒன்றும் இருக்காது. அதே போலத்தான் ஈசுவரன் உலகிற்கு நூலின் நிலையில் இருக்கிருர். "ஈசுவர சர்வ பூதாஞம்." "ஏ அர்ஜுஞ! நான எல்லோருடைய இதயத்தி லும் இருககிறேன். (பூ) மாலேயின் நூல் போல நான் எல்லா உருவத்துக்குள்ளும் புகுந்தும் அவற்றைத் தாங்கி நிற்கிறேன்!" என்று கிருஷ்ணன் பகவத்கீதையில் அருளிச் செய்கிருன. டீ சாப்பிடும் குடும்பப் பின்னலுக்கு நூல் ஆதாரமாகும். அதே நிலையில் ஈசுவரன் உலகின் தோற்றங்களுக்கு ஆதாரமாகும். ஈசுவரன் இல்லே என்ருல் உலகம் இல்லேயென முடியும். பெயர்கள், தோற்றங்கள், சுவைகள், நாற்றங்கள், சத்தங்கள் தொடு உணாச்சிகள் இவை எல்லாம் சேர்ந்த அறிவே வெளி உலகம். அந்த உலகம் ஈசுவரனின் உண்மையால் அமைத்துப் பின்னப்பட்டிருக்கிறது. ஜகத்தின் ஈசுவர தத்துவமே துணி யாகும். தெய்வ தத்துவத்தை எடுத்து விட்டால் பினனற் கோலம் ஒன்றுமில்லே யென்ருகிவிடும. நூலகள அகனருல் துணி அதே கதியையடைநதுவிடும. பினனற் கோலஙகள் இடத்தில் உலகின் தனித்தனி ஜீவன்களேக் கொள்ளலாம். நூலே ஈசுவரஞகக் கொளளலாம்.

இந்த எடுத்துக்காட்டை இன்னம் கொஞ்சம் ஆழ்நது ஆராயலாம். நூல் எதஞல் செய்யப்பட்டது? தானே பிறநது அழியாது இருக்கும் ஒனரு அது? தானே தன்னுள் நிறகும் ஒன்ரு அது? துணிக்குக் காரணமான அதறகுக் காரணம் பிறி தொன்றுண்டா? உண்டு என்ருல் அது எது?... பருத்தி! பருத்தியிலிருநது எழுந்த நூல், நூல் தநத துணி, அதில் நூலே பின்னிய பினனற் கோலம் எல்லாம் பருத்தி அழிந்தால அழிந்து விடும்.

மண்ணுல் பத்து உருவங்கள் செய்யலாம். அவற்றிறகுத் தனித்தனி உருவம தரலாம. தனித்தனிப பெயரிடலாம். உருவ மும், பெயரும் ஒன்றையொனறு ஒட்டி மாறலாம். ஆனுல

எல்லாவற்றையும் உடைத்தால் கிடைப்பது மண். அந்த உருவங் கள மண்ணில ஏற்பட்டு மண்ணில் நிலைத்து மணணில்]ன்றன. ஆகவே அம மண உருவங்களுககெல்லாம் மெய்ப பொருள மண்.

அதே போலத் துணியில் உண்மை(பகுதி) பருத்தியே. இதை நாம் அறிவோம். அறிந்தும் மறக்கிறோம். கடையில் உளள சிறுவன் துணியைப் பருத்தி என்று அறிய மாட்டான். அதே போல் நாமும் உயிரே மெய்ப்பொருளாக இருந்தும் மெயப் பொருளை வேறு எஙகோ தேடி அலைகிறோம்.

மெய்ப் பொருளைப்பற்றி வெளி அறிவுபெற நாம் உழல் கிறோம். அனுபவ உள் உணர்வைப் பெற முயலுவதிலலை. ஜீவனுக்கும், ஈசுவரனுக்கும் உளள உறவு பின்னற் கோலத் துக்கும், நூலுக்கும் உள்ள உறவு. மெய்ப்பொருளின் அடுத்த மாறறம் தெய்வம். அதறகடுத்தது மனிதன். மெய்ப்பொருள் ஒருபடி உடனே இறங்கினுல் தெய்வத் தத்துவம். அதன் அடுத்த இறக்கம் மனிதனும். எனவே மனிதன் தெய்வமே என்று நாம் அறியலாம்; கோலம் உருவம் ஏற்ற நூலே என்ற கருத்திறகொப்ப.

வேதாநத சாஸ்திரப்படி எஙகும் ஊடுருவி நிற்கும் அந்த பரம மெய்ப்பொருள் ஒரு மாறுபாட்டையும் அடைவதில்லை. பருத்தி என்றும் பருத்தியேதான். அதன் உருவத்தில் ஒரு மாறு பாட்டை நாம் பார்ககிறோம். அதுவே ஒரு நிலையில் நூல் என்றும் ஆகிறது. நம் பார்வைக் (கோணத்துக)கேற்றவாறு ஒருமுறை அதைப் போர்வையாகப் பாாக்கிறோம். இங்கே நாம் அதன் ஸ்தூல உருவத்தைப் பாாக்கிறோம. கொஞ்சம் நெருங்கி நாம் அதையே பார்த்தால் 'நூலைப்' பார்க்கிறோம். இன்னும் நெருங்கினோமானுல் 'பருத்தி தரிசனத்தையே' பெறலாம். 'பருத்தி தரிசனம்' ஆனபிறகு துணி, அதிலுள்ள கோலங்கள் இவற்றின் பன்மை மறைநது விடும். மிகவும் ஸ்தூலமான கணணோக்கில ஒற்றுமையே இல்லை. நூலைப் பார்க்கும்போது பன்மைத் தோற்றம் குறைகிறது. பருத்தியைப பார்க்கும

போதோ எல்லாம் ஒன்றுகி விடுகிறது அவ்விதமே அலை, நுரை, குமிழிகள எல்லாம் சமுத்திரமேதான். சமுத்திரம் அடிப்படை உண்மை. அதில் இருந்து பார்த்தால் 'பல' என்ற எண்ணம் மாறுகிறது. மாறுபாடே இல்லை என்ற உண்மை தெளிவாகிறது.

ஒவ்வொரு ஜீவனும் அதன் போக்குக் கேற்றவாறு உருவம் உடல் எல்லாம் பெற்று இருக்கினறது. அதனுல் பல பெயர்கள் இட்டுத் தனித்தனியே அழைக்கிருேம். ஆனுல் உண்மைத் தத்துவம் ஒன்றேதான். அதன் அடிப்படையில் நின்று பார்த்தோ மானுல் ஒரே மெய்ப் பொருள்தான் உண்மை. அந்தக் கருத்தில் உறவு என்ற பேச்சே பேச வேண்டியதில்லை. இரணடு தனித் தனிப் பொருள்கள் இருந்தால் அல்லவோ உறவு என்ற பேச்சு எழும். நூலுக்கும், பின்னலுக்கும் உறவு எனன? இரண்டும் ஒன்றே என்றுதான் உண்மை பேசும். பொன்னுக்கும், பொன் மோதிரத்துக்கும என்ன உறவு? அதே போல் எனக்கும், ஈசுவரனுககும் என்ன உறவு? "நான்தான் அது." அது உணர முடியாததற்குக் காரணம நான் கொண்டிருககும் தப்பு எண்ணம். அதைவிட்டு என் உணமைத் தத்துவத்தை உணர்ந்தால் "நான்தான் கடவுள்," என்ற நிலை ஏற்படும்.

ஈசுவர தரிசனம் பெறும் அந்த உன்னத நிலையை அடைய வேண்டும். அதாவது எங்கும் பரவி நிற்கும அந்தப் பரம மெய்மையை முற்றிலும் உணரும் நிலையை அடைய வேண்டும். அதற்கு அன்பு பக்தி இவற்றின் மூலம் பகவானைத் தேடுவது இன்றியமையாத படியாம். ஈசுவர பக்திதான் இந்த நிலையை நமக்கு அளிக்கும். அது இன்றி உன்மையை ஒருவாறு அறிவது கூட இயலாததாகிவிடும். கோவில், கீர்த்தனம், சத்சங்கம் என்கிற மதம் காட்டும் பயிற்சிகள் மிகவும் தேவையானவை. உண்மையைச சேரத் தவிர்க்க முடியாத பாதைகள். இந்தத் தெய்வ உறவு மனத்துக்கு ஆகியவுடன் மேலும் உண்மை அறிய வேண்டும என்று ஒரு தாகம் ஏற்படுகிறது. தொடர்ந்து விசாரணையை நடத்துகிருேம். சத்சஙகம் சொல்லித்தந்தபடி நாம் அதுவே எனருல் இநத மாற்றங்கள் வேறுபாடுகள் எவ்வாறு எங்கிருநது ஏன் வநதன என்ற ஒரு கேள்வி

மிகப பலத்துடன் எழுகிறது. வேதாந்தம் நமக்கு விடையிறுக்க முறபடுகிறது.

அதுமட்டுமா? இம்மாதிரி நூற்றுக்கணக்கான கேள்விகள் உபநிஷதங்கள் படிக்க முற்பட்டவுடன் எழுகின்றன. ஓரே யடியாக எல்லாக் கேள்விகளுக்கும் பதில் தேடுவது வீண் முயறசியாகிவிடும். படித்துச் செல்லும் பொழுதே பல புதிர்கள் விளஙகிவிடும். உபநிஷதங்களின் அருள் ஒளி அநேக ஐயங்களை நீக்கிவிடும்.

வேதாநதம் அந்த உண்மைப் பொருள் ஒருமைத்தன்மையில் எநத மாறுதலேயும் ஏற்பதாக ஒத்துக் கொள்வதில்லே. நம் மனதின ஒரு அர்த்தம் புரியாத குணத்தால் நாம் மெய்ப் பொருளில் பொயயான பன்மையைப் பார்ககிறேம். இருட்டில் வழிபபோக்கன் கயிற்றில் பாம்பைப பார்க்கிருன். விளக்குத் தூணைப் பூதம் என்று முடிவு செய்கிருன். இப்படிப் பொய்த் தோறறததால உண்மைத் திரை இடும் சகதியை வேதாந்தம் மாயை என்று அழைககிறது.

கர்மத்தின் சட்டம்

கர்மத்தின் சட்டத்தை விதியின் சட்டம் என்று தப்பாய எண்ணுகிறார்கள். இரண்டிற்கும் ஏராளமான வேறுபாடுகள் உண்டு. கர்மத்தின் சட்டமும், விதியின் சட்டமும் ஒன்றாக இருந்தால் ரோம, எகிப்திய நாகரீகங்கள்போல் நம் நாகரீகமும் என்றோ அழிநதிருக்கும். "விதி" என்ற பேச்சு மனித இதயத்தைத் தொலைத்துச் சற்று நேரத்துக்குள்ளேயே மனிதனை ஒன்றுக்கும் உதவாதவனாக ஆக்கவல்லது. ஒரு தேசம அநதப பேச்சை நமபினால் சீககிரமே அது வீழ்ச்சியடைந்து குறுகிய மனிதரும் சோம்பேறி மிருகங்கள் போன்றவருமான மக்களைக் கொண்ட நாடாக ஆகிவிடும்.

அதற்கு மாறாக கர்மத்தின் திட்டத்தை நம்புகின்ற தேசத்தின் மக்கள் ஆன்மீக பேராற்றல் கொண்டவர்களாகவும, துடிதுடிப்பு கொண்டவர்களாகவும் இருப்பார்கள். சும்மா இருததலுக்கும, செயலை ஒழித்திருத்தலுக்கும் எவ்வளவோ மாறுபாடு உண்டு. காட்டில் இருககிற சந்நியாசி சும்மா இல்லை; அவன் கையாலாகாதவன் இல்லை. துடிப்புள்ளவன்தான. ஆனால செயலை ஒழித்து இருக்கிறான. சுயநலத்தில் எதையும் தானாக ஆரமபிப்பதில்லை. அவ்வளவுதான்.

கர்மச் சட்டத்துக்கு அடிப்படை: "இநத வாழ்ககை இத்துடன் முடிவடையககூடிய ஒன்றல்ல; நம்முடைய நித்திய வாழ்வில் ஒரு சிறு சம்பவம்" என்ற தீர்ந்த முடிவுதான். நம்முள் ஒவ்வொருவரும தனித் தனிக் குணம் பெறறுத தனித் தனிப் போக்குப் பெற்றிருககிறோம். இநத வாழ்வுதான ஆரம்பமும, முடிவும் என்று இருககுமானால் எலலோருடைய வாழ்க்கை அனுபவமும் ஒரு மாதிரியாகவே இருந்திருககும்.

நாம் உண்மை அலலது மெய்ம்மையிலிருநது இநதப் பெரும ஆபத்தான தப்பெண்ணத்தில விழுநதுவிட்டதாக வைத்துக்

கொள்வோம். அப்பொழுது இந்த ஒரேமாதிரியில்லாத உலகம் எப்படி ஏற்படும்? தனித்தனி ஜீவன் தனித்தனி இன்ப துன்பங்களை எபபடி அநுபவிக்கும்? நன்கு சிந்திப்போமானால் தனித் தனிக் காரணங்களினால் நம் பிறவி காரணங்களுக்கேற்ற பயன்களாக உரு எடுத்திருக்கிறது என்ற முடிவுக்கு வருவோம். முடிவுகள காரணங்களை ஒத்தேதான ஏற்படும். நாம் வாழும் இநத வாழ்வு நாம இதுவரை எடுத்திருப்பதும், இனி எடுக்க வேணடியதுமான பல அவதாரங்களுள் ஒன்றேதான். சாவிலிருநது பிறப்பு, பிறப்பிலிருந்து சாவு என்று அந்தச் சுழல் நகாந்துகொண்டே இருககிறது. நாம் அதையெலலாம கவனிப்பதிலலை. வாழ்கையை ஒரு குறுகிய கோணத்திலிருநதே பார்க்கிறோம். படம் ஒனறை நன்கு பாாககவேணடும் என்றால் ஒதுங்கி, சற்றுத் தொலைவில நினறு பார்ப்பதுதான நலலது. அதேபோல் வாழ்வதை அறிநதுகொளள, மொத்த வாழ்வை நன்கு புரிந்துகொள்ள இநத வாழ்க்கையிலிருநது சற்றுத் தனித்திருந்து பாாக்கவேணடும்.

சில சமயம் நாம் "ஐயோ, என் தலைவிதி" என்று நொநது கொண்டு படைத்தவனையும் இழுதது்ப் பழிக்கிறோம். சிருஷ்டியில் ஒரு (இழுக்கும்) சங்கீத லயம இருபபதைத் தெரிநது கொள்ளுதல் வேண்டும். சூரியன், சநதிரன், நக்ஷத்திரங்கள் எல்லாம் தத்தம் வழியில் மாறாமல் செல்கினறன. எஙகும் இந்த "லய"த்தின் சட்டத்தின் வேலை செய்கிறதை ஒத்துக் கொள்கிறோம். வாழ்க்கையில மட்டும் தான் ஒரு திட்டம் இல்லை. லயம் இல்லை. நேர்மை இலலை என்கிறோம்.

அது உண்மை இல்லை. காரணஙகளின் பயன்கள் நாம். காரணங்கள் மாறியிருநதால் பயன்களும் அவ்வாறேதான் இருக்கும். நாம் எல்லோரும் முன்னால் செய்த செய்கைகளின் இககாலத்திய பிரதி பலன்கள். "சஞ்சித கர்மங்கள்" என்கிற பூர்வ ஜன்மச் செயல்களின் விளைவுகளின் பெட்டகமே நம் வாழ்வு. வாழ்க்கையை வாழ்ந்த பிறகு இநத வாழ்க்கையில் நமக்குப் "பயன்களாக"ப் பெற்றவை "பிராரப்தமாகும்."

வாழ்வு முடியும்போது சஞ்சித கர்மத்தின் முற்றிய பகுதிக்கேற்றவாறு அடுத்த வாழ்வு எடுக்க வேண்டியிருக்கும. புரியும் படி ஒரு உதாரணம் எடுத்துக் கொள்ளலாம. ஒரு நிலத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒன்றில் தென்ன நாற்றுக்கள, மற்றென்றில் வெண்டை விதைகள், மூன்ருவதில் மாஙகன்றுகள் நடுவதாக வைத்துக் கொள்வோம். பயிராகிப் பலன்தரும் விதத்தில் ஒவவொரு வகையும தனித்தனி கால அளவையும, முறையையும் பெற்றிருக்கும். அதே போல நமமுடைய ஒவ்வொரு செயலுக்கும் பயன்தரத் தனித்தனிப் பயனேக கொண்டதாகயிருக்கும். சில செயல்கள் உடனே பயன் விளேந்துவிடும். மற்றும் சில கால தாமதம செய்யும்.

கடந்த காலச் செயல்களின் பயன்களேச் துன்புறவோ ஒவ்வொருவருக்கும் தகுந்த இன்பதுன்பங்கள் தேவைப்படுகின்றன. அவற்றிற் கேற்றவாறு "இடமும்" தேவைப்படுகிறது. அதாவது ஒரு உலகம் வேணடும். உலகம என்ருல் அதன் சிறப்புப் பொருளில் "உலகம்" எனறு கருத்து. தன் உள் அனுபவங்களே வாழ்கிற குறிப்பிட்ட உலகத்தை அது குறிக்கிறது. புற உலகப பொருள்கள் ஒனருகவே இருக்கும் பொழுது தனி உலகம வேறு வேறு இருககும். சொல்லின் பொருளில் உலகம என்பது அனுபவ உலகம்தான்.

பிராரப்தம் என்ற சொல்லேயே, தான பெற்ற தோல்விகளை, தன்னிடமுள்ள ஆற்றலினமை முதலியவறறைக குறிக்க உபயோகப்படுததி அதறகுத் தபபாத்தம கற்பிக்கபபட்டிருக்கிறது. இநத கருததில் நம்பிக்கை வைத்தால் சுயமுயறசி செய்து சுய வளர்சசி பெற முடியாது. சிலர் 'கடவுளிடம எனககு நம்பிக்கை இலலாததும் பிராரப்தமே!' எனறு தேறறிக கொள் கிருர்கள். இது தோல்வி மனபபானமை. தோல்வி மனப பான்மை முன்னேற்றத்தை தடுத்துவிடும். நமபிக்கை கொண்ட ஊக்கம் தேவை என்று வசிஷடர் ஸ்ரீராமசசந்திரனுககு யோக வாசிஷ்டத்தில் அடிக்கடி எடுத்துக் கூறுகிருர். யோக வாசிஷ்டம் வேதாநதத்தின் சிறந்த கிரந்தம். ஸ்ரீராமச்சநதிரன் வசிஷ்டரிடம

நடத்திய விவாதங்களையும், வசிஷ்டர் தந்த பதில்களையும் அகுத்துத் தன்னுட் கொண்ட சிறந்த நூல் அது. அதை 'வாதத்தையும் தழுவிப் பேசிக்கொண்டே வாழ்க்கையின் உள் சத்தற்ற தன்மையை உணர்ந்து முனனேறப் புருஷார்த்தமும் தேவை' என்று அந்த மகரிஷி வலியுறுத்துகிருர்.

பிராரபதம் நம் செயல்களை யெல்லாம நடத்திச் செல்கிறது என்றுல் பிறகு புருஷார்த்தம் என்ற பேச்சு எப்படி வரும்? தெய்வம நமக்கு முழுச சுதநதிரமும் தரவில்லை என்பது உண்மை தான். உதாரணமாக, நாம ஒரு தண்டவாளக் கம்பியை வளைக்க முடியாதுதான. ஆனுல அதை மற்ற சாதனங்கள் கொண்டு அடித்து, வளைத்துவிட முடியும். கயிற்றில் கட்டிய பசு, மைதானம் முழுவதும் மேய முடியாதுதான். ஆனுல முளையைச சுறறிலும் ஒரு வட்டம்போட்டு அதறகுள் எங்கும சுற்றுவதற்கு அதற்கு சுதநதிரம இருக்கத்தான செய்கிறது. அதைப்போல மனித னுக்குப் பிராரப்தம் ஒன்று இருநத போதிலும் அதற்குள்ளேயே சுதந்திரத்தை நன்கு பயன்படுத்தி, முயற்சி செய்து, வாழ்க்கை யின பராலட்சியத்தை அடைய உழைக்கலாம்.

உண்மைதான். நம் கர்மங்களின் பழுத்த பகுதியான பிராரப்தத்தின் கட்டுக்குட்பட்டுத்தான் நாம் பிறவி பெற்றேரும். எனினும் சிநதித்துச் செயல புரிய நமக்கு ஒரு சுதந்திரம இருககத் தான் செய்கிறது. உதாரணமாக 'சத்சங்கத்திற்குப் போவோமா, படம பார்க்கப் போவோமா?' என்று முடிவு செய்ய நமக்குச் சுதந்திரம் இல்லையா? வாழ்க்கையில் எப்பொழுதும் இதுவா, அதுவா, இந்த வழியா, அந்த வழியா என்ற பிரசினை எழுந்து கொண்டே இருககிறது. எது என்று முடிவு செய்வதும் மிகவும் கஷ்டமாக இருககிறது. நல்ல வழி, சுகமான வழி என்ற இரண்டு பாதைகளின் சந்தியில் நின்று நாம் தயங்குகிறேரும். நம் உள்ளே "சனியனுக்கும் பகவானுக்கும்" போட்டி. இனிமையான வழி அன்று இன்பம் தரலாம். நாளாவட்டத்தில் அது முழுத் திருப்தி யையும தராது. இதுவே எல்லோருடைய அனுபவமும். இது வரை முழுத் திருப்தி யளித்த சினிமாப் படத்தை யாராவது பார்த்த

துண்டா? இன்னும் நல்ல படம் இனித்தான் வர இருக்கிறது! ஆனால் நல்ல வழியை அடைந்தவன் அமைதி அடைகிருன். சத் சங்கத்துக்கு வந்தவன் மன அமைதியும் பெற்று, வாழ்க்கையை யும் தன்னையும்பற்றி சில நலல சேதிகளைத் தெரிநதுகொள்கிருன. முட்டும் ஏமாறறங்களை அடிக்கடித தன் வழியில் பாாததுப பிறகு நலல வழியில் போயாக வேண்டும் எனறு முடிவு செய்கிருன.

மனது மெழுகுபோல அமைநதிருக்கிறதுபோலும. அதைத் தாண்டிச் செல்லும ஒவ்வொரு எண்ணமும் சுவட்டை விட்டுச் செலகிறது. ஒரே மாதிரியான எண்ணஙகள கீறல போனற ஒரே சுவட்டை வாய்ககால் போல ஆக்கி விடுகிறது. அடுத்த எணணம அதனூடே பாய்வது சுலபமாகிவிடுகிறது. ஆகவே நலல எண்ணஙகள் எண்ணிப பழகிவிட்டால் மீண்டும் நல்ல எண்ணஙகளே எழுகின்றன. நல்ல குணம் ஏற்படுகிறது. பிறகும் அடககமுடியாதபடி நல்ல எண்ண அலைகளே எழச் சாத்தியமாகிறது.

மனம் செயல்படும் முறையை அறிநதுகொளள ஒரு உதாரணம் பார்க்கலாம. கோபமடைவது உன குணம் எனறால முதன்முதலில் அதற்காக வருநதி இரககபபடும பழககததை ஏறபடுத்திக் கொள்ளவேண்டும். கொஞசம கொஞசமாகக் கோபம் மறையும. ஆனால் மறைநத கோபம் அப்படியே தங்கினல் நலலதல்ல. ஆகவே அந்த ஆற்றலை வேறு நல்ல பயன தரக்கூடிய வகையில் திருப்பிவிடவேண்டும். பிராரபதம் என்று சொல்லிக்கொணடு கோபம் என்கிற பலவீனத்துக்கு இடம் கொடுக்ககககூடாது. முதலில் நீ அறிநது கொளளவேணடும். உன் பலவீனத்தைப் புரிந்து கொள்ளவேண்டும. மனிதன அவன் மனதுதான். எதனால் மனது ஆகியிருககிறதோ அது தான் மனிதன். சிலசெயல்களைத் திரும்பத் திரும்பச செய்வதனல் செய்பவன் மனதில் அவற்றிற்கேற்ற குணம் படிநது விடுகிறது. புறவுலகப் பொருள்கள் நமக்குத் தரும் அனுபவங்கள்தான் நாம வாழும் உலகம். அநத அனுபவங்களை ஏற்கும் மனதின் தன்மைக் கேற்றவாறுதான் அனுபவத்தின் குணமும் அமையும். ஆகவே

நாம மனதில் எண்ணங்களையும காரணைக கருத்துக்களையும் அடககித் திருததி வைததிருந்தோமானல், நாம் அதைச் சுத்த மடையச் செய்து விடுவோம்.

நம் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் நடந்த செய்கைகளின் பலனை அனுபவிப்பது மட்டுமலலாமல் நாளைக்கென்று பலன் தரச சில செய்கைகளையும் செய்து கொண்டிருக்கிறோம். பிரா ரப்தம்தான பழைய செய்கைகளின் பயன். அது வருத்தம் அளிககக் கூடியதாக இருந்துவிட்டது. போகட்டும். இனி யாவது வரும கால வாழ்வு, சந்தோஷம் உளளதாக அமையத் தகக செயலகளை இப்பொழுது புரியலாமலலவா ?

விதியைபபற்றிய நம் பேச்சு, பிராரப்தக் கட்டுக்குள அடங்கிய நமக்குப புதிதாக நல்ல கருமங்களைச செயய சுதந்திரம் எவ்வாறு கிடைக்கும் எனறு பேசுவதில்லை. அதனலதான் நம் நம்பிக்கை அழிகிறது. தோல்வி மனபபான்மை எழுந்து நம மூசசை அமுக்குகிறது. ஊக்கம், உற்சாகம், செயல்வெறி எல்லா வற்றையும் போக்கிச் செயலபுரிய ஆற்றலற்ற ஒரு மிருகமாக ஆக்கிவிடுகிறது.

இன்று தெய்வ வாழ்வு வாழ்ந்தால் மட்டுமே நாளை நமக்கு நலல வாழ்வு கிட்டும். மதம் அத்தகைய வாழ்வை வாழச் சொல்லி அதற்கான வழிகளைச் சொல்கிறது. அதனல் இந்த வாழ்விலும, வரும் வாழ்விலும் நம் தெய்வீகச செயல்களின் பயன் கிட்டும. குறுகலான, முள் நிறைந்த தப்பான பாதையை விட்டு மதம் தரும் நேர்ப் பாதையில் செல்வாயாக. முயறசியுடன் வழுவாமல் அதே பாதையில் செல். பரம லட்சியத்தை அடைய லாம. பாதை சரியாக இருந்து ஒழுங்காகப் போனல் முடிவான அந்தப் பரம்பொருளை அடையலாம். எனவே கர்ம பந்தத்தின் சட்டம் நம் வேதாந்தத்தின ஆற்றல் தரும் நல்ல ஒரு சக்தியாகும். நம் வாழ்வை நாமே கட்டிக்கொள்ள அது வாய்ப்பு அளிககிறது. நம்மைப் பலமற்றவர்களாக துயருக்கும் குறுக்கலுககும் உட்பட்டு வாழ எனப படைத்துவிட்டார கடவுள் என்று ஒரு கடவுளைச் சொல்கிறோமே அநத கொடுங்கோலரான கடவுளுக்கு (!) அடிமை

யாக நாம் இருக்கவேண்டியதில்லை. பலமற்றுத் துயரில் தொல்லையுறுகிறோம என்றால் அது நாம் செய்துகொண்டதே யாகும். அறியாமையினால் நாம் முன்னாளில் வாழ்க்கையின் எதிர்மறைக் கருத்துக்களுக்கு மதிப்புத் தந்து அவ்வண்ணம் செயல்களை புரிந்தோம். அவற்றின் பயனுக்கேற்ற அனுபவங்களைப் பெறத் தக்க அமைப்புகொண்ட வாழ்வைப் பெற்றோம்.

கவலை கொள்ளவேண்டாம். ஊக்கம் கொள்ளுங்கள். இன்றைய வாழ்வை நேர்மையாக்கு. அன்பு, தயை, பிறர் குற்றம் பொறுத்தல் முதலிய தெய்வீகக் கருத்துக்களின மதிப்பறிநது வாழ். வருஙகால வாழககையின் அமைப்பு நனறாகிவிடும்.

பிராரப்தம் செனற நாளின் புருஷாரத்தத்தின் பயன், ஒரே பொருளதான் காலததிற் கேற்றவாறு புருஷார்த்தம் எனறும பிராரப்தம் என்றும் பெயர் பெறுகிறது.

தானே தனககுப் போலீஸ்காரனாக இருநது உன்னிடம உள்ள குறைகளைக் கண்டுபிடி. முயறசியுடன அவற்றை ஒழி. வருங்கால வாழ்வுககு நீயே கடவுளாக இரு. ஆம், கடவுளாகவே ஆகிவிடுவாய.

மனிதன் உயர்வும் தாழ்வும்

உபநிஷதங்கள், "நீயே அது" என்று பேசுவதில் ஐயம் கொண்டு பேசுவதில்லை. இருந்தும் நம் வாழ்க்கையோ மாறான உண்மையைக் குறிக்கிறது. நாம் கட்டுண்டு நிற்கிறோம், சங்கடப் படுகிறோம். அதற்கு விளக்கமாக வேதாந்தம் இவை எல்லாம் உண்மை அல்ல என்று குறிக்கிறது. புறப்பொருள் உலக அனுப வம் தோற்றமே. கயிற்றில் கண்ட பாம்பு எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மைதான் அது. கம்பத்தில் பூதம், பாலையில் நீர் எல்லாம் மயக்கத்தில் வந்த தோற்றமே. அதே போல் சச்சிதா னந்தப் பொருள்தான் உண்மை. ஜீவன் என்ற எண்ணம் உண்மையின்மேல் ஏற்றுவித்த பொருள். பொய்ப் பன்மை மயக்கமே. ஒன்றுதான் உண்மை; மெய்மை.

அவித்தை காரணமாக நாம் மயங்குகிறோம். இது ஏன்? இந்தக் கேள்விக்கு விடையளிக்க வேதாந்தம் 'மாயை'யைப் பற்றி விளக்குகிறது. மாயை அந்தப் பரம்பொருளின் பிரிக்க முடியாத ஒரு சக்தி. நெருப்புடன் நீங்காது நிற்கும் சூடு போன்று மாயை பரம்பொருளுடன் இணைந்து நிற்கிறது. நெருப்பு—சூடு. சூடே நெருப்பு என்பது போல் பரம்பொருள் மாயை உறவு இருக்கிறது.

மாயையின் உண்மைப் பொருள் தெரிந்து கொள்ள வேண்டும். இல்லை என்றால் வேதாந்தம் நம்மை ஏமாற்ற மாயை புரிகிறதோ என்று ஐயம் எழுந்துவிடும். மாயை என்ற சொல் லுக்கும், பொருள் இல்லாத ஒன்று (யோமா சாமாயா—) என்று ஆகும். மயக்கம் பெற்று கயிற்றில் பாம்பையும், கம்பத்தில் பூதத்தையும், பாலையில் நீரையும் ஏற்படுத்தித்தரும் 'குணம்' ஒன்றை மனது பெற்றிருக்கிறதோ அதைத்தான் மாயை என்கிறோம்.

நம்முடைய ஓததுழைப்பையும், இரககததையும் பெற்றே நம்மை ஏமாற்றும் மாயையை விளகக வேதாந்தத்திலிருநது பிரசித்தி பெற்ற சோமதத்தன் தந்தையின் கதை சொல்லப்படுகிற வழககம. அக்கதையை கவனிக்கலாம.

புதிதாகத் துறவு பெற்ற ஒரு சாது நீராட்ட யாத்திரையின பொழுது களைத்துச் சோர்ந்து கஙகைக் கரையில் நிழலுள்ள ஒரு இடத்தைக் கணடார். சென்று அங்கே கிடந்த ஒரு குறுகலான பாறைமேல் அமர்நது சிறு தூக்கம் ஒன்று போட்டார். தூககக் கலக்கத்தில் கங்கைக்கு நீர் எடுகக வந்த இரண்டு சிறு பெண் களைக் கவனித்தார். அவர்கள நீா எடுததுச சென்ற பிறகும் சாது அவர்களைப் பற்றிப பின்வருமாறு சிநதித்தார். நான் அவர்களுள் ஒருவரை மணந்தால்! 'ஒரு சிறு வீடு...... அதன் மூன்று அறைகள்...... வயலில் உழைத்துச் சாபபிடலாம். கடுமை யான கணவனுக இருப்பேன். சுக வாழ்வு வாழவேன்.....பிறகு கொழு, கொழு என்று ஒரு குழநதை பிறக்கும. அதற்கு சோமதத்தன் என்று பெயரிடுவேன. மூவரும் ஒரே படுக்கையில் படுப்போம். ஆம்! குழந்தைக்கு இடம் இருககுமா? தேவி, கொஞ்சம் நகர்ந்து இடம கொடு! "நான எப்படி நகர்வேன்? இடம்.ஏது? நீங்கள் நகருங்கள!" "சரி, நானே நகாகிறேன்..." பிரம்மச்சாரி நகாநதாா — விழுநதார் லொட் என்று! எங்கே? நேரே கஙகையில்! நலல வேளை. நீந்தத தெரிநதவர். நீந்திக் கரையேறிஞா. அன்பர்களே! அநதத் துறவி விழுநதது எதனுல்? விழித்தவுடன் அவர்தன மனைவியையும், பெணணை யும எங்கே தேடுவாா?

அந்த அப்பாவிப் பிரம்மசசாரி சோமதத்தனுககான உலகத தைக தனனுள்ளே சிருஷ்டித்தார். அதனுடன் ஒன்றிஞர். கனவை நனவாகக் கொணடு விழுநது வைத்தார். அப்படியே தான் பரிசுததமான நித்திய ஆத்மா நாம்! ஆதமா உண்மையை மறந்து சம்சாரத்தைக கறபித்துக கொள்கிறது. விழியுஙகள். பொய்யுடன் ஒட்டும் குணத்தைச் சுருட்டி வையுங்கள். சுருதி யாகிற கங்கை நீரில முழுகி எழுங்கள். ஒரே அடியில் தெய்வீக மற்ற கனவை ஒழியுங்கள்.

சோமதத்தன் தந்தை குடித்தனம் நடததினுனே—நடத்திக் கஙகையில் விழுந்தானே அதுதான மாயை. இல்லாத ஒனறை ஏற்படுத்திய மனதில் உளள அதன ஆற்றல்.

மாயை, சத்வ, ரஜஸ், தமஸ் (செயலொழித்த நிலை—செயல் நிலை, செயலாற்ருத நிலை) எனற மூன்று நிததிய குணஙகளுடன் உலவுகிறது. அவறறின் அளவு ஆளுக்கு ஆள நேரத்துக்கு நேரம் மாறி நிறகும்.

அந்தப் பரமப் பொருள், நித்திய ஞானததுவம் சுத்த தேவ குணப் பிரதானமான மாயையில் பிரதிபலிக்கும்போது அந்தப் பரமபொருளின தெள்ளிய, தெளிவான பிரதி பிமபம் கிடைக் கிறது. அதுதான் தெய்வ தத்துவம். ரஜஸ, தமஸ் இவறறுடன் கலநத மலின சத்வப் பிரதானமான மாயையில் பிரதி பலிக்கும் போது அது அகஙகாரத்தை மையமாகக கொண்ட ஜீவனுகிறது.

தெய்வதத்துவம் நம்மைச் சுற்றிலும் மூன்று வகைச் செய்கை களில் நிலவி நிற்கிறது. ஒவ்வொரு கணமும், அழிவும், ஆக்கமும், பிறப்பும், இறப்பும் இருந்து கொண்டே இருக்கினறன. தெரி யாத ஆரம்பம், நிர்ணயிக்க முடியாத முடிவு இநத இரண்டுக் குள்ளும் பொருள்கள் தரித்து நிற்பதையும் நாம் கவனிக்கிறேம். இந்த மூன்றையும சாதாரண மனிதன் புரிந்துகொள்ள நாம் அந்த மூன்று சகதிகளையும் பிரும்மா—(சிருஷடி கர்த்தா) விஷ்ணு (காககும கடவுள) சிவன் (அழிப்பவன்) எனறு அழைக்கிறேம்.

பானையைச் செய்பவன் 'என்ன செய்யப போகிறேம்' எனறு அறிதலவேண்டும. அப்படியே பிருமமாவுககும் 'அறிவு' தேவை. அதனுல்தான் அவர் அறிவுக்கும, வித்தைககும், தேவதையான சரஸ்வதியை மணநதிருக்கிருர். காபபாற்று பவனுக்கு அந்த வசதி தேவை. விஷ்ணு லட்சுமி தேவியைப் பெற்றிருப்பது லட்சுமி சம்பத்துக்கும, பொருளுககும் தேவதை யாக இருப்பதால்தான். சிவனுக்கும் அழிக்க அழியும் பொருள் வேண்டும. அவருக்கு அந்த வேலையில் பற்றுக் கொணடுளள தேவி உமை—பிரகிருதி உதவி செயகிருள்.

மூன்றும் தனித்தனி தெய்வங்களாகக் காட்டப்பட்ட போதிலும் அவை தனித்தனி தெய்வ ஆற்றலே தவிர மூன்று தெய்வங்களும் ஒன்றே என்று புராணம் ஆத்மீகமாகச் சொல் கிறது. அந்தக் கீதத்தை நனகு உணாரந்தவர்கள்தான் கேட்கிறுர் கள். சத்குரு தத்தாத்ரேயர், குருக்களுககுக் குருவானவர். அவர் மூன்று தெய்வங்களையும் துர்க்கை தேவியில் லயப்படுத்திஞா. பார்ப்பதறகுத தெய்வங்களுளளும் பன்மை இருந்த போதிலும அஙகேயும் ஒரே தெயவத் தன்மைதான் நிலவுகிறது. உண்மை யில் தனித்தனி ஒவவொரு தெய்வமும், ஒனறும் செயய இயலாது. சிருஷ்டி இல்லாமல ஸதிதிக் கடவுள் என்ன செயவார்? ஸதிதிக கடவுள் இல்லை யெனருல் சிவன் எதை அழிபபார்? அழிவு இருநதாலல்லவோ ஆக்கம் இருக்கும். ஆகவே அடிப்படைத தெய்வத் தத்துவம் ஒன்றே. பன்மை வெறும் மயக்கம்.

சுத்த சத்வ மாயையில் ஏறபடும் உணமைத் தத்துவததின பிரதிபிம்பம் ஈசுவரத் தத்துவம என்ருல அசுத்தமான சத்துவ மாயையில் உடைபட்டும மங்கலாகவும் ஏறபடும பிரதிபிம்பமதான 'தான் எனகிற கேநதிரம'. அதாவது சம்சாரியாகும். ரஜஸ்– செயலாகும். தமஸ் – செயலறற நிலையாகும். சூரியனைப பிரதி பலிககும் வாளியில உள்ள சாணி நீரை ஒததது 'ஜீவககனவை' ஏற்படுத்தும் இந்த 'இடைப்பொருள'. வாளி நீர் சுத்த மாயிருநதால் பிரதி பிம்பம் சுத்தமாகவும் அசஙகாமலும, உண் மையாகவும், தெளிவாகவும் இருககும. அலையும் சாணி நீரில அவவிதம ஏறபடமுடியாது.

தமஸ எனகிற தன்மை விகஷேபம, ஆவரணம என்ற இரண்டு வகையில் தன குணததைக காட்டுகிறது. இநத இரணடும ஒன்றையொன்று ஒட்டியே இருப்பவை. தனித்தனி இருக்க முடியாதவை. ஆவரணம உண்மையை மறைக்கும திரை. (மூடி)யைபபோடுகிறது. (மறைககிறது) விக்ஷேபம சஞ்சலத்தை ஏறபடுகிறது. தமஸின ஆவரண சக்தி மூன்று விதமான "இல்லை" என்கிற வழிகளில் இயங்குகிறது. அதன் காரணமாகவே (i) எனககுத் தெரியாது. (ii) எனககுப் புரியவில்லை. (iii) நான் அனுபவித்த(உணர்ந்த)திலலை என்று

மூனறு இலலாமை அலலது அறியாமைக்குள் நாம சிக்குகிறோம். இநத மூனறு எதிர்மறை எணணங்களும் முறையே சிரவணம், மனனம, தியானம் (கேட்டல, சிநதித்தல், நிதித்யாசனம்) மூனருல் நீககப்படுகின றன.

இநத மூன்றும் ஆவரணம் தரும் மிகப் பெரும் துககங்கள். ஆவரணம் முதலாவதன காரணமாக; நம்மில் அபூாவமாகச் சிலர்தான தனித்தனியே சிந்தித்துக் கண்டு அலசி ஆய்ந்து மாறும் மாறிக கொண்டே இருக்கும் இந்தப் புறப்பொருள் உலகத்திற்குள்ளே ஒரு தெய்வத் தத்துவம் இருககிறது என்று அறிய அவாவைப் பெறுக்கிறார்கள். 'தெரியாது' என்கிற மிகவும் மொதததையான ஆவரண நிலை நேரில் பெரிய ஆசாரியர் களிடமிருந்தோ அலலது அவாகளிடமிருந்து கிரந்தங்களின் மூலமோ கேட்டு நீக்கப்படுகிறது.

இந்த 'இல்லைப பொருள்' தொலைந்தவுடன் இன்னும் கொஞ்சம் சூட்சுமமான 'புரியவில்லை' என்கிற எதிர் மறைப் பொருள் எழுகிறது. புத்தி ஆர்வமாகச் சிந்திபபதாலும் காரண காரியத தர்க்கத்தாலும தாண்டப்படுகிறது. அபபொழுது முடிவே யிலலாத பெயாகள் தோற்றங்களின பன்மைக்குள்ளே ஒரு மையின் ஒரு தங்கக கமபி ஓடுகிறது என்று சாதகன் அந்த நிலையில் உணர்கிறுன். அதுதான் ஆத்மஞரும். அநத நிலையில் சாதகர்கள் புத்தி பூாவமாக உணாந்த அந்தப் பொருளை அனுபவ மாக ஏற்காத காரணத்தால அலைவுறுகிறுர்கள். அந்தத் தொலலை வேதாந்த சாதகனுக்கேற்பட்ட தியானத்தின் மூலம் தொலைகிறது. தியானததில் சாதகன் பயிற்சி மூலம் மனதை மாறுபட்ட பல எண்ணஙகளில் சறறுகூட அலையவிடாமல் ஒரே கருததில் இடையருமல் நிறுத்தப் பழகிக் கொள்கிறுன். அதன் எல்லையில மனது பூாண அமைதியை அடைகிறது. தூக்கத்தில் ஏறபடுவதுபோன்ற ஒரு நிலை எனறு அதைச சொல்லலாம். ஆனால இஙகே பூர்ண உணர்வும் ஒளிவீசிக் கொண்டு நிற்கும். இநத சித் ஞான நிலை என்கிற சவிகல்ப சமாதி நிலையில சாதகன ஆவரணத்தில் கடைசிக கொழுந்துவரை கிள்ளி எறிந்து விடுகிறுன்

தமஸின் ஆவரண சக்தியைப்பற்றி இவ்வளவு நேரம் பேசினோம். இனி விக்ஷேப சக்தியைப்பற்றி அறிந்து கொள்ள லாம். இதிலிருந்துதான் வெளித்தோற்றுகிற உலகம் உணர்வுக்குள் மறைந்து நின்ற உலகம் எழுகிறது. அந்த உலகிலிருந்து ஐந்து மூலத்தத்துவங்களின் புறப்பொருள் உலகம் எழுகிறது. இந்தத் தத்துவங்கள் கலந்துதான் பெயர்களும், தோற்றமும் ஞான சக்தி, கிரியை சக்தி உள்பட எல்லாம் ஏற்படுகின்றன. அவை எல்லாம் சேர்ந்துதான் இந்தத் துயரின் கையாலாகாத மூட்டையான மனிதன் என்கிற சம்சாரி ஆகிறான்.

நித்ய சுத்த முற்று பரமாத்ம நிலையிலிருந்து சோமதத்தன் தந்தையைப் போல மாயையின் சூழலால் நாம் நம்மைக் கட்டுக் குள்ளாக்கிக் கொள்கிறோம். மணமாகாத மனைவி, பிறக்காத குழந்தைகளுக்காகக் கட்டாத குடிசையில் வசித்து இடம்தர நகர்ந்துகொண்டிருக்கிறோம்!

வேதாந்தம் வீழ்ச்சிக் கதையின் அழுமுக ஆலாபம் மட்டும் அல்ல! இல்லாத ஒன்றை ஏற்றுக்கொள்ளும் வீழ்ச்சியின் அசட் டுத்தனத்தை விவரிப்பதிலேயே விழித்து அந்த நித்திய சுத்த நிலையான "ஞானம்" அடையும் வழியும் காட்டப்பட்டி ருக்கிறது.

உலகத்திலுள்ள மதங்கள், ஹிந்து மதத்தில் சொல்லப்படுகிற யோகங்கள் எல்லாமே ஆரம்பத்தில் மாறுபட்டுக் காணப்படலாம். ஆனால் அவை எல்லாம் ஒரே குரலில் ஞான காமேந்திரியங்களை அடக்கியாள வேண்டும் என்றுதான் பேசுகின்றன. உள்ளும், வெளியும் தன்னடக்கம். அதுதான் எல்லா மதங்களும் ஒத்துப் பாடும் தெள்ளிய பல்லவியாம். ஆனால் ஆத்திரத்துடன் அடக்கி விட்டதால் இந்தத் தன் அமைதி ஏற்படாது. நம்மிடமுள்ள இந்த இராவணனின் பத்துத் தலைகளையும் நம் உள்ளே உள்ள ராமர் அடிபுகூட வாங்கிவிட முடியாது. ராமபிரானுக்கு இராவணனைக் கொல்ல அவன் உள்ளே ஒளிந்திருந்த அமுத கலசத்தை முதலில் உடைத்து விழவைக்க வேண்டியிருந்தது. அது

அபபடியே இருநதவரை பிரும்மாஸ்திரமகூட அந்த ராட்சதனைக் கொல்ல முடியவில்லை.

அறியாமை வளாககினற ஆசைகளின் கலசம் நம்முள் மிக ஆழத்தில் இருக்கிறது. அதற்கு மூலமான அவித்தையை அழித்தால ஒழியப் புலனகளை அடக்கமுடியாது. பிரமை கொஞ்ச மேலும் இருக்கும் வரையில் ஆசைகள எழும்பிக்கொண்டேதான் இருககும். அவைகள் இநதிரியஙகளை அவ்வப பொருளகளில் அலையுமபடி தூணடிக் கொணடேதான் இருக்கும். ஞானத்தால் தான் நாம அவித்தையை அழிக்க முடியும். அதாவது நம்முடைய மெய்மை தெரியவேண்டும். 'சிவோஹம' எனறு உணர்தல் வேணடும். 'நான் அந்தச் சினமயப பொருள், இந்தப் பெயரும் உருவமும் கொணடதலல ! அகணடமான சுதத அறிவுத தத்துவம் !' என்று புரிந்து கொள்ளவேண்டும். அபபொழுதுதான ஆசைககு வித்தான பிராநதி அலலது அவித்தை தீரும்.

சுத்த அறிவு நமமுடைய நித்திய சொரூபம்தான். அதை நாம் படைத்துவிடும ஒரு நிலையாகக கொளளமுடியாது. மேகம் என மறைததுக குழபபம் ஏற்படுததி மயககி நிறகும் அவித்தையை நீககி விடலவேண்டும். மேகஙகளுக்குப பினனல் இருககும சூரியன அதன முழு ஒளியுடன பிரகாசிககத தொடங்கி விடும. இநத மேக நீககமதான் கேட்டுச சிநதிததுத் தியானம் செயவதன மூலம நடககவேண்டியிருககிறது. நாம தமஸ் என்ற சக்தி நம்மை என்னெனன பாடுபடுத்துகிறது எனறும வேதாநத சாதனைகளான சிரவணம், மனனம, தியானம மூலம் அதன சாதகஙகளை வேரறுககலாம என்றும பார்த்துவிட்டோம்.

சாதகன மனன நிலைக்கு வரும்போது புலன் நாடும் புறப் பொருளகளில் போலி இனபத்தைத் தேடுவது வீண் என்று அறிநதுகொள்கிறன. அங்கே புலன அடககம தொடங்குகிறது. புறப் பொருளகளை நாடி மனம் பெறும அலைவுகள குறைய ஆரம்பிககினறன. இதிலிருந்து ஆயிர மடஙகான இன்பம், அமைதி துலா நிலை (சமநிலை) கிடைககின்றன. இதன் பயனக அவன் தியானம உயர்கிறது. ஏகாகர சகதி (மனதொருமை)

கூர்மையும் வலிவும் பெறுகிறது. ஆவரணம் அடக்கப்பட விக்ஷேபமும் குறைகிறது. விக்ஷேபம் குறையக் குறைய ஆவரணம் சுருள்கிறது. இரண்டும் ஒன்றுக்கொன்று இணைந்தே வேலை செய்கின்றன. அப்பியாசம் ஏற ஏறத் தமஸின் தொல்லை தரும் இந்த இரட்டைச் சக்திகளும் அடக்கப்பட்டு ராஜஸ தமஸக் குறைகள் அடங்கி நம்முள் சாத்வீக குணம் ஏறும்.

சுருதி மந்திரங்களைக் கேட்டு அவற்றை மனதிலே ஏற்றுச சிந்தித்து அவற்றைப் பற்றி இடைவிடாமல் தியானம செய்வதால நம்முடைய மன ஏரியின் அலைகளும் கலஙகலும் நீக்கப்படு கின்றன. அப்பொழுது நித்திய தத்துவமான அந்த உண்மைப பொருள சுத்தமாக எதிரொளி பெறுகிறது. அந்தத் தத்துவத்தின் முற்றிலும் உண்மையும் சுத்தமானதுமான பிரதி பிம்பமே தெய்வத் தத்துவமாம். ஆகவே சாதகன் இந்த நிலையில் தெய்வத் தன்மையையும் கடவுள் தன்மையையும வெளிபபடுததுகிறான். அவனால் அற்புதஙகள் செயய முடியும். அவனுககு அருள் இயற்கையாகும். கருணை அவன் இயற்கை உணாவாகும். அன்பு அவன் மூச்சாகும். தயவு அவன் சாரப பொருளாகி உண்மை அவன் நடத்தையாகி ஈசுவரத்துவம் பிறப்புரிமையாகி நிற்கும். அவன் ஏழையோ, பணக்காரனோ, அழுகிறானோ, சிரிக் கிறானோ தேக நலம் உண்டோ இல்லையோ, தெயவ மனிதனாக வாழ்கிறான். பிறருக்கு வழியும் ஒளியும காட்டி ஆளுவான்.

சாதனையின் இந்த நிலையும மீறவேண்டும். ஞானம் பெறறு அநதப் பொருளாக ஆகவேண்டும் என்று ஆசைத் தீ அணையாது பெருகவேண்டும். தெய்வீக ஆனந்தஙகளையும, அமைதியும் கூடப் போதாது எனறு விடவேண்டும். அப்படியானால் தியானத் தின் உச்சியை அடைந்து ஒருவன சத்வாதிதனால் ஆகி பரம உண்மைப் பொருளைத் தன்னுள்ளேயே உணர்ந்து தானே அதுவாக ஆகிறான். "ஓமை" அடைந்து "ஓமில்" அடங்கி ஓமாக ஆனவுடன அவன் பரமபதத்தை, எல்லைக்கும் எலலையை பூர்ணத்வத்தின் இறுதி முடிவை, பூர்ண ஆனந்தத்தை அடை கிறான். அவனில்தான் எல்லாம தங்குகின்றன. உலகம அவனி

லேயே எழுந்து அவன் புறமாகவே நகர்ந்து முடிவில் அவனி லேயே முடிவடையும் அவனுகவே மாறிவிடும்.

ஆகவே இந்திரிய நிக்ரஹம இல்லாமல் ஆன்மீக வளர்ச்சி இல்லே. சிரவண, மனன த்யானம் இல்லாமல் புலனடக்கம் பயன பெருது. உபநிஷதங்களேப் படியுங்கள். தனியாய்ச் சிந்தியுங்கள். தியானம் செயயுங்கள். கையோடு புலனடக்கத்தையும் கற்றுககொள்ளுஙகள். சாதனேயைக் கெட்டிக்காரத்தனமாகத் தொடருங்கள். வெற்றி உஙகளுடையதே. சுருதிகள இங்கே இதோ இப்பொழுதே என்று உறுதி கூறுகினறன. பொறுமையும், நம்பிக்கையும் கொண்டு சேவை செய். அன்பு செய். சுத்தம் பெறு ; தியானம் செய். உண்மையை உணரு—அதுவும் இந்த ஜன்மத்திலேயே.

உபநிஷதங்கள்

வேதாந்திகள் வேதம் அழியாதது, என்றும் உள்ளது என்று நம்புகிறார்கள். இன்றைய படித்தவர்களுக்கு இது நமப முடியாததாய் காதுக்குக் கரகரப்பை ஏற்படுத்தலாம். 'ஏகாதிபதி யின் ஆணைச் சொல்லோ இது' என்று எதிர்வாதம செய்யலாம். ஆனால் நன்கு கவனிததால் வேதாந்த மேடையிலிருந்து வீசப் பட்ட ஏகாதிபத்திய ஆணையல்ல இது என்று விளங்கும். வேதம, வித்-அறிதல் எனற பகுதியிலிருந்து வந்த சொல். அறிவு என்றும் அழியாதது. வேத புத்தகங்கள் அழியா எனற கருத்தில் அது சொல்லப்படவில்லை. ஆத்ம அறிவு அழியாதது தான். ஆனால இதையும் சிலர் ஒபபுக்கொளள மறுக்கலாம்.

ஒரு உதாரணத்தின்மூலம் இதை விளக்கலாம். குருத்வ கேந்திர சக்தி (பூமி பொருளைத் தன்பால் இழுககும சகதி) என றும் உளளது என்று சொல்வதில் என்ன தபபு? நியூடனமேல் ஆபபிள்பழம விழுந்து அவன் கணடுபிடித்த, அன்றிலிருந்து தானா இந்த சகத் வேலை செயகிறது? அது அதற்கு முன்பும் மௌனமாக இயங்கிக் கொணடுதான இருநதது. நாம் அதை மறந்தாலும், மறந்த பின்பும, எனறும இருநது கொண்டுதான் இருககும். அதுபோலவே மினசகதியோ, அணுவின மூல சக்தியோ நிததியமானதுதான. அநதக கருததிலதான் வேதம் சொல்லும் உண்மை நித்தியமானது. வேத நூல்கள் அழியலாம். ஆனால் உபநிஷதப் பொருளான அநத நிததியப பொருள அழியாது. இன்றைய படித்தவர்கள் உண்மை யறியாமல் உபநிஷதங்களை ரிஷிகளுடைய விநோதக் கற்பனைகள் எனறு பேசலாம். நன்கு ஆய்ந்து உட்பொருளை உணர்நதவர்கள் அப்படி என்றார்கள். உபநிஷதங்களில நலல நம்பிக்கையே கொள்வார்கள்.

உபநிஷத ரிஷிகள் தீர்க்கதரிசிகள், உலகில நெடுங்காலம் உழன்றவர்கள். தொல்லையினிடையேயும் உள் அழைபபைக்

கேட்டார்கள். உண்மையைத் தேடித் தன் யாத்திரையைத் தொடங்கினார்கள். ஆழ்ந்த வைராக்யத்துடன் அவர்கள் கங்கைக் கரையில் அடர்ந்த காடுகளில் ஒதுங்கி வாழ்ந்தார்கள். மனதையும், புத்தியையும் பண்படுத்தி ஆய்ந்து அலசி பாகுபாடு செய்து மனமும் ஆன்மாவும் எப்படி, ஏன் இயங்குகின்றன என்று காண உள்ளே ஆழ்ந்தார்கள்.

நீண்டு தொடர்ந்து ஆன்மப் பயிற்சி நடத்தி அதன் பயனும் அடைந்த ஞானக்கனல்களை ஆசாரியர் கங்கைக் கரையைத் தேடி அடைந்த சிஷ்யனுக்குத் தந்தார். அவன் அவற்றைக் காப் பாற்றினான். வளர்த்தான். தன் அனுபவங்களின் பலத்தையும் தந்தான். ஒளியும் சூடும் மங்காமல் தன் சிஷ்யனுக்கு அந்தத் தீபத்தைத் தந்தார். அப்படி ஆசாரிய—சிஷ்ய பரம்பரையில் வந்தது இந்த ஆன்ம ஞானம். ஒவ்வொரு படியிலும் அது அவர்களுடைய தபோ பலத்தையும், அனுபவம் தந்த அதிகாரத் தையும் பெற்று எல்லா அம்சங்களிலும் வளர்ந்து வந்து இருக் கிறது. இநத ஞானசீலர்கள் உண்மையைத் தேடும் முயற்சியில் சுயநலமே மறந்து உழைத்தார்கள். உண்மையை அடைந்த புல்லரிக்கும் ஆனநதததில் தம்மையும் மறந்தார்கள். உபநிஷதங் களின ஆசிரியாகளை அறிய உபநிஷதங்களில் வழியில்லை. மிகச் சிறந்த தஙகள் ஆராய்சசி நூல்களில் கையெழுத்து இடக்கூட மறந்துவிட்டாாகள !

அவர்கள் கண்டுபிடித்த உண்மையை மதித்தார்கள். கண்டு பிடித்தவனைப் பெரிதாக எண்ணவில்லை. மனிதன் குமிழி போன்றவன். மனிதன் புகழும் பெயரும் உள்கனம் இல்லாத குழாய்கள் என்று அறிந்திருநதபடியால் அவர்கள் வருங்கால சந்ததியின் ஞாபகததில் வாழ முயலாமல சூட்சுமமான சுத்த உணர்வுநிலையில் அமரராக வாழ ஏற்பாடு செயதுகொண் டார்கள்.

உண்மையை நாடி—ஒரே உண்மையைக் கண்டு உலகத் துக்குக் கூவி உரைக்கும் அந்த மகான்கள் தப்பான கூற்றுக்களைச் சொல்பவர்களல்ல. ஒருகால் இன்று உள்ள வேதாந்தி

சமூகத்தின் மனதுக்கு ஏற்படவோ, பணம் பெறவோ, பிரசுர கர்த்தரிடம் பெருமை பெறவோ, வாசகர்களிடம் நலல பெயர் எடுக்கவோ விரும்பி அப்படிச் செய்யலாம். ஆனால் உபநிஷத தரிசிகளை உண்மை வழியிலிருநது அப்பால் இழுத்துச் செல்லும ஆற்றல்கொண்ட எந்த ஆசையும் கிடையாது. அரசாகளே அவர்களுக்குத் துச்சம். அரச சபையிலிருநது ஒதுங்கி உள்ள முழுமை, பக்தியின் பேருண்மை, தங்கள் அறிவின் ஆற்றல் இவைகளிலேயே திளைத்தனர்.

உண்மைப் பொருள் அறிந்த அவர்கள் சக்கரவர்த்தியிடம கூட அவன் வழிதெரியாது வருத்தமுற்று என்றென்றும் ஏழை யாகவும், சக்தியற்றும் விளங்கும் ஒரு புழுவுக்குச் சமானம் என்று சொல்லும் துணிவு கொண்டிருந்தனர்.

தவிரவும் அவர்கள் எல்லோரும் தனித்தனி முறையைட பின்பற்றினாலும் முடிவில் சொலவது ஒரே உண்மையைததான் அப்படிப்பட்ட ஆற்றல், சீர்மை, முழுமை, உளநலத் துணிவு எல்லாம் பெற்ற அவர்களை, கதை கட்டும் பித்தர்கள் எனறு நாம் எவ்வாறு துணிந்து கூறமுடியும்? எதறகாக அவர்கள் அவவிதம் செய்யவேண்டும்? உண்மையை அறியப் பசியும், தாகமும் கொண்டு கஷ்டப்பட்டுக கண்டுபிடித்த உணமையை அவர்கள நிர்ப்பந்தமாகப் பிரசாரமா செய்தார்கள்? மனப் பககுவம் கொண்டு, வேண்டும் என்று விழைந்தவனுக்குத்தானே சொன்னார்கள்.

உபநிஷதங்கள் 'வெளித் தோற்றங்கள்'—தனி மனிதன் புத்தியின் விளைவுகள் அல்ல. வெகு நாளையப் பயிற்சியின பயனாய் மனதும், புத்தியும் சூக்ஷம நிலையின் மிக உயர்நத தளங் களில் சிறகடித்துப் பறக்க ஆரம்பிககினறன. அஙகே ஒரு தெய்வ அருளும் துலாநிலையும் பெற்று நிற்கின்றன. அங்கே அந்த ஒளி வெளியில் அவை அப்படியே ஒனறுமில்லாமல் ஆகிவிடு கின்றன. இதுவே யோகங்களின் முடிவு. அந்த நிலையில்—மனம் லயமாகி நிற்கும் நிலையில்-தானாகத் தோன்றுவதே உண்மையாம். ரிஷிகளும, முனிவர்களும் அதை அவ்விதமே பெறுகினறனர்.

உண்மை கற்பனையோ அல்லது தர்க்கம் செய்தோ பெறப்படுவது அல்ல. ஆகவே கற்பனை என்று யாராவது புத்திச் சோம்பல் உள்ளவன் சொன்னால் அவன் உளருகிறான் என்று தள்ளிவிட வேண்டியதுதான்.

இந்த உபநிஷதங்கள் மனித வாழ்க்கையின் வெண்ணெயாம்! நான்கு வேதங்களில் ஒவ்வொன்றுடனும் மூன்றாவது புத்தகமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. மந்திரங்கள், .பிராமணங்கள், அரண்யகங்கள் என்ற மூன்று பகுதிகள். ஒவ்வொரு வேதத்துக்கும் உள்ள மந்திரங்கள் ரகசிய சக்தி கொண்ட பொருள் பொதிந்த வாக்கியங்கள். பிராமணங்கள் இயற்கையின் பெருமை சீர்மை, அழகு இவற்றிற்குச் செலுத்தும் புகழ் பாடல்கள்; மேலும் யாக யக்ஞங்களின் விதி முறையின் விவரணங்கள் மூன்றாவது உபநிஷதங்களாம்.

அரண்யகம் என்றாலே காட்டிலே பழக்கும் பொருள் என்று பொருள் படுகிறது. ஸ்தூலப் பொருள்களிலிருந்து மனது—புத்தியை அகற்றி உலகை மறக்க அமைதி கொண்ட ஒரு சூழ்நிலை தேவை. ஆம். சிறு தொந்தரவு இருந்தாலே, உதாரணமாக வேலையை விடுவோம் என்ற கேள்வி எழுந்தால் பதில் சிந்திக்க வீட்டைவிட்டுப் பார்க்குக்குச சென்று மரத்தடியில் படுத்து முன்னும் பின்னும் யோசிககிறோம். அந்த நிலையில் உயிர் தத்துவக் கிணற்றின் ஆழத்துள் ஆழத்துக்கு, முழுகவேண்டும் என்றால் சூழ் நிலையின் தேவையைப் பற்றிப் பேசவா வேண்டும்?

வேதங்கள் குரு சிஷ்ய பரம்பரையில் சொல்லியும் கேட்டுமே நின்று பரவிவந்தன. ஆனால் வியாச பகவான் காலத்தில் மனிதன் மன ஆற்றல் குறைந்து வருவதைக் கண்டார்கள். உலகாயதம் மனதில் பட்டுத்திரையிட ஆரம்பித்த காலம்போலும் அது. ஆகவே இந்த உண்மை சாஸ்திரங்கள் வகுத்துத் தொகுத்து வைக்கபபடாவிட்டால் மக்கள் இவைகளை இழந்தே விடுவர் என்று எண்ணினார்கள். அந்தச் சமய 'வைதிகர்கள்' என்ன கூச்சல் போட்டிருப்பார்கள! துளஸிதாஸ் ராமாயணத்தை ஹிந்தியில் எழுதியபோதும், கீதையும், உபநிஷதங்

களும் ஆங்கிலத்தில் வெளி வந்தபோதும் அப்படித்தான் அலறி ஞர்கள். இன்னும் ஆங்கில மொழியில் சத்சங்கம் என்றாலே தபபு எனறு எண்ணுகின்றவர் உண்டு. அதனுல் என்ன? வெற்றுப் படிப்புப் பண்டிதர்கள் பேச்சு இது. இவர்களை விடப் பெரியவர்கள் உபநிஷத உண்மைப்படி வாழ்கினறவர்கள். உலகத்தையும் அதன் சந்தை நிலையையும் விட்டுத் துறவும், அறிவும் கொண்டு வாழ்கின்றவர்கள். அந்த மகாத்மாக்கள், இந்தச் சாதுவின் குருமார்கள்—உண்மை அறிய ஆவல்கொண்ட படித்தவர்களிடையே இந்த ஆத்மா, வித்தையின மறுமலர்ச்சி மூலம் ஹிநதுமதம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட வேண்டும், அது அவசியம் என்று கண்டார்கள். இன்று நாம் வேதவியாசரை ஹிந்து பண்பாடு, அதன் ஞானவிளக்கைக் காத்துத் தந்தவர் என்று போற்றுகிறேம் என்றால் சின்மயாவின் குருமார்களையும் நன்றிக் கண்ணீருடன் உலகம் மதிப்பறிநது போற்றும் நாள் மிகத் தொலைவிலில்லை. உலகம் அவர்கள் துணிவுகொண்ட இந்த மறு மலர்ச்சி இயக்கத்திஞல் நன்மை பெறுவது திண்ணம்.

நிற்க. வேதவியாசர் சிதறிக் கிடந்த மந்திரங்களை இருக்கு, சாமம், யஜுர், அதர்வண வேதம் எனறு நான்காகத் தொகுத்துத் தந்தார். ஒவ்வொரு வேதமும் மந்திரங்கள, பிராமணங்கள், அரண்யகங்கள் என்று மூன்று பகுதிகள் கொண்டது என்று பார்த்தோம்.

தகுதி வாய்ந்த மாணவர்கள அரண்யகங்களைச் சிறப்பாகப் படிக்கக் கங்கைக் கரையில் அடர்ந்த காட்டுக்குள் ஒதுங்கினுர்கள். ஏதோ உலகை விட்டே ஓடினுர்கள் என்று முடிவு கட்டி நாம் சிரிக்கலாம். உண்மை அதல்ல. விட்டே ஓடுவது வேறு; ஒதுங்குவது வேறு. அவர்கள் வாழ்க்கையைச் சமாளிப்பதற்குக் காட்டிய தில் பாதி அளவுகூட நம்பிக்கை, நேர்மை, தெளிவு நாம் காட்டுகிறதில்லை என்று சொல்லலாம். அன்றுபோல் இன்றும் அவர்கள் பயந்து ஓடினுர்கள் என்று சொல்பவர் பல உண்டு. உண்மையில் ஆழ்ந்து சிநதிக்கிறவர்களுள இப்படி ஒதுஙகுபவாகள இன்றும் இருக்கிறுாகள். புத்திக்கட்டைகளும், மாடுகளுமதான இப்படி ஒதுங்கத்தெரியாமல் இருக்கினறன. அவர்களுக்குத் திரவிடம்

தேடப் போகும் ஆட்டம், செலவழித்தல், வியர்வை பெருக்குதல் அழுதல், உழைதல் முதலியவற்றின் ஒரே படியான தொகுதியே வாழ்க்கை என்று படுகிறது. நடுச் சந்தையில் நிற்பதுதான் அவர்கள் கருத்தில் வாழ்க்கையில் இருப்பது. ஒதுங்கிச் சிந்தித்து தனியே துறவுநிலையில் அமர்வது தியானசமாதி எல்லாம் பித்துக் கொள்ளியின் சொல்களாம். ஆனால் இன்றும் நம்மிடையே ரிஷிகள் இருக்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. பேராசிரியர்கள், புதுக் கண்டுபிடிப்புக்களில் மனம் செலுத்தும் விஞ்ஞானிகள், கலைஞர்கள், ஏன் அரசியல்வாதிகள் எல்லோருமே என்ன செய்கிறார்கள். ஆழ்ந்த கருத்தில் ஒரு வகையில் பார்க்கப்போனால் இவர்கள் எல்லாரும் பயந்து 'ஓடுகிறவர்கள்' தாம். பேராசிரியர்கள் ம ற தி பிரசித்தி பெற்றது. கலைஞர்கள் பட்டினிகிடக்கிறார்கள்; அவமானம் தாங்குகிறார்கள். இருந்தும் அழகை அனுபவிக்கும் தங்கள் லட்சியத்தில் இடையறாது சென்று கொண்டிருக்கிறார்கள். நாம் அவாகளை லட்சியம் செய்வதில்லை. அவாகளும் நம்மைக் கவனிக்காமலேயே இருந்துவிடுகிறார்கள் என்றே தோன்றுகிறது.

கந்தல் கட்டிய ஒரு கிழவன குளக் கரையில் அமர்ந்து குளத்துக்குள் கல்லெறிநது அதனால் எழும் வட்ட அலைகளைப் பார்த்து ரசித்துககொண்டிருந்தான். இதைக்கண்ட குடிமகன் ஒருவன் இந்தச் சோம்பேறியைக் கண்டு மனம் கொதித்தான் 'முன்னேற்றத்தில் நாட்டம் கொண்ட அரசில் இவ்விதச் சோம்பேறிகளைப் பாாத்தவுடனேயே சுட்டுத் தள்ளிவிட வேண்டும; அவர்கள் நாட்டுக்குச் சுமை' என்றான். அவன் சொன்ன முடிவை ஒத்தே இன்று அநேக படித்தவர்கள் சிந்திக்காமல் அவசரமாகப பேசிவிடுகிறாாகள். ஆனால் ஒரு விஷயம். கல்லெறிந்தவனும், அவனைத் திட்டியவனும் காலக்கிரமத்தில் இறநதுவிட்டனர். திட்டியவனை நாடு இறந்த நாயைப்போல் மறந்துவிட்டது. ஆனால் மற்றவனை இன்று நாடு போற்றிப் புகழ்கிறது. அவன் ரபேல் என்ற கலைஞன். அலைகளுக்குத் திரையில் வண்ண ஒளி தந்து அழியாதவனாக்கித் தநது சென்றான்.

சுருக்கமாக நல்ல எந்தப் புது விளைவும் அவசரம், ஆத்திரம், படபடப்பு, வெளிவியர்வை இவற்றிலிருந்து எழமுடியாது. சூட்சுமமான உள் உழைப்பின் விளைவே அது. இந்த இயந்திர உலகத்திலும் பார்க்கிறோம். மிக வேகமாகச் சுழல்கிற சக்கரம 'சும்மா இருப்பதாக'த் தோன்றுகிறது. அதன்மேல் வைத்த பம்பரம் அசையாத படம்போல் தோன்றுகிறது. சக்கரம் வேகம் குறைந்தால்தான் அந்தப் பம்பரம ஆடி, அசைந்து அக்கம் பக்கம் நகர்ந்து உருளுகிறது. அவ்விதமே மனிதன் சிந்தனை உலகத்தில் ஆழ்ந்து வாழும்போது வெளிச் செயல்கள் அடங்கி நிற்கின்றன. அப்படிப்பட்டவர்கள் சோதனைச சாலை, ஸ்டுடியோ, வீட்டு மாடி எங்கிருந்தாலும் சரி, இந்த உலகத்திலிருந்து ஒதுங்கித்தான் நிற்கிறார்கள். அவர்கள் தெரு மக்களுடன் சேர்ந்து சிரித்து ஆட மாட்டாதவாகள். அவர்கள் சில சிறந்த குறிக்கோள்களுக்காக வாழ்கின்றவர்கள். அவர்களை 'பயநது ஓடியவாகள்' என்று எண்ணுவது நம்முடைய மதியீனமாகும். அர்த்தமற்ற பேச்சாகும்.

அவ்விதமே சிலர், உண்டு, உடுத்து, உறங்கி வமிச விருத்தியில் புரள்வதைவிட வாழ்க்கையில் சிறந்த சூட்சுமமான குறிக்கோள் இருத்தல்வேண்டுமே என்று தேட விரும்பினர். ஆழ்ந்த சிந்தனைக்கு இன்றியமையாததாக வெளியே சாந்த சூழ்நிலை, உள்ளே ஒரு தெய்வ அமைதி இவற்றின தேவை அமைந்தது. கடந்த காலத்தில் கங்கைக் கரையை அடைந்து, பல்லாண்டுகள் ஆத்ம ஆய்வு, ஆத்ம ஆராயச்சி, ஆத்ம சோதனையில் ஈடுபட்ட பெரியோர்களே ஆத்ம வளர்ச்சியின் முழுமைக்கு வழி வெட்டிப் போட்டார்கள். சிஷ்யர்களுக்குச் சொல்லுவதன்மூலம் அடுத்த பரம்பரைக்கு அந்த உண்மைகளைத் தந்தார்கள். அவர்கள்—சிஷ்யர்கள்—தாங்களும் நடந்து அறியாத துறையில் பல மைல்கள் பாதையை முன்னேற்றினார்கள். அவர்கள் தங்கள் சிஷ்யாகளை அந்த வழியில் விட்டுத் தாங்கள் மறைந்தார்கள்.

உபநிஷதங்கள் சிந்தனையாளர்களின் பல பரம்பரையினா சேர்ந்து வகுத்த 'உள் வழியாம்'. அவர்கள் தாஙகள் கண்ட கொள்கைப்படி வழி நடந்த பெரியார்கள், மனித ஆத்மாவின்

நித்ய சத்வ நிலையைப்பற்றி அவர்கள கண்ட உண்மைகள் அளவுக்குட்பட்ட சொற்களில அடங்க மறுத்தன. ஆகவே அவர்களுக்குச சமஸ்கிருதம் எனற பண்பட்ட மொழியைத் தயார் செய்ய வேண்டியிருநதது.

உபநிஷத மந்திரங்கள் தங்கள் பொருள்களை ‘சுட்டு’, குறிப்பு இவற்றின் மூலம் காட்டுகின்றன. நேரடியாகப் பேசுவ தில்லை. ஆனால் அந்தச் சுட்டுகள், குறிப்புகள், உள்கிடக்கைகள் எல்லாம் நம்மை ‘உண்மை’யின் சந்நிதிக்கு அழைத்துச் சென்று விடுகின்றன. ஆனால் குறிப்புகளும், உள்ளர்த்தங் களும், புதை பொருள்களும் புரிய ஒரு குருவின் உதவி வேண் டும். உபநிஷத மந்திரங்களை நாணமும் தலைகுனிவும், ரகசியப் பார்வையும் கொண்டவர்களாகிய நாமே வாசித்துப் புரிந்து கொண்டு விடமுடியாது.

ஆம், குருவின் உதவிமட்டும் போதாது. நமக்கும் தெரிந்து கொள்ள வேணடும் என்ற தாகம் வேண்டும். நம் உள்ளே உள்ள சூடசும ஆற்றல்கள் எவை என்று சிந்திக்கும் ஒரு தனி உள் ஆற்றலும் வேணடும். இந்த ஆற்றல் நல்வாழ்வு வாழ்ந் தால்தான் கிடைக்கும். பிரம்மச்சரிய விரதத்தை மிகவும் கவன மாகக் காக்கவேண்டும்.

நலலவராக இருங்கள், நன்மை செய்யுங்கள், தினம் அரை மணியாவது தியானம் செய்யுங்கள். பிரம்மச்சரிய விரதத்தைக் காப்பாற்றுங்கள். உபநிஷத மநதிரங்களின் விளக்கங்களை நன்கு புரிந்துகொண்டு அவற்றுள் ஒன்றுங்கள். எம்பெருமான் கிருபையால் ஒரு கணமாவது அந்த உபநிஷத உண்மையின் புல்லரிப்பு நிலையின் இனபத்தை அடைவீர்கள்.

ஓம் தத்சத்

நடைமுறை

இதுவரை வேத இலக்கியத்தில் உபநிஷதங்கள் பெற்றுள்ள இடம், அவை காட்டும் முடிவு, அந்த முடிவை அடைய அவை சொல்லும் வழி இவை எல்லாம் பார்த்தோம். இப்பொழுது அவை ஏற்றுக்கொண்டுள்ள பாட முறையை அல்லது நடையைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

ரிஷிகள் சொல்லுக்குள் அடங்காத ஒரு உண்மையைச் சொல்லச் செய்த முயற்சிகளே உபநிஷதங்கள். அவர்கள் அதற்கு ஏற்றதாகச் சுத்தமான உள் பலம் பொருந்திப் பதப்படுத்தப்பட்ட ஒரு மொழியாகச் சமஸ்கிருதத்தைக் கண்டார்கள். இந்த மொழிக்கு எல்லையற்ற பொருளும், கருத்தும் உண்டு. அப்படியிருந்துங்கூட அதுவும் சில சமயம் சொற்கள் மூலம் மட்டும் அந்தப் பரம ஞானத்தைப் பற்றிப் பேச முடிகிறதில்லை. மற்ற மொழிகளைவிட இந்த மொழி அதிகம் வெற்றி பெற்றிருக்கிறது. அதற்குக் காரணம் அதன் சொற்கள் கொண்டுள்ள சுட்டும் சக்தியே!

படிக்கும் பொருளுக் கேற்றவாறு படிக்கும் முறையும் மாறும். நாவல் படிக்கும் முறை வேறு. பௌதீக விஞ்ஞானத்தைப் படிக்கச் சில ஆற்றல்கள் வேண்டும். புத்தி, தர்க்க ஆற்றல் இவை எல்லாம் தன்மை. உபநிஷதம் படிக்க உள்ளும், வெளியேயும் சில தனி அமைப்புக்கள் தேவை. அது ஏன, எப்படி என்று வேதாந்த நூல்கள் பின்வரும் முறையில் விளக்குகின்றன.

உங்களில் சிலரும் இந்தச் சாதுவும் சேர்ந்து சுக்லபக்ஷத்தின் துவிதியை இரவில் வெளியே போவதாக வைத்துக் கொள்வோம். மேகமற்ற ஆகாயத்தில் சின்மயா இரண்டாம் பிறைச் சந்திரனைப் பார்த்துவிடுகிறார். அதன் அழகு தூண்ட அவர் மற்றவரிடம் சொல்கிறார்: "அதோ பாருங்கள் அன்பர்களே,

என்ன காட்சி !" விரலையும் சுட்டுகிறார். அன்பர்கள் பார்க்க இயலவில்லை. ஆனால் பார்க்க ஆவல் மட்டும் பொஙகுகிறது. சின்மயாவும காட்டிவிட வேண்டும் என்று துடிக்கிறார். ஆகாயமோ ஒரே அகண்டாகாரமாக இருக்கிறது. வேறு ஏதாவது பொருள்கள் இருந்தால் அல்லவா இதற்கடுத்து அதற்கு இப்பால் என்றெல்லாம் சொல்ல முடியும்! ஆகவே வேறு வழியின்றி அடுதத வீட்டிலுள்ள மரத்தை ஆதாரமாகக்கொண்டு அதைக் காட்ட ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அவர் பின் வருமாறு தொடங்குகிறார். "அன்பர்களே, அதோ பாருங்கள். மாமரம் பார்த்தீர்களா? அதன் கிளை ஒன்று வடக்கே போகிறது. பாருங்கள் அதை! அதோ அதன் நுனியில் இரண்டு இலைகள்—ஆம் அசைகின்றனவோ அவைதான்!" என்றெல்லாம் பேசுகிறார். யோசியுங்கள். நண்பர்களுக்கு சுவாமியிடம் நம்பிக்கை வேண்டும். இல்லை என்றால் 'ஆகாயத்தில் பிறையைக் காட்ட வேண்டிய இவர் மாமரத்தின் வேரிலிருந்து ஆரம்பிக்கிறாரே! ஹம்பக்!' என்று எண்ணிவிட்டால்? சின்மயா பிறையின் அழகைக் காட்டும் முயற்சியை நிறுத்திவிட வேண்டியதுதான். ஆனால் அவர்களுக்கு ஆழ்ந்த நம்பிகையை இருந்தால் அவர்கள் படிபபடியாக சுவாமி சொல்கிறதைப் படிப்படியாய் நிறைவேற்றுவாாகள். அவர்கள ஒததுழைத்தால் பிறைச சந்திரனைக் காட்டுவது எளிதாக முடியும்.

பிரும்ம வித்தையைப் போதிக்கும ஆசாரியர்களும், இப்படித்தான் மிகவும் விரிவாக மரம், கிளை கடைசியில் இலைகளைப் பற்றிச் பேசுகிறார்கள். அங்கிருந்து அவர்கள், "அதோ பார். ஆத்மாவைப் பார். அதோ இருக்கிறது உண்மை!" என்று காட்டுகிறார்கள். நாம் சிருஷ்டி முறைகள், ஜீவனின் சரீரம், பிராணன்கள், மனது, புத்தி, ஆனந்த மயகோசம் எல்லாவற்றையும் பற்றி விரிவாகப் பேசியிருக்கிறோம். நம் கூற்றுகளில் ஒன்றுக்கொன்று முரணியவையும் இருந்திருக்கின்றன. இவை எல்லாம் சில உண்மையைப்பற்றிய அழுததமானவை, சில உண்மையற்றவைபறறிய அல்ல என்ற பேச்சுகள். இவை எல்லாமே ஆரம்ப பாடங்கள; உண்மை விளகக முதல் படிகள்.

இவை எல்லாவற்றையும் நன்கு உணர்ந்த சாதகன் சீக்கிரமே தன்னுள் உள்ள மெய்ம்மையே தன் ஆத்மன் என்று உணர்ந் திருப்பான். உண்மையை அவன் உணர்வதற்கு முன்னமேயே உண்மை அவன் எதிரே நின்று விடுகிறது. நாம் முன்பு காட்டிய உதாரணத்தில்கூட அவன் சரியானபடி இலைகள் மேலே கண் களைத் திருப்பி விட்டிருந்தானுனல் சந்திரன் பிறை அவன் கண்களில் பட்டுக் கொண்டிருக்கும். அவன் அதை உணரச் சற்று நேரம் பிடித்திருக்கலாம்.

இலைகளைக் காட்டும் வரை பார்த்தான். பார்க்க விரும்பிய வனுக்குப் பாடம் சொல்லலாம். அதற்குப் பிறகு, "மேலே அதே கோட்டில் நேரே பார்!" என்று சொல்லிவிட்டு ஒதுங்கிவிட வேண்டியதுதான். பிறகு பார்க்கிறவன தன் பார்வையை இலையிலிருந்து அகற்றி அதற்குமேலே தொலைவில் பார்க்க ஆரம் பிக்க வேண்டியதுதான். ஆம். அது அவன் முயற்சியினுல் என்று கூடச் சொல்லக்கூடாது. பார்வை சரியான கோட்டில் திருபபப் பட்டால் உடனே தடுத்தாலும் தடுக்க இயலாமல் நேராக அந்தப் பிறை காணபபட்டு விடும. பிறகு அவன் ஒரே பார்வையில் இலை, பிறை இரண்டையும் காணமுடியும். பக்தன் வழிபடும் பொருளில் அந்த மெய்மைய பொருளைப் பார்ககிறுன. அந்தப பொருளைப் பார்த்தவுடனேயே அவன தன்னை மறநது உள வளாசசி அடைகிறுன. பரமாத்மாவுக்கு நேரிலேயே இருப்பதாக உணாகிறுன.

பக்தி பின்னுல் வளர்ந்ததாகக் காணப்படுகிறது. அது புராணங்கள் தந்த செல்வம். வேத காலத்தில் மனிதர்கள் அமைதியுடன், பரபரபபு அடையாதவர்களாய் ஆழ்ந்து இருக்க முடிநதது. அப்பொழுது உபாசனை முறைகள் சரியாக இருந்தன.

அடிப்படையில் பக்தி மார்ககமும் உபாசனை முறைகளும் ஒரு தரப் பட்டவையே. உபாசனையிலும் உபாசகன் தன் சூழ்நிலையி லிருநது தப்பி ஒதுங்கி ஒருமுறை உலகின பரப்பிலும் உண்மையி லும் சென்று நிற்கிறுன். வேதங்களின் கருமகாண்டங்களில் அநேக வகை உபாசனைகள் சொல்லப்படுகின்றன. அவைகளுள்

ஒன்று பிராண உபாசனையாம். இதில் உபாசகன் தன் பிராணனை உயிருள்ள ஜீவன்களுககெல்லாம உயிராக உபாசனை செய்கிருன். அவன் மனது இநத விதம் நான தனி என்று பிரிக்கும் இரும்புப் பிடியிலிருந்து தளர்ந்து பாயப பயிறறுவிககபபடுகிறது.

கர்மங்களே (சடஙகுகளே) ஆன்மப் பயிற்சிக்கு உதவிகள் தாம். மாயையில இருக்கும்வரை மனிதன் ஆசைகள கொண்டு தான வாழமுடியும். வேத ரிஷிகள் இதை உணர்ந்து அவன் ஆசைகள் தீர எனவே யாகயக்ஞங்களை வகுத்தார்கள். வேதங் கள், கர்மங்கள் ஆசையுடன செய்யபபட்டால பித்ருலோகத்தில் ஆனந்தம கிடைககும் என்றும உபாசனையுடன் கர்மங்கள் செய்தால் தேவலோகத்தின் பிரம்மானந்தஙகள் கிட்டும் என்றும் உ ஆனல் கர்மகாண்டம முடிவடையக்கூடிய பித்ரு, தேவலோக இனபங்களைப்பற்றி மட்டும் புண்ணியங்கள் தீர்ந்தவுடன் அறிவின் அநதத் தளங்களிலிருந்து கீழே துன்பஙகளுக்கும, குறைகளுக்கும இருப்பிடமான பூலோகத் துக்கு இறங்கிவிட வேண்டியதுதான. இப்படி முடிவில்லாமல் இஙகும் அங்கும் அலைந்த பிறகு, ஜீவர்களுககு ஒரு மாதிரிச் சற்றுத் துறவு மனப்பான்மை வருகிறது. அவர்கள் வளர்ச்சி அடைகிருர்கள். அவர்கள் வேறு ஆசையின்றி ஈசுவரனிடம் மட்டும் பற்று வைத்து, கர்ம உபாசனைகளைத் தொடரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்பொழுது அந்த ஜீவன் மனம், புத்தி சுத்தம் பெற்றவனுகி சத்சித் ஆனந்தத்தின் சுத்த சக்தியை அறிந்து அதனுடன் ஒன்றவேண்டும் என்ற ஆவல் பெற்று அதற் காக முயலவும் ஆரம்பிக்கிருன். அப்படியே இலையிலிருந்து பிறைக்கு என்கிற வழியில், உபநிஷத ரிஷிகளும் நமமைப படிப் படியாக உயிரின் மையமான அறிவெல்லாவற்றிற்கும் சுனை யான ஆத்மாவரை படிப்படியாகக் காட்டித் தருகிருர்கள். அவற்றை நாம் உணாந்து கடைசியில் விளககஙகள சேதிகளுக் கப்பால் ‘ நெடும் பார்வை ’ செலுத்தத் தயாராக வேண்டும்.

உபாசனையும் பக்தியும்

சாமவேதத்தின் தளவகார சாகையின் ஒன்பதாம் அத்தியாயம் கேனோபநிஷத். இந்த வேதமும் மந்திரம், பிராமணம், அரண்யகம் என்ற மூன்று பகுதிகள் கொண்டதே. கேனோபநிஷத் மூன்றும் பகுதியிலுள்ளது. இதற்குமுன் உள்ள எட்டு அத்தியாயங்கள் கிரியைகள் மதச்சடங்குகள் இவற்றைப்பற்றிய கர்ம, உபாசனை முறைகளைப்பற்றிய பேசுகின்றன. 'காமங்கள' சில யாகம், யக்ஞங்களைப்பறறியும் உளளடக்கியுள்ளன. உபாசனை என்பது தியான சாதனையின ஆரம்பப் பயிற்சியாம்.

இந்த நாளில் உபாசனைக்காகக் கடவுளை ஒரு மூர்த்தி, ஒரு அடையாளம அல்லது ஒரு படத்தில பிரதிஷ்டை செயகிறோம். சில பொருள்களும அவவாறே ஏற்றுக கொள்ளப்படுகினறன. உதாரணமாக சிவலிஙகததில சிவதரிசனம் காணகினறோம். சாளக்ராமத்தில் (ஒருவகைக் கல்) ஸ்ரீமன் நாராயணனைக் காணுகிறோம். போதி (அரசமரததில்) புத்தபகவான், சிலுவையில் ஏசுகிறிஸ்து, நெருபபில் ஜொராஸ்டர (பாரசிகளின தெய்வம்) இப்படியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவற்றையெல்லாம் வழிபடுகிறவர்கள் இவற்றில் அந்தப் பொருளைக் காண்பதில்லை. தங்கள் தெய்வஙகளைத்தான் பாரக்கின்றார்கள.

படித்து நமபிக்கையிழந்த நவீன மனிதனுக்காக ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறார் இந்தச் சாது. ஒரே பெண்ணைத் தாயாராய்ப் பாரக்கிறது அவள் பெற்ற குழநதை; பெண்ணைகப் பார்ககிறாள் தாய்; சகோதரியாகப பார்க்கிறான் உடன் பிறந்தவன்; மனைவியாகப் பார்க்கிறான் கட்டியவன. குழந்தை மரியாதையாகப் பார்க்கிறது; கணவன் காமவெறி கொண்டு பார்க்கிறான்; தாய் அனபு கொண்டு பாரககிறாள. நால்வரும ஒரே பெண்ணை நான்கு வகையில பார்ககிறாரகள். இது தினம்

நடக்கிறது, சாத்தியம் ஆகிறது எனின், பக்தன் தன் இஷ்ட தெய்வத்தை வழிபடு பொருளில் பார்ப்பது பித்துக்குளியின் செயலாகுமா? அப்படி என்றால் இன்று உயிருடன் இருக்கும் மனிதர்கள் எல்லோரையுமே முழுவதும் பித்துப் பிடித்தவர்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கும். அப்படிச் சொன்னால் மூர்த்தி பூஜையை வெறுக்கிறவர்கள்கூட ஒப்புக்கொள்ள மாட்டார்களே!

ஆத்ம சக்தியில் முன்னேறுகிற ஒருவன் படிப்படியாக இந்தப் புலன்கள் நாடும் புற உலகவாழ்வு வெற்றுக்குமிழ் போன்றது என்று புரிந்து கொள்கிறான். சுவர்க்கம் தரும் இன்பமும் துன்பம் கலவாததல்ல என்று உணர்கிறான். இன்பம் ஆனந்தம் இவற்றுடன் எல்லாம் முடிவு என்ற புழுவும் சேர்ந்தே இருக்கிறது. அவற்றின் வேரைக் கத்தரித்துக் கொண்டு கஸ்தூரி மான் கஸ்தூரியைக் காட்டில் தேடி அலைந்து களைத்தது போல மனிதன் 'தீராத இன்ப வெள்ளத்தை' வெளியே தேட முடியாது. மனிதன், தேடுகிறான் குவிக்கிறான். மீண்டும் ஆவல் கொண்டு உழல்கிறான், களைக்கிறான் — அந்தக் கஸ்தூரி மானைப்போல! கடைசியில் சாகிறான், அதிருப்தியுடன் களைப் பின் பலனாகவே!

தன் நிழலைப் பிடிக்க விரும்பும் குழந்தை தவிக்கிறது; தாண்டுகிறது; திண்ணையிலிருந்து வீழ்ந்து கத்துகிறது. அப்படியே மனிதனும், முடிவுறும் பொருள்களில் முடிவில்லாத இன்பத்தைத் தேடி சவக் குழியில் விழுகிறான்!

மான் தன்னுள் கஸ்தூரி இருப்பதை அறிந்தால் வெளியே ஓடிக் களைக்காது. அதேபோல் மனிதன் ஆனந்தச் சுனை தன்னுள்ளே இருப்பதை உணர்ந்தால் சந்தைக் கடையின் சந்தி மண்ணில் அதைத் தேடுவதை நிறுத்திவிடுவான். அவனுக்கு வாழ்வு என்பது பார்த்து அனுபவிக்கும் ஒரு இன்ப நாடகம் ஆகிவிடும். தானே பங்கு எடுத்துப் பதைக்கும் ஒரு துன்பியல் செய்கை ஆகாது.

சில வருஷங்களேனும் ஒருவன் பற்றற்று, சுயநலம் நீங்கி, காம உபாசனையில் ஈடுபட்டிருந்தால் அவனுக்குப் புனிதத் தன்மையும் சூட்சுமத் தன்மையும் கிட்டிவிடுகிறது. அப்பொழுது அவன் புலனின்பங்களையும், ஆவல்களையும் முட்டாள்தனம் என்று கண்டு ஒதுக்குகிறான். இனி அவன் கஸ்தூரி மானாகவோ, நிழல் பிடிக்கும் நீள் பேதைக் குழந்தையாகவோ இருக்க மறுத்து விடுகிறான். வெளியே அல்ல, உள்ளே உண்டு சுகம் என்று தெரிந்துகொண்டு விடுகிறான்.

இந்த உண்மையை உணர்ந்த சாதகன் வேதாந்தம் படிக்கத் தக்க மாணவனாக ஆகிறான். அவனுக்குக் கர்மம், உபாசனைகள் தரும் மிகச் சிறந்த பயன் என்ன என்று தெரியும். கர்மங்களைச் செய்வதிலும், உபாசனையைத் தொடர்வதிலும் சுத்த பக்தி வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கைச் சுழலிலிருந்து உடனே விடுபடும் எண்ணம், துறவு, விவேகம் என்கிற சிறந்த பொக்கிஷங்கள் கிடைக்கும் என்று அறிவான்.

2. கேனோபநிடதம்

முகவுரை:

குருவும், சிஷ்யனும்

இந்த உபநிஷதம் பூராவும் சம்வாத (கேள்வி — பதில் பேச்சு) நடையில் அமைந்திருக்கிறது. சிஷ்யன் உலகில் வாழ்ந்தவன். பொறியின்பங்கள் துய்த்தவன். இந்த முடிவடையும் இன்பங்களில் அலுப்புத் தட்டி, உலகம் வீண பூசலுக்கிடம், அன்றாட வாழ்வு நிழலைப் பிடிக்கும் முயற்சி என்று அறிந்து ஒதுக்கியவன். புலன் நாடும் புறப்பொருள்களை ஆதாரமாகக்கொண்ட வாழ்வை ஒதுக்கியும் அதற்குள் அதன் ஊடே தெரியாமல், பார்க்க முடியாமல் பெருமைப் பொன்னொளி திகழ்வதைக் காண்கிறான். பொய்யாம் புறப்பொருளை ஒதுக்கி 'தன்னையே' கொள்ள ஆரம்பிக்கிறான். அப்பொழுது புறஉலகம், அதன் பொருள்கள், மனிதர்கள் இவற்றுடன் பழகி, நிலை, சந்தர்ப்பம், நேரம், காலம் இவற்றுக்குத் தக்கவாறு அனுபவங்களை ஏற்படுத்தும் இந்திரியங்களைப்பற்றி அறிகிறான்.

அதே போக்கில் அவன் 'மனம்' என்றொன்று இருப்பதை அறிய நேரிடுகிறது. ஏனெனில் மனம் இல்லை என்றால் புலன்கள் பொருள்களை நாடப்போகிறதில்லை. அனுபவங்கள் ஏற்படப்போவதுமில்லை. பிறகு இவைகளுக்குப் பின்னால் மற்றும் ஒரு ஆற்றல் தத்துவம் இருப்பதையும் உணர்கிறான். அதை அவன் தானே உணர்ந்த போதிலும் அவனுடன் வாழும் மற்றவர்களிடையே இந்த உணர்வு வெளிபபடுகிறதில்லை. அதனால் அவன் குழபபமடைகிறான்.

இந்தப் பெரும் புதிரை, குழப்பத்தை, தீர்த்துக்கொள்ளத் தான் சிஷ்யன் குருவை அடைகிறான். மனதைத் தன் விருப்பத்தால் பொருள்கள்மீது செல்லச் செய்யும் ஒரு சூத்திரதாரர்

உண்டா என்று கேட்கிருன். அப்படி ஒளியும் தந்து ஆட்டவும் ஆட்டும் ஒருவன் உண்டென்ருல் அது யார்? ரகசியமாய் என்னுள்ளேயே அமர்ந்து எப்பொழுதும் விழித்திருந்து இயக்கு விக்கும் அதற்கும் எனக்கும் என்ன உறவு? இனி உபநிஷதங் கள் தாம் அந்தத் தெய்வ ஒளியை நித்ய ஞானமான ஆத்மனேக் காட்டித் தரும் வேலையைச் செய்யவேண்டும். 'தான்' என்று தன்னுடன் ஒட்டியிருப்பதால் நாம் இதை அறிந்து கொள்ளுவ தில்லே. ஈசுவரனிடம் சரண் அடைந்து அகங்காரம் அகற்றிஞல் அதை அறியலாம். விடாமல் ஈசுவர ஸ்மரணே, ஜபம், கீர்த்தனே, சிரவணம், மனனம், தியானம் முதலியவை செய்து ஈசுவரன் அருளால் அதைப்பெற முடியும்.

தப்பான அகங்காரத்தை ஒழித்து உண்மையான 'நான்' என்ற அந்தப் பெரும் பதவியை—சிவோஹம் என்ற நிலேயை அடையவேண்டும். வேதாந்தம் அது முடியும் என்று உறுதி தருகிறது.

கேஞேபநிஷதம் பிரும்ம வித்தையில் குருவினுடைய முக் கியத்தை வலியுறுத்துகிறது. அவருக்கு என்ன பெரும் தகுதிகள் உண்டு என்று நாம் முன்னமேயே பார்த்தோம். சாஸ்திரங்கள் நன்ருய் அறிந்து அந்த உண்மைத் தத்துவத்தையும், உணர்ந்த வரே நல்ல குருவாகும். கேஞேபநிஷத்தை வாசிக்க ஆரம்பித்த வுடனேயே நம் மனக் கண்முன் ஒரு ஆசிரமம் தென்படுகிறது. அதிலே தன் எளிய ஆசனத்தில் தெய்வ அமைதி ஒளிகொண்டு தன் ஆன்ம ஞானத்தால் பெறப்பட்ட உண்மை வாழ்வின் ஆனந்த உருவாய் ஒரு குரு அமர்ந்திருக்கிருர். அவரைத் தேக நலம் கொண்டு, சாதாரண உடை அணிந்து கையில் கட்டப்பட்ட விறகுடனும், மனதில் அறியவேண்டும் என்ற அடங்காத ஆவ லுடனும் ஒரு சிறுவன் அணுகுகிருன். அமர ஆத்மாவாக மாற அவனுக்குள்ள ஆர்வம்தான் என்னே!

இந்த உபநிஷதம் அந்த உண்மையின் தன்மை, அதை அடையும் வழி இவற்றைப்பற்றிய தெய்வீக ஆர்வம் காட்டும் கேள்விகளுடன் தொடங்குகிறது. குரு அசங்காது துலாநிலேயில் உள்ள மனதின் பரபரப்பற்ற நிலேயில் ஆழ்கடல்போல் இருக்கி

ளுர். அன்பும் அருளும் ததும்புகிறது. ஆழத்திலிருந்து அன்பின் அருளை ஒரு குளிர்ந்த பார்வைமூலம் அவர் அந்தப் பையன் மேல் பொழிகிறார். அது நேரே அவன் இதயத்தில் சென்று அலர்கிறது.

குரு சாஸ்திரம் படிக்காமல் இருந்து ஆத்மஞானமும், வாழ்வும் மட்டும் பெற்று இருந்தால் அவனுள்ளே என்றும் ஒளிதந்து நிற்கும் ஆத்ம ஒளியின்பால் சிஷ்யனுடைய அறிவைத் திருப்ப முடியாது. அவர் ஆத்மபோதம் பெருமல் சாஸ்திரங்கள் படித்து மட்டும் இருப்பாராகில் அந்த நிலையிலும் அவர் அவனுக்கு நித்திய ஞானத்தை நல்க முடியாது.

சுரோத்ரீயர்களாக மட்டும் இருந்து பிரும்ம நிஷ்டர்களாக இல்லாதவர்களுக்குக் காசியிலுள்ள பண்டிதர்கள் நல்ல எடுத்துக் காட்டு ஆவார்கள். ஒருமுறை இந்தச் சாதுவே (சின்மயா) காசியில் ஒரு பண்டிதரிடம் ஒருநாள் பாடத்தின்முடிவில், "ஐயா, மனம் தரும் மாயை அழிந்தால் உண்மை ஒளி தரும் என்று சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றனவே, தியானத்தின்மூலம் ஒருவன் மனதை அடக்குவது சாத்தியமா?" என்று கேட்டார். அதற்குக் கிடைத்த பதில் மிகவும் நேர்மையானதுதான். ஆனுல் ஒளிவு மறைவு இல்லாத அலட்சியம் கொண்டதாகும். அவர் சொன்ஞர்! "இதோபார். உபநிஷதம் சொல்லும் வாழ்வை நீ பெற விரும்பினுல் காசியை விட்டுவிட்டு ஹிமயமலைக்குச் செல். வேறு ஒரு குருவைப் பிடி. நாங்கள் சாஸ்திரப் பிரமாணத்தை நம்புகிறவர்கள். மனதை அடக்கி ஒரு நிமிஷமாகிலும் அந்த அமைதியை அடைய முயற்சி செய்தவர்களில்லை. உனக்கு என்ன பதில் சொல்ல முடியும்?"

இதே கேள்வி வேறு விதத்தில் பல நேரங்களில் ஹிமயமலையிலுள்ள பல சாதுக்களிடம் கேட்கப்பட்டபோது அவர்கள் எல்லோரும், "ஆம். அது உண்மை, சாத்தியமே!" என்று உளம் பொங்கித் தெரிவித்தனர். அவர்கள் சொன்னதும் உண்மை. அதனுல் நாம் நம்பாமல் இருக்கமுடியாது.

நாம் முன் சொன்னதற்கு எதிரிடையும் உண்மைதான். ஹிமயமலையில் சில மகான்கள் இருக்கிருர்கள். பூரண ஞானம்

பெற்று அதற்காகப் பூஜிக்கத் தக்கவர்கள் ; தெய்வ ஒளி காரண மாகப் பலர் அவரிடம் பணிந்து சேவை செய்கிறார்கள். ஆனால் அவர்களும் குரு ஸ்தானம் வகிக்கத் தகுதி அற்றவர்கள். ஏனெனில் தான்பெற்ற சுய அனுபவத்தை எடுத்து உரைக்க வகை தெரியாதவர்கள். அவர்கள் பேசுகிறதில்லை; பேசினாலும் வார்த்தைகள் தொடர்ந்து பொருள் பெற்று வருவதில்லை. அப் படிப்பட்ட ஆசிரிய மஹான்களின் சந்நிதிப் பெருமை, அவர்கள் செய்கைகளின் பாடம் இவைதான் நமக்கு வழிகாட்ட வேண்டும். ஆகவே ச்ரோத்ரீயர்களான பிரும்ம நிஷ்டர்களே தக்க குருக்களாக அமைய முடியும். அப்படிப்பட்ட ஒரு குருவைத் தான் சிஷ்யன் அடைகிறான். பக்தி, ஆவல் கொண்டு தியாகம் செய்யத் துணிந்து சேவைமூலம் தன்னைச் சுத்தி செய்து உண்மை அறிவைப் பெறத் தயாராகிறான்.

கேனோபநிஷத்தின் முதல் மந்திரம் சிஷ்யன் தகுதியையும் குறித்துக் காட்டுகிறது. அவன் கேட்கும் கேள்வியே—அவன் உள்ளே வளர்ந்து நிற்கும் மன, ஆன்மீக மனிதனின் தன்மையை நன்றாகக் காட்டித் தருகிறது. அவன் வாழ்வைக் கெட்டிக்காரத் தனமாய்ச் சமாளித்தவன். புத்தித் திறமையுடன் வாழ்ந்தவன் ; பொறிகள் துய்க்கும் வாழ்வு வெற்று வாழ்வு என்று சிந்தித்து அறிந்தவன். ஸ்திரமான வாழ்வின் ஆதாரம் தேடி அதன் பய னால் உலகப் பற்றுகளைத் துறந்து சிறந்த லட்சியத்துக்காகத் தன்னுள் ஆழ்ந்தவன்.

சாதாரணமான விநோதப் பித்தர்கள்தான் சந்நியாசத்துக்கும் ஆன்ம வாழ்வுக்கும் உரியவர்கள் என்று ஒரு அசட்டு நம்பிக்கை இருக்கிறது. இது நம்மிடையே பரவி நிற்கும் சுத்த அறியாமை யையே குறிக்கிறது. உண்மையில் கேனோபநிஷத்தில் உள்ள மாணவன் அல்லது கடோபநிஷத்தின் நசிகேதன் போன்று நன்கு உள்ள வளர்ச்சி கொண்டவனே சந்நியாசத்துக்கு ஏற்றவன். உண்மையைத் தேடும் இந்த வீர முயற்சியில் அவர்கள்தான் வெற்றியை அடையமுடியும். மலையேறிப் பழக்கமுடையவனே எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் முயற்சியில் ஈடுபடத்தக்கவன். துணிவு, அடக்கமுடியாத தைரியம், துணிகரக் காரியங்களில்

நடுபடும் மனப்பாங்கு கொண்டவன்தான் சரியான மலையேறி யாக முடியும். அதேபோல ஆத்மீக வளர்ச்சியின் உச்சியில் ஏறி வெற்றி பெற விரும்புபவனுக்கும் தக்க உடல், மன, புத்திக்கட்டு இருக்கவேண்டும். அந்தத் தகுதிகள் இல்லாதவர்கள் சாதக னுக்குக் குறிப்பிடப்பட்ட கீழ்ப்படிச் சாதனைகளை ஏற்றுக் குறைகள் தீரும்வரை அவைகளில் பயிலவேண்டும்.

உலக அனுபவங்களே நம்மிடமுள்ள குறைகளை நீக்கிவிட லாம். தந்தை பரபரப்பாகச் செத்தால் தனயன் பொறுப்பற்றுச் சோம்பேறியா யிருந்தால்கூடச் சுறுசுறுப்பும், திறமையும் உள்ளவ னாக ஆகிவிடுவான். நமக்கும் தக்க அனுபவங்கள் அருளப்படு கின்றன. கெட்டிக்காரத்தனமாய் அவைகளை அறிந்து தக்க உள் மாறுதல்களைச் செய்யவேண்டும். அந்த நிலையில் விதி பொல்லாத அரக்கனுயில்லாமல் நமக்கு அறுத்துத் தொல்லை நீக்கும் டாக்டர்போல் ஆகிவிடும். கெட்ட அதிர்ஷ்டம் நம்மைப் பிணைக்கும் விலங்கு ஆகாது. நாம் நிமிர்ந்து நிற்க உதவும் உதவியாகும்!

சிவ பக்தனுக்குச் சிவலிங்கம்போல் சாதகனுக்குக் குரு இன்றியமையாதவர். வேதாந்த மாணவனுக்குக் குருவே லட்சியத்தின் பிரதிநிதியாம். சிவ பக்தன் லிங்கத்தில் கல்லைப் பார்க்கமாட்டான். சிஷ்யனும் குருவின் குற்றங்களைப் பார்க்க மாட்டான். அவனுக்குக் குருவே சுத்த உணர்வு, பரம ஆனந்தம், பூரண ஞானம். அப்படிப்பட்ட ஒரு புத்தியை நம்மிடம் இடை யருது ஏற்படுத்த வல்லவனே நம் குரு. குரு என்பவர் தொட்டு நம்மை மாற்றி விடுவார் என்று எதிர்பார்ப்பது பிசகு. அப்படி ஒரு குரு வருவார் என்று எதிர்பார்த்தால் கனவுதான். வீண்தான்.

உண்மையில் ஆத்ம விடுதலை நம் முயற்சியால்தான் கிட்ட முடியும். கோவில் மூர்த்திகள், குரு எல்லாம் புற உதவிகளே. இவைகளை எல்லாம் சுயபூர்ணம் அடைவதற்கு நல்ல முறையில் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். உள்ளே சுத்தமும் முழுமையும் பெற்றுவிட்டால சாதகன் புனிதத் தன்மையின் சுரங்கமாகி விடுகிருன். அவனுக்குச் ‘சுத்த ஆத்ம அறிவு’ வழி காட்ட ஆரம்பித்துவிடுகிறது.

வேதாந்திக்கு ஆத்மாவின சுத்த அறிவே குருவாகும். சுத்தம் பெற்று 'நாடும்' மனதே சிஷ்யனாகும். இதைத்தான் பகவத்கீதை ரதத்திலே கீதை சொல்லும் பரமாசாரியனையும், நித்ய சிஷ்யனான அர்ஜுனனையும் சேர்த்துப் படம் பிடித்துக் காட்டுகிறது. சுத்தமடைந்த மனது நல்ல சக்திகளின் எதிரே அளவில் அதிகமான தீய சக்திகள் (எதிர்மறைச் சக்திகள்) அணிவகுத்து நிற்பதைக் கண்டவுடன் நொறுங்கி கிருஷ்ண பகவானான சுத்த அறிவின்முன் தஞ்சம் அடைந்துவிடுகிறது. இன்னும் அர்ஜுனர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செவிசாய்த்தால் இன்னும் தங்கள் உள்ளமான குருக்ஷேத்திரத்தில் அந்தக் கீதையின் சங்கீதத்தைக் கேட்கலாம். ஆம். வைராக்ய நிலை பெற்று அர்ஜுனன் நிலையை அடையவேண்டும்.

ஆகவே சுய முயற்சிதான் மிகவும் முக்கியமானது. உண்மையான சாதகனுக்குக் கருவிகள் சுத்தமானவுடனே குரு தானாகவே கிடைத்துவிடுவார். இது விதியாகும். மனிக்கு மனி உலகம் நமக்கு வேண்டிய அனுபவங்களைத் தரவென்றே அப்படி இயங்குகிறது. அடுத்த படியில் நமக்கு என்ன தேவை என்று அந்த கருணைக் கடல், சாக்ஷிபூதனான ஈசுவரன் அறிவான்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் குருவைத் தேடிக்கொண்டு செல்லவில்லை. தோதாபுரி மகாராஜ் தானாகவே தக்ஷிணேசுவரம் சென்றார். உலக அன்னையின் முதல் குழந்தைக்குத் தியானத்தின் உயாநத நிலைக்கு வழிகாட்டினார். உங்களில் ஒருவரும் கடவுள் முன்னிலையில் சுத்தமானவரே. புனிதத் தன்மை யுடையவரே! தகுதி பெற்றவுடன் குரு தானாக வருவார். நல்ல வழி காட்டுவார். சாதனையை விடாமல் செய். நல்லவனாக இரு. அன்பு செய். நேர்மை கடைப்பிடி. உத்தேசத்தைச் சுத்தமானதாகச் செய்துகொள். அனபு, தயவு, தானம், சுத்தம் என்ற சிறந்த குணங்களின் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக்கொள். எப்பொழுதும் கடவுளை எண்ணி ஆத்மீகத்தில் சிறந்து எழு. துணிவும், நேர்மையும் கொண்ட அநதச் சாதனுக்குக் குரு தானே வந்துசேர்வார்.

இனி உபநிஷத்தைத் தொடங்கலாம்.

சாந்தி மந்திரங்கள்

१. ॐ सहनाववतु सहनौ भुनक्तु सहवीर्यं करवावहै
तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै ॐ शान्तिः शान्तिः शान्तिः ।

ஓம் ஸஹநாவவது ஸஹநௌ [4]புனக்து ஸஹவீர்யம் கரவாவஹை
தேஜஸ்விநாவ[4]தீதமஸ்து மா வித்விஷாவஹை
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: |

ஓம். அவன் (குரு சிஷ்யன்) எங்கள் இருவரையும் காப்பாற்
றட்டும். இருவரும் சேர்ந்து அனுபவிககச செய்யட்டும். நாங்கள்
இருவரும் சேர்ந்து முயலுவோமாக (சாஸதிரங்களில் உண்மைப்
பொருளைக் காண) எங்கள் படிபபு குறைகுற்றமில்லாது இருக்
கட்டும். நாங்கள் ஒருவருககொருவர் சண்டையிடாது
இருப்போமாக.

படித்தவர், சொல்லித் தருபவர் இரண்டுபேருமே பாடம்
என்கிற அந்த ஒத்த முயற்சியை எந்தத் துணை மனப்பாங்குடன்
அணுகுகிறார்கள் என்று இந்தச் சாநதி பாடம் விளக்குகிறது.
இன்று உள்ள ஆசிரியர்—மாணவர் உறவுக்கும இதற்கும் எவ்
வளவு தூரம்? உயர்ந்த வகுப்புக்களில் ஆசிரியாகள், கத்தல்,
சத்தம்போட்டுக் காகிதப் பந்துகள் வீசி, காலால் பூமியில் தட்டி
வரவேற்கப்படுகிறார்கள்! ஆசிரியர் தன் நேரம் செலவழிக்க
எனவும் மாணவர்கள் தேவையான ஆஜர் நாட்கள் பெற
எனவுமே வருகிறார்கள் என்று தோன்றுகிறது. ஆசிரியர்,
மாணவர்களை விலக்கமுடியாத தொல்லை என்று எண்ணுகிறார்
மாணவர்கள் ஆசிரியரைக் கல்லூரி வாழ்வு என்ற மலர்ப் படுக்
கையில் உதித்த முட்கள் என்று நம்புகிறார்கள்.

பிரும்ம வித்தையில் முன்னேற்றம் என்பது ஆசிரியர்
மனதால் எப்பொழுதும் துணைதந்தால் ஒழிய ஆக இயலாத
ஒன்று. அதைப்போலவே மாணவனும் மனதுடன் ஒத்து
உழைக்கவேண்டும். அதற்காகத்தான் நாம் சண்டையிடாது
இருப்போமாக என்ற தனிப் பிரார்த்தனை. இது மிகவும் தேவை
யான ஒரு பிரார்த்தனை என்றே படுகிறது. ஏனெனில சுருதி

களின் பாடம் அவ்விதம். வீணுகும் உபயோகமற்ற வாதப் பிரதி வாதங்கள், தப்பர்த்தங்கள், பொய் விளக்கங்கள் இவைகள் அழிவுதரும் சூழல்களுள் கொண்டு போய்ச் சேர்த்துவிடும் வாய்ப்புக்கொண்டது.

“ஓம் ஆப்யாயந்து மமாங்கா[3]னி வாக் ப்ராணஸ் சக்ஷு: ஸ்ரோத்ரம் அதோ[2]ப[3]ல மிந்த்[3]ரியாணி ச ஸர்வாணி சர்வம் ப்[3]ரஹ் மோபநிஷத்[3]ம் மாஹம் ப்[3]ரஹ்ம நிராகுர்யாம் மா மா ப்[3]ரஹ்ம நிராக ரோத் அநிராகரணமஸ்து அநிராகரணமஸ்து தத்[3]ாத்மனி நிரதே ய உபநிஷத்ஸு தர்மாஸ் தே மயி ஸந்து தே மயி ஸந்து”

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி.

என் அங்கங்கள் பேச்சு, பிராணன், கண், காது, என் பொறிகளின் பலம் எல்லாம் துடிப்பாய் வளரட்டும். எல்லாம் உபநிஷதங்களின் பிரும்மமே. நான் என்றும் பிரும்மத்தை மறுக்காமல் இருப்பேனுக.

பிரும்மன் என்னை வெறுத்தொதுக்கல் வேண்டா. பிரும்ம னும் மறுத்தல் வேண்டா. பிரும்மனும் வெறுத்தல் வேண்டாம். உபநிஷதங்களில் கூறப்பட்ட தர்மங்களை எல்லாம் ஆத்மாவில் இன்பம்கொண்டு என்னுள் இருக்கட்டும்; என்னுள் இருக்கட்டும்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

இரண்டாவது சாந்தி மந்திரம், உடல், மனம் ஆத்மா இம் மூன்று அமிசங்களிலும் ஒருமைப்பட்ட சிறந்த வளர்ச்சி எவ் வளவு தேவை என்று சொல்கிறது. சிதைந்த உடல் ஆத்மீகப் பாதைக்கு ஆகாது. நீர் சுண்டிச் சுருங்கிய இதயம், நொறுங்கிச் சிதறிய புத்தி இவை பயன்படா. தவிரவும் வழியே பார்த்துப் போனலும் போதாது. அடிக்கடி அப்பரம்பொருளின் அருளை அழைத்தல் வேண்டும்: “பிரும்மன் என்னை ஒதுக்கல் வேண் டாம்!”

இவ்விதம் குரு சிஷ்யன் இருவரும் தினந்தோறும் தம் பாடங் களை இந்தச் சாந்தி மந்திரங்களுடன் ஆரம்பித்தனர்.

॥ केनोपनिषत् ॥

ॐ आप्यायन्तु ममाङ्गानि। वाक् प्राणश्चक्षुः श्रोत्रमथो बलमिन्द्रियाणि च सर्वाणि। सर्वं ब्रह्मोपनिषदं। माहं ब्रह्म निराकुर्यां। मा मा ब्रह्म निराकरोत्। अनिराकरणमस्तु अनिराकरणमस्तु। तदात्मनि निरते य उपनिषत्सु धर्मास्ते मयि सन्तु ते मयि सन्तु ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

प्रथमः खण्डः।

ॐ केनेषितं पतति प्रेषितं मनः, केन प्राणः प्रथमः प्रैति युक्तः।
केनेषितां वाचमिमां वदन्ति चक्षुः, श्रोत्रं क उ देवो युनक्ति ॥ १.१ ॥

श्रोत्रस्य श्रोत्रं मनसो मनो, यद् वाचो ह वाचं, स उ प्राणस्य प्राणः।
चक्षुषश्चक्षुरतिमुच्य धीराः, प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥ १.२ ॥

न तत्र चक्षुर्गच्छति, न वाग्गच्छति, नो मनः, न विद्मो न विजानीमो, यथैतदनुशिष्यात्। अन्यदेव तद्विदितात्, अथो अविदितादधि। इति शुश्रुम पूर्वेषां, ये नस्तद्व्याचचक्षिरे ॥ १.३ ॥

यद्वाचाऽनभ्युदितं येन वागभ्युद्यते।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ १.४ ॥

यन्मनसा न मनुते येनाहुर्मनो मतम्।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ १.५ ॥

यच्चक्षुषा न पश्यति येन चक्षूꣳषि पश्यति।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ १.६ ॥

यच्छ्रोत्रेण न शृणोति येन श्रोत्रमिदꣳ श्रुतम्।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ १.७ ॥

यत्प्राणेन न प्राणिति येन प्राणः प्रणीयते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ १.८ ॥

द्वितीयः खण्डः ।

यदि मन्यसे सुवेदेति दभ्रमेवापि नूनं त्वं वेत्थ ब्रह्मणो रूपं यदस्य त्वं यदस्य च देवेष्वथ नु मीमाँस्यमेव ते मन्ये विदितम् ॥ २.१ ॥

नाहं मन्ये सुवेदेति नो न वेदेति वेद च ।
यो नस्तद्वेद तद्वेद नो न वेदेति वेद च ॥ २.२ ॥

यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः ।
अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम् ॥ २.३ ॥

प्रतिबोधविदितं मतममृतत्वं हि विन्दते ।
आत्मना विन्दते वीर्यं विद्यया विन्दतेऽमृतम् ॥ २.४ ॥

इह चेदवेदीदथ सत्यमस्ति न चेदिहावेदीन्महती विनष्टिः ।
भूतेषु भूतेषु विचित्य धीराः प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥ २.५ ॥

तृतीयः खण्डः ।

ब्रह्म ह देवेभ्यो विजिग्ये, तस्य ह ब्रह्मणो विजये देवा अमहीयन्त ।
त ऐक्षन्तास्माकमेवायं विजयोऽस्माकमेवायं महिमेति ॥ ३.१ ॥

तद्धैषां विजज्ञौ, तेभ्यो ह प्रादुर्बभूव, तन्न व्यजानन्त किमिदं यक्षमिति ॥ ३.२ ॥

तेऽग्निमब्रुवन् जातवेद एतद्विजानीहि किमेतद्यक्षमिति ॥३.३॥

तथेति तदभ्यद्रवत्तमभ्यवदत् कोऽसीत्यग्निर्वा अहमस्मीत्यब्रवीज्जातवेदा वा अहमस्मीति ॥ ३.४ ॥

तस्मिँस्त्वयि किं वीर्यमित्यपीदꣳ सर्वं दहेयं यदिदं पृथिव्यामिति ॥ ३.५ ॥

तस्मै तृणं निदधावेतद्दहेति, तदुपप्रेयाय सर्वजवेन तन्नशशाक दग्धुं, स तत एव निववृते, नैतदशकं विज्ञातुं यदेतद्यक्षमिति ॥ ३.६ ॥

अथ वायुमब्रुवन् वायवेतद्विजानीहि किमेतद्यक्षमिति, तथेति ॥ ३.७ ॥

तदभ्यद्रवत्तमभ्यवदत् कोऽसीति, वायुर्वा अहमस्मीत्यब्रवी-न्मातरिश्वा वा अहमस्मीति ॥ ३.८ ॥

तस्मिँस्त्वयि किं वीर्यमित्यपीदꣳ सर्वमाददीयं यदिदं पृथिव्यामिति ॥ ३.९ ॥

तस्मै तृणं निदधावेतदादत्स्वेति, तदुपप्रेयाय सर्वजवेन, तन्नशशाकादातुम्, स तत एव निववृते नैतदशकं विज्ञातुं यदेतद्यक्षमिति ॥ ३.१० ॥

अथेन्द्रमब्रुवन्मघवन्नेतद्विजानीहि किमेतद्यक्षमिति, तथेति तदभ्यद्रवत्तस्मात् तिरोदधे ॥ ३.११ ॥

स तस्मिन्नेवाकाशे स्त्रियमाजगाम, बहुशोभमानां, उमां, हैमवतीं ताँ होवाच किमेतद्यक्षमिति ॥ ३.१२ ॥

चतुर्थः खण्डः ।

सा ब्रह्मेति होवाच, ब्रह्मणो वा एतद्विजये महीयध्वमिति, ततो हैव विदांचकार ब्रह्मेति ॥ ४.१ ॥

तस्माद्वा एते देवा अतितरामिवान्यान् देवान् यदग्निर्वायुरिन्द्रस्ते ह्येनन्नेदिष्ठं पस्पर्शुस्ते ह्येनत् प्रथमो विदांचकार ब्रह्मेति ॥४.२॥

तस्माद्वा इन्द्रो अतितरामिवान्यान् देवान् सह्येनं नेदिष्ठं पस्पर्श स ह्येनं प्रथमो विदांचकार ब्रह्मेति ॥ ४.३ ॥

तस्यैष आदेशो यदेतद्विद्युतो व्यद्युतदा३ इतीन्न्यमीमिषदा३ इत्यधिदैवतम् ॥ ४.४ ॥

अथाध्यात्मं यदेतद्गच्छतीव च मनोऽनेन चैतदुपस्मरत्यभीक्ष्णं संकल्पः ॥ ४.५ ॥

तद्ध तद्वनं नाम तद्वनमित्युपासितव्यं, स य एतदेवं वेदाभि हैनं, सर्वाणि भूतानि संवाञ्छन्ति ॥ ४.६ ॥

उपनिषदं भो ब्रूहीत्युक्ता त उपनिषद्ब्राह्मीं वाव त उपनिषदमब्रूमेति ॥ ४.७ ॥

तस्यै तपो दमः कर्मेति प्रतिष्ठा वेदाः सर्वाङ्गानि सत्यमायतनम् ॥ ४.८ ॥

यो वा एतामेवं वेदापहत्य पाप्मानमनन्ते स्वर्गे लोके ज्येये प्रतितिष्ठति प्रतितिष्ठति ॥ ४.९ ॥

ॐ आप्यायन्तु मामाङ्गानि वाक्प्राणश्चक्षुः श्रोत्रमथो बलमिन्द्रियाणि च सर्वाणि........अनिराकरणमस्तु, अनिराकरणं मे अस्तु। तदात्मनि निरते य उपनिषत्सु धर्मास्ते मयि सन्तु ते मयि सन्तु ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

॥ केनोपनिषत्समाप्ता ॥

கேனோபநிஷதம்

1. ஆத்ம சக்தி

1. ஓம கேனேஷிதம பததி ப்ரேஷிதம் மண:
கேன பிராண: பரதம· ப்ரைதியுக்த:
கேனேஷிதாம் வாசம் இமாம வதந்தி சக்ஷு:
ஸ ரோதரம க உ தேவோ யுனக்தி

சிஷ்யன் கேட்கிறான்.

யாரால் விரும்பப் பட்டும் செலுத்தப்பட்டும் மனது பொருள்களின மேல் அமர்கின்றது? யாரால் ஆட்டுவிக்கப்பட்டுப் பிராணன் இயங்குகிறது? யாருடைய விருப்பத்தினால் மனிதர்கள் பேச்சைப் பேசுகின்றனர்? எந்தத் தேவன் (அறிவு) கண்களையும் காதுகளையும் (அவவவற்றின் வழியே) செலுத்துகிறான்?

ஆரம்ப மந்திரம் பெரிய ஒரு கேள்வியைக் கேட்கிறது. மனம (இழுக்கப்பட்டு) அதன் பொருளிடம் பாயந்து செல்கிறதுபோல் இருக்கிறதே அதை யார் செலுத்துகிறார்? 'பததி' (வெளியேறியடைகிறது) என்ற சொல வேதாந்தம் மனதின பொருளுணரும் வகையைப் பற்றிக கொண்டுள்ள முறையைக் குறிக்கிறது. வேதாந்தபபடி மனிதன் மேல் நிற்கும் ஆத்ம சைதன்யம் புலனகள் வழியே பொருள்களை (சபதம, ஸபரிசம, உருவம், கந்தம், ருசியை) அடைகிறது. மனம் பொருளின் தோற்றத்தை எடுததுக் கொள்கிறது. உதாரணமாக நாம் ஒரு பானையைப் பாாத்தால், மனம் கண் வழி சென்று பானை இருக்கும் இடத்தை அடைந்து பானையின் உருவத்தைப் பெறுகிறது. பானையில் உள்ள சைதன்யமும் நம் உள்ளே உள்ள சைதன்யப் பொறியும் இணையும் போது நாம் அதைப் பானை என்று அறிகிறோம் இந்த சித்தாந்தத்திற்கேற்ப சிஷ்யன் 'யார் தூண்ட மனம ஓடி அடைகிறது'' என்று கேட்கிறான்.

மனத்திற்குப் பின்னால் உயிர்ப்பு இருந்து அதை உயிர்ப்பும் செயலும் கொண்டதாகச் செய்கிறதே அந்த

இயக்க உயிரப்பு ஆறறல எது? நம்முளளே உள்ள ஆத்மன் ஒரு கனவுலகத்தைக் காண்கின்றது. அதன் காரணமாகத்தான நமக்கு இந்தக் குறைகளும் மூளி களும் ஏற்படுகின்றன.

மறைந்திருக்கும் உணர்வுத் தளத்தில் நாம் இனறு காணப்படுவதைவிட முழுமை அடைந்தவாகள் என்று தெரிநது கொள்கிருேம். முழுமையின இந்த அழைப்பை நாம் ஆனம அதிருப்தி எனனலாம். இது எல்லோருக் கும் உண்டாவதில்லை. காரணம் நம் மறைந்த உணாவுத தளம முணு முணுக்காமலேயே இயஙகி விடுகிறது. நம முன்னே நாம் முழுமை அடையவேண்டும என்ற ஆாவம தலைதூக்கி ஆட ஆரமபிததால் நாம் எல்லா வகை யிலும் விரிவடைய வேண்டும் என்று ஆரமபிக்கிருேம். அதுவே நம்முள்ளே இருககும பரம பூாணத்வததின அடையாளமாம். அதுதான வெளியாக விருமபுகிறது. யாராவது உங்களிடம 'குருவிடம் சுத்தமான அறி வுடனும் உண்மை ஞானததைப் பெறவேணடும் என்ற சரியான தூண்டுதலுடன் போகவேண்டும' என்று சொனனுல் அது ஏதோ சோம்பேறி மூளையின் வீண் கனவு என்ருே அல்லது கவைககாகாத வேதாந்தியின் கற்பனை சுவர்க்கம என்ருே கருதலாம். உண்மையில நாம் அந்த நிலையை அடைநது விட்டோம் உண்மைத் தன்மையை மறந்து விட்டோம. தனி ஜீவனுக வாழ கிருேம். பரிசுத்தமாய், கட்டு அறியாத பரம உணமை தான நாம் என்பதைச சொல்லி அதை உணரும் வழி யைக் காட்டினுலும் நாம் அந்த வழி திருமப முடிய விலலை அழுவதும் தேமபுவதும் நம வழக்கங்களாகி விட்டன. நாம் நமமை எவவளவு அநியாயமாகத் தப் பான விதத்தில் புரிந்துகொண்டிருக்கிருேம்!

வெளியே உள்ள பொருள் என்பதையும் வெளிச்சம இல்லாமல் பாாகக முடியாது. அநத நிலையில் கண்களை மூடிக்கொண்டும் நாம் ஒரு பானையையோ நாற்காலி அல்லது பேனுவையோ பாாககிருேம் என்ருல் உள்ளே ஏதோ இருககவேண்டுமே! தியானத்தில் முரளி மனே பானைப் பாாததால அது கிருஷ்ண மனே விருத்தி யாகும். இந்த விருத்திககு ஒளி தருவது எது? அது ஞான ஒளியலலவா! மனேவிருத்திககு நம்மை வருத்தி ஆளவோ தாயன்பு காட்டவோ ஆறறல பெற்றதலல! அதற்கு இந்த ஞானஒளி கிடைக்கவேணடும. அதற்கு நமமுடைய ஆற்றலே கிடைக்கவேண்டும். நாமேதான்

நம்மனத்தை ஒரு சம்சாரியாக வாழத் தூண்டி உதவவும செய்கிறோம்.

மனத்தை நிறுதது. பிறகு இந்த சம்சாரம் என்ற உலகம் இராது விழிககவேண்டியதுதான். அது நம்மால முடியும அதற்கு நாம் நம் குருவின் சரணுர விந்தஙகளை நல்ல சுததமான மனத்துடன அடைய வேண்டும், அவ ரிடம் ஆதமா எங்கே இருக்கிறது என்று கேட்டு ஒளி கொணட மதியுடன புரிந்துகொள்ள வேண்டும். உண்மை ஊர் யாத்திரைக்கு ஒரு சிலர் தவிர மற்றவருக் கெல்லாம் வழிகாட்டி அவசியம. வெளிப்பார்வையை நேர்மாருக்கி உளளே திருப்பு. பக்தனின் பூஜை அறை யில் பகவான் என்றும் இருககிறுன். கோவிலில் இருக்கும் பகவான் அரசாக்கரசன் கூட்டத்தினிடையில அவா தரிசனததால லாபம் இலலே. அவருடன் நெருங்கிய அருளபெற அவரைத தனி அறையில்தான் சந்திததிருக் கினறனா.

ஆனுல் அத்தனி அறையில் சென்று அவரைச் சந்திக் கும உன்னிடம நமபிககை வேணடும். அவரிடம நம்பிக் கையும், அன்பும கொள்ள வேண்டும், சுத்த உணர்வு நிலேயான அவர் சலன அறைக்குச செல்லவேண்டும். நாம் அதை அடைய முடியும். அங்கே சென்று அவ ருடன் ஒனருக முடியும். உண்மையும் தகுதியும் கொண்ட ஒரு சிஷ்யன குருவிடம் சென்று சுருதி மந்திரங்களேப்பற்றிப் பேசி அறிய முயன்ருல் குரு உளளே ஈஸ்வரனுடைய சயன அறையை அடையும வழியைச சொல்லித் தருகிருர். இந்த உபநிஷததில நாம் காண்கின்ற குரு—சிஷ்யனேப்போல சரியான குரு வும் சரியான சிஷ்யனும் சேர்ந்தால்தான் சுருதிப பேச்சுககள பயனுளளவையாக ஆகும்,

கங்கை நதி மேற்கிலிருந்து கிழக்கே பாய்கிறது. ஒரு கிராமத்தானே ஏன் அப்படி என்று கேட்டால் "அது அபபடிததானே. என் தந்தை, அவா தந்தை. அவா தநதை நாட்களிலிருந்தே அப்படித்தான்," எனபான். விஷயம் அறிந்த தற்கால விஞ்ஞான மாணவனேக கேட் டால, "கிழக்கே பள்ளம. தண்ணீர் எப்பொழுதும சம தளமாகவே இருக்க முயலும. பள்ளம் நோக்கிப்பாயும்," என்பான். அதைப்போல விஷயம் அறிந்தால் விளக்கம் பெறுவது தெளிவாகிறது. தெய்வ உண்மை அறிய உண்மையில் பயன்பெற உள்ளும் வெளியேயும் நிகழும்

செயல்களைக கணநேரமும் விடாமல நன்கு கவனித்தல் வேண்டும். ஆனால் அதைச் செயயும மனததையும் புத்தி யையும் துருபபிடித்துக கொணடிருக்க விட்டிருக்கிறோம். அது பல ஜன்மங்களாக நடந்து கொணடிருக்கிறது மனது புத்தியைத் துரு நீக்குவோம். கருக்கு ஏற்றி உப யோகிப்போம. அதற்குச சாதனை வேண்டும்,

கேனோபநிஷத்தில 'மனத்தை வெளிச் செலுத்துவது எது? அதை அதன் பொருட்களுக்குச் செல்ல உத்தர விடுவது எது?'' என்ற கேள்விகள் எழுப்பப் படுகின்றன. கெட்டிக்காரத்தனமாய் ஆயும் சிந்தனையில் பலகாலம் ஈடுபடாத ஒருவன் இந்தக் கேள்விகளை எழுப்பியிருகக முடியாது, வாழ்க்கையை ஆழமும் அழுத்தமும் பெற வாழ்ந்திருக்க வேண்டும் அவன். இல்லையென்றால இநதக் கேள்விகள் அவனுக்கு ஒரு பயனையும் தரா. கணகள் தாங்களே பாாகக இயலாதவை என்ற முடிவை அவன் அடைந்திருக்கிறான். கண்களாகிற சூட்சுமக் கரு விககுப்பின் அவற்றுக்கு ஆற்றல் தருகிற ஒரு சகதி இருத்தல் வேண்டும். அது மிகவும நுணணியது. நம் ஸ்தூலமான புததி அதை அடைய முடியாது நுண்ணிய சிற்பம் செதுகக உதவும் கருவிகள் போன்றது அது. அந்த வேலை செயயச சிறந்த மேதை வேண்டும். மிருது வாக இறகுபோல் விரலகளை உபயோகிததல வேண்டும். அவசரமில்லாமல் இறகுபோல் தொட்டுப் பழகும் விரல்கள் வேண்டும். இவற்றுடன் கருவிகளும் மிகவும நுணுகி வேலை செயயும ஆற்றல் கொண்டிருகக வேணடும். அதைப்போலவே பொறிகளுககுப பினனால இயஙகும மெய்மமைதத தததுவததை நனகு புரிநது கொளளள மனம் புத்திக் கருவி சுத்தமடைநதிருக்க வேணடும்.

பூர்ணஞானப் பொருளை அறியாமல் நம் மெய்த் தத்துவத்தை அறிய முடியாது. நம் வாழ்வு சுயநலம் அகங்காரம் இவைகளுக்கு மதிப்புத் தருகிறது. உண்மைச் சாநதி கிட்டவிலலை. ஆகவே ஒரு பூரண ஆன்மீகப் புரட்சி தேவை உளளுககும் உள்ளே நுழைநது உண் மையைத் தேடினால் ஒழிய விடுதலை கிடைககபபோவ தில்லை. சுய முழுமைதான் உலகம முழுமையடைய வழி. உலகம் உணமைப பொருளே. அது இயங்கவும் நாம் தான் நம் பூரணத்துவத்தின் ஆற்றலைத தரவேண்டும் படித்த ஒவ்வொருவா மனத்திலும் இந்தக் கருத்தை ஏற்றியாக வேண்டும். மிருக வாழ்வு வாழ்ந்து நாம்

அடைந்த இந்தச சாபக்கேட்டிலிருந்து நாம் தப்பவேண்டும் என்ருல் இது தற்காலத்தில் மிகவும் தேவையான ஒன்ருமு.

சிந்தனைகளையும் தூண்டும் எண்ணங்களையும் விரட்டி மனதான சிறந்த கருவியைச் சீர்திருத்திவைப் போம் அந்தக் கருவியின் துணைகொண்டு நம் உள்ளே இருககும் ஜோதிட சக்தி ஞானத்தைத் தேடி அடை வோம நாம் திருந்துவதில்தான் உலகம திருந்துவதும் இருககிறது.

உள்ளுரப் பின்பற்றுதல்

சரோதரஸய ச்ரோதரம் மனஸோமஞ்ே யதவாசோஹவாசம்
ஸஉ பராணஸய பராண
சக்ஷுஷஸ சக்ஷுரதி முச்யதீரா: பரேதயஸ்மாத
லோகாதம் ருதா பவநதி.

குரு அது காதின் காது, மனத்தின் மனது; வாக் கின் பேசசு. உயிரின் உயிரும் அதுவே கண்ணின் கண தான் என்ற புத்தியை விட்டு (இவைகளில் அகங்காரம் கொள்வதை விட்டு) இந்திரிய வாழ்க்கையை மீறி மேல ஏறி ஞானவீரன் அமரனுகிஞன்.

கேளவி நேரடியானது' நடத்துகிறவன் யார்? அதறகு பதிலாககுரு, "கண்ணுக்குக் கண்,காதினகாது," என்றெலலாம் சுற்றுகிருர். ஏன் எனின நிதய உயிர்ப் பொருளான அந்தப் பரம் பொருளைப் பேச்சுக்குட் படுத்துவது முடியாதது கடவுளுக்கு இலக்கணம் கூறு வது அவரை இறககுவதாக முடியும்!

ஆனுலும ஒரு முறையின் மேல் எழுந்த விரிவான நோக்கில பார்ததால்தான் அவ்விதம் தெரியும். அவர் பதில்களை நன்கு மனத்தில் போட்டுச் சிநதிததோமானுல அவா சுற்ற முயலுகிருரில்லை எனபது தெரியும். ஏன? அவருக்குச்சிஷ்யனிடம் இருக்கும் அன்பும் வெளியாகும். அநத நிலையில இப்படிச் சொல்லாமல வேறு எந்தப் பதில் சொன்னுலும அந்த நிலையில் சிஷயன் மனத்தில் தப்பாததம ஏறபட்டுவிட முடியும். கண்ணுக்குக் கண் புத்தியின் புத்தி என்றெலலாம் சொல்வதன் மூலம இநதிரியங்களும புத்தியும் தாங்களே இயங்கவில்லை, அவற்றிற்குப் பின் அவற்றிற்குத் தூண்டல் தருவது

உள்ளிருக்கும ஒரு சக்தி என்று ஐயமறக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குரு பதில் மட்டும் சொல்லி நிறுத்தவில்லை. மனம் இந்திரியங்களுக்கு அப்பால் உள்ள ஒரு சூட்சும உலகத திறகும யாததிரையை ஆரம்பித்து வைத்திருக்கிறார். சிஷ்யன புற உலகத்தைப் பற்றி அவன் கொண்டுள்ள கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். அது உணமை என்று எண்ணுவதை மாற்றிக்கொண்டு அவருடன் ஆத்ம லோகததுககு நடந்து போகத் தயாராயிருக்க வேண்டும் இல்லையெனில் அவா சிஷ்யனுக்கு உதவி செய்ய முடியாது என்று பொருள் கொடுக்கிறார் எனபது போல் தோன்றுகிறது. மெய்மையின் உலகம் நாமறிய இயலாதிருக்கிறது. அது நமக்குக் கனவுலகம், விசித்திர இடம். இன்று உப நிஷதங்களைப பற்றிக் கேட்டுககொண்டிருப்பதும்கூட, போதிய 'வைராக்யம்' உளள காரணத்தாலல்ல! ஏதோ புதிதாக இருககிறதென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். உங்களில சிலர் உபநிஷதங்களைப் பற்றிக கொஞசமே அறிநத போதிலும் அவைகளின் ஆசிரியர்களாகிவிட்டதாக வீண் பெருமையும் கொண்டிருக்கலாம். அந்த அகம்பாவம் இன்று நேற்றையதல்லாமல் என்றுமே இருநதது போலும். அதனாலதான் ரிஷிகள் 'பூரணத்துவம் அடைவிக்கும் இந்த வழி நீண்டது, கடினமானது' எனறும 'உபநிஷதம் காட்டும ஞான மாாககம பலா செல்வதன்று, ஆனால பொறுககி எடுத்த சிலருககே' எனறும் கூறியுள்ளனா. உப நிஷதங்களே, மோக்ஷப் பாதை கத்தி முனையைப போன்றது எனறு கூவிச சொல்கினறன. அது எவ்வாறெனினும வாழககையில உண்டு வாழவது மனுவாய் இருப்பது இதைவிடச சிறந்த ஒரு குறிககோள் உண்டு என்று தெரிநது கொள்வதே படித்த சராசரி மனிதனுககு உதவியாக இருக்கும இலலையென்றால அவன் புறப் பொருளின்பத்தில பேராவல கொணடு அழுந்தி மடிநதுவிடுவான். அபபடிபபட்டவர்கள்தான் நெருப்புடன் விளையாடுகிறோம எனறு அறியாமல் உண்மையல்லாத மதிப்புக்கள கொணடு வாழ்ந்து ஏமாற்றமடைந்தவுடன் பயங்காளித்தனததுடன் தற்கொலை புரிந்துகொண்டு உயிரை மாய்த்துககொள்கின்றனர். அன்றாடம் பார்க்கும் பொருளைவிட உண்மை ஒன்று, எல்லாவற்றையும் பெரிதான ஒன்று இருக்கிறது என்று தெரிந்தால அவர்களுக்கு வாழ்க்கையில மிகவும் சிரமமான சமயங்களில்கூட ஒரு தெளிவு, நம்பிக்கை, தைரியம் எல்லாம் கிடைக்குமென்கிறோம்.

ஆசாரியன தன் கெட்டிக்காரத்தனமான பதிலின் மூலம் மாணவன் சாதாரணக் கண்ணோட்டத்தில தெரியவந்த ஒரு புது உலகத்திற்கு யாத்திரை தொடங்கத தன்னைத் தயாராககிக் கொள்ளவேண்டும் என்று கட்டுகிறார். உண்மையைக் கண்டுகொள்ள அவன் ஒரு பெரு யாததிரையான துணிவுச் செயலைச் செய்தாக வேண்டும் அதற்கு அவனைத தூண்டித் தயார் செய்யத் தான் பதிலல்லது போன்று தோன்றும். இந்தப் பதிலைச சொலலியிருக்கிறார். உண்மையென்பது இந்திரியங்கள், புத்தி முதலியன உணரககூடிய ஒன்று அலலது அது தேடுபவனேயாகும. காணகின்றவனேயர்க்கு என்கிற உண்மை வளர்ச்சியை விஜித உருவத்தில் கொண்டிருக்கும் அந்தப் பதில்.

மககள் தெரிந்து கொளளாமல் இருக்கலாம். என்றாலும் அவர்களுளளே தெயவ ஒளி இருக்கத்தான் செய்கிறது இனி உண்மை என்ன என்று ஆத்மாவுக்குள் நுழையவேணடியதிலலை. அது அங்கே இருககவே இருக்கிறது. காணப்படாமலிருககிறது அவவளவுதான.

நம் உள்ளே இருக்கும் உணமை தெரியாத காரணத்தினால்தான் மனித இயற்கை என்கிற குறைபாடுகள கூட்டுககளுடன் இருககிறோம. ஆன்மீகத் தெளிவின் மூலம்தான் அந்தந்த தனி ஒரு உண்மை அறியப்பட முடியும். மற்றவை வழிகாட்டலாம். அவவளவுதான். நேரடி அனுபவம சுயமுயற்சியில்தான் கிட்டியாக வேணடும்.

இந்த மந்திரத்தின் இரண்டாவது பாகத்தில சாதகன் உலகை விட்டுச செனறவுடன் அமரத்தன்மையை அடைகிறான எனறு குறிக்கப்பட்டிருககிறது. இதைப் பறறி அநேக பெரியோர்கள சிநதிததிருககின்றனர். அதன பயனாக இரண்டு தெளிவான சிததாந்தங்கள் நிலைத்திருககின்றன. ஒன்று, இந்த உடல கட்டு இருக்கும வரை பூரணத்வம அடைய முடியாது. இந்த அழியும் சடலததை உதறினால ஏன் சிறந்த மனது அந்த நிலையை அடைய முடியும்? இந்தக் கருத்துப்படி வேத வியாசர் போன்ற மகான்கள்கூட உடலை விட்ட பிறகு தான பூரணத்துவ மடைந்திருப்பார் என்கிறது. இது சொல்லுக்கு அர்த்தம் செய்யும் தப்பான முறை. தானே தகுதிககுத் தயார் செயது கொண்டவன்தான் உபநிஷத்துக்களின் உண்மைக் கருத்தை உணர முடியும்.

குழந்தைகள் தாயான சுருதியை நாடி அன்புப்பால் பொழிய வேண்டுமெ என்று அவளிடம் வேண்டிப் பெறு கின்றார்கள். அன்பும் கனிவும் கொண்டு மறுக்கிறார்கள். சுருதி அருள் புரிகிறாள். புத்தியை உள் புகுந்து பார்க்க முதலில கற்றுக கொடுக்கிறாள். சூட்சுமததிறகும சூட்சு மத்தை அறிவதற்கு முன்பு இரண்டுவகைச சம்பிர தாயஙகளையும் மனததில பழைய விருப்பு வெறுப்பு இல் லாமல் ஆய்ந்தால் ஸ்ரீ சங்கரபகவத் பாதாள சொலலும் வேதாந்தத்தின் சிததாந்தமே சரி, ஒத்துக்கொள்ளக் கூடியது என்ற முடிவுக்கு வருகிறோம மற்ற சம்பிர தாயவாதிகளும் விடாமல் நெருங்கி அலசித்தான் பார்த் திருக்கிறாாகள் என்றாலும் கொஞ்சம் உள்ளத்தில் பழைய நிறம் இருந்து இருக்கிறது. அந்தச் சம்பிரதாய முறைப்படி கா்மம சாவு வரை தொட்டாகபபட வேணடும. கர்மததுக்குப பின் உபாசனை செயதல வேண்டும. உபநிஷத மந்திரங்கள் தியானப் பொருள் கள் அதாவது அவாகள் கருத்தில் உபநிஷதங்கள் யோக மாாககமல்ல, தியானததுக்குரிய மநதிரஙகளே. ஆனால் ஸ்ரீசங்கரபகவத் பாதாள் விளக்கம் தாக்கத் துககு ஒதது இருக்கிறது. அவர் சொல்கிறாா 'குரு சுருதியையும நனகு படித்திருகக வேண்டும நேரடி உண்மை உணாவில நிலையும பெற்றிருக்க வேண்டும.'

சுருதி சொல்வது அபபடியே உணமை என்றால் நமககு ஆசாரியனோ குருவோ கிடைக்க போவதிலலை ஏன் என்றால் முழுமை யடைந்த மனிதன இறநத பிறகு தான் உண்மையின் சுதத நிலையை அடைய முடியும். ஆகவே இநத எழுதுதுககு எழுத்து உணமைக் கருத்து தபபு எனபது தெளிவு. சுருதியின் நடையே இந்தக கருத்துக்கும் புஷ்டி தருகிறது.

பிறகு சுருதி தரும் கருத்துத்தான் என்ன? சிறந்து பண்பட்ட (master) மனது அப்பாலுளள உலகததில ஆழ்கிறது. சூட்சும உலகததை அடையவேணடும் என்றால அவன் ஸ்தூலப்புற உலகை விட்டேயாக வேணடும். அகண்டாகார மெய்மையை அனுபவிக்க வேணடும என்றால் த்வந்த்வம் அகஙகாரம ஆகிய இநத உலகத்தை ஒ ரே ய டி யா க அல்லது அந்த நேரத்துக்காவது விட்டுத்தான் ஆகவேணடும். முழு வதும அர்ப்பணம செய்து கொண்டால் ஒழிய புது உலகததின் கரைகளை அடைய முடியாது. அது அகண்ட ஆனந்தம. நித்திய ஆனந்தம், பரம ஆனந்தம். அங்கே

வருத்தமும் வலியும கொணட உலகம் இருக்க முடியுமா? நாம்தான் நம் வறட்டுப் புத்தியில பெருமை கொண்டு வருத்தங்களேயும வலிகளேயும் ஏற்படுததிக் கொள்கிறேம். பொயமதிப்புக்கள் பொய்ப் பெயாகள் கொண்ட உலகத்தில் முடிவும் எல்லேயும் கொண்ட பொருளகளுடன் ஒட்டிக்கொண்டு, "இந்த உலகம் தான் எனககு ஈஸவரன படி அளந்தது," என்று வேறு அங்கலாயககிறேம்,

அநதப்பரம ஞானம் நமககு வருமா? விவேகிகளான முனிவர்கள எல்லாவற்றிலும் துறநது மெயப் பொருளின் அறிவைப் பெறறிருககிருர்களே! அது எப்படி? பொய மதிப்புக்கொண்ட பொருளகளிடம் எல்லாம் கொணட பற்றைற துறவுங்கள். மாறிககொண்டேயிருக்கும் இந்த உலகில் ஆசைப்படவோ அழவோ தகக பொருள ஏதுமில்லே இன்பமும் துனபமும் இந்த வாழ்வில வநதேதான தீரும். அவை ஒரே நாணயத்தின் இரண்டு பககங்களே.

ஸதூலமான இநதிரியங்கள் மூலம்தான் ஸ்தூல மான உலகம் மனத்தில வழிகிறது. அதன் பிறகுதான் நாம அரும் பிராணிகளின ஒரு கூட்டமே என்ற எண்ணம வருகிறது ஆனல் மனததின மனததில் என்றெல்லாம் வருகிற சுருதி வாக்யங்கள் காட்டுகிற உயிரின் மையததை அறிநதுகொள்ள முடியும். புத்தி பூாவமாக இந்த எண்ணங்களேயெல்லாம் மீறி மேலேறிய பிறகுதான் பூர்ணமான வளர்ச்சியை அடைகிறது.

நாம அறிந்து ஏறகும் உலகத்துககு நாம் தரும் மதிப்புதான எல்லாம் புற உலகம் நம்மில பிரதிபலிக்கிற விதத்தில் மோட்டார் பானெட்டில் யாககப்படும் பொருள்போல் அழகினறிக காணப்படுகிறது. மனத்திலுள்ள வளர்ச்சிககுறை மெயப்பொருள்கூட வளேந்து காண்கிறது. ஆனல பாாத்தவன பார்ககிற பொருள் (அதைப பார்த்து மனத்தில் பெறும் பிரதிபலிப்பு எப்படியிருந்தாலும் சரி) மெய்மைப் பொருள்தான். கடல் நீரும் உணமையில பாலேவனமதான். பாலேவனத்தைப் புரிந்து கொணடு விட்டால் பிறகு அலே நீர் எலலாம் ஒன்றும் இருககாது. பாலேவனம்தான் இருக்கும்

வேதாந்தம் 'முறைப்படி பயிற்சி செய்தால் ஒருவன் அந்த ஈஸ்வர உணாவை அடையலாம்,' என்று சொல்கிறது. இது நாமாகக கொள்ளும் ஒரு (ஏமாறறு)

எண்ணம் என்றாலுங்கூட நான் ஒரு சம்சாரி என்று சங் கடப் படுவதைவிட இது எவ்வளவோ நல்லதல்லவா! நாம் மெய்ப்பொருளையும் நித்தியப் பொருளையும் அழி யும பொய்ப்பொருள்களாக ஏற்கிறோம் என்றால் அது நம அகங்காரம் நிலைக்கவேயாகும் ஆன்ம உலகத்திற கும பேதங்கள். அநத உலகம உணமை உலகமாகும. ஆன்மீக வாழ்வில யாரும் நமமை ஒரு புது உலகத்துக்கு அழைத்துச் செல்ல முடியாது. குரு நமக்குச சில புது ஆற்றல்களைத் தருகிறார். நாம் அவற்றின் துணைகொண்டு "நினறே நிலை பெறுகிறோம்." நமமுடைய ஆற்றல்களைத தொடர்ந்து உபயோகிதது சுயமுயற்சியினால் உண் மையை அடைநது அஙகேயே வாழ்கிறோம்

சாதாரண வாழ்வில தெரியாத ஒரு ஞானம் நமக்கு எப்படிக் கிடைக்கிறது? ஆம், இபபொழுது வேற்று நாட்டில் ஒரு சணடை நடப்பதாக வைத்துக் கொள வோம. அதை நாம் எபபடி அறிந்து கொளகிறோம். செய்தித் தாள்கள் சொல்கினறன. பிறா சொலகிறார் கள். அதைபபறறிப பேசுகிறோம். சண்டைக்குச் சென்று வநத வீராகளைப பார்த்துத தெரிநது கொளகிறோம

செய்திததாள்களின் செய்தி எப்படிப்பட்டது? நாம் முன் பின அறியாதவர்கள் எழுதும செயதிகள. அவா கள் அங்கு சென்று பார்த்தார்கள. நேரில் பார்த்தவா கள் எழுதுகிறாகள என்று நாம் நம்பிப் படிக்கிறோம். அதேபோலச் சுருதிதான் நமககுச செயதித்தாள். அதில எழுதிய ரிஷிகளைப்பற்றி நாம் அறியாதிருககலாம் ரேடி யோவில் பேசும் மனிதாகளை நாம் அறியமாட்டோம. அவாகள குரலைக் கேட்டுப் பேசுவதை அறிகிறோம்

அதேபோலப புறப்பொருள்கள் சம்பநதபபட்ட வரையில் சந்தோஷமும், திருப்தியும் ஏறபடும வண்ணம் வசதிகள் அமைநதிருந்தாலும் உள்ளே ஓா ஆவல் தாக மும், ஆன்மிக ஏக்கமும் இருந்தால மனதான ரேடியோ மூலம கிடைதத தூண்டுதல் காரணமாகச் சிந்தனையின் தொலைவு நிலங்களில் ஒரு உணமையை, ஒரு மெய மையைத் தேட முற்படுகிறேன்.

வேதங்கள் இதை வலியுறுத்துகின்றன. ஆனால் நாம் இதை நம்புகிறோமில்லை ஏன்? நாம் அறிய முற் பட்ட சணடையைப்போல் இது புற உலகில் நடக்கும் செயலல்ல. பெரிய பெரிய சதகிரதங்கள் எல்லாம்— கொரான், விவிலியம், ராமாயணம எல்லாம், "நீ தான்

கடவுள்'' என்று கூறுகின்றனர். மதங்களின் ரகசியம் அறிந்த பெரியோர்கள் எல்லாம் சண்டையைப் பேசிய செய்தித்தாள்களைப்போல உண்மையைப் பேசுகிறார்கள். இப்பொழுது நீ வாழும் முறையை விட்டால் ஒழிய நீ பூரணத்வத்தை அடைய முடியாது. பூரணத்வம் என்பது நம் கடவுள் தன்மையை வழி நடந்து பிடிக்கும் செயலேதான். இன்று இருக்கும் அநாத்ம அகங்காரங்கள் கடவுளுக்கு இருட்டடிக்கின்றன. அவற்றை விட்டாலதானே அந்தப் பூரணத்வம் ஏற்பட முடியும்.

மற்றும் ஒரு வழி உண்டு. அதுதான் உண்மையுணர்வில நித்ய வாசம் செய்யும் ரிஷிமுனிவர்களை அடைவதாம். அவர்கள் தொட்டாலே போதும், மனிதன் ஆத்மா மாற்றமடைந்து விடுகிறது. தெய்வத்தன்மை காணலாம், வண்ணம வழி எதானால் எனின். உண்மை முயற்சி வேண்டும் ஊக்கம் கொண்ட உண்மை காரணமாக நாம ஞாபகங்கள், ஆசைகள் இவற்றை பல ஜன்மங்களின் அறியாமையில ஊறிய குப்பைக் குவியல்கள் என்று அறிந்து ஒதுக்கி விட்டோமானால் தான நாம ஆத்மனை அடைய முடியும்

வேதங்கள் செய்தித்தாள்கள், சத்சங்கம், கிளப்புகள (பொழுது போக்குச சங்கங்கள), மகாத்மாக்களைச் சந்திப்பது சண்டையில இருந்து திரும்பிக் கை கால இழந்து வந்த சிப்பாய்களைப் பார்ப்பது போலாகும். புதிதாக ஆன்மப் பாதையில வெற்றி கண்டவர்கள முகத்தில் வீசும் ஒளியைக் காண்பது அரசியல் சர்ச்சைகளைக் கேட்பதாம உலகத்தில புற அறிவு பெற நாம கையாளும் முறைகளை எல்லாம ஆத்ம பரிபூரண நிலையைப்பற்றி அறியவும உபயோகப் படுத்தலாம.

முன்னேற்றத்தைத் தடுக்கும் பிணைப்புச் சங்கிலி

ஒரு சிறிய கதை சமீபத்தில் நடந்தது. கள்ளச் சந்தை நடத்திப் பணம சம்பாதித்த ஒருவன் தில்லியிலிருந்து மதராசுக்கு ரெயிலில் போனான். அவனிடம் நிரம்பப் பணம இருந்தது. அவனுடனகூட அதே ரயிலில ஒரு போக்கிரியும கிளம்பினான். அவன் பெரிய வியாபாரியைப்போல் வேஷம் போட்டான். பல பெரிய வியாபாரிகளைத் தெரியும என்று வீசினான். லட்சத்திலும் அதற்கு மேலும் பேசினான். இந்தக் கள்ளன் அந்தக் கள்ளச சந்தை வியாபாரி பணத்தை அடித்துக்

'கொள்ளத திட்டம போட்டுத்தான் இந்த விதம் செய் தான் அன்று இரவு வியாபாரி நோட்டுககளை எடுத்து எணணுவதைத் திருடன் கண்ணுல் பாாத்தான். இரண டாம் இரவும அதே நடந்தது. அந்த வியாபாரி பணத்தை எங்கேதான் வைத்திருந்தான்? மறு நாள் காலையிலும் வியாபாரி பணம எண்ணிஞன். அன்றைய (முன்ருமநாள) இரவும் தேடிஞை திருடன். வாழ் நாளிலேயே அவன் கைதேடிப் பொருள் கிடைக்காதிருந் தது இதுதான் முதல் தடவை! என்ன ஏமாற்றம்! கடைசியில சென்னை வநதது. வியாபாரி நமஸ்காரம் சொல்லிவிட்டு இறங்கப் போஞன். திருடன் வெட் கத்தைவிட்டுக் கேட்டான். ''பணத்தை எங்கே வைத் திருந்தீாகள்?''

வியாபாரி சிரித்துககொண்டே, ''எல்லாம் உங்கள் படுககையில தலையணை அடியில்தான் வைததிருந்தேன்,'' என்ருன்.

அதைப்போலவே உண்மை ஆனந்தம் நம் உள் ளேயே இருககிறது எனறு வேதாந்தம சொல்கிறது. இருந்தும நாம வெளியே தேடி ஆடி அலுக்கிருேம. சம் சாரத்தில சலித்துச் சலிக்கிருேம. நாம பார்க்க முடி யாத அவ்வளவு அருகேயே இருக்கிறது மெய்ப் பொருள.

நததர சகஷுா கசசதி நவாக கசசதி நோமேனு நோ
வித்மோ நவிஜாநீமோ யதைததனு சிஷயாத் அநயதேவ
தத விதிதாத ேதா அவிதிாதுதி இதி சுசரும பூாவேஷாம
யேனஸ்தத் வயாச சகஷிரே.

கண அஙகே போகிறதிலலை. பேச்சும் இல்லை, மன மும இலலை நாம அதை அறியோம். அதைப்பற்றி எப்படி சொல்லித் தருகிறது எனறும அறியோம். அறிந ததற்கெல்லாம் தனிப்பட்டது அது, அறியாதவற்றுக கும் அப்பாறபட்டது. நாஙகள கேள்விப்பட்டிருக் கிருேம் என்று எஙகளுககுச் சொல்லித் தந்த ஆசாரியா கள சொல்லியிருக்கின்றனா

கண்கள் அங்கே செல்ல முடியாது. மன உணாவு எங்கிருக்கிறதெனபது தெளிவு. அநத உணாவுதான் கண்கள் பாாக்க உதவுகிறது. ஒளி அலலாது மெய்மை யின் உதவியால்தான் கண்கள் பாாக்கின்றன. வான

ஆராய்ச்சி சாலையில் தொலை நோக்கும் கருவியில் உள்ள கண்ணாடி வில்லைக்குப் பின்னால் இருக்கும் விஞ்ஞானி போலக் கண்களுக்குப் பின்னால் இருந்து பார்ப்பது அதுவே. கருவியா பார்க்கிறது? அதை உபயோகிக்கும் மனிதரல்லவா பார்க்கிறார்? அதைப்போல நம்முள்ளே உள்ள ஆத்மன் அல்லது பார்ப்பவன்தான் பார்க்கிறான். உண்மையில் அது அறியாமல், கண் என்ன? இந்திரியங்கள்தாம் ஞானம் தருகின்றன என்று பேசுகிறோம். ஆனால் இந்திரியங்கள் என்ன என்று நாம் அறியமாட்டோம். வெளி இந்திரியங்களைப் பயிற்சி மூலம் அடக்கி விட்டோமானால் மனது இதுவரை மறைந்து இருக்கும் ஒரு சக்தியை வெளிப்படுத்தும். அதை நாம் "சுய உணர்வு' (Intuition) என்னலாம். அந்த ஞானக் கண் மூலம்தான் நாம் உண்மைப் பொருளை அனுபவிக்க முடியும்.

சிஷ்யன் கேட்டான் "மனதை வெளியே செல்லவிடுவது எது?" அதற்குப்பதில் குரு சொல்கிறார். 'மனத்தின் மனது ஒன்று'. உதாரணமாக நான் ஒரு இளைஞனை யார் என்று கேட்டால் அவன் நான் இன்னார் மகன் என்று சொல்வான். அவனுக்கு என்று ஒரு பதவி இருந்தால் அவன் நான் ராமநாதபுரம் சப-கலெக்டர் என்றோ வேறு பதவி வகிப்பவன் என்றோ சொல்லிக் கொள்வான். நாம் வாழும் உலகில் கண்தான் பார்க்கிற அவயவம் என்று பேசுகிறோம். ஆனால் குரு சொல்கிறார். கண்ணின் கண் பார்க்கிறது, காதின் காது கேட்கிறது

காதின் காது காதாகவே இருக்க முடியாது. ஸ்ரீராமனின் மகன் துரை ஸ்ரீராமனாகவே இருக்க முடியாது. இவ்விதம் அந்த உண்மைப் பொருளைப்பற்றிய ஒரு குறிப்பைச் சிஷ்யனுக்குக் குருவானவர் இந்த நேரல்லாத பதில் மூலம் தருகிறார். பேச்சின் பொருள் ஆத்மன்தான் என்பதும் உண்மை. அதற்குக் குணமோ செய்கையோ கிடையாது எனவே அது ஒரு பொருளாக முடியாது. எனவேதான் பிரும்ம வித்தையில் மற்ற விஷயங்களைப்பற்றி பேசி விளங்க வைக்கும் முறைகள் பயன் தருவதில்லை.

"ஒரு சாமான் எது?" அதற்குக் குணம் இருக்கும். அது ஒரு முடிவு கொண்டது. ஆத்மன் குணம் என்று பேசிவிட்டோமானால் அதற்கு முடிவு கொண்ட

பொருளின் தன்மை ஏற்பட்டு விடும். பொருள் என்பது நான் என் புலன்கள மூலம அறியக்கூடியதும் எனனை விட்டுத தனித்து இருப்பதுமாம. இந்திரியங்களுககு அப்பாற்பட்டது. ஆத்மன என்றால குணங்களற்ற ஒன்று அது எனபதுதான் அதற்குக் கருத்து. குணங்கள இல்லாமல் என்றும் இருக்கும் தெயவ இருப்பேயாகும அது.

குணங்களற்ற ஒன்றைக் குரு எவவிதம் சிஷ்யனுக்கு அது இது என்று சொல்லிககாட்ட முடியும்? பஸ்மாசுரன் தவம் செயது சிவபிரானிடம் யார் தலையில கை வைத்தாலும அழிநது சாம்பலாககககூடிய வரத்தைப பெற்றான். கடைசியில சிவபிரான தலையிலேயே கை வைகக விரும்பியபோது தானே பட்டழிநதான். நம புததியும் பஸமாசுரனே. மனமும, புத்தியும அவற்றுடன ஒட்டி நிற்கும் பொருளின் தலையில் தன் ஆற்றலை வைக்க முடியாது (அதை அறிய முடியாது) "ஒரு பொருள் கறுப்பு" என்னும்போது என்ன நடககிறது என்று ஆராயலாம கணகள் அப்பொருளைப் பாரக்கின்றன, மனது பழைய அனுபவஙகளின ஞாபகத்தின் துணைகொண்டு அதன் கறுப்பு நிறத்தை அறிகிறது. ஆகவே கவனித்தல், வரிசைபபடுததுதல் பாகுபாடு செய்தல என்ற வகையில் செயல்கள நிகழ்கின்றன. புத்தி ஒரு பொருளை அடைந்தவுடன் பஸ்மாசுரனைப போலப பிரிந்து விடுகிறது அதன் பகுதிகளாக மாறி விடுகிறது. அதைபபோல உண்மைப் பொருள் ஒனறே. ஒளியைப பிரிககாமல் இருக்க முடியாது. குவிகண்ணாடி (லென்ஸ)தான கிரணங்களை ஒரு புளளியிடததில குவிகக முடியும்

இந்தப் புத்தி, எண்ணத்தின உயர்ந்த தளங்களை அடைந்து செயலபடும் பொழுதும்கூட குணங்களைத் தான் புரிந்துகொள்ள முடியும். ஏறகனவே இந்திரியங்கள் மூலம அடைந்த அனுபவங்களின் அளவைப் பொறுத்துத்தான் அது செயல்பட்டு இருக்க முடியும் விஞ்ஞான சோதனைச் சாலையில் மனமும, புத்தியும் கெட்டிக்காரர்தாம்! ஆனால் மதம மெயப்பொருள் உணாவு இவற்றை நெருங்கும்போது செருப்புககளைப் போல வெளியிலேயே கழற்றி வைதது விடவேண்டியது தான் சுத்த உணர்வுத் தளத்தில் செல்லச் சுயமாக அறிந்து கொள்ளும் ஆற்றலை வளர்த்துக் கொண்டால்

தான் ஆகும். அது ஏறகனவே நம்முள் இருக்கும் ஒன்றுதான். விஷயங்களின உண்மை மதிபபை ஆய்ந்து பழகுவதாலும் சுருதி வாக்கியங்களை மனனம் பணணு வதாலும் இந்த ஆறறல் வளர்ந்து வரும். "கேட்டும்", கவனிதது்மே வேதாநதத்தைப் புரிந்துகொள்ள முடியும் வேதாநத சிரவணம செய்தால் உயர்ந்த இனபம் கிடைப்பது தெரியும வாழ்க்கைக்குப் பயந்து ஓடு கிறவன நித்திய மெயப்பொருளைத் தேடும் துணிகரச செயலில் ஈடுபடமுடியும.

கணகளோ மற்ற எந்த இந்திரியங்களோ நம் முடைய ஆதமாவை அடையாது. ஆகவே ஆத்மனைப் பற்றிய பிறருககும் சொலவது எப்படி என்றும் நாம் அறியமாட்டோம, அறிநதவற்றிலிருநது அது தனித் தது. அறியாதவற்றிறகு அப்பாற்பட்டது. எனின அறிய வழி ஆகாயம் ஒன்றேதான. ரிஷிகளும்கூட "எங்கள் குரு சொல்லித்தந்தது இது," என்று சொல்லும பல இடஙகளை நாம் பாாக்கிறோம, உயாநத பொருளின தளததுககு நம் புத்தி செல்வதிலலை. சுயமாக அறியும உணர்வுதான செலல முடியும். சமாதி நிலையில மகான் கள் தஙகும் அநத மெயப்பொருளதான். யாத்திரை மார்க்கங்கள் மாறுபடலாம் ஆனால் பல யாத்திரிகளும் சென்று அடையும இடம் தீர்தத ஸ்நானம், கோயில ஒன்றேதான். சமாதியில் ஆத்மானுபவம ஒன்றே. அதைபபற்றிய விளக்கவுரைகள் அனுபவித்த அவ ரவருககுத் தககவாறு மாறலாம். வேதாந்திககு எல்லா மதஙகளும் சம்மதமே ஆகவே எந்த மதத்தினுடைய சிறிய போதனையையும் மதிக்கக்கறறுக்கொள்ளவேண் டும், மெய்பபொருளினத்துககு உள்ளபடி ஆர்வம்இருக்கு மானால முன்னேற்றப போககில செய்யும் எந்த அனு வலும் சரியே

இந்திரியங்கள் அனுபவிக்கும் உண்மை என்றால் வார்ததைகள் மூலம் சொல்லலாம். இனங்கள், ஜாதி, செய்கைகள் இவற்றைக்கூறி விளக்கி விடலாம். சுய மாக உணடும் ஆற்றல் மூலம் அனுபவிககும் மெய்ப் பொருளை நான பேசி அறியவைப்பது எங்஡னம? ஞானேநதிரியஙகளும் சரி, கர்மேந்திரியங்களும சரி, ஆத்மனை அடைய முடியாது இநதிரியங்கள உணர, பொருள் இந்திரியங்களுக்குள்ளிருந்து தனித்துப் பாாக்கக் கூடியதாக இருத்தல் வேணடும். நாம் நம் குடலைப் பார்க்க முடியும். சந்திரனைப் பார்க்க முடியும்.

நான் ஆனந்தமாம் இருக்கிறேன என்கிறோ£ ஏனெனில் அந்த மனோ விருததியை நமமுளளேயே பார்ககிறோம. அதேபோல பாாக்கும் அந்த உண்மைப் பொருளேயும் பாாக்கலாம். அதை மனிதன் சூட்சும ஆற்றலதான் பார்கக முடியும் லட்சியததை அடைநத பிறகு அந்த அனுபவததைப் பேச மொழி கிடையாது. புத்தி அளவில் அறிந்து கொளவது என்பது வேறு. நேரடியாகப் பெறு வது என்பது வேறு. அறிநதவற்றுககு அப்பால் பட்டது என்று சொல்லுமபோது இநத ஐந்து புலனகளால் அறிய முடியாது என்று பொருளாகும். ஏன எனில் தெரிநதவை எல்லாம் இநதிரியங்கள மூலமே அறியப் பட்டனவாம.

பார்க்கிறவன்: இந்த மந்திரத்தின் அன்யதேவ தத் விதிதாத அதோ அவிதிதா துதி என்ற சொற்களில் பெரும பொக்கிஷம அடக்கிவைக்கப்படடிருககிறது (உணமையில அது அறிநதவற்றுககும் அப்பாறபட்டது; அறியாதவற்றுக்கும் அப்பாறபட்டது) உபநிஷத மநதிரங்கள மிகவும வெட்கி ஒதுங்கும் பெணகள் போனறிருககின்றன எவ்வளவோ சாமாததியமாக "தாஜா" செய்தால்தான அவை நாணம் நீஙகித் தம் தெய்வீக முக அழகைக் காட்டுகின்றன. அவசரப்பட் டவர்கள் பலனடைய மாட்டாாகள். நவீன வாசகர் கள் அநதப்புரத்தில அவசரபபட்டுச் சென்று செய்யும் ரகளையில மிருதுவான பெண்கள கலவரமடைந்து விடு கின்றனர். ஒதுங்கி மறைகினறனர், உபநிஷத மந்திரங்களைப படிககுமபோதே நம்முடைய சொந்த விருப்பு வெறுப்புககளையும கொணடு அவறறைக் குறை கூற வழி உணடா எனறு எண்ணியே படிககிறோம். அதற்கு பதிலாக அவை சுருங்கி ஒதுஙகி நம்மை விரட்டி விடுகின்றன ஆனால் நாம அவற்றை அன்புப் பணிவுடன் அணுகி அவறறை அறிய நம் ஆாவத்தை மகிழும முறை யில் காட்டினேமானல் அவை நம்மை சுதத ஆனந்தத் தளததுக்கு அழைத்துச் செல்லும் இந்தக் குணததுக்கு மேலே சொன்ன வாகயம் தகுந்த உதாரணமாம்.

பரபரப்பும், சீககிரம் முடியவேண்டும என்ற ஆசை யும் கொணடு அணுகுகிறவாகளுககு இந்த வாகயம் தம் பழம்பெருதத புததிகொணடு அணுகுவது அன் புக்கு வழியாகாது. காதல் புரிய இதயம ஒளி வீச வேண்டும், அதேபோல மந்திரத்தின் உள்ளத்தைப் பெற அதன் ஆழ்ந்த கருததுடைய நாம் அதனிடம் அன்பு செலுத்துவோம்,

அறிந்தவை, இந்தப் புறப்பொருள் உலகமாம். இந்திரியங்கள், மனம் புத்தி இம்மூன்றும் அறியும் அது. இந்த இந்திரியங்கள் மனம், புத்தி எலலாம் தாமே பார்க்கவல்லவையலல என்று முன்னமேயே பார்த்தோம். அவற்றிற்குப் பின்னுல அநதப் பார்ப்பவன் இருந்தால் தான் அவை செயல் புரியும். அந்தப் பார்ப்பவனைப் பார்க்கும் கருவி மூலகம பார்பபது கஷ்டம். எனவே 'அறிகிறவன' அறியபபடடவன் அல்ல. அறியப்பட்டதறகு அப்பாறபட்டவன. நாம் சநதிரனைப் பார்க்கும் போது சந்திரனைப் பாாப்பவன் சந்திரனுக மாட்டான்.

மீண்டும், பார்ப்பவன் அறியப்படாத ஒன்ருய் இருக்க முடியாது அறிந்தவற்றுககு அப்பாற்பட்டது எனறு குரு சொனனபடி சிஷ்யன அது அறியப்படாத ஒன்று என்று எண்ணியிருப்பான அபபடி அறியப்படாத அறியப்பட இயலாத ஒன்று என்று முடிவு செயதுவிடக கூடாதே என்று (மேற்கே கண்டு (Kant) என்பவன அப்படித்தான் சொல்கிருன.) அறியப்படாதவற்றுககும் அப்பால் இருக்கும் ஒரு உணமை வஸ்துவே எனறு அறுதியிடவே சுருதி அவிதி தாததி என்று உறுதி கூறுகிறது.

இப்படி அறியாதவற்றிற்கும் அப்பால் என்று சொனனுல் அதைப்பறறி நனருய சிந்தித்தாக வேண டும். இல்லையெனில அந்தப் பேச்சு ஏமாற்று வித்தையாகக் காணப்படும. பிரும்ம வித்தையை இபபடிப் பட்ட திறக்கக் கஷ்டமான பூட்டுச சொறகள் மூலம் தான ரிஷிகள் காப்பாற்றி வநதிருககின்றனர்.

அவை ஒரு பக்கத்தில் அனுமதியின்றி உள் புகுகிறவர்களுககு அடைக்கலமாக இருந்தபோதிலும் அவையே வேதாநத வித்தையின கர்ப்ப கிரஹததுக்கும் செல்ல விரும்பும் தகுதி வாய்ந்தவர்களுக்கு பயிற்சி சாலையாக விளங்குகின்றன. எனவே வேதங்கள் மனித இனம் குழந்தைப் பருவத்தில் உளறியவை என்று சொலலும் மேற்கத்தியப் படிப்புப் படித்து பிள்ளைததனமாகப் பேசுவர்களை கண்டு இரஙகுவோம். கோபித்துக்கொள்ள மாட்டோம். சங்கராசசாரியார் இந்தக் கருத்தை தெளிவாககும்போது அதி என்ருல் (அவற்றினின்றும) தனித்த ஒன்று என்று கருதிக கொள்ளச் சொல்கிருர். தண்டவாளத்தின்மேல் இருக்கும் பறவை அத்தணடவாளததினின்று தனித்த ஒன்றே புரிய உதவக்கூடிய

ஓர் உதாரணம் சொல்கின்றேன். அமெரிக்கத் தலைவர் ட்ருமன் பிறந்த தேதி தெரியுமா? தெரிகிறது என்று நீங்கள் உடனே சொல்வீர்கள். அது அல்ல அப்படிச் சொல்லும்போது மனத்தில் என்ன நிகழ்கிறது என்று சிந்தியுங்கள். கேள்வி வந்தவுடன் நீங்கள் உங்கள் ஞாபக வீட்டில் எங்கும் தேடினீர்கள். அந்தச் சேதி அங்கில்லை என்றவுடன் மனது எனக்கு தெரியாது என்று கூவியது. இது மனதின் ஒரு விருந்தினர் தெரியாது என்பதைப் பற்றிய தெரிந்த ஒரு அறிவு (இம்மையின உள்ள தன்மை) இல்லை என்ற அறிவுக்கு ஒளி தந்தது. இருக்கக்கூடிய ஒரு ஒளி. அந்த ஒளிதான் உண்மை அது கண்டிப்பாய்த் தெரியாத ஓர் இம்மைக் கருத்துககு அப்பால்தானே இருந்திருககவேணடும். சூரியன் மறற பொருளை ஒளிர வைககிறது. அவன் தனனையே ஒளிர வைக்கிறுன என்பது சரியல்ல. நெருப்பு மறற பொருளை எரிக்கும், தன்னை எரிததுக் கொளளாது.

அந்த நித்தியப் பரம்பொருள் தெரிந்தது தெரியாதது எலலாவறறிற்கும் அப்பால் உள்ளது என்ருல் அது பாாக்கும் அல்லது தெரிந்து கொள்ளும் பொருளைத் தவிர வேறு எதாக இருகக முடியும? பார்க்கிற அந்தப் பொருளுக்குத் தெரிந்ததும் தெரியும், தெரியாததும் தெரியும். அந்த நித்தியப் பார்ப்பவனே ஆத்மாவாகும்.

உண்மையின் இந்த விளக்கம்கூடத் திருப்தி தரக் கூடிய இலக்கணமாகாது. கேனோப நிஷத் மகரிஷி இந்தப் பாடததை அறிநதது அறியாதது இரண்டுக்கும் அப்பாறபடடது எனபதைத் தான் குருவிடம கேட்டுக் கொண்டதாகச் சொல்கிருர். 'இதி சுசரும பூாவேஷாம்' குரு சிஷ்ய பரம்பரையாய் வரும் ஆகம ஞானம் வேதாந்தத்தில் அடிககடி காட்டப்படும் பிரமாணமாம. மனமோ, புத்தியோ இந்திரியங்களோ, நேரடியாக அடைய முடியாத ஒரு பொருள் அந்த மெயமைப் பொருள். இந்த ஆத்ம விசாரணைக்குப் பிரமாணம் வேறெதுவும் கிடைப்பதில்லை. எனவேதான் கேனோப நிஷத்தில ரிஷியான குரு ஆகமப் பிரமாணத்தைக் காட்டி இதி சுச்ரும பூர்வேஷாம் என்று அதற்கு வலிவு தந்து உண்மை அறிந்தது அறியாதது இரண்டுக்கும் மேமபட்டது என்று இலககணம் கூறுகிருர்.

யத வாசானப் ப்யுதிதம யேன வாகபப் யுத்யதே
தேதேவ ப்ரமஹ தவம் வித்தி நேதம,யதிதமுபாஸதே

வாக்கு எதை விளக்க இயலாதோ (ஆனால்) வாக்கு எதனால விளக்கம் பெறுகிறதோ அதே பிருக்கம் என்று நீ அறி; இங்கே மக்கள் வழிபடுகிறார்களே அது அல்ல.

ஸ்ரீ சஙகர பகவத் பாதாளுடைய கருத்துப்படி வாககு என்பது பேசும் உறுப்பு மட்டும் அலல, அது எழுத்துக்களே. குறிப்பிட்ட எண் முறைப்படி அமைந்துள்ள சொற்களையும் குறுககிய பேசும் ஆற்றல் சொற்களிலோ அச்சொறகளைச சொல்லும உறுபபிலோ இலலை.

அது நம்மிலுள்ள ஆதம சைதனயத்தின் தோற்றமே ஆகும். நாம் உயிருடன இருக்கும வரையில பேசுவதற்கும் இறநத பிறகு இலலாமல போவதற்கும் காரணமான அநத உயிர்பபு மையம இருக்கிறதே அதுதான் ஆத்மன். சொற்கள் ஆத்ம சைதன்யத்தின் காரணமாகவே வருகின்றன. என்றாலும் அவை அதை விளக்க முடியாது. நெருபபு மறறப பொருளைக கொளுத்தலாம. அவற்றிறகு ஒளி தரலாம ஆனால் தன்னைத் தானே கொளுத்திககொளளவோ ஒளி பெறச செய்து கொள்ளவோ முடியாது.

'ததேவ-அதே-ஏவ' எனற சொல்லுககுத் தனி அழுத்தம் உணடு. நம்மால் விளக்கிக் காட்டப்பட்டால் அநத உண்மை பாதிக்கப்பட்ட உணமைப் பொருளாகத் தான் இருக்க முடியும் சுத்தமான உணமைப் பொருளுக்குப பெயருமில்லை. உருவமும் கிடையாது. பிறகு எவ்விதம் காட்ட முடியும? மின்சாரத்தை எப்படிச் சாதாரண மனிதனுககுக காட்ட முடியும்? பலபையும் அதற்குள இருக்கும் சுருள் கம்பியையும காட்டி ஊரா பூராவும் கம்பியில் ஓடி பல்புக்குள இருக்கும் கம்பியைப் பற்றி எரிய வைத்து வெளிசசம் தரும சகதிதான் மின் சகதி என்றுதான் சொல்ல முடியும. அந்த மனிதன, பல்பு, கம்பி ஏன் வெளிச்சம இவையலலாத போ தோற்றம அற்ற ஒரு சகதியே மின்சாரம் என்று அறிந்து கொளளல வேண்டும். அதைப் போலவே குருவானவர் இஙகே சிஷ்யனுககு கண், காது, நாககு இவைகளில் பாாவை, கேட்டல் பேச்சு இவறறிற்கு ஆதாரமாயுள்ள சக்தியாய்த் தோற்றம் கொள்ளும் உயிர மையமேதான் உணமைப் பொருள் என்று சொன்னாலும் அந்தப் பொருள் பாதிககும் பொருள்களின் எந்தப பகுதியும் அல்ல என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்றும

சிரமப்படுகிறார். அந்தச் சுத்த ஆத்மன். பாதிக்கப்படாத அந்தச் சர்வ வியாபக உண்மை அதைக் காட்டத்தான் சுருதித்தாய் ஏவ என்ற ஆழமும் தெய்வீக ஆற்றலையும் கொண்ட சொல்லை உபயோகித்திருக்கிறாள். அதே பிரும்மம் என்று அறி.

விசாரணை சிஷ்யனுடைய பூத உடல் செய்யும் பல செயல்களின் அடிப்படை. இயக்கச் சக்தியைப் பற்றியது தான் என்றால் குரு கடுமையாக அழுத்தம் தந்து, "அதே பிரும்மன்" என்று அறி என்று முடிக்கிறார். சுருதி, ஆத்மன் 'தனித்து உணரப்படும் அந்த ஆத்மன்தான் சர்வ வியாபகமான சுத்த சத்வப்பொருள், பரம மெய்ப் பொருள்' என்று ஊக்கம் தருகிறது. இது ஒன்றுக் கொன்று முரணான கூற்று அல்ல. நம்முள்ளே நாம் நேரடியாக அடைந்து உணரும் ஆத்மன்தான் அந்த நிகுதியப் பரம் பொருள். பிரும்மத்தின் பாதிக்கப் படாத அடிப்படை என்பது வேதாந்தம் போதிக்கும் உண்மையாகும். இந்தப் பொருள் பற்றி முன்னமே விளக்கவுரைகள் தரப்படுகின்றன. ஓர் அறையின் வெளியும் உலகம் பரவி நிற்கும் வெளியும் ஒன்றென்று பார்த்தோம். இந்த நான்கு சுவர்கள் நிற்கும் வரைதான் இது தனி வெளியாகும். ஆன்மப் பயிற்சி பெற்ற ஒரு ஆசாரியன் வேதாந்த அனுபவம் பெற்று அந்தப் பரம பொருள் ஒன்றுதான் என்று உணர்ந்து விடுவான்.

சுருதி "அதுவே பிரும்மம்" என்று சொல்லிய துடன் வாயை மூடிக்கொண்டு விடவில்லை அப்படியிருந் தால் அவள் குழந்தைகள் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்திருக்கும். "இவர்கள் எல்லாம் யார்? ராமன், கிருஷ்ணன் என்றெல்லாம் உள்ள இஷ்ட தேவதைகள் யார?" நன்றாகத் திறந்து இவர்கள் அல்ல என்று ஒரே சொல்லில் அந்தச் சந்தேகங்களை எல்லாம் நீக்கி விடுகிறாள். "நேதம் யதித முபாஸதே,"

இதம் - இது என்ற பிரதிப் பெயர்ச் சொல்லுக்கு என்ன விளக்கம் இருந்தாலும் சரி இது என்பது தெரிந்த பொருளைத்தான் குறிக்கும் அதாவது நம் இந்திரியங் கள், மனம், புத்தி இவை அறியக் கூடிய பொருளாகத் தான் இருக்கும். பார்க்கப்படும் பொருள் பார்க்கும் பொருளாக இருக்க முடியாது. நாம் தேடும் பொருள் மனிதன் புறப்பொருள் அறிவுபெற உதவும் உறுப்புக் களுக்குப் பின்னாலிருந்து அவற்றை இயக்கும் ஆதார

சக்திதான். அதைப் பற்றி நாம் குறிப்பிடக்கூடிய தெல்லாம் பாதிக்கப்பட்ட (உருவம் தரப்பட்ட) பொரு ளாகத்தான் இருக்க முடியும். சூரியனின் பிரதிபிம்பம சூரியனாக ஆகமுடியாது. ஆகவே நாம் அறியும் பொருள பரம பொருளாக இருககக முடியாது. அதனால்தான் குரு உறுதியாகச சொலகிறார். பெயரும், தோற்றமும் பெறற எந்தப் பொருளும் பக்தி சாதனைக்காகப் பரம் பொருள் என்று பேச நேரிட்டாலும்கூட அது பரம் பொருளாக ஆக முடியாது.

இநத மந்திரத்தை மூர்த்தி பூஜை, பகதி மார்க்கம் எல்லாம மறுக்கத தப்பாக உபயோகித்தல கூடாது. தபம், கீர்த்தனம், தபம் தியானம ஆகியவற்றின் மூலம் ஏறகனவே வளாநதவன் இன்னம் மேலே உணமைப் பொருளின் எல்லையை அடைய வழி சொல்லித் தரப் படுகிறது. சுருதித்தாய் சாதகன் உறசாகததைக குன்ற வைககக விருமபுகிறாள் எனறு எண்ணுதல் கூடாது. ஆன்மீக லட்சியததுககு இன்னம் அருகில செல்ல ஒரு கை தந்து உதவுகிறாள். உபநிஷத ரிஷி வெறும் ராம பட்டாபிஷேக படததுடன் நிறகாமல அவர் தங்கச் சிமமாசனத்துக்குப பினனுலுள்ள ராமத்துவமாகிற இனபக கடலுக்கு அன்புடன அழைததுச் செல்கிறா. ராமன மூலம ராமததுவததுக்கு, கிருஷ்ணன் மூலம கிருஷ்ணததுவத்துக்கு பெயாகள உருவங்களிலிருநது ஆரமபித்து ''அபபாலுககு .''

பக்தன பகவானுடைய தததுவத்தில் ஒன்றிவிட வேணடுமட உபநிஷதம் அவனுக்கு அந்த விததகில உதவுகிறது. வேதாந்தம் பக்தனுககும் அவன் இஷ்ட தேவதைககும இடையே இருக்கும் வெளியைப் பறறி இருவரையும் ஒனற வைக்கிறது. சாதகன் 'பிரபு ஒருவன்தான் உண்டு. நான் எனது எனபதெல்லாம் ஏமாற்றும கனவுப பொருளே' என்று உணருமவரை எல்லாச சாதனைககும் பூர்ததி ஏறபட முடியாது.

''அன்புச் சாதகன் எவனும், பகதி ஆழமாகவும், தீவிரமானதாகவும், இருககப பெறுவானேல் இதை நேரடியாக உணர்ந்து அனுபவிதது அதிலேயே வாழ லாம,'' என்று மீண்டும் மீண்டும் வேதாந்தம உறுதி கூறுகிறது. மறற மதங்கள் முடிகிற இடத்திலிருந்து இன்பப் பெருவெளியான வேதாந்தம் ஆரம்பமாகிறது. மனிதன் கடவுளே. கடவுளே உண்மை. மற்றவை

எல்லாம் பொய், வேதாந்தம் நம்மை சம்சாரமாகிற துன்பக் கனவிலிருந்து நம்மைத் தட்டியும், தள்ளியும் இழுத்தும் அழைததும் உண்மை உணாவாகிற அநத இன்ப நிலைக்கு இட்டுச் செல்கிறது.

வேதாந்தம் பக்தியை அழிக்கிறதில்லை உண்மை யான் பகதன் வேதாந்தியில்லாமல இருக்க முடியாது. எநத வேதாந்தியும் பகவானை நேசிககாமல உண்மை வேதாந்தியாக முடியாது. "அன்பு இல்லாத வேதாந் தம் பைத்தியக்காரத்தனம். வேதாந்தம் இல்லாத அன்பு அசட்டு நம்பிக்கை!" இன்றுவரை உளள பெரிய பெரிய ஆசாரியர்களா எலலாம் நேரடியாகவும குறிப்பா கவும் சொலலி வந்தது இதுதான. இந்தப் பெரும் உண்மையை நாம் மறுததல் கூடாது.

மனமே மனிதன் :

மனம் என்பது என்ன வஸ்து? எவ்வளவு போ அதைப்பற்றி யோசித்து இருக்கிறீர்கள்? நல்ல நடத் தையை (குணம்) ஏறபடுத்திக் கொள்வதற்கே அதைப் பற்றி அறிந்திருக்க வேணடும். மனம என்ன என்று அறிவது கடினம்தான் என்றாலும் நம புத்தியை உப யோகித்துக் கதை காரணங்கள் மூலம் ஒருவாறு அறிய முயலலாம். நம் சாஸதிரங்கள் அதைப் பலவிதமாகச் சொல்கின்றன. ஒன்று மனம் என்பது வாசனைகளின் (சுவடுகளின்) தொகுதி என்பதாம். நவீன மஞ்ஞ விஞ் ஞானிக்கு மனம் என்பது சுபாவமே' மனத்தை அறிய சாஸ்திரங்கள் தரும் ஓர் உதாரணம் கங்கை நதியாகும்

ஆறின் தன்மை இரண்டு கரைகளுக்கு நீர் நின்றி ருப்பதலல. அதன் முககிய தன்மை எப்பொழுதும் ஓடிக் கொண்டிருப்பதாம் — ஆரம்பத்துக்கும் முடிவுககும் இடையே! அதைப் போலவே மனம என்பது எண் ணங்களின் நிற்காத ஓட்டமேயாகும். எண்ணஙகள் ஒன்றையொனறு தொடர்ந்து ஏகப்பட்ட வேகத்தில ஓடும்போது அந்த எண்ண ஓட்டத்தை மனது எனகி றோம். அந்த ஓட்டத்தை நிறுத்தி விட்டோமானால் பிறகு மனம் இருக்காது. எரியும் ஊதுவத்தியை வேக மாகச சுற்றும உதாரணத்தை மீணடும் எடுத்துக் கொள்ளுங்கள். ஓர் ஒளி பொருந்திய தொடர்பு அறுத ஒரு வட்டம் தோன்றுகிறது. ஆனால் வட்டம் உண்மை யல்ல. வத்தி சுற்றுவதை நிறுத்தினால் வட்டமும் மறைந்து விடும். வட்டம் ஏற்பட்டதற்குக் காரணம்

வத்தியின் எரியும் முனை வேகமாக நகர்ந்து வட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருந்ததுதான். அது நமக்குத் தெரியும். ஒரு குழந்தை அந்த வட்டத்தை உண்மை என்றே நம்புவான். அதைப் போலவே நாமும் புத்தியில் ஏழ்மை காரணமாக, சிறிய மனித ஆசைகள், சுய நலம், தப்புக் கருத்துக்கள் இவைகளில் உழல்கிறோம். நம்முடைய முன்னோர்கள் மகான்கள் அவர்கள் வேதங்களைத் தந்து போதிக்கின்றனர். வேதங்கள் ஹிந்து மதத்தின் பொக்கிஷத்துக்குச் சாவிகள். அவைகளைக் கவனித்தோமில்லை. பொருளைவிட்டு நிழலைத் தேடிக் கொண்டு திரிகிறோம். ஆன்மீகப் பட்டினி ஏற்பட்டு நாம் ஹிநது மதத்திற்கே அவமானம் தரும் ஹிந்து மக்களாக விட்டோம்.

எழுங்கள், விழியுங்கள். பெரிய பரம்பரைக்கு உரிய வாரிசாக ஆகுஙகள். பொக்கிஷத்தின் பூட்டைத் திறவுங்கள். இந்தியா பழைய ஆன்மீக சாம்ராஜ் யத்தை அடையட்டும். "நாம் ஹிந்துக்களாக ஆவோம."

மனம் தடங்காத எண்ண ஓட்டம் என்றால் அந்த ஓட்டதகை அறிய ஓர் ஒளி வேண்டுமே. பகலில் நாம் படிக்கிறோம்! சூரிய ஒளி அதற்கு உதவுகிறது. எழுத் துககளுக்கு ஒளி கிடையாது. ஒளி இருந்தால்தான் அதைப பாாக்க முடியும். இலலை எனில் அந்த ஜடப் பொருள் விளங்காது. அதே போல எண்ணமும சுய ஒளி கொணடதில்லை. கண்களை மூடிக்கொண்டால் தான் நரம் அந்த ஓட்டத்தைக் காண முடியும்.

எணணங்கள் சூட்சுமமானவை. எண்ண ஓட்டமான மனமும் புத்தியின் புத்தியால் விளக்கம் பெறு கிறது. மனம் எழுப்பும் எண்ணங்கள் உடலைவிட அதிக ஆற்றல் வாயந்தவை உடலைக்கூட மெய்யல்ல எனறு நாம சுலபமாக ஒதுக்கிவிட முடியும் ஆனல் மனத்தை அப்படிச் செய்ய இயவாதென்றே தோன்றுகிறது. அது உயிர் மையமான ஆத்மனுக்கு இன்னம் அருகில் இருப் தால் அதற்கு ஒரு தனி ஆற்றல் கிடைத்திருக்கிறது. அதன் ஒளியும், பெருமையும் ஆத்மனிலிருந்து பிரதி பலிப்பதன் பலனகக் கிடைத்திருப்பதாக உண்மை போலவே தோன்றவும் செய்கின்றன. மனத்துக்கு ஆத் மப்பிரபாவம் (ஆத்மனின் சேர்ககைப் பயன்) கிடைக் கிறது. அந்தப் பெருமையில் அது தன் வேலையைச்

செய்கிறது. இந்த ஒளிதான் மனதை விளக்கம் பெறச் செய்கிறது; உண்மைபோல் தோற்றமும் பெறச் செய் கிறது. எண்ணங்கள் ஒளிபெறும்போதுதான் நாம் எண் ணங்களை அறிகிறோம். கவலை அல்லது இன்ப நிலையை நாம் அறிவது புத்தியின் புத்தியான அந்த ஆற்றல் அதற்கு ஒளி தரும்போதுதான். அந்த மையத்துக்கு இவ்வளவு அருகே நாம் இருக்கிறோம் என்பதுகூட நமக்குத் தெரியவில்லை. நன்கு தெரிந்த ரகசிய அறை களில்தானே ஈசுவரன் வசிக்கிறான். மிக நெருங்கி இருப் பதாலேயே நமக்கு அது ரகசியமாகவே இருக்கிறது. நாம அறியத் தவறுகிறோம் !

எண்ணத்துக்கு ஒளி தரும் பொருளை நாம் 'சித்' என்று அழைக்கிறோம. எனவே எண்ணமோ மனமோ இந்த விந்தை ஒளி காரணமாகத்தான் இருக்கை பெறு கிறது பிறகு அது எப்படிப் பரம ஒளியை நமக்குப் பிரதி பலிக்க முடியும் ? உள்ளேயுள்ள ஆத்மன் (சைதன்யம) மனத்துக்கு ஒளி தருகிறது. அந்தப் பிரதி பலித்த ஒளியின் விளக்கத்தில மனம் இயங்குகிறது. உடலைவிட மனம் மெய்ப பொருளுக்கு அதிக நெருக கத்தில செலலுகிறது.

நாம் வாழ்க்கையில மறந்திருக்கிறோம். அதனால் தான் நம் உள்ளே ஒளியின் மையமான, உண்மையின் ஒளிப்பக்கம் பாராககாமல் வெளியே உள்ள, ஸ்தூலமான உலகப் பொருள்களுக்கு மதிப்புக் கொடுக்கிறோம. உண மையான தெய்வ ஒளியை விட்டு விட்டு பிரதிபலித்து வரும் எதிரொளியைப் பார்க்கிறோம. யாராவது விஞ ஞானியோ, மனோ சாஸதிரியோ ஒரு புது ரகசியத்தைச் சொல்லி விட்டால் நாம அவனைப் போற்றிப் புகழ்கிறோம் பிரதி பலித்த ஒளியே இவ்வளவு பெருமை தருமானால் அந்த உண்மையிலேயே வாழ்பவன பெரு மையை என்ன சொலவது ?

யன மனஸா ந மனுதே யே ஞஹுர் மனோ மதம
ததேவ ப்ரஹ்மத்வம் விததி நேதம யதிதமுபாஸதே

மனத்தால உணரமுடியாத எதுவோ, ஆனால எத னால் மனம் உணர்கிறது என்று சொல்கிறார்களோ அதே பிரும்மம் என்று அறி. மக்கள் உபாசிக்கிற இது அல்ல

மையத்தின் மையம்

நம்மை நாமே மறந்ததன் பயனாய் அந்தபரம ஆன்ம மையம ஒரு மயக்கததில ஆழ்கிறது. எலலேயும் முடிவும காணும் ஒரு நிலேயை மேலேறறிக் கொண்டு குழம்புகிறது. இநத ஆனம அறியாமைதான புத்தித தளத்தில் ஆவரணமாகவும, மனத்தளததில விக்ஷேபமாகவும் பரிணமிக்கிறது. ஆவரணம் தன்னேயே மறைககும் இலலே எணணஙகள். விகஷேபம் மன அலேவுகளின் சூறுவளிககாறறு. இநத மனம புத்தியுடன் (ஆவரண விகஷேபங்களுடன்) ஒனறி நாம மனமே நிறைந்த ஆற்றலுள்ளது எனறு நமபுகிறேம. மனிதன் பெருமையே புத்தியில தான இருககிறது எனறு உறுதி கொள்கிறேம!

ரிஷிகளின கூரியபுதநதி வாழ்ககைகயை அலசி உண்மையைக காணச செயத முயறசியில் மனிதனேயும் சுமமாவிடவிலலே. தற்கால விஞ்ஞானி உள உறுப்புக்களின உண்மை அறியப பிராணிகளேக் கூட வெட்டிச சிதைத்து விடுகிருன ரிஷிகளும மனிதனின் உள் ஆற்றலின சததை அறிய மனிதன தததுவத்தையே அலசிப் பாரதது விட்டார்கள். அபபொழுது மன ஆறறலில் கொளளும நமபிக்கை வேறு ஒனறில் வைககப்பட வேணடிய நமபிக்கை இடம் மாறியது என்று கண்டார்கள். மனமே சாபபாட்டின (பெளதிகப் பொருளின்) விளே பொருளதான். பிறகு அதறகு எங்கிருந்து ஆற்றல் சுயமாக வர முடியும்? அது ஆற்றல பெற்றிருப்பது போல தோன்றுகிறதே எனருல அது உயிரின் மையமான ஆதமாவைத தொடடுக் கொண்டு இருபபதால் தான்.

சீடனுடைய மனம் மூட நம்பிக்கைகளின் வழியே செலவதைதத தடுத்து அவனதானே தன் உண்மைத தன்மையை அறியும வணணம் உயர்ந்த எண்ணப போக்கில் செலுதத மிகவும முயறசி செய்கிறா கேனேபநிஷத்தில் வரும ஆசிரியர். இந்த மநதிரத்தில அவர் அந்த மெயப் பொருள் தத்துவம மனத்தின்அறிவாற்றலகளால் அறிய முடியாத ஒன்று; ஆனல உயிாத்தத்துவமான அது இயககம தந்தால் தான் மனம் தன அறியும் ஆறறல்களேச் செலுத்த முடியும எனறு சொலகிறா.

மின்சார பல்புதானுக எரியாது. ஆனல்உள்ளே மின் சக்தி பாய்ந்தால் எரிய ஆரம்பிககிறது. பலபிலுள்ள அந்த மெலலிய கம்பிகளே எரியச செய்வது அந்தச சக்தி

ஓட்டமே. ஆனால் அதே சமயம் பலபில் ஏற்படும ஒளி அநதச்சக்தியலல. அதேபோல மனம்தானுக ஆன்ம தத்துவத்தை அறிய முடியாது. ஆனால் ஆன்மாவுடன் ஒட்டினுல் தான அது எதையும் அறிய முடியும.

ஏற்கனவேயே நாம் சொலலியிருக்கிறேம்: தான் ஓட்டும மோட்டாரைத் தன் மேல ஏற்றி ஒரு மோட்டார் ஓட்டி நகுங்க முடியாது. டிரைவர் எதிரே வரும நிலையில் மோட்டாரா நின்றிருக்கும் அதே போல மனம் திரும்பி உணர்வுத்தத்துவமான அந்த மெய்ப்பொருளைக காண விரும்பினுல் அது அதே கணம் பாாகும் ஆறறலையும் இழந்து விடுகிறது. அறிவறற ஜடமான ஒரு பானை தன்னைச சுற்றி நிகழ்வதை எனன காணமுடியும். அந்தப் பானையைப போலததான் ஆனமாவுடன இணைப்பு நீங்கியவுடன் மனதும், ஒனறையும பாாக்க இயலாததாகி விடுகிறது.

உபாசனையில் பக்தன் தான் காணும் ாசுவரனின் தோற்றம் அந்தப் பரம மெயப்பொருள் தான என்று நமபலாம். ஆனால் உபநிஷத் அது அலல எனறு மிகவும் தெளிவாகவும சந்தேகம் இலலாமலும் சொல்கிறது. பக்தன் தன் உணர்சசி பெருகிய நிலையில ஸ்ரீராமனையும கிருஷ்ணனையும் நேருக்குநேர் சநதித்ததாக எண்ணிவிடலாம்.தேவதையின உள தோற்றமானல் என்ன சினிமா நடியின் வெளித்தோற்றம் தோற்றமே! அது பரம் பொருளாக எவவிதம ஆகமுடியும்? ரிஷி இங்கே மனம் தானே பார்கக முடியாத பொருள்களைப் பாாகக அதற்கு ஆற்றல் தருவது எதுவோ அதுவே பிரும்மன் ஆகும், இங்கே உலகத்தில உபாசிக்கப் படுவதெல்லாம அல்ல என்கிறர்.

ரிஷிகள் நாஸ்திகாகளைப் போல் பேசுகிறாகள் என்று முடிவு செயது விடக்கூடாது. இருவர் நோககங்களும் ஒனறுக்கொனறு முரணானவை. உபாசனை, பக்தி இவைகளை ரிஷிகள நிநதிககவிலலை சாதனை எனற சுவட்டையே விழுந்து முனனேற்றம தடைபபட்ட மனதை வெளியே எடுககும நலல எணணத்துடன்தான் ரிஷிகள இங்கே பேசுகின்றனா ஆகவே அவர்கள நோக்கத்தைத் தெரிந்து கொண்டவாகள அவாகள் இப படி வெடுக என்று பேசுகிறார்களே என்று எண்ண மாட்டார்கள். நம்முள்ளே உளள உயிரின் மையமான அந்தப் பொருளின் எதிரே இருப்பதனுல்தான் மனம் இயங்

குகிறது. அதன் காரணமாகததான் அதற்கு இருப்பே ஏற்படுகிறது. அப்படிப்பட்ட அந்தப் பொருள் தான எலலாப் பொருள்களுககும உயிா மையமாகும. மையத தின் மையப் பொருளாயிருந்து உங்களையும் என்னையும ஆட்டிவைக்கிறது அதுவேதான் நம்மை மட்டும என்ன நம வருஙகால சந்ததிகளையும ஆட்டி வைக்கும். அது தான் பெரும் பரப்புக்கொணட உண்மைப் பொருள். பிரும்மமாகும்.

மனம் எண்ணங்களின் இடையரு ஓட்டம். அநத ஓட்டம நின்ருல் அதன் பினனுள்ள ஆற்றலைக்காணப் பெறமுடியும். மனம ஓடும பரப்பை வர வரக குறைக்க வேணடும் அதற்கு ஜபம தியானம் எலலாம் ஒழுங் காகத் தொடர்நது செய்வது நல்ல வழியாகும். ஜபம் முதலியவற்றின் மூலம் நம மன ஆட்டத்தை அடககு வது நல்ல குணங்களை ஏற்கவும் உதவுகிறது. நம் எண ணங்களின விளைபொருளே நாம். நாம நம் எண்ணப் படியே ஆகிருேம். நம் எணணங்கள உயர்ந்தால நாமும உயாவோம்.

ஜபமும் தியானமும இரு வகையில் பயன்படுகின றன எணணங்களின் ஓட்டததைக குறைக்கின்றன கூடவே நம் தன்மையையும். மாற்றுகின்றன. சாதனை யின போக்கிலே நம மனது மெதுவாக ஈஸ்வரனின உரு வமான இன்ப உருவ மயமாக மாறி விடுகிறது. ஈஸ்வர னின் முழு உருவத்தின் உயரத்தை தியானம் செயயத் தொடங்கி வர வர அந்தத் தெய்வத்தின் உதடுகளில் நெளியும் இன்ப முறுவலில் லயிக்கிருேம். அதுவும் தாண்டி எலலையில் உருவமற்ற சுத்த இன்பத்தில் வநது லயித்து விடுகிருேம் சாதகம் எல்லையை அடையும் பொழுது சாதகன் தன்னை சூழ்ந்து நிறகும இனபத்தின நிலை தெரிந்து நானே அது என்று கூவி ஆனநதம் கொள்கிருன்

உணமைப பொருள தேடுபவன சுதத ஆனந்தம் நிலையைத் தான் தேடுகிருன். வேதாநதம் அந்த லட்சி யததை அடையததான் வழி காட்டுகிறது வேதாந்தம் உலகம் தனது மதம எனபதனுல்தான் அதறகுப பெருமை, அது ஒரு ஹிந்துவைச சிறந்த ஹிந்துவாகக உதவும். ஒரு கிருஸதவா இனிமை சிறந்த கிருஸ்தவ ராக உதவும. முகமதியர் சிறந்த முகமதியராக உதவும். நாம் உள்ளே ஆழ ஆழ நம் தன்மை சுத்த

ஆனந்த நிலை என்பதை அறிநது கொள்வோம். ஈஸ்வர சரணுகதி செய்து அவரை அறிந்து நாம் நம் மெயம் மையைப பெறமுடியும, பெறுவோம். ஆத்ம போதம் ஏற்பட்ட அககணமே வழங்கி வரும் எல்லாத் தெயவங் களையும் பெற்று விடுகிறேம். பிறநதிருக்கும் ஒவவொரு மதப் பெரியார்களேயும் அறிந்து விடுகிறேம். வாழும ஒவவொரு தீர்க்கதரிசியையும புரிந்து கொண்டு விடு கிறேம்.

யச்•சக்ஷுஷா ந பஸ்யதி யேன சக்ஷூம்ஷி பஸ்யதி
தேதேவ பருமஹ்த்வம் விததி நேதம் யதிதமுபாஸதே.

கண்களால் எதைப் பாரக்க முடியாதோ (ஆனுல்) கண்கள் எதனுல் பார்க்க முடிகிறதோ அதே பிரும்மம் எனறு அறி. இங்கே மககள உபாசிக்கும் அது அல்ல.

முன் மந்திரத்தில விளக்கப்பட்ட கருத்து மீண்டும் இநத மந்திரத்திலும் கணகளே எடுத்துககொணடு விளககப்பட்டிருக்கிறது கண்கள் புற உலகப் பொருள களின் உருவம் நிறம ஆகியவற்றைப் பார்க்கின்றன. ஆனுல் கணகள் உணமையில பார்ப்பதில்லே. அவை பாரக்கும் கருவிகளே. கணகளுள இருந்துபார்க்கும் பொருள் கணகளாக இருக்க முடியாது. பார்வைக்கு பின நிற்கும் உணாவுத் தததுவம்தான் நித்தியப் பொருள. அந்த அடிப்படை மெய்ப்பொருளேத்தான் வேதாந்தி தேடுகிருன.

யச் ச்ரோத்ரேண ந ச்ருணோதி யேனச்ரோத்ரமிதம்ஸ்ருதம்
தேதேவ பரமஹதவம விததி நேதம் யதிதமுபாஸதே,

காதுகளால் எதைக்கேட்க முடியாதோ ஆனுல் எதனுல காதுகள் கேட்கின்றனவோ அதே பிருமமம என்று நீ அறிவாயாக மக்கள் இங்கே உபாசிக்கிற அது அல்ல,

அதே கருத்துதான். உடலின் கட்டும் மட்டும் கொணட உருபபுகள் (இந்திரியங்கள்) மனது புத்தி எல்லாவறறிற்கும் பின்னுல ஒரு உணர்வுததததுவம் இருக் கிறது. அது சிஷ்யன புத்தியில் நன்கு படவேண்டும் எனபதற்காக மற்றும ஓர் உதாரணம் சொல்லி குரு விளக்குகிருர். பிரும்மன்தான் காது. அது கேட்கும் பொருளின் சத்ததகின்பால் திருப்பிவைககிருா. ஒரு பிணத்தின் காதுகள் எநதச் சத்தத்தையும் கேட்க

முடியாது. ஏனென்றால் காது கேட்பதில்லை. ஒரு பாட்டுப் பெட்டி தானே சங்கீதத்தை ரசித்து இன்புற முடியாது.

யத ப்ராணேன ந ப்ராணிதி யேன ப்ராண: ப்ரணீயதே
ததேவ பரம்ஹத்வம் விதத்தி நேதம் யதிதமுபாஸதே.

எது உயிரினால் மூச்சு விடுகிறதில்லையோ, எதனால் பிராணன்கள் உயிர்க்கின்றனவோ அதைப்பிரும்மம் என்று நீ அறி. மக்கள் உபாசிக்கும் இது அல்ல.

உடலின் உறுப்புகள் எல்லாம் உயிர்கொண்டவை போல் இயங்குகின்றன உண்மையில் அவை தம் உயிர் கொண்டு இயங்க வில்லை. உயிர்ப் பொறியான ஆத்மத் துடன் ஒட்டிநிற்கும் உறவாலேயே அவை உயிர்ப்பது போன்ற சக்தியை அடைகின்றன. இந்தக் கருத்தை ரிஷிகள் ஒவ்வொரு உறுப்பாக எடுத்துக்கொண்டு சொல்லிவிட்டுக் கடைசியில் மூச்சைப்பற்றிச் சொல்லி யிருக்கிறார்கள்.

ஒரு இரும்புத் துண்டுக்குச் சுடும் சக்தி கிடையாது. ஆனால் அதுவே நெருப்புடன் இணைந்தால் நெருப்புத் தன்மையை அடைகிறது. சுடும் இரும்புத் துண்டைக் கண்டவுடன் நாம் அதன் சூடு நெருப்பின் உறவால் பெறப்பட்டது என்று அறிவோம். இரும்புக்குச்சூடு இயற்கை அல்ல. அதைப்போல உறுப்புகளுக்கு உயிர் இயக்கும் குணமோ தன்மையோ அல்ல. சைதன்யம் பின்னிருந்து உந்தியும் சந்தித்தும் உதவினால் ஒழிய இந்திரியங்கள் தங்கள் பொருள்களை உணர முடியாது. அவற்றிற்கு நம் முன்னே உயிர்ப்பொறியுடன் ஒட்டுறவு ஏற்பட்டால்தான் அவை உயிர்பெற்றவைபோல் இயங்க முடியும்

ஓர் எச்சரிக்கை:

நாம் கேனோப நிஷத்என்ற இந்தச் சிறந்த நூலின் முதல் அதிகாரத்தைப் படித்துவிட்டோம். இதில் குரு சிஷ்யனுக்கு உயிர்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரம் எது என்று கூறுகிறார். அது ஆத்மன், நம் முன்னும் இருக்கிறது. ஞானக் கருவிகள் ஒவ்வொன்றும் கருத்து. அவை எல்லாம் ஆத்மன் என்கிற சைதன்யத்தின ஆற்றல்களால்தான் செயல்படுகின்றன என்று சொன்ன போதிலும் அவர் அதற்கு முன் அர்த்துவந்தத்துவம்,

கண்ணில் கண், காதில் காது மனத்தில் மனது என்றெல்லாம் சொன்னதைக் கவனித்திருக்கலாம்? கடைசி மந்திரத்தில அவர் அந்தக கருததை இன்னும் விளககம பெறச செய்கிறார்.

அது கண் பாாக்காத ஒன்று. ஆனால் அதனால்தான் ஒருவன் சுவாசிககிறான். அந்த மனம அடையமுடியாது. ஆனால் அதனால்தான் மனம செயலாறறுகிறது என்று பேசுகிறோம் இப்படிப் பலமுறையாக அவா நம உள்ளே மையத்தின் மையப்பொருளாய் ஞானங்களுககெலலாம் நமககுப் பாக்கிய வசததால் கிடைததிருககும் பல ஞான மார்க்கஙகளையே பற்றியிருககிறது. ஆனால் நேரடியாக அவர் அதுதான் பரமஞானம அதுதான் ஆதமா என்ற வகையில பேசவிலலை. சூழ்நதுளள பொருளைககொணடு அந்த நிலை தானாகவே வருமபடி செயதிருக்கிறார். நன்கு கூாந்து நோககினால் கண, காது சுவாசம் எல்லாமே இந்த உயிாத்தத்துவம் பின்னால் இல்லாத நிலையில் ஆறறலறறவையே. எனவே அவை தம் தம தளங்களில் வேலை செயயுமாறு ஊக்கி ஆறறலதரும ஒரு உயிர் ஊற்றம் இருக்கவேண்டும்.

இதுவரை குரு, மனம், புத்தி இவறறால் பாதிக்கப் பட்ட நிலையில் உளள ஆத்மாவைக காட்டுவதிலேயே நாட்டம கொண்டு முயனறிருக்கிறா. நீங்கள சரித் திரததில் அலலாவுதீன் பதமினி இவாகளைப்பறறிய கதையைப் படித்திருக்கலாம், அல்லாவுதீன் ஈடற்ற தெயவ அழகியான அநதப் பத்மினியின் அழகை ஒரு முறைபாாக்க விரும்புகிறான் பத்மினி ஹிந்துபதிவிரதை. முஸலீமான அந்த வெறறிகொண்டவன தன அழகைப் பாாக்கவிட எவ்விதம் சமமதிப்பாள? கடைசியில் அவன் கணணாடியில் அவள அழகைப் பாாககலாம் என்று ஏறபாடாயிற்று, அந்த மிலேச்சன் அவள அழகின பிரதிபிம்பத்தைப் பாாதது மனம நிறைவு அடைய வேணடியதாயிறறு. அவன் கண்கள நேரடியான பதமினியின் உடலழகைக் காணமுடியவிலலை. அதைப் போலவே நாமும் ஆத்ம லோகத்தில் மிலேசசாகளே. நம்முளளே உள்ள பத்மினியை நேரடியாகக காண முடியாது. அதனாலதான குருதேவா பிரதிபிமபத்தைப் பார்கக ஏற்பாடு செய்கிறா. சுருதிகளில வருகிற ஆத்மாவைப்பற்றிய விளக்கங்கள எல்லாம் சுத்த சத்வத்தின் பிரதிபிம்பத்தின்பெருமைதான். இந்திரியங கள், மனம் புத்தி இவற்றின் ஞானககண்ணாடிகளில்

பிரதிபலித்து பாதிக்கப்பட்டிருக்கும் ஆத்மனைத்தான தரிசனம செய்யமுடியும். அந்தபபிரதிபிம்பத்தின மூலம பிம்பம் சுத்தசத்வமான சச்சிதானந்தமாம். அதுவும் நம் உள்ளேதான் இருக்கிறது. குருதேவர் நேரடியாக இதுதான ஆத்மா என்று ஆதமாவுக்கு எதிராக நமமை நிறுத்த முடியாது. அவர் செய்வது எல்லாம் இந்திரியங் கள் அநதக்கரணங்கள இவறறின செயலகள மூலம் தெளிவாகும் ஆதமனின் பிரபாவத்தைக காட்டுவது தான.

நம் அரசாஙகத்தைப்பற்றி நாம் பெற்றுள்ள அறி வைப போனறது அது. அரசாங்கம் அரசன் அல்ல, மந்திரிகள் அல்ல. அது வாழகைகைத் தரத்திலும் இலலை. மககளிலும இலலை. எனறுலும இவை எலலாவற்றை யும் சூழ்ந்து நிற்கும் ஒரு சகதியாம. அதில்தான நாம் செயலபடுகிறேம் ஆளுகிறவாகள ஆளப்படுபவாகள இருதரத்தினராகிய நாம் அதற்குள்தான உரிமைகளும் கடமைகளும்கொண்டு வாழகிறேம். அதைப்போல ஆத்மன் எனபது உண்மைப பொருளின் ஒரு சகதி. அது நமக்குள்ளும் இருந்து நம்மை ஊடுருவியும நிற கிறது. அது எந்தப் புலன்களிலுமிலலை. எனறுலும அநத உறுப்புக்கள் எல்லாம் அந்த ஆத்மாவினுல்தான் இருப்பையும் கொண்டு செயலபடவும் செய்கினறன. கணகள் மற்ற உறுப்பினாகள் எல்லோரும் தனித்தனி யாகப் பார்த்தால் ஆறறலற்றவை செயல்பட இயலாத வை என்றுலும் நாம உயிராகிற அரசாங்கத்தின அங்கத்தினர்களாகும்பொழுது தத்தம் சக்திகளைப் பெற்று விடுகின்றன. மதிப்புளள முக்கியமான உறுப் பினாகளால் ஆகின்றன அந்த அரசாங்கம்தான் நம் ஆத்மனுகும்.

இந்த முதல் அத்தியாயத்தில் பாதிக்கபபட்ட ஆத் மன்தான் பேசப்படுகிறது. அநதச சுத்த உணமைப்பொ ருளான பரமாதமா அல்ல. அநத எல்லைப பொருள்பரம் பொருள் என்று அழைக்கப்படுகிறது ஏனெனில அது வாரத்தைகளுள் அடங்காதது. எல்லையறறது. புல்லாங் குழலின் மெல்லிய குரல்கொண்டு நாம் இடிகளின் சணடைச் குமுறலை ஏற்படுத்திவிட முடியாது. அதே போல வார்த்தைகள சுத்த உணாவின் மௌன கர்ஜ னையை விவரித்துவிட முடியாது. அந்த முயற்சியில் சொறகள் களைத்துத திரும்பிவிடுகின்றன.

பிறகு வழி? பாதிக்கப்பட்ட ஆத்மனை விவரித்துத் திருப்தி அடைய வேண்டியதுதான். கம்பியிலுள்ள மின் சாரத்தை விவரிப்பதுபோலத்தான் அது. ஒருமுறையில் மின்சாரமும் சூட்சுமப் பரம் பொருள் தான ஏனெனில் அது இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். அளக்கலாம். ஆனால் அதைக் கண்களால் பார்த்துவிட முடியாது. மின்னோட்டம் பல தோற்றங்கள் கொள்ளலாம். அடுப்பில் சூடாகவும் குளுமையைக் காக்கும் பெட்டியில் குளுமையாகவும் பலபுகளில் ஒளியாகவும் தோற்றம் அளிக்கிறது. பல்பில உள்ள ஒளி மின்சாரம் அல்ல. அது கம்பியின் மூலம் சென்று தோற்றம் ஏற்று நிற்கிறது. சூரியன் பாதிக்கப்பட்டால் அதன் பிரதி பிம்பம் ஆகிறது. நீரின் தளம அதைப் பாதிக்கிறது. அந்த பாதிககப்பட்ட (தோற்றம் ஏற்ற) சூரியனைப் பாாத்துஉண்மைச்சூரியனைப்பற்றி ஒருவாறு அறியலாம். அதன் பெரும் சூடு, ஒளி இவற்றின் சீரிய தன்மை ஓரளவு புரியலாம ஆனால் பிரதிபிம்பததைப் பார்த்து உணமைச் சூரியனைப்பாாத்து விட்டோம் என்று பேசுவது பொய்யாகும்.

ஆகவே (பரம) அந்த ஆத்மன் சொற்களுக்குள் பிடிபடாது என்கிற காரணத்தால் நாம் சொறகளின் மூலம் நம்முடைய (ஜீவ) ஆத்மாவைப்பற்றிப் பேசி பாதிக்கப்பட்ட (தோறறம ஏற்ற) ஆத்மாவை அறிய முயலுகிறோம். அந்தக் கருத்தில நாம் இதுவரை அறிந்ததெல்லாம் ஒப்பு மெயம்மையையாகும. அதாவது பாதிக்கப்பட்ட ஆத்மாவுககும் சுதத சத்வத்துக்கும் இடையே உள்ள ஒப்பு மெய்ம்மையே.

இரண்டாம் அத்தியாயம்

யதி மன்யஸே ஸுவேதேதி தப்ரமேவாபி நூனம் தவம்
வேத்தப்ரம்ஹணோ ரூபம் யதஸய தவம் யதஸ்யச
தேவேஷு வதனு மீமாம்ஸய மேவ தே மன்யே விதிதம்.

குரு (சிஷ்யனுக்கு எச்சரிக்கை செய்ய விரைகிறுா) நான் அறிவேன் என்று நீ எண்ணினுல அது கணடிப் பாய்க் கொஞ்சமே—நீ அறிந்த ப்ரும்ஹத்தின் உருவம். தேவர்களின் உருவமுமாகும். எனவே நான் நினைக்கிறேன். நீ என்ன நினைக்கின்றுயோ அது மீமாமசைக் குரியது. (இனி நிசசயம் செயயப்பட வேண்டியது)

சிஷ்யன் முகத்தில் அறிந்து விட்டோம் என்ற திருப்தியும் நம்பிக்கையும் அதனால் ஏற்பட்ட கர்வமும் தோன்றி யிருக்கலாம். அதைப் பார்த்த குரு இந்த எச்சரிக்கையைச் சொல்லியிருக்க வேண்டும். "நீ ஆத்மனை அறிந்து விட்டோம் என்று எண்ணினால் நீ ஒரு முட்டாள். ஆத்மன கண்ணின் கண் என்றெல்லாம் சொன்னேன. அதுதான தேவர்களின் உருவங்களுக்குள்ளும இருக்கிற சைதன்யமாகும். இப்படிச் சொன்னதை யெல்லாம கேட்டுவிட்டு உடனே, "நாம் ஆத்மனை அறிந்து கொண்டோம்" என்று எண்ணி விட்டாயானால் அது தப்பாகும்.

அரண்மனையின வாயிற்புறத்தைப் பார்த்துவிட்டும் கூட ஓர் ஏழை அரண்மனையில் பார்க்கவேண்டியதை எல்லாம் பார்த்து விட்டதாக நினைத்து விடலாம். அவன் அரண்மனையின பெருமையை என்ன பார்த்திருக்க முடியும்? உள்ளெல்லாம சுற்ற வேண்டும். அந்தப்புரம எல்லாம் பார்க்க வேண்டும். அப்பொழுது தலைவா அவன் அரண்மனையின பிரபாவத்தை அறிய முடியும். அதைப்போல இதுவரை கேட்டதை வைத்துக் கொண்டு 'ஆத்மா'வைப் புரிந்து கொண்டு விட்டோம என்று எண்ணிவிடல் கூடாது. உள்ளே சென்று அலைந்து பார். கவனி. பார். நன்கு கூர்ந்து பார்; அரண்மனைச் சூழ் நிலையில் இருந்து பார். ஆத்மன் என்கிற பொருளாகிற அரண்மனையைப்பற்றி நிலைமை, தன்மை, அமைப்பு எல்லாவற்றையும்பற்றித் தீர விசாரி. சுய உணர்வு (Intuition) மூலம் அந்தப் பொருளை நேரடியாக அனுபவி. நன்கு ஆழ்; சுத்த சத்வத்தைப் பிடிப்பாய். பார்ப்பது கேட்பதெல்லாம் உண்மைப பொருளின பாதிக்கப்பட்ட (தோற்றம் எடுத்த) நிலையே. சுத்த மெய்ப் பொருள், பேர் தோற்றம் எல்லாவற்றிற்கும அப்பால் இருக்கிறது. சுத்த சத்துவநிலை பிடிக்கப்பட்டுவிட்டால் பெயர்கள் தோற்றங்கள் எல்லாம் அதற்குள் மறைந்து விடும். 'இருக்கை' அரண்மனைக்கு அப்பால் இருக்கும பொருள் எல்லாம் இல்லாப் பொருளே!

கோட் மாட்டியில் தொங்கும சட்டைகளுக்கும் பெயர் உண்டு. தோற்றம் உண்டு. அது அரசன் ஜரிகை கோட்டேயானாலும் அரண்மனை சௌகிதார் கூட (சாதாரணசசேவகனகூட) அதற்கு ஸல்யூட் செய்யமாட்டான்.

சட்டை மாட்டியில் தொங்குகிற உன் கோட்டை உன் மனைவி தழுவ மாட்டாள், உன் டிரவுஸரை உன் குழந்தைகள் கட்டிக் கொள்ளப் போவதில்லை, ஆனால் அரசன் அதை அணிந்து கொண்டு விட்டால் எல்லோரும் அதை மதிக்கின்றனர். போற்றுகின்றனர். அணிகிறவன் அணிந்தால்தான் போலீஸ் உடை கூட சல்யூட் பெறும் அதைப்போல் ஸ்வாமியாகிற ஆத்மன் உள்ளே இருந்தால்தான் உடலுக்குப் பெருமை. சுவாமி நகர்ந்து விட்டால் பிறகு அந்தப் பிணத்துக்கு என்ன மரியாதை?

இங்கே ஒரு கேள்விக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். ஏனெனில் அது சிந்திக்கும் திறன் தந்த நல்ல பயனாய் வந்த கேள்வி. கேள்வி இதுதான் "ஸ்வாமிஜீ, உடல் விழுந்தவுடன் ஆத்மன் நகர்ந்து விடுகிறது போல நீங்கள் சொன்னீர்கள். சைதன்யம் போய் விட்டாலும் பிணத்துக்கும் ஒரு இருப்பு இருக்கிறதே. எனில் இரண்டு இருப்புகள் உண்டென்று கொள்ளலாமா?" இந்தச் சந்தேகத்தை ஒரு எடுத்துக் காட்டின் மூலம் நீக்கலாம் எதிரே இருக்கும் சுவரில் சூரிய ஒளி பரவி விழுந்திருக்கிறது. கண்ணாடி ஒன்றை எடுத்து அதன் உதவியால் அந்தச் சுவரின் மேலேயே அதிக ஒளியுள்ள ஒரு இடத்தை விழும்படி செய்ய முடியும். கண்ணாடியை ஆட்டி அந்த ஒளித்தூளை இடம் மாற்றலாம். ஆனால் அது சுவரில் எங்கே விழுந்தாலும், அதற்குக் கீழ் பொதுவாகப் பரவிய சூரிய ஒளியின் பகுதி இருக்கத்தான் செய்யும். கண்ணாடி செலுத்தும் ஒளி ஏற்கனவே உள்ள பிரகாசத்தை அந்த இடத்தில் அதிகப் படுத்துகிறது

அதைப் போலவே சுத்த சத்வம் எங்கும் பரவி நிற்கிறது. ஆனால் ஜீவனுடைய அந்தக் கரணங்களால (மனம் புத்தி ஆகிற உள் கருவி) ஒரு தனி ஒளியும் ஏற்படுத்தப் படுகிறது என்று கொள்ளலாம். அதுதான் ஜீவாத்மன். இறந்த உன் உடலில் அந்த ஆத்மா இருப்பதில்லை என்றாலும் எங்கும் பரவியுள்ள 'அந்த சுத்த சத்வம் உயிரற்ற உடலில், சதை எலும்பு எல்லாவற்றிலும் இருக்கத்தான் செய்கிறது. அவை அழுகி விடுகின்றன. அந்த அழுகலிலும் அந்த சத்வப் பரப்பு இருக்கத்தான் செய்கிறது. நிற்க.

சட்டை மாட்டியில் (கோட் ஸ்டாண்ட்) தொங்கும் கோட்டுக்கு அணிபவன் உள்ளே வந்தால ஒழிய ஒரு மதிப்பும் கிடையாது. அதைப் போல தோற்றம் பெயா

கொண்ட எநதப் பொருளுககும உள்ளே ஆத்மன் இருந்தால் ஒழிய அது ஜீவனுளளதாகாது. பௌதீக உடல உள்ளே தெயவ இருபபு இருககுமவரைதான் புனிதமானது. ஈஸவரனுை ஆதமன் நகர்நது விட்டால் கோயில் அழிந்ததுதான

மனிதனுக்கு மனிதன் மாறுபாடு. மனிதனுக்கும் மிருகததுககும உளள வேற்றுமை இதன் அடிபபடையில் ஏற்படும பன்மை குணங்கள் எலலாம பிரதி பலிக்கும் தளத்தில் உளள வேற்றுமை காரணமாக ஏற்படு கிறதேயலலாது ஒளியின ஆதாரம் (மூலம்) அதாவது ஆதமன ஒன்றுதான். ஆம. சில கண்ணுடிகள சுத்தமாக இருக்கின்றன. சில அழுக்குப் படிந்திருக்கின்றன. சில வளைந்து இருககின்றன. அநத மாறுபாடு எல்லாம் அண்ணன் தம்பிகள, மாமன, சகோதரி, குழந்தைகள் இவர் களிடையே இருப்பது போன்றது.

அதாவது பன்மை எலலாம 'பாதிக்கும்' தன்மையில்தான் இருக்கிறது. பாதிக்கப்பட்ட (தோறறம் மாறின) ஆத்மன் காரணமாகவே ஏற்படுகிறது பிரதி பிமபங்களில் மாறுபாடு தோன்றலாம். ஆனுல் சூரியன் ஒன்றேதான். இந்திரியங்கள், மனம், புததி, இவற்றிற் கெல்லாம் அப்பால உண்மைப் பொருள் இருக்கிறது. அதுதான் இவற்றிற்கெல்லாம் ஆற்றல் தருகிறது. இவறறில் பிரதிபலித்த பெருமையெல்லாம் அது தந்ததே. அவ்விதம் பாதிக்கப்பட்ட ஆத்மனைத்தான் விளக்கமுடியும், பேச முடியும, புத்தி அறிய முடியும். அந்த ஆத்மனைப்பற்றிததான் கிரந்தங்களும், ரிஷிகளும் பேசுகினறனர். சுத்த ஆதமனை சிஷ்யன முறறிலும் தானுகவே உணாநதாக வேணடும்.

அடிக்கடி ஆசிரியர் பேச்சின் முடிவில் 'இதுவரை பேசியது பாதிககப்பட்ட ஆதமனைப்பற்றித்தான; அந்தப் பாதிப்பை உரித்துவிட்டு ஆத்மனை அறி' என்று வற புறுத்துகிருர். ஒருமுறை சினமயா தன் குருவைக் கேட்க நேர்ந்தது. "ஸவாமி! பாதிப்பதைப் பேசாமல சுத்த பிருமமததைப்பற்றியே ஏன் பேசிவிடக்கூடாது? அது ஏன் கணணுக்குக்கண் என்றும் கண் பாதிககும் வகையில் அதை அறி என்றும் பேசவேணடும்?" அந்தக் கேள்விக்கு உடனே விடை கிடைக்கவிலலை. சத்சங்கம் நடந்து கொண்டிருந்தது. நேரம ஆக ஆக சத் சங்கததில ஈடு பட்டு சின்மயாவும் கேள்வியை மறககலாயிற்று பாதிப்

பாடம் நடக்கும்போது ஸ்ரீ குரு தேவர், "சின்மயா, எனக்குக் குடிக்கக் கொஞ்சம் நீர் கொண்டுவா," என்று உத்தரவிட்டார். கங்கோத்ரி போன்ற பிரதேசத்தில் அந்தக் காலை நேரத்தில் தாகம் ஏற்பட்டது விந்தை தான். எனினும் சிஷ்யன் ஒரு சொம்பில் நீரைக்கொண்டு வந்து குருதேவர் அருகில வைததுவிட்டு நினறுன்.

"இது என்ன?" என்ற கேள்வி கோபமாக வந்தது

"ஸ்வாமி! இது நீங்கள் கேட்ட நீர்" எனறு பயந்த சிஷ்யன் முணுமுணுததான்.

"நான் தண்ணீர் கேட்டேனு! சொம்பா?" என்று குருதேவர் கோபமாக இரைந்தார்.

"எடு சொம்பை. கொண்டுவா நீரைமட்டும்!"

சிஷயனுககு ஒரே குழப்பம்,"நீர்—சொமபு இல்லா மல்—சொம்பு . எப்படி?" என்று முணு முணுத்தான.

குரு பயம் தெளிவித்து, "கலங்காதே. பாததிரம் இல்லாமல் நீரை யாரும் எடுத்து வர முடியாது. அதே போலத்தான் மெய்ம்மையைப்பறறிய அறிவையும நீ வெறும் வார்தனைகளால் சொல்லிவிட முடியாது. நீருக்குப் பாத்திரம் வேணடியிருப்பதைப் போல், அதையும் ஏந்திவர ஒரு பாதிக்கும் பொருள வேண்டி யிருக்கிறது. அதனுலதான சுருதிகளும், குருககளும் பாதிக்கப்பட்ட உண்மையைப்பற்றிப பேசுகிருர்கள். உண்மை மெய்ப் பொருளைப்பற்றிப பேசுவதில்லை மெய்ப்பொருள் சொற களுக்கு அடங்காத ஒன்று. பாதிக்கப்பட்ட பிருமமனை எவ்வளவுதான் நாம அறிந்தபோதிலும கூட நாம நம் முடைய இலட்சியத்தை அடைய அது உதவாது. மனி தன் கட்டுப்பாடுகளை எலலாம தகாததுககொண்டு உயரே ஆன்மீக வெளியில் ஏறவேண்டும். அப்பொழுது தான அந்தத் தாகம் அடங்கும். அந்த நிலையைச் சாதகன் தான் அந்தச் சச்சிதானந்த பரப்பிருமமமே என்று நேரடியாக உணரும்பொழுதுதான் பெறமுடியும்.

இது சுயமாக உணரும் நிலை. அதற்கு மனமும் புத்தியும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அலைவு குறைந்த மனமே பரிசுத்த மனதாம். ஆசை, வெறுப்பு, இச்சை முதலிய மனோ வியாதிகளால்தான் இந்த அலைவுகள் ஏற்படுகின்றன. வாசனைகளால் அடியுணட மனது நமககு வெளியுலகப் பொருளை விரிக்கின்றது, சினிமாவில் பிலிம

சுருள் பிரிந்து திரையில் கதையை விரிப்பது போல! பார்ப்பவன், அதில்வரும கதாநாயகன் அல்லது நாயகியு டன் தன்னை இணைததுக்கொண்டு அவதிப்படுகிறுன் அல்லது சந்தோஷமடைகிருன்.

அதே போல் வாசனைகள் உலகில் நமக்கு ஒரு வாழ்க் கையைக் காட்டுகின்றன. நாம அந்த உலகுடன் நம் மைப் பிணைத்துக கொளகிருேம். அழு கி ருேம். ஆடுகி ருேம், சிரிக்கிருேம, உருளுகிருேம். 'நம்பிக்கை, சங்க டம,' 'வெற்றி, தோல்வி,' 'நஷ்டம், இலாபம்,' இந்த இரட்டைகளுக்கிடையே அலையுண்டு, கட்டும் விலங்கும் உள்ள வருத்த வாழ்வை ஜீவன் வாழ்கிருன. படத்தில் பார்க்கும பாத்திரங்களின கதை எவ்வளவு உண் மையோ அவ்வளவுதான் நாம் வாழும கதையின உண் மையும்!

இப்படி வெளியிலேயே ஈடுபட்டிருந்து விட்டால ஆத்ம தரிசனம் இலலாமல போய்விடுகிறது மனத்தி லுள்ள வாசனைகளைப் போக்கவேண்டும. அபபொழுது மனம படம் ஒன்றும் காட்டாது நாம் வெளியுலகில் நம்மை மறககமாட்டோம

வாசனைகளை நீக்க மனததைச் சுரண்ட வேண்டியது தான. பிலிமுக்கு அருகில அது சுழலும்போது தேய்க கும தாளைப பிடித்தால் அது தேயநதுவிடும. அடுதத தடவை அது படம காட்டாது அபபடியே விழுநதா லும கோடும நிழலுமதான விழும். அழகுள்ள படஙகள ஆடாது, பேசாது

அதேபோல பகதி சாதனையால் சுத்தப்படுத்தலாம். அதாவது நிததிய நிரந்தர ஈசுவர சிநதையால்—அவன் நாமம பல சொலலுவதால் அது சுத்தமடையும. சுத்த மான மனதில தெயவததனமை ஒளிரும 'நீ அதாக லாம!'' போககிரிகூட இஙகேயே இபபொழுதே அந்த நல் நிலைமையை அடையலாம என்று வேதாநதம கை அடிததுத தருகிறது.

ஈசுவரனை எப்பொழுதும் நினை. மன அமைப்பில் எதிரிடை மதிப்புகள் கொண்ட எணணஙகளைத் துடைத் துத்தள்ளு தேவைப பொருளை ஏற்கும உண்மை வாழ்வு வாழ். எல்லோருக்கும் ஊழியம் செய். அன்பாய் இரு. சுத்தமாயிரு. சகிப்புத்தன்மை கொள் உண்மையாய் இரு. உன் வாழ்க்கையே எல்லையற்ற அன்பு வெள்ளத்

தில் முழுகியிருக்கட்டும். அவனிடத்தில் அடைநது சுயநலத்தையெல்லாம் அறவே விடு. உன் முழுத் தெய்வத்தன்மைக்கு ஏறி நிற்கலாம, நாராயண ஸ்மரணை, தியானம், சுததமான அன்பு நடத்தை மூலம் இது சாத்தியமாகும்.

சுத்த உண்மை

நாம் பார்த்தோம்' நெருப்பு மற்ற பொருளை எரிககுமே தவிர நெருபபை எரிக்க முடியாது. நீர் உல கில் உள்ள மறற பொருள்களை எல்லாம நனைக்கும், நீரை நனைக்க முடியாது. கஙகைக்கு அருகில் உள்ள கிணறுறலும் கங்கை நீர அதன் நீரை ஈரமாக்க முடி யாது. அதைப்போல அந்தப் பரமஞானம் தன்னைத் தான அறியமுடியாது. ஏனெனில அந்தப் பரம மெய்ம் மைப்பொருள் தன் 'லீலை'யின கருவியாலேயே அறியப் பட முடியாது.

குருக்கள் கொடுத்துவந்த விளக்கம் எல்லாம் பாதிக் கப்படட பிரமமத்தைப் பறறியவையே. விளையாட்டு மைதானம குழந்தைகளும், மற்றவரும விளையாடவே யனறி அதுவே விளையாடவல்ல. அது விளையாடப்போவ ...

அதைப்போலவே அந்தப் பரமஞானப் பொருள் மற்ற ஞானங்கள் விளையாட ஏற்பட்ட 'மைதானமே'. ஆகவே அந்த ஞானங்கள் எலலாம தாமாக அதை அடைய முடியாது. ஆகவே குரு, "ஆத்மனை நன்கு அடைந்துவிட்டோம் எனறு நினைததுவிடாதே அபபடி எண்ணினல நீ முட்டாள்," என்று எச்சரிககும்போது நாம நன்கு சிந்திதது விசாரணை செய்து பாதிககப்பட்ட ஆத்மனை அறிநது கொளள வேண்டும்; அப்பொழுது தான் நாம் அந்த சுதத நித்திய பரமாத்மனைப்பற்றி ஒருவாறு புரிந்து கொளள முடியும்.

நீ, 'மனதை முன் செலுத்துவது எது ?' எனறு கேட் டாய் அது பாதிககப்பட்ட ஆத்மனைத்தான்குறிககிறது. நான விடையும தநது விட்டேன். ஆனல் உன்னைப்பற்றி உனககு அவ்வளவாகத் தெரியாது. எனக்குத் தெரியும. நீ கேட்கும விதத்திலிருந்து பாதிக்கப்பட்ட ஆத்மனுககு அப்பாலும் அறியவிருமபுகிருய் என்று நான் அறிவேன். ஏன எனருல் நீ மோக்ஷம விரும்புகிறவன். ஆத்மஞானம் தான் பூரண திருப்தி தர முடியும். சிஷ்யன் கேட்டது

தெளிவான பாதிக்கப்படாத ஆத்மனைப் பற்றித்தான. குரு மேலும் சொலலுகிறா: கண என்ற கருவியைப் பாாகக இயககும சக்தி யே உயிரமையம். மையத தின மையம். நித்ய ஆனநத ஆத்மன் எனறும் சொல்லு கிறா

ஒரு கிராமவாசி முதன் முதலில் நகரத்திற்கு வந்து, "இநத மின்சாரா பல்பு எப்படி எரிகிறது ?" என்று கேட் கிறன் அவனுக்குத தெளிவாகச் சொல்ல வேண்டும் எனறு இரக்கமகொண்டவாகள 'ஸ்விட்ச' போட்டால் எரியும' எனறு சொலலி அதனுடன நிறுத்திவிட மாட் டாாசள. மின்சக்தி, பிலமெணட எனற மெல்லிய கம்பி எல்லாவற்றையும் பற்றி விவரித்துத திருப்தி ஏற்படுதது வார்கள அதேபோல சிஷ்யன அநதப பரம மெயப்பொ ருளின வெளித தெரியும தோறறததைப பறறிததான் கேட்டான் என்றலும, குருவுககுத் தெரியும் சிஷ்யன கேட்க விருமபும் கேளவி இதையும் விட ஆழமானது என்று. அவன் சுதத பரமாத்மனைப் பற் றிததான் அறிய விரும்புகிறன். அதனல்தான், "இது வரை நான சொனனதுதான நீ கேட்டது எனறு நினைத்து விடாதே. நான் பூராவாகச சொல்லிவிட விலலை," என்கிறா.

ஒளி, சூடு, காறறு என்ற தோறறங்கள் எலலாம் முதலில விளககபபடுகின்றன அதறகுப் பிறகு அவற் றின உதவியால அவற்றிறகுபினனல உளள அநதச சக்தி —கம்பியில் ஓடும் சக்தி—தெளிவாககப்படுகிறது. அதே போல குருவும கணணுக்குக் கண, காதுக்குக காது முதலி யவையானஅந்தச் சகதிதரும பொருளை விளக்குகினறா். பிறகு இநதப் பாதிப்புககு உட்பட்ட ஆதமனுககு அப் பால் மெயமைபபொருள இருக்கிறது அது இந்தப் பாதிப் புககுப் புறம்பானது. பாதிபபுககள மாறிக கொணடே இருககினறன. நீாபிடிகக ஏனம் வேண்டி யிருபபதுபோல காது, கண், புததி முதலியவைகள் அந்த 'சகதி'யின் இருப்பைக காட்டத தேவைதான. அந்தப் பொருளகள மூலம்தான் நாம அந்த "உயிாச் சக்தியை" அறியமுடியும. முதலில இவைகளில தோனறும் உண் மையின தோறறஙகளை அறிவோம் பிறகு அவற்றிற்கு அபபால லட்சியததுககே செனறு சுதத உண்மையை அடைவோம்.

"நீ அறிந்ததாக எண்ணினல், நீ அறிவது மிகவும் குறைவு," என்று எசசரிக்கப்படுகிறேம். ஏனென்றல

அதை அறிய முடியாது. ரிஷிகள்கூட அறிய முடியாது. அதுவே அறியும் தத்துவம், பிருமமன அல்லது ஆதமன, மற்ற ஒரு பொருளைப போலப பார்த்துக் கேட்டு அறியப்படும் பொருள அல்ல. நானும் நீங்களும் இநத ஒலி பரப்பிக கருவியைப பார்க்கலாம. ஏனெனில் அது நம்மை விட்டுத் தனித்த ஒனறு. நீஙகள உங்கள் கைகளையும விரல்களையும் பார்ககலாம, ஆனநதிக்கலாம், நேரம கிடைத்த போது ஏனெனில அவை பார்ககும கருவியான கணணுக்குப புறம்பானவை. ஆனால கணணே கண்ணைப பார்கக முடியாது. அதேபோல பார்தது அறிந்து உணரும தததுவமான ஆதமனைப பார்ப்பது, உணர்வது எபபடி?

பிறகு என்ன செய்வது? நம்முடைய அகங்காரதடதை ஒழித்து விட்டோமானால "நான்" எனகிற நிலை ஒழிந்து, ஆத்மன் மட்டும் அனுபவிப்பவனாக நிறபான். வெற்றி பெறற சாதனையின இறுதியில் "நான" இருககப் போவதில்லை, எப்படிப் பாாபபேன என்று சஙகடபபட. நாம் "மெய்ப்பொருளாகி" விடுவோம்.

ஆற்றில் ஸ்நானம் செய்யும் ஒருவன் நகை ஒன்றைத் தொலைத்துவிட்டுத் தேடுகிறான். கடைசியில அடைநதும் விடுகிறான. அப்பொழுது அநதக் கணததில் அவன் அடையும் ஆனநததைதை எபபடி எடுததுரைக்க முடியும்? அந்தக் கணத்தில் அவன நீருள இருபபான. பேசமுடியாது. இதே போல ஆதமனாக மாறும நிலையின தன்மையை அப்பொழுது பேசமுடியாது. தியான வழியில் அந்த நிலைககுப புகலாம. அந்த எலலைப் பேரின்ப நிலையில் "நீ, நான" எனறெலலாம கிடையாது. வேதாந்த தரிசிகள் இநத "முழுமை" நிலை கிடைககக் கூடிய ஒன்றே என்று உறுதி கூறுகினறனர.

ஒவ்வொரு நாளும நாம் உணர்வின் மூனறு நிலைக ளில் இருக்கிறோம். விழிபபு நிலையில காணப்படுவதெல லாம் கனவு நிலையில் மறுககபபடுகிறது. சாபபிட்டுப் படுத்தவன் பசிததததாகக் கனவுகாணலாம. விழிப்பு நிலை யில் சாப்பிட்ட உணவு அநதப் பசிக்கு உதவப போவ தில்லை. கனவில் பெரும விருந்து உண்டிருககலாம். அது விழிப்பு நிலையில் ஏறபடும பசிக்கு உதவாது. ஒரு நிலையில் உண்மை மற்றொன்றில அவ்வாறிராது. சுழுததி (ஆழப் பெருந் தூக்க) நிலையிலோ இநத இரணடு உலகங்களுமே (விழிப்புலகம, கனவுலகம) மறுக்கப்படுகின்றன.

இந்த மூன்றுக்கும் அப்பால் 'துரிய' நிலை என்று ரிஷிகள் கண்ட நான்காவது நிலை இருக்கிறது. தெய்வ உணர்வு நிலை அதுதான். பூரணத்வம் அடையும் அந்த நிலையில் நாம் மற்ற மூன்றும் நீண்ட பெரும் கனவே என்று காண்போம். சாதனைகள் எல்லாம் துயரிழைக்கும் கட்டுகளை அறுத்து நித்திய ஆனந்த நித்திய பூரண நிலையான அந்த நான்காம் நிலையை அடையச் செய்யும் முயற்சிகளே. நாம் இந்த உலகத்தை (ஜகம்) உண்மை என்று நம்பிவிட்டிருக்கிறபடியால், அந்த நான்காம் நிலையின் இன்பத்தையும் ஒளியையும் பெறுகிறோம்

உப்பால் ஆன ஒரு பொம்மையைச் சமுத்திரத்தில் அமுக்கி வெளியே எடுத்தால் ஒன்றும் வரப்போவதில்லை, கதை சொல்ல சமுத்திரத்திலிருந்து பிறந்த சமுத்திரமயமான உப்பு சமுத்திரமாக மாறிவிட்டது. ஏதோ சற்று நேரம் அதற்குத் தனித்தோற்றம் கிடைத்திருந்தது அது தன் உண்மை நிலையில் சென்று சற்று நேரம் தங்கப்பெற்றவுடன் சமுத்திரமாக மாறிவிட்டது. அதுதான் அதன் உண்மையுமாம்.

உண்மையைத் திரையிடும் அகங்கார உப்புப் பொம்மை உண்மையில் அமுங்கி நின்றால் தன் ஸ்வரூபத்தை அடையும். அதுபோல விக்ஷேபத்துக்கு இடமில்லாத துரிய நிலையில் உலகம் ஊடுருவும் அந்த ஒரு மெய்ப்பொருளுடன் ஒன்றி நிற்கும் இன்பம் பெறப்படுகிறது.

ஓம் என்ற சத்தம் அ, உ, ம, என்ற மூன்று ஒலிகளால் ஆனது. 'அ' வின் மேல் விழிப்பு நிலையும், 'உ' மேல் கனவு நிலையும், 'ம' மேல் ஆனந்தப் பெருந் தூக்க நிலையும் ஏற்றிவையுங்கள். 'ம' இன் நீட்டமான அந்த இனிய முனகல் துரிய நிலையைக் குறிக்கட்டும். ஒரு ஒழுக்கும் மற்றொரு ஒழுக்கும் இடையில் ஏற்படும் மௌன நிலையைத்தான் சாதகன் கவனத்தில் இருத்த வேண்டும். அந்த வழியில் சாதகன் மனது சுத்தமடைகிறது. திடத்தன்மையை அடைகிறது. அவன் அந்தப் பேரின்ப மோன நிலையில் தன்னை மறந்து முழுக்கக் கற்றுக்கொண்டு விட்டானானால், உயர்வற உயரும் உண்மையை அனுபவிக்கத் தொடங்குகிறான்.

இந்த நேரடி உணர்வுதான் சுத்த ஆத்மன் அல்லது மெய்ப்பொருளைப் பற்றிய பாதிப்பற்ற ஞானத்தைத்

தரமுடியும். இந்த ஆத்ம அனுபவம்தான் வாழ்க்கையின் தெய்வக் குறிக்கோளைப் பெறுவதாகும்.

" கனவாம் கானல்நீர் "

ஒரு ஒளிக்கற்றை எதிரொளிக்கும் ஒரு தளத்தில் பட்டு வெளியேறி ஒரு ஒளிப்பிரதேசத்தை ஏற்படுத்தும் சம உதாரணத்தைக்கொண்டு நமமுள் ஒளிதரும் தத்துவதைப் பற்றி பேசினோம். புத்திவீசும் பிரதிபிம்பத்தை வேதாந்த சாஸ்திரம் சிதாபாசம் என்று சொல்லுகிறது. 'சித்து' ஒளிதரும் பொருள். 'ஆபாசம்' அதன் பிரதிபிம்பம். தேங்கும் நீர்குட்டையில் சூரியன் பிரதிபிம்பம் பெறுகிறது. அதேபோல உண்மைப் பொருளின் ஒளி மனதில் படும்பொழுது மனக் குளத்தில் இந்தச் 'சிதாபாசம்' ஏற்படுகிறது. மன அரங்கில் பொய் ஒளி காட்டும் இந்த 'சிதாபாசம்' தான் 'நான்' என்கிற ஜீவன். இந்தத் 'நான்' என்ற தத்துவத்தை வேதாந்தத்தில், தொடர்ந்து பயிற்சி மூலம் அழிப்பதுதான் மெய்மையை அனுபவிப்பதாகும். சுருதி இந்த உறுதிமொழியைத் தருகிறபடியால் நாம் இந்த 'நான்' என்ற பொருளின் தன்மைகளை நன்கு தெரிந்து கொள்வது உண்மையை நோக்கிச் செல்லும் நம யாத்திரைக்குச் சிறந்த தகுதியை நல்கும்.

அந்தப் பரமஞானப்பொருள், ஆத்ம சைதன்யம், நித்திய சுயம் ஜோதி என்றும் மனித இதயத்தில் மையத்தின் மையத்தில் எப்பொழுதும் பிரகாசமாய் எரிந்துகொண்டிருக்கிறது அது நம புத்தித் தளத்தில் பட்டு எதிரொளி தருகிறது. நாம இன்று இந்திரிய சுகத்துக்கான பொருள்களைத் தேடித் திரியும் நிலையிலிருக்கிறோம். அதனால் நம் புத்தி என்றும் புற உலகத்தை நோக்கியே திரும்பியிருக்கிறது. அதனால் பிரதிபலித்த ஒளி அதாவது அறிவு, படம் எடுத்த பாமபுபோல் ஒரு புறம் சாய்ந்து இருக்கிறது. ஆகவே பிரதிபலித்த ஒளிப் பிரதேசம் மூலப்பரம ஒளிக்கு முன்புறத்திலேயே விழுந்து விடுகிறது.

இளம் குழந்தைகள் தங்கள் நிழலைக் கண்டே பயப்படுகின்றனபோல் நாமும் இந்தப் பிரதிபலித்த ஒளியை உண்மையென்று ஏமாந்து பல மயக்கங்களுக்கு உள்ளாகிறோம். எபபொழுதுமே பிரதிபலிப்பின் தரம், பிரதிபலிப்புத் தளத்தின நிலை, தன்மை ஆகியவற்றையே

பொறுத்திருக்கும். மனம் - புத்தி சலனமடையும்போது சிதபாச மும் நடுங்கி ஆட்டம் கொள்கிறது பொறாமை கோபம் பேராசை, சிற்றின்ப ஆசைகள் இவைகளின் புகை மண்டிபுத்தி மங்குகிறபோது அந்தத் 'தான்' என்ற மையமும் அதற்கேற்ப மாறுதலை அடைகிறது. அதனால் தான் ஒன்றும் தெரியாதவன்போல இருக்கும் ஒரு நல்ல வன்கூடத் திடீரென்று கோபம் அலைந்து ஆசைகொண்ட நிலையில் திடீர் என்று பிசாசாக மாறுவதைப் பார்க்கிறோம் டாக்டர் ஜெகில் என்பவன் உள்ளே டாக்டர் ஹைடும் இருக்கிறான்

புத்தி புறத்தே நோக்கியிருக்கும் வரை அதை அவ்வாறு நம் உலக ஆசைகள் திருப்பி நிறுத்தி இருக்கும் வரை நம்முடைய 'நான்' என்ற மையத்தைச் சுற்றிய மயக்கமும் அதனால் ஏற்படும் நான் வேறு என்ற எண்ணமும் இருந்துகொண்டேதான் இருக்கும் 'தனி' என்ற எண்ணத்தின் பயனாகவே துக்கத் தொடர்கள் நெருக்கி நாம் நம் கட்டுகளின் பிடியில் உழலகிறோம். முமுக்ஷு இந்தக் கட்டுகளை அறுத்து என்றும் அமைதியிலிருக்கும் தளத்துக்குச் செல்ல முயலுகிறான் அதன் முயலுவது துக்க நிவிருத்திக்கும், சுகப்பிராபதிக்குமே.

வேதாந்தம் பேசும் பிருமம் வித்தை, போ உரு ல்லாத ஆனாலும் சுருக எனறு உணருமபடியாயுள்ள ஆதம அசாந்திக்கு வழியை மனம புத்தியின் சில கட்டுப்பாடுகளைச் சொல்லி ஏற்படுத்துகிறது புறம் நோக்கும் நம் தன்மைதான் 'நான்' என்ற நம் உணர்வுக்கும் காரணம். அந்த 'நானை' ஒழித்துவிட்டால நாம் பூரணத்துவத்தை அடைகிறோம் தன்னடக்கம் பயின்று நம்முடைய புலன்களை ஓரளவு அடக்கிவிட்டால பிறகு நாம் நல்ல வாழ்க்கையின் நிலையை அடைந்து நீண்டு ஆழ்ந்த தியானத்தின்மூலம் ஆதம விசாரணை தொடங்குகிறோம். கொஞ்சமும் நிறுத்தாமல தொடர்ந்து வேதாந்த சாதனை செய்தால நம்முடைய புறத்தே நோக்கும் தன்மை சிறுகச் சிறுக நின்றுவிடும்,

புத்தி பாம்பின் படம் போல எழும்போது "நான்" என்று ஆதமப் பெருமையை பிரதிபலிக்கிறது பார: சாதனையின் மூலம் சாதகன் புத்தியின் வெளிநோக்கும் தன்மையைக் குறைக்கக் குறைக்க பிரதிபலித்த ஒளியும் தன் மூல ஒளியிடம் நெருங்குகிறது எல்லையில் புத்தி முற்றிலும் உள்நோக்கி விட்டால பிரதிபலித்த ஒளி அந்த

நித்திய ஒளிப் பிழம்புடன் சேர்ந்து விடுகிறது. "நான்" என்ற தனிப் பொருள் அழிந்து நாம நம் உண்மைத் தன்மையின தனி ஒரு ஞானததில் உயர்வற உயர்நத அனுபவத்தை மேற்கொணடு விடுகிறோம். அந்ததெய்வ நிலை எய்துவதே நம் வாழவின் முழுப்பயனும். அதுவே வெற்றி.

அந்த நித்தியத் தன்மையை அடைவது எனபது ஒரு பொருளைப்பற்றிய பெறும அறிவைப் போன்றது அல்ல. அது நேரடியாக உணரபபட வேண்டிய நிலையாம். தாய், தனயன் தங்கையிடம் கொண்ட அனபையே நாம் வார்த்தைகள மூலம வெளியிட முடியவிலலையே! இந்தப் பரம அனுபவத்தை எவவிதம் வார்த்தைகளால சொல்லிவிட முடியும. லட்டைப் பற்றி பேசினல் எவவளவு உனனல பேசிவிட முடியும்? அதன் இனிமையின ஆழத்தைப பேசும் விஷயததில நாம் தோறறேயாக வேணடும். அதனலதான சிஷயன் இப்படிப் பேசுகிருன.

நாஹம் மன்யே ஸுவேதேதி நோ ந வேதேதி வேத ச
யோ நஸ தத வேத தததவேதநோ ந வேதேதி வேத ச

நான் நன்கு சிந்திககவில்லை. எனக்குத் தெரியாதென்பதும் அலல. எனககுத் தெரியவும் தெரியும். அது அறியப்படாதது என்றும எவன் கிரஹிததுக் கொள்கிருனே அவனே அதைக கிரஹித்துக கொணடவன

அறிகினறவனலலாத ஒரு பொருளல்ல ஆத்மா. ஆகவே அறிவதெல்லாம புத்தி, மனம இவற்றின செயல்களாகுமே தவிர தானுக ஏறபடும உணர்வான அந்தத தெயவீக அறிவின் மூலம பெறும நேரடி அனுபவமாக முடியாது என்று குரு எச்சரிததார். அதற்குச சிஷ்யன சொல்லும் பதில் மிகவும் தெளிவும் பயனும உறச செயவதாக இருக்கிறது.

சிஷ்யன் தன் சிறந்த அனுபவங்களை ஒருவாறு ஞாபகம் வைத்துக் கொண்டிருககிருன. அதனல அதைப்பற்றிய அறிவு மேஜை, நாற்காலி முதலிய பொருள்களைப் பற்றி நாம கொண்டிருக்கும அறிவைப போனறதலல என்று உணருகிருன். உனககும் உன்னைவிட்டுத் தனித்திருக்கும ஒரு பொருளைப் பற்றி நீ நன்ருக அறியலாம் அலலது அவ்வளவு நன்ருக அறியாமலிருககலாம. ஆனல் ஆத்ம போதம ஒருவன் தன் மனைவி மகள இவர்களைப் பற்றிக் கொண்டுள்ள அறிவைப் போன்றதிலலை. நான்

என்னைப் பற்றி உலகிலுள்ள எந்தப பொருளையும்விட எவ்வளவோ அதிகமாக அறிவேன். ஆத்ம அறிவு பல்லா யிரக்கணக்கான மடங்கு தன்னைப்பற்றிய உணர்வு கொண்டது. ஆகவே ஆத்ம உணர்வைப் பற்றிய அறிவு சொற்கள் பேசமுடியாத ஆழம் கொண்டது

சொற்களும அனுபவங்களின் உதவியின் மூலம்தான் கருத்தைத் தெளிவாக்குகின்றன. எனவே உண்மைப் பொருளைப் பற்றி வாணிககுமபொழுது மொழி (Language) தோற்க வேண்டியதுதான். ஏனென்றால் அந்த அனுபவத்தைப் புரியவைக்கக் கூடிய அனுபவம் நமக்கு ஏற்பட்டிருக்க முடியாது. சாதகன் தனது யோக சாதனையின மூலம் மனத்தையே அழித்த நிலையில ஏற படும் உணர்வு அது மனமும புத்தியும் புழங்கும் இடத்தில் தான் மொழி தன் வேலையைச் செய்ய முடியும்.

அனுபவம் நம்முள் மிகவும் நெருங்கியதாக ஆக ஆக வார்த்தைகள் நுணமை (Subtler) அடைகின்றன. வாக்கிய அமைப்பும தொள தொளக்கிறது. அதனால் தான் இந்த மந்திரத்தில் ஒன்றுக் கொன்று முரண்பாடு போல் தோன்றும் கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. உண்மையில் அவை உணர்ச்சியின் வேகத்தையே குறிக்கின்றன, சிஷ்யன் உணமையை நேரடியாக உணர்ந்திருக்கிறான். அதையும் புற உலகின பொருள் பற்றிய அறிவையும் ஒத்திட்டு, ‘நான் நன்கு அறிந்துவிட்டேன் என்று நினைக்கவில்லை.’ என்கிறான் உண்மையைப் பற்றிய அவன அறிவு முழுதாக. இருந்தாலும் ஏதோ மேஜை, நாற்காலி இவற்றைபபற்றிய அறிவு போன்றதல்ல அது என்று உணர்கிறான் புறப் பொருள்களைப் பற்றிய அறிவு, புலனகளில் அவைகளால் ஏற்படும் சுவடுகள் அவற்றை மனது ஏற்கும் முறை இவற்றின் மூலமதான் பெறப் படுகிறது. சிஷ்யன் ஆத்ம அறிவைப் பெற்று விட்டான என்றாலும ஆத்மா தன்னை விட்டுத் தனித்த ஒரு பொருளல்ல ஆத்மா. தன உண்மைத்தன்மையாகவே எல்லா ஆசாரியர்களாலும் உணரபபட்டு வருகிறது.

சிஷ்யன் ஆத்மாவைக் கண்டு பிடித்தது அதிசயம் தான். அதைவிட அதிசயமாயிருக்கிறது கண்டு பிடித்தற கப்புறம ஏற்பட்ட மனோநிலை. அவன் தானே “ஞானம்” என்று உணர்ந்து கொண்டு விட்டான். ஆனால் அதில் கஷ்டம் என்னவென்றால் அவன உணர்வு “பற்றிய” அறிவல்ல-அதேயான அறிவாகும். அதாவது அவன்

தன் எண்ணங்களை உணர்வது போன்ற முறையில் அந்தப் பொருளை உணரவில்லை. ஆனால் அவன ஞானமாகவே மாறி நின்றான். மேற்கத்திய வேதாந்திகளுக்கு இந்த நிலை தெரியாது. ஆகவே அவர்கள சிஷ்யனின் இந்த மனோநிலையைப் புரிந்து மதிக்க முடிகிறதில்லை. அதனால்தான், அனுதாப உணர்ச்சியில்லாமல் படிக்கிற வெளி நாட்டுப பேர்வழிகளுக்கு உபநிஷத் மந்திரங்கள 'தன் பிள்ளைப் பருவத்தில மனித இனம உளறியதே? அதைவிட இவை ஒன்றும் புரிந்து விடுவனவாக இல்லை!' என்று படுகிறது. நவீனப் படிப்புப படித்த ஹிந்துவுக்குமே இது மனக்கோளாறு கொண்ட இளைஞன் பித்தம் தலைக்கேறிப் பிதற்றியதாகவே தென்படுகிறது.

சிஷ்யன், தன் அனுபவம புதிதான ஒனறு, அதற்கு ஒப்ப ஒரு அனுபவமும இல்லை என்று ஒத்துக் கொள்ளுகிறான். இருந்தாலும அந்த அனுபவமோ மிகவும நெருங்கியதாகவும பூரணமாகவும் இருந்திருக்கிறது அழியும் அவன் தன்னுள்ளே உள்ள அழியாத தனனைக் கண்டு பிடித்து விட்டான். அதை அவன 'அறிந்ததாகவும் அறியாத பொருளாகவும் எவன் அதை அறிகிறானோ அவனே அதைப் புரிந்து கொண்டவன்' என்றுதான் அவனால சொல்ல முடிகிறது.

உயர உயர உயரும் ஆத்ம அனுபவங்களைப் பற்றி அறிய ஆகமம (ஆசாரியர்கள் தந்த வழியறிவு) தான் பிரமாணமாகும். சுருதிகளே அப்படித்தான பேசுகின்றன. கூற்றுகளை ஆசாரியாகள வாயிலாகத் தருகின்றன. இந்த உபநிஷத்திலும சிஷ்யன தன் உணர்வு மூலம் பெற்ற அனுபவத்தை விளக்க அதே முறையைத்தான் கையாளுகிறான். "யார் .. ..அதை அறிந்த பொருள் அறியாத பொருள் என்று புரிந்து கொள்கிறானோ அவனே அதை அறிந்தவன் .. ." என்கிறான.

யஸ்யா மதம் தஸ்ய மதம் மதம யஸ்ய ந வேத ஸ:
அவிஞ்ஞாதம விஜாநதாம் விஞ்ஞாத மவிஜானதாம

அதைத் தெரிந்து கொள்ளாதவன் புரிந்து கொண்டுவிட்டான்.

தெரிந்து கொணடு விட்டேன் என்று உணர்பவன் அதை அறிந்து கொள்ளவில்லை. உணமை அறிவு பெற்றவர்களுக்கு அது தெரியாத ஒன்று. அறியாதவர்கள் புரிந்து கொண்டது அது.

இது சுருதி வாக்கியம். தன் சிஷ்யர்கள் நலனுக்காக அவர் சொன்னது இந்த மந்திரத்தின் இரண்டாவது வரியில் எல்லையற்ற பரம் பொருளைப் பற்றிச் சொல்ல முடிந்ததை எல்லாம் அவர் சொல்லி விடுகிறார். நாம் ஒன்றை அறிந்தோம் என்றால் அது அறியும் கருவிகள் உதவியால் பெற்ற அறிவே. அவை குறையுடையவை முற்றுப் பொருளை அறிவதில் தோற்று நிற்க வேண்டியது தான். சொற்கள் கூறக்கூடிய பொருள் எல்லாம் நம் இந்திரியங்களால் முன்பு ஏற்று அறியப் பட்டவையே. எனவே நாம் முன்னமே சொன்னபடி பேசப்பட்ட உண்மைப் பொருளின் மாற்றமேயாகும் (Condition or limited Truth.)

உண்மை உணர்வுத் தளத்துக்கு சுய உணர்வு ஒன்று தான் உயர்ந்து செல்லமுடியும் சொல்லால் பேசப்பட்ட உண்மை (Truth Defiled) யாகத்தான் இருக்க முடியும் அந்தப் பரம் மெய்ம்மைப் பொருள் அனுபவ பூர்வமாகக் கிடைக்கும்போது அது நம்முடைய தன்மையாகவே அறியப்படும் இருட்டறையிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்ட பேனு சூரியனால் ஒளி பெறுகிறது என்று பேசலாம். ஆனால் சூரியனிலேயே உள்ள ஒரு பொருள் ஒளி பெறுகிறது என்று பேசுவது சரியாகாது. ஏனெனில் சூரியன் தொழிலே விளக்கம் பெறச்செய்வதுதான். ஒளிரும் தொழில் இருள் இருந்தால்தான் நடைபெறும் அந்தப் பரம ஞானமே ஆத்மாவாம். ஆகவே அதைத் தவிர வேறு ஒன்றும் அறிமுடியாது சூரியன் ஒளியா தலால் அது தன்னைத்தானே ஒளிரச் செய்வதில்லை. (ஆத்மா பரமாத்மாவே ஆகவே அதை உணர்த்தாது — அதாகவே மாறி நிற்கும்)

அகந்தைக் கொல்லு

சில வருஷங்களுக்கு முன்பு பம்பாயில் ஒரு மார்வாரி வியாபாரி ஆறு மாதம் தூக்கமில்லாமல் இரவுகளைக் கழிக்க நேரிட்டது. காரணம் ஒரு மூட்டைப் பூச்சி அவன் காது வழியாக மூளைக்குள்ளே புகுந்து விட்டது! அது உள்ளே சென்று பதினைந்து நிமிஷங்களுக்கு ஒரு முறை மூளையைத் தின்ன ஆரம்பித்தது. வியாபாரி உலக முழுவதும் சுற்றிப் பல டாக்டர்களையும் பார்த்து விட்டார். கடைசியில் அந்த அருமை வியாதியை ஒழிக்க வழி இல்லாமலேயே திரும்பிவர நேர்ந்து விட்டது. கடைசியில்

அந்த வியாபாரி லக்னௌவிலுள்ள ஒரு டாக்டரிடம் சென்றார் டாக்டர் பரிசோதித்தார் வெளியில் ஒன்றும் சொல்லாமல் ஏதோ யோசிக்கலானார். நாட்கள் ஆயின. வியாபாரியின் தொல்லை அவர் நரம்புகளைத் தொளைத்துக் கொண்டிருந்தது. ஒருநாள் டாக்டர் அவனிடம் வந்து, "ஓர் ஆளை மேற்கத்திய பிரதேசத்திற்கு அனுப்புங்கள். செலவினைச் சங்கத்தினருக்கு நான் சிபாரிசு தருகிறேன். ஜெர்மானியர் புதிதாகத் தயாரித்த மருந்தை வாங்கி வந்தால் உங்கள் வியாதி குணமாகும். என்ன அனுப்ப முடியுமா?" என்று கேட்டார்.

வியாபாரிக்கு என்ன? தொல்லை தொலைவதானால் எந்தச் செலவும் குறைவுதான்! மீண்டும் மாதங்கள் கழிந்தன. வியாபாரி நரகவேதனையில் நைந்து வந்தான். ஒருநாள் டாக்டர் ஆனந்தம் பொங்க அவனிடம் வந்து, "ஓ! மருந்து வந்து விட்டது. இனி நிச்சயம் அதிசயம் நிகழ்ந்து விடும். மூன்று குழாய்களில் மருந்து இருக்கின்றன. ஒன்றிலுள்ள மருந்தினால் மூட்டைப் பூச்சியை மயக்கமடையச் செய்யலாம். ஒரு வாரம் சென்று மற்றொரு மருந்தை ஊசி மூலம் உள்ளே செலுத்தினால் அது இறந்து விடும். மூன்றாவது மருந்து செலுத்தினால் செத்த பூச்சி காது மூலம் வெளியில் வந்து விடும்," என்றார். வியாபாரி மனம் தெளிந்தது. நம்பிக்கை பிறந்தது. எவ்வளவோ செலவழித்து அந்த அருமையான ஜெர்மன் மருந்து வந்திருக்கிறது!

மறுநாள் டாக்டர் அரைடஜன் கெட்டிக்காரர்களையும் உடன் வைத்துக் கொண்டு வியாதியஸ்தனை ஆபரேஷன் ரூமுக்கு அழைத்துச் சென்றார் மூன்றில் முதல் இஞ்சக்ஷனைப் போட்டார் டாக்டர் சொல்லியிருந்தபடி மூட்டைப்பூச்சி மூளைக்குள்ளேயே மயங்கி விட்டது பல மாதங்களுக்குப் பிறகு வியாதியஸ்தன் முதல் முறையாக நன்றாகத் தூங்கினான் அந்த இரவு. ஆனால் மூன்று நாட்களுக்குப்பிறகு மறுபடியும் மூட்டைப்பூச்சி நிமிண்ட ஆரம்பித்தது. மூளையைச் சுவைக்கத் தொடங்கிற்று சை! துளிக்கூட இரக்கமில்லாத மூட்டை அது. ஒரு வாரம் சென்று மீண்டும் ஆபரேஷன் அறையில் இரண்டாவது ஊசி மருந்து செலுத்தப் பட்டது. வியாபாரிக்கு மூட்டை இறந்து விட்டதாகத் தோன்றி விட்டது. பிறகு அந்த வாரம் பூராவும் அவன் மூளையில் இருந்த எதிரியால் அவனுக்கு ஒரு தொல்லையும் ஏற்படவில்லை. கடைசி ஊசி போடும் தினத்தன்று மருத்துவக் கலலூரி

மாணவர்களும் அழைக்கப்பட்டனர். இந்தப் புதுமாதிரியான ஊசி போடும் செயலுக்கு ஏற்ப எல்லா ஏற்பாடுகளும் விரிவாகச் செய்யப்பட்டன. மிகவும் விலையுயர்ந்த அந்த ஜெர்மன் மருந்து மிகவும் வெற்றிகரமாக உள்ளே ஏற்றப்பட்டது. அரை மணிக்குப் பிறகு வியாதிக்காரன் காது மிகவும் கவனிப்புடன் கழுவப்பட்டது. ஆகா! அது என்ன! ஆம் அந்தக் கிண்ணத்தில் நீரின்மேல்மிதப்பது செத்த மூட்டைபூச்சிதான்! டாக்டர்அதைக்கிடுக்கியால் தூக்கிக் காட்டவே வியாபாரி மனம் திருப்தி பெற்றான். வியாதியஸ்தன் பிறகு வெளியேறப்பட்டான். டாக்டர் உடன் சென்று அவனை வெளியேற்றி விட்டு மீண்டும் கதவை நன்கு தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்தார். மாணவர்கள் விழித்த கண்ணுடன் வியப்புப் பொங்க நின்று கொண்டிருந்தனர். 'பிரமாத இஞ்செக்ஷன்! பூ! இதற்காக நம்மை ஏன்வரவழைத்தார் இவர்?' அவர் சொன்னார் "பாருங்கள் உலகம் எங்கும் மருந்து காணாத ஒரு கஷ்டமான வியாதி தீர்க்கப்பட்டதை நீங்கள் பார்த்தீர்கள் ஜெர்மன் மருந்து என்று நான் சொன்னது சீசாக்களில் அடைக்கப் பட்டிருந்த சுத்த ஜலமே! அதை நான் அந்தக் கோடியிலுள்ள மருந்துக் கடைக்காரனிடம்தான் வாங்கினேன். ஆனால் இந்த வேலையில் மிகவும் கஷ்டமான வேலை, நேற்று இரவு ஒரு கொட்டை மூட்டைப் பூச்சியைத் தேடி பிடித்தது தான்! அது கிடைத்தவுடன் கைக்குட்டையில் வைத்து அமுக்கிப் பிடித்து அதைக் காதுக்குள் விட்டு நீருடன் வரவழைக்க வேண்டியிருந்தது. ஆகவே இன்று வெளி வந்த செத்த மூட்டைப்பூச்சி நேற்று நான் தேடி இங்கே பிடித்ததுதான். இது நியாயமல்ல என்று சொல்லலாம். இருந்தாலும் இப்படி உண்மை தெரியாத வியாதிக்காரனுக்குப் பொய் சக்தி ஏற்றப்பட்ட ஏமாற்ற மருந்தால் தான் முடியும்," என்று அவர் விவரித்தார்.

ஆன்மீகத் துறையில் பார்த்தால் நாமும் இந்த வியாபாரியின் மயக்கத்தில்தான் இருக்கிறோம். 'கற்பனை மூட்டைப் பூச்சி' நம்மை வருத்துகிறது. இந்த 'அக'த்துடன் ஒன்றி 'நாம்' 'நமது' என்று 'தப்பான கருத்துக்களை' ஏற்றுக் கொண்டு அதற்குப் பயனான துயர்கள், சங்கடங்கள், குற்றம் குறைகள், கட்டுப்பாடுகள் முதலியவைகளில் உழலுகிறோம். நமக்கு ஒரு வல்லமையுள்ள டாக்டர் வந்து இந்த அகங்காரத்தைக் கொல்ல வேண்டும். ஆத்ம ஞானம் என்பதுதான் அதற்கு மருந்து. அதுவும்

வேறு ஒன்றுமில்லை. காரியம் ஆனவுடன் அதுதான் நம்முடைய "உண்மைத் தன்மை" என்று புரிந்து விடும்.

உண்மைப் பொருள் சக்தி ஞான ஜோதி சொரூபத்தில் என்றும் ஜோதியாய் விளங்குகிறது. அதுதான் வெளியில் நடக்கும் எல்லாச் செயல்கள் உள்ளே மனதில் ஏற்படும் நிகழ்ச்சி எல்லாவற்றையும் தலைமையாயிருந்து ஆளுகிறது. இதுதான் நம்முடைய புத்தியில் பிரதிபலித்து நமக்கு 'அந்த' மூட்டைப்பூச்சியாக மாறிவிடுகிறது இந்த ஒப்புமையை இங்கே நிறுத்தியது நீங்கள் நன்கு சிந்திக்க வேண்டும் என்பதற்காக.

மெய்ம்மைப்பொருள் கிட்டியவுடன் மெய்ப்பொருள் மறைகிறது பக்தன் பக்தி முதிர்ச்சியில் அன்பின் காரணமாகத் தன்னை இதயேசுவரனுடைய பிரபாவத்தில் கரைத்து விட்டவுடன் அப்பொழுது ஏற்படும் பராபக்தி தான் அந்தப் பரம பொருள் உணர்வாகும். சாதனையின் எல்லையில் எல்லா சாதகர்களும் அடையும் பயன் ஒன்றே —வழி ஏதாயிருந்தாலும் சரி. உண்மைதான் நடுவில் உள்ள கோயில் எல்லா இடத்திலுமிருந்து வருபவர்கள் அங்கேதான் வந்து சேருவார்கள், அந்த அனுபவம் ஏற்படும் சமயத்தில் அனுபவம் ஒன்று தான் இருக்குமே தவிர அனுபவிப்பவன் என்று தனியாக ஒன்றும் இருக்காது.

மத்வ ராமானுஜ சம்பிரதாயங்களில் உள்ள வைஷ்ணவர்கள் ஈசுவர பிரஸதி ஏற்பட்டும்கூட ஜீவனும் ஈசுவரனும் (ஜீவாத்மா பரமாத்மா இரண்டுமே) என்றுமே தனித்திருந்து விடும் என்று நம்புகிறார்கள். ஆனால் அத்வைதியான வேதாந்திக்கு ஒரே அகண்ட அனுபவம்தான் உண்டு. அதை அவன் ஆன்மீகப்பயிற்சியால் அடையும் பூரணத்தின் எல்லையில் அடைகிறான். துவைதிகள், 'நாம் நாமேயாகி மாறி நின்றால் அந்த உத்தமமான ஆனந்த உணர்ச்சியை நுகர்வது யார்?" என்று குறைந்து கொள்கிறார்கள். அவர்கள் தாங்கள் நுகரத் தங்கவேண்டும் என்று சங்கடப்படுகிறார்கள். வேதாந்தியோ, தியாகம், ஆசை நீங்கிய நிலை, சிந்தனையின் பயன் இவற்றின் காரணமாகத் தனித்து நின்றறியும் இன்பத்தை அர்த்தமற்றது என்று கண்டுகொண்டு விட்டான். சுருதிகள் எல்லாம் ஒருமுகமாக அறிபவன் அனுபவிப்பவன் தவிர மற்றதெல்லாம் பொய் என்றும் அகண்டாகாரமான அமைதி ஜீவன் ஆத்மாவுடன் இணைவதில்தான் இருக்கிறதென்றும் கூறுகின்றன. அது

தெரிந்தவற்றிற்கு மட்டும் அல்ல, தெரியாதவற்றிற்கும் அப்பால இருககிறது என்று சுருதி கூறுவது தானகவே தெளிவாகிறது.

கண்ணுடியில்பிரதிபலிக்கும் ஒளியின்உதாரணத்தை மீணடும் எடுத்துக்கொண்டு ஜீவன் அதற்கு ஆதாரமான பொருளுடன் இணைவதைப் பார்க்கலாம். ஒரு முகம் பார்க்கும் கண்ணுடிககெதிரே மிகவும் வலுப பொருந்திய பிரகாசமான மின வளை விளக்கை (Arc light)ப் பொருத்தியிருப்பதாக எண்ணிக்கொள்வோம். பிரதிபிமபம ஏறபடுவதற்கு ஒரு விதி உண்டு. கண்ணுடிக்கெதிரே எவவளவு தூரத்தில் பொருள இருக்கிறதோ அவவளவு தூரம பின்னுடிதான அதன பிரதிபம்பம் ஏறபடும். மின் வளை விளககு கண்ணுடிககு முன்னல் மூன்று அங்குலததில் இருப்பதாகஇருநதால் அதனபிரதிபிமபம மூனறங்குலம பினனுல் ஏறபடும. அந்தப் பரம ஞானம் அதன் ஒளி வீசிககொணடு கணணுடியான நம் புததிமுன இருககிறது. ஒரு ஆனமீக சாதகன் நல் வாழ்வு வாழகிறுன. மிகச் சிறந்த பணபுகளுடன் உயாந்த மதிபபுகள அறிநது அதன்படி தன வாழவை உயர்த்திக்கொண்ட காரணததால் புத்தி உள்நோக்கி விடுகிறது. அகஙகாரம் (Ego) (ஒளியின் பிரதிபிம்பப் பிரதேசம) அதன் மூலப் பொருளுடன் சேர்ந்துவிடுகிறது. பகதன பணிவுடையவனுய் சுயநலம் விட்டுத் தெய்வத் தன்மையை அடைந்துவிடுகிறுன். இருந்தும் இந்த நிலையிலும்கூட அவன் உணமையாயிருககும் தன் ஆன்ம அனுபவத்தைப் பெறுகிறதில்லை.

ஆன்மீக ஞான முன்னேற்றத்தின் அடுத்த படி அப்யாசம. தியானத்தின் தொடர்ந்த பயிற்சி காரணமாக ஒப்புப பொருள் உதாரணததில் பேசினேமானுல பிரதிபிமபம் ஏற்படுத்தும கண்ணுடிப் பொருளான புத்தி ஒளிப் பொருளான ஆத்மாவின அருகே நெருங்கி வருகிறது. கடைசியில் கண்ணுடியும ஒளியும் நெருங்கி இணைந்து ஒன்ருகிவிடுகிறது.

அந்த மின் வளை விளக்கு கண்ணுடியுடன் பொருநதிவிட்டால என்ன எதிர்பார்க்கலாம்? கண்ணுடியின் கனம் காரணமாக பிரதிபிம்பம் அப்பொழுதும் கொஞ்சம் இடைவெளி விட்டுத் தனியாகக் காணப்படலாம. ஆனுல சூட்டின் காரணமாக ரசம் உருகிப் பிரதிபிம்பம ஏற்படுவதே நின்றுவிடும். பிரதிபிம்பம் எங்கே

போயிருக்க முடியும்? சாஸ்திரங்கள்—"அது எங்கும் போக இயலாது—பிம்பத்துடன சேர்ந்துவிட்டது!" என்று கூறுகின்றன.

தொடர்ந்து தியானப் பயிற்சி செய்வதனால் புத்தி ஆத்மாவிடம் நெருங்கிச் செல்லுகிறது. கடைசியில ஆத்ம பரம உண்மையின் உணர்வுச் சூட்டின் காரண மாக அகங்காரம் தரும் பொய் மதிப்புக்கள் மறைய அது எலலையற்ற இன்பக கடலில் ஆழ்ந்துவிடுகிறது. அதுவே நம உண்மைத் தன்மை வெளியாகும் இடமாம். இதுதான் சமாதி அனுபவம். ஆத்மாவை 'சுய உணாவு கள்' மூலம் பார்த்து அதனுடன ஒன்றாக நின்ற பிறகு அந்தத் தெய்வ மனிதன் நிலை அவனைக் காட்டிலும் தனிதது ஒன்று இருக்கிறது என்றில்லாமல் அவனே உணமையாகி நிற்கிறான். சுருதிகள எல்லாம் இதைத் தான் வலியுறுத்துகின்றன. ஏன் ஹிந்து மதத்தில் மட்டுமேயனறி உலகத்தின மற்ற எந்தச் சிறந்த மதத திலும் உளள ஆசிரியர்கள் இதைத்தான் இனறும் வலி யுறுத்துகிறார்கள். இந்தச் சாதனை, வாழ்க்கையின் இந்தப பிரயாண முடிவு எலலோரும பெறககூடிய ஒனறே.

இந்த அனுபவம பெற்றவன் கேனோபநிஷத்தில் வரும சிஷ்யன. அந்த அனுபவம சூட்சுமமானது. ஆனா லும மிகவும் நிறைநதது. அதனாலதான் அந்தச் சிஷ்யன அப்படிப் பேசுகிறான, "அதைப் புரிநது கொள்ளாதவன் அறிகிறான். அறியாதவன் புரிந்து கொளகிறான்!" என்று வார்த்தைகள பித்துககொண்ட பிதற்றல் போனறல லவா இருககின்றன. கஷ்டம் என்ன? அநத உணாசசி நிலையில அறிய யாா 'நான்' இருக்கிறது? 'நான்' என்று வநத நேரத்தில்தான் அந்த உணர்ச்சியினபப் பெரும் நிலை போய் விடுகிறதே!

ஒரு தூணை (Post) ஒரே சமயத்தில் தூணாகவும் பேயாகவும (Ghost) காணமுடியாது. கயிறு எனறு புரிந்த அதே நிமிஷம் பாம்பு மறைந்து விடும். 'அகம்' இருந்தால் ஈசுவரன் இல்லை. வேதாந்த அனுபவம் ஹிந்துக்களுக்குமட்டும் தனி உரிமைப் பொருளலல. சீன வேதாந்தியான யஸ்சியாஷிஹ் என்பவா பாட்டின் பொருள் கேளுங்கள்.

"நீ தேடும்போது தான் அதை இழக்கிறாய்.

அதை நீ பிடிக்கவும் முடியாது; விடவும் முடியாது.

நீ இரண்டையும் செய்ய முடியாதிருக்கும்போது
அது தன் வழி தானே செல்லுகிறது.''
''நீ மௌனவாயிரு;
அது பேசுகிறது.
நீ பேசினுல் அது மௌனமாயிருக்கிறது.''

பக்தி, ஞானம், கர்மம், ஹடயோகம் எந்த யோக மாயிருந்தாலும் சரி,எல்லாம் அந்தப் பூரணத்துவத்தை அடைய ஏற்பட்ட வழிகளேதான். 'அகம்' என்ற உன் சத்ருவை ஒழித்தாக வேண்டும் ''அகத்தைக கொல்; தெயவ வாழவு பெற உயிரைவிடு!'' ஆனந்த குடீரத் தின் முனிவர் வாககு இது. இதுதான் ஆத்ம விடுதலைக்கு வழி. இதைக் கேட்டுக கொள். கெட்டிக்காரத்தனமாய் நட. உண்மையான மாருத பக்தி,அன்பு இவற்றின வழி சென்று ஆத்ம சாக்ஷாதகாரமான முழுமையை அடை.

இலட்சியம்

அகங்காரமற்ற தெய்வ அனுபவ நிலையில் பார்க்கப் படும் பொருளா இருக்குமே தவிர பார்ப்பவன் இருக்க முடியாது. யோகிகள் முயற்சியெல்லாம் பார்ககும்கருவி களை ஒரு முகப்படுத்திப் பிறகு அதை ஆத்ம ஞானம் பெற உபயோகப்படுததுவதுதான. எல்லா யோகமுறை களும் அதைத்தான் காட்டித் தருகின்றன.

சாதகன ஒரு முறை இந்த முழுமையை அடைநத வுடன அவன உடலுடன் ஒட்டி நிறகும் தன் எண்ணத் தை ஒதுக்க முயலுகிருன். புற உலகம் நாம் உடலை எண்ணியிருப்பதாலதான இருககிறது. அந்த எணணத் தைவிட்டுவிட்டால் புற உலகம் அதன் பொருள்களும் அவை தரும் துயரும் இருக்க முடியாது இபபடி முதன் முறை சொலலிக கேட்கிறவர்களுககு இது பிடிககா மலோ, புரியாமலோ இருககலாம். ஆனுல கனவுலகம், ஆழ்ந்த தூக்க உலகம் இவற்றில் வாழவதுபோல வாழ்ந்து உண்மையை அறிய முடியும். அந்த இரண்டு நிலையிலும் நாம் நம் உடல் இருப்பதையே உணர்வ திலலை. ஆகவே பௌதிக உலகமும் இலலையென ஆகி விடுகிறது.

எனவே யோகி, மனம், புத்தியைப் பயிறசி செயவித் துக் கூர்மை பெறச்செய்து ஆத்ம தத்துவத்தின் புறம்

உள் நோக்கிச் செலுத்துகிறான். இதுவே புற உலகத்தி லிருந்து விடுதலையடையும் வழியாம.

சாஸ்திரங்கள் சொல்வது மிகவும் எளிது நேரடி யானது. ஐயம் திரிபுக்கு இடமற்றது ஆனல் பிரும்ம வித்தையைப் பறறிய அறிவு மட்டும் மனிதககுறைபாடு களிலிருந்து விடுதலை அளிதது விட முடியாது. பெரும நூல்களைப் படித்து விட்டு ஆப்பிரிககக் காட்டு மனிதன் நாகரீகததின் பயனை அடைநது விட முடியாது. காட்டு மிராண்டித்தனத்தை விட வேணடும். அப்புத்தகங்கள் கூறும் நல்ல நாகரீக வழிகளை மேற்கொளள வேண்டும். 'ஆஸ்பரோ' என்ற பெயரை மஹாமநதிரம் மாதிரி எவ வளவு முறை திருப்பித் திருப்பிச சொன்னலும், மருந்து சாபபிடாமல் தலைவலியிலிருந்து விடுதலை கிடைக்கப் போவதில்லை. அதைப்போல வேதாநதம் தத்துவரீதியில் மிகவும சிறநததுதான். அதன் சாஸ்திரக கருத்துக்களைப் புரிந்து கொண்டால்மட்டும் அது ஒரு இனபததையும் தரப போவதில்லை. அதன்படி வாழ வேணடும். குறை பாடு இலலாமல் வாழ வேணடும. அதில் கூட்டுதல், குறைத்தல் கூடாது. இரணடு எதிரெதிர் பொருள்கள் இடையே மனச் சேர்கையை ஏற்பட முடியாது. இருள் இருக்கும் இடத்தில ஒளி இருக்க முடியாது.

சாதகன் தப்பான மதிப்புக்களை ஒதுக்கிவிட்டுத் தன் யாத்திரையை மேற் கொளள வேணடும். இதுதான் பொருளை உள்ள (positive) சாதனையின் இன்மைப் பகுதியாகும. இது உறுதி பூணுவதாலோ, நிச்சயம் செய்து கொள்ளுவதாலோ மட்டும கைகூடுவதிலலை. அதற்கு நன்னெறி செல்லும் வாழ்வு வாழ்தல்வேணடும. ஆதம பூரணத்வம் அடைய ஏறபட்ட முககியமான நான்கு வழிகளில்,ஒன்றில் தொடர்ந்து நன்னெறி வாழ்வு வாழ்ந்தால் ஒருவன்அந்தத் தெய்வசக்தியான தானகவே புரிந்து கொள்ளும் (Intuition) ஆற்றலைப் பெறுகிறன. இந்தச சக்தி நம்முள் இப்பொழுது தூங்கிக்கொண் டிருக்கிறது. யோகம் அதை எழுப்பி விடுகிறது. புதி தாகப் பெறும் இந்த ஆற்றலின் உதவியாலதான் மனிதன் தன் முழுமையின் வெற்றிப் பிரதேசததை அடைகிறன்.

'உண்மை' யை இந்தத் தானகவே உணரும் சக்தி மூலம தெரிந்து கொளவது மேஜை போன்ற ஒன்றை நாம் அறிந்து கொள்வது போன்றதனறு. அந்த ஆற்றல்

மூலமாகவே சாதகன் பூரணத்வமாகவே ஆகிவிடுகிறான். அதனால்தான் குரு எச்சரிக்கிறார். 'உண்மை ஞானம் பெற்ற ஒருவனுக்கு அது தெரியாத ஒன்று, ஆனால் உண்மை ஞானம் பெறாத ஒருவனுக்கு (அறிவு பெறாத ஒருவனுக்கு) அது தெரிந்த ஒன்றாகிவிடும்'

இந்தியத் தத்துவத்தின் சிறப்பை அடையப் புத்தக அறிவு மட்டும் போதாது. மேற்கத்திய தத்துவ சாஸ்திரிகள் போல நாம் வாழ்க்கையைப்பற்றிப் புத்தி பூர்வமாகக் கொள்ளும் ஒரு நோக்கு என்ற வகையில் வேதாந்தத்தைக் கொள்ளுவதில்லை.

வேதாந்தம் நமக்கு வாழ்க்கையைப் பற்றிய ஒரு கருத்து மட்டும் அல்ல. வாழும் ஒரு வழியாகும். நாம் வேதாந்தியை ஒரு சோம்பேறியான கனவு காண்பவனாகவோ அல்லது செட்டிக்காரத்தனமாய்க் கதை விடுபவனாகவோ நினைப்பதில்லை. அவன் உண்மையானவன். உபயோகமான வாழ்க்கையின் மதிப்பை நமக்குக் காட்டித் தந்து அவன் வேதாந்தத்தை எப்படி வாழ்க்கையில் சீர் சிறப்புடன் வாழ முடியும் என்று காட்டுபவன். சமஸ்கிருதத்தில் அதற்கு 'தர்சனம்' என்று பெயரிட்டிருப்பது கவனத்திற்குரியது. நேரடி அனுபவத்துக்குக் கிடைக்க வேண்டிய உண்மைகள் என்ற விதத்தில் இந்தப் பெயர் மிகவும் கருத்துப் பொதிந்ததாகும்.

வேதாந்தப் பேச்சுகளைக் கேட்பதினால அதைப் பற்றிய தெளிவில்லாத ஒரு கருத்து ஏற்படலாம். ஆனால் வேதாந்த வாழ்வை வாழப் பயின்றாலொழிய நன்மை ஏற்படாது. வேதாந்தம் வாழ்க்கைக்குப் புறம்பானது என்று சொல்வது அதுபற்றித் தெரியாத சோம்பேறியின பேச்சாகும். வேதாந்தம் சொல்லும், 'ஒருமை' மெய்மை என்பதன ஆதாரத்தின் மேல் வாழும வாழ்க்கையை விடச் சிறந்த வாழ்வு, பூரணமான வாழ்வு, வேறு ஏதொன்றும் இருக்க முடியாது என்பது உண்மை.

உண்மையான வேதாந்தி சம நோக்குடையவன். துரிய நிலையுடையவன். புத்தி வீங்கியோ அல்லது உணர்ச்சிப் பெருங்காற்றில மங்கிய புத்தி கொண்டோ இருக்கமாட்டான். தாக்கித்துப் புரிந்து கொள்ளல், ஒட்டாதிருத்தல், இந்த முறைகள் மூலம அவன் புத்தி நுண்மை அடைந்திருக்கும. அன்பு, கருணை பிறருக்கு மதிப்புத் தருதல் முதலியன பழகி அவன் தன் மனப்

பண்புகளைப் பெருக்கி வைத்திருப்பான். இவ்விதம் பயின்ற மனதும் புத்தியும் சேர்ந்து ஒரு விஷயத்தில் யோசிக்க இறங்குமானால் அங்கே 'தானாக உணரும் சக்தி' ஒன்று உதிக்கும். அது தெய்வ ஆற்றல். ஞானக் கண். அந்தக் கண் மூலம்தான் ஆத்மா அனுபவிக்கப் படுகிறது.

ப்ரதி போத விதிதம் மதம் அம்ருதத்வம் ஹி விந்த தே
ஆத்மனா விந்ததே வீர்யம் வித்யயா விந்ததே அம்ருதம் 2.4

மனதின் ஒவ்வொரு மாற்றத்திலும் மாற்றத்தின் ஊடேயும் பிரதி போதம் (உள் உணர்வு) மூலம் அதை அடைகிறவனே அமரத்வத்தை அடைகிறான். ஆத்மனா மூலம் அவன் உண்மை ஆற்றலைப் பெறுகிறான். ஞானத்தின் மூலம் அமரத்வத்தைப் பெறுகிறான்.

நம்முள்ளே 'நானாக'த் தலைமை வகித்து நடத்தும் அந்தப் பரம மெய்ப் பொருள் உணர்வின் மூன்று நிலைகளுக்கும் சாட்சியாகி நிற்கிறது என்று தெளியப்புரிந்து கொண்டால்தான் அறியப்படும். சாட்சி என்றால் நிகழ்ச்சியில் பங்கு எடுத்துக்கொள்ளாமல் புறத்தே நின்று கவனித்துக் கருத்துக் கொள்பவன் அவனுக்கு அந்த நிகழ்ச்சியில் ஆர்வமோ, விரோதமோ எதுவும் கிடையாது, அதனால் சற்றும் பாதிக்கப்படாமலே அவன் அதைக் கவனிக்கிறான். அதைப்போல இந்த ஆத்மாவும், அதாவது இந்த உண்மைப் பொருளும் தன் உண்மைத் தன்மையான நித்தியமாய் எங்கும் ஊடுருவி நின்று அழியாதிருக்கும் தன்மையைக் காப் பாற்றிக் கொண்டு ஒன்றும் செய்யாததாக ஒன்றையும் அனுபவிக்காததாக ஒரு உயிர்க்கொண்ட சாட்சியாய் மட்டும் நிற்கிறது.

விழிப்பு உலக அனுபவம் கனவுலக அனுபவத்தில் மறுதலிக்கப்படுகிறது. இரண்டு உலக அனுபவங்களும் ஆழ்ந்த தூக்க நிலையில் மறுதலிக்கப்படுகின்றன. இருந் தும் அவன் விழிப்பு நிலை, கனவு நிலை நிகழ்ச்சிகளை நினைவு கொள்ள முடியும். ஆழ்ந்த தூக்கத்தில் நடப் பதை அறிந்து கொள்ள முடியாது என்றும் அவன் அறிவான். நிகழ்ச்சிகள் ஞாபகம் இருக்க வேண்டுமானால் அனுபவித்தவனாக இருந்தால்தான் முடியும் என்பது நன்கு தெரிந்ததே. நான் எவ்வளவு உயர்ந்த ஞாபக சக்தி உடையவனாக இருந்த போதிலும் உங்கள் அனுபவங்களை நான் ஞாபகம் வைத்திருக்க முடியாது.

அதேபோல என் வாழ்வில் நடந்தவைகளை நீங்கள் நினைவு கொள்ளமுடியாது.

மேலே சொன்னதிலிருந்து நம்முன்னே மாறாத ஒரு தத்துவம் (சக்தி) இருந்துகொண்டு நம்முடைய விழிப்பு வாழ்வு, கனவுலகம், தூக்க இன்பம் மூன்றையும் அனுப வித்துக் கொண்டிருக்கிறது என்று தெரியவருகிறது. விழிப்பு நிலையில் இருக்கும 'ஐயா' கனவுலகில் இல்லை. ஆனால் விழித்தவுடன அவா தாம கனவு கண்டதை நினைவு கொள்கிறார். எலலா நிலையிலும் நின்று கவ னித்து நமக்கு அறுபடாமல் தொடர்நத ஒரு வாழ்வைத் தருகிறதே அதுதான் சர்வ சாக்ஷியான ஆத்மனாகும்.

இந்தச் சாக்ஷியுடன ஐககியமாவதுதான் அகத்தின் அறியாமைத தளையை நீககுவதாகும. சாவு, எல்லைக குட்படுதல், வருததம், கையறுநிலை, வெற்றி தோல்வி, இனபம் துன்பம் இப்படிப்பட்ட வாழ்க்கையின் ஆயிர மாயிரம் துன்பக் களைகளெலலாம் இந்த 'அகத்' தினு டையதுதான். சர்வ சாட்சியான உணமைககு இநத சம்சாரம் வேற்றுப் பொருளே; ஆத்மனுடன ஐககிய மாவதில ஆதமனை அறியும் ரகசியம் இருக்கிறது. அது அறிந்தவை, அறியாதவை இரணடிற்கும் அப்பால இருக்கிறது.

இஹ சேத அவேதீத அதசதய மஸ்தி
ந சேதி ஹாவே தீத மஹதீ விநஷ்டி:
பூ தேஷு பூ தேஷு விசிதய தீரா:
ப்ரேதய அஸமான லோகாதம்ருதா பவந்தி 2.5

ஒருவன் (பிரும்மத்தை) இங்கேயே இந்த உலகத் தில் அறிந்துவிட்டால மனித அபிலாஷைகளின் எலலை அடையப்பட்டது. அறியவிலலை என்றால் நாசம அதிகம் தான். ஞானிகள எல்லா ஜீவனகளிலும் ஆத்மாவைக் கண்டு இநத வாழ்க்கையிலிருந்து ஏறி அமரத்துவ மடைகிறாகள.

அனபுகொணட சுருதித் தாய் தன் வளர்நத குழந் தைகளுககு இநத எசசரிக்கையை விடுவதன் மூலம தன் ஆர்வம கொணட அன்பை வெளியிடுகிறாள. இந்த வாழ்விலேயே நம கட்டு விலங்குகளிலிருந்து விடுபடும் முயற்சியில் வெறறி பெற வேணடும. விடுதலை மனித னின பிறப்புரிமை. அதை அடையத்தான் அவன் அவ

தாரம் எடுத்திருக்கிறுன். பல்லாயிர உடல்கள் எடுத்து பல குடம் கண்ணீர் உகுத்தபிறகு சாவ தயாபரனுன எம்பெருமான் இந்த மனித உடல் எடுக்கும் பாக்கியத்தை நல்கி இருககிறுன்.

"அரிதரிது மானிடராவதரிது, மானிடராயினும் கூன், குருடு, செவிடு, பேடு, நீங்கிய பிறப்பதரிது," அதறகும மேல் நலல வளாநத உடல, மன, ஆன்ம அமைப்பைப பெறுவது பல ஜன்மங்களில் தொடர்ந்து செயத தவப்பயனே என்று சாஸதிரங்கள் கூறுகினறன அவவளவு கிடைத்தும் உண்மையைப் பற்றி ...கள் தரும் ரகசியததைக கேட்க வாய்ப்புப் பெருத போனுல் முடிவடையாத கண்ணீரக் கிடங்கில் இருளினூடே அலைய வேண்டியதுதான் உங்களுககெல்லாம் பாராட்டுக்கள்! இநதத் தலைமுறை மககளில் நீங்கள் பொறுககி எடுத்த பாககியசாலிகள. பல காலம் தவம் செய்து உபநிஷதம் படிதது "பாதிக்கப்பட்டு விளங்கும் உண்மையைப் (Conditioned Truth) பறறி யாவது அறிந்து கொணடீர்கள.

நீங்கள் ஒவ்வொருவரும் பல லட்ச மக்களுக்குப் பிரதிநிதியாகிறீர்கள் மககள, பாவம், மனிதர்களாயிலலாமல் இரணடு கால் புழுக்கள் போல அழுககில் நெளிகிருர்கள, மயககம் கொண்டு வழியின்றி. அதனுல் சுருதி சொல்லுகிறது. "ஆத்மா நாம் என்று அனுபவம பெற முயலாத மனிதன் வாழ்வு நாசமே."

மனித முயற்சியின் சரித்திரத்தில துறவு மனப்பானமை இல்லாமல் தங்கும் வெற்றி ஒரு பொழுதும் அடையப்பட்டதில்லை இயற்கையே இந்த உண்மையை உரக்கக் கூவி நிற்கிறது. மீன்கள் பறவையாகிப் பறக்க ஆசைப்பட்டால் நீரில் நீஞ்சும பெருமையை விடத் தயாராயிருக்க வேண்டும். பறவைகள் மிருகங்களாக வளர வேண்டுமென்ருல் பறககும் ஆசையை விட்டுவிட வேணடும். மிருகங்கள் சூட்சுமமான மனததையும் புததியையும் பெற வேணடுமென்ருல் ஸ்தூலத் தன்மையுள்ள உடலையும், உணாவையும் விட்டுத் தொலைக்கத் தயாராக வேண்டும. குரங்கு மனிதன் வாலையும், காட்டு வாழ்வையும்விடத் தயாராயிருந்தால், கோட்டு சூட்டு அணிந்த இன்ஷியூரன்ஸ் ஏஜண்டாகவோ அல்லது அலறும் அரசியல்வாதியாகவோ ஆகமுடியும். மனிதன் தெய்வத் தனமைக்குச் செல்வது கடைசி வழிநடை.

அதற்கு வழிமுறை காட்டுகின்றன சுருதிகள். ஒரு தியாகம் செய்தால போதும், மனிதன தெய்வ வாழக்கையை அடைந்து விடுவான் என்று ஞானசிரியர் கள எல்லாம் உரைக்கின்றனர். அகத்தை ஒழி.தேவனுகு. அது முடியும். இஙகேயே இப்பொழுதே முடியும். பெயர் தோற்றம் கொணட ஒவவொரு ஜீவனுள்ளும தானே வெளியாகிக் கொணடு நிற்கும் அந்தத தத்துவத்தை அறிந்துகொள. இதுவே நலல ஒரு வழிபாடு. அதுவே நம்மை உணமையின் கர்ப்ப கிருஹத்துககு அழைததுச சென்றுவிடும். அவனை நாம் நேருககு நேர் சநதித்து அவனுளளே ஒடுங்கி அவனுகிவிடுவோம் தெய்வத்தைப் பாாததவுடனே மனிதன் மறைகிருன் தெய்வமாகிருன் 'பிருமமவித் பிருமமைவ பவதி.'

இங்கே—இதோ

மனிதன் பௌதீக ஆசைகளையும விருபபங்களையும் தேடி அழிகிருனே எனறு சுருதி படும் வேதனையை நாம் பார்த்தோம். மனிதனுகவும பிறநது எல்லா இந்திரியங களும் நலல நிலையிலிருக்கப் பெற்றவனுகி நலல மனம் புததியும் கொண்டு சதபுருஷர்களைச சந்தித்து, ரிஷி, முனிவாகளுடைய ஞானச சொற்களைக் கேட்கவும் வாயப்புக் கிடைத்திருகக மனிதன் எவவளவு அதிர்ஷடம் வாயநதிருகக வேண்டும்! அதனுல்தான் அன்பு முதிர்சசி யால சஙகடம் கொண்டு சுருதித் தாய, "இங்கே அதை அடையாதவனுக்கு நாசமே!" என்று பேசுகிருள்.

எல்லா ஜீவன்களுக்குளளும் அந்த மெய்மையைத் தேடிக் காணத் தெரிநத கெட்டிக்காரர்கள ஆத்ம ஞானனந்தததில நிலைககிருாகள. அபபடிப்பட்டவா கள் (ப்ரேத்ய அஸ்மான் லோகாத்) இந்த உலகைவிட்டு (அம்ருதா பவந்தி) அமரராகின்றனா.

இந்த வரி இதைபபோனற மற்ற வரிகள் இவறறின் அடிப்படையில் வேதாநதிகளில் இரணடு வகைக் கொள்கையினர் ஏற்பட்டிருககினறனர். ஒரு வகையினர் இந்த உடல் அழிந்து இறநதால ஒழியப் பூரணத்துவம் அடைய முடியாது எனறு பேசுகின்றனர். மற்றவர் சுருதிக்கு வேறு ஒரு கருத்துச சொல்லுகின்றனர்; வேறு வகையில வாதம புரிநது தெய்வத தனமை இந்த வாழ்க்கையிலேயே அடையப்படடுவிடும என்பது அவர் கள் கூற்றுகும். முன்னவர்கள் விதேஹ முக்திதான்

சாத்தியம் என்கிறார்கள். பின்னவர் ஜீவன் முக்தி நிலையை ஒத்துக்கொளகிறார்கள்

டல் சங்கராசசாரியார் இரண்டாம் கருத்தை ஆதரிக்கிறார்கள். அவர்கள சொலலுவது சரி எனறும படுகிறது. சின்மயாவும் அதையே ஒததுக்கொள் கிறா. ஏனெனில் பல பெரியோாகள் இநத வாழ் விலேயே தங்கள பேச்சு மூலமும நேரடியாகவும இநத உடலிலிருந்துகொண்டே தெய்வப் பூரணத்துவம் கொண்ட அமர வாழ்வை ஏறறுககொள்வது முடிந்த ஒன்றுதான என்று காட்டித் தருகிறார்கள. ஆத்ம சாக்ஷாத்ரம இஙகேயே இப்பொழுதே முடியும்.

ஸ்ரீ சங்கராசசாரிய சுவாமிகள் 'குரு'வினுடைய சாஸ்திரீய லக்ஷணங்களின் ஆதாரததின் மேல தன்னு டைய வாதத்தைத் தெளிவுறுத்துகிறார்கள் நாம் அதை ஏற்கனவே பாாததிருககிறோம். குருவானவா் சாஸ்திரங் கள அறிந்தவராக இருப்பதுடன் தெய்வத தன்மை (உணர்வையும்) பெறறிருத்தல் வேண்டும். சாஸ்திரம் படிததிருக்கிறார் எனபதறகாக ஒரு பண்டிதர் குரு ஆகி விட மாட்டார். சாதகன பிரும்ம வித்தையைப் பற்றிக் கூறும் சாஸ்திரங்கள் பேசும பூரணத்துவ நிலையைததன் முயற்சியால் அடைநதவுடனேயே இறந்துவிட வேண டும என்று நாம் கருதவேணடியிருக்கும. விதேக முக்தியை ஒத்துக்கொணடால சுருதியின் அநத வாககி யத்திற்கு இநதக் கருத்தைத்தான ஏற்க வேண்டி நேரிடும். அந்த நிலையில பிரம்ம நிஷடரான ஒரு குரு கிடைப்பது முடியாத ஒனறாக நின்றுவிடும். அதனால்தான் சங்கராசசாரிய சுவாமிகள ஜீவன் முககி நிலையை ஒபபுக் கொள்கிறார்கள்.

"இந்த உலகத்தைவிட்டு அவன் அமானாகிறான்," எனறு சுருதி சொல்லுகிறது. அதற்கு என்ன கருத்து? சங்கராசசாரியா அவாகள சொல்லுகிறபடி, சாவுக் கதவின் வழியே ஏற்படும் உடல் மறைவு என்பதல்ல அதன் அாததம். கீழ்த்தரமான வாழ்க்கையின் மனித மயக் ... மேலேறி ஒரு தெய்வ உணர்வைப் பெற்றுத்தானே கடவுளாக அறியும நிலையைத்தான் அது குறிக்கும்.

வேதாந்த சாதனையின் மூலம் முழு வளர்ச்சி பெற்ற ஒருவன், 'அமிாதாபவந்தி' அமரனாகிறான்

என்று சுருதித் தாய் உறுதி கூறுகிருள். ஜீவன் பெற்றிருக்கும் உடல, மனது ஆகியவற்றுல் ஆன சாதனம் பௌதிகமானவை. அவை கட்டுக்கும் எல்லேக்கும உட்பட்டவை. ஆகவே அவை கொண்ட சாதனமான இநத உடல அழியாததாக இருகக முடியாது. பிறகு எப்படி அமரனுகிருன்? இநதசசுருதியை அறிந்துகொள்வதற்குச் சொல்லின் நேரான பொருள உதவி செயயாது. குறிப்பாகச் சுட்டப்படும் ஆழமான பொருள்களே அறிந்துகொள்ள வேண்டுமம

நாம் நம்மைப்பற்றித் தப்பான கருத்தைக் கொண்டிருககிறேும். அதை ஒழித்து ஆத்மா எனகிற நம்முடைய சுத்தத் தன்மையை உணர்ந்து கொள்வதுதான் ஆதம போதமாகும. அழுத்தமான சுய அனுபவத்தின் மூலம் "நாம் அழியாத ஆதமாவே. அழியும உடல் அல்ல," என்றி அறிநதுகொணடால் நம்மைச சாவு பயமுறுத்தாது சாவின் விஷக் கொடுககு நைந்துவிடும் அப்படிபபட்டவனுக்குச சாவு வெறும் ஒரு சிறியசம்பவமாக மாறிவிடும; சாதாரணமாக நிகழும நீர் முழுக்கு அலலது உணவு போன்றதாகிவிடும். உடையை மாற்றுவது போனறு அதை அவன் உணர்வான உணமையில் நாறறமும் துனபமும் நிறைநத கனவு வாழ்க்கையின எலலேக்குள் அடிமையாயச சஙகடப்படும துன்பத்தை விட்டு வெளியேறுவான.

மூனரும் அத்தியாயம்

முன்னுரை மூன்ருஂம் அத்தியாயம் ஒரு கதையாகும். அக்கதை இதுவரை பேசப்பட்ட உண்மைகளேச் சித்திரிக்கிறது.

தேவர்கள் ஒரு முறை அந்தப் பரம்பொருளின் உதவியால் அசுரர்களே வெற்றி கொண்டனா. வெற்றி போதையால் அகங்காரம கொண்டிருந்தனர். அவர்களுக்கு அருளவேண்டும் என்று எண்ணி, அந்தப் பரம்பொருள் அழகான யக்ஷ உருவத்தில் தரிசனம் தந்தது. இந்தப் புதுக்காட்சியைக கண்ட தேவர்கள அக்னியைக் கூப்பிட்டு, 'அது யாரென்று விசாரித்து வா, என்றனர். அக்னியும் தன் சக்தியில பெரு நம்பிக்கை கொண்டு அந்தக் காட்சியிடம் சென்ருன். அந்தப் பரம் பொருள் கேட்ட கேள்விககு, தான அக்னி என்றும், எதையும் எரித்து விடுவேன் என்றும் பெருமையுடன் பதில் சொன்

ஞன். அந்தப் பரமேஸ்வரம ஒரு புல்லை அவன் முன்னே போட்டு, அதைச்சாம்பலாககு எனறு பணிததான். நெருப்புத்தேவன் எரி நட்சத்திரங்கள், சூரியன் எல்லோருககும் அரசன். அநதப் புலலை நெருங்கவும முடியாமல் நின்ருன. தோல்வியிஞல முகம் தொங்க அவன் திரும்பிஞன். தேவர்கள் கேட்ட கேள்விக்கு அவன் சொன்ன பதில் 'எனக்குத தெரியவிலலை' என்பதுதான்.

தேவர்கள் அறிய வேண்டும் என்ற ஆசை காரணத்தால் மீணடும் வாயுவை அனுப்பிஞர்கள். வாயுவும் அக்னிக்குச் சற்றும் குறையாத அகங்காரத்துடன அவனையும் மிஞ்சிப பெருமை பெறலாம் என்று ஆவலுடன் வநதான். சக்திக்கெலலாம் சக்தியானஅநதப் பரம பொருள காற்றின அரசனுடைய தற்பெருமையைக் கண்டு உள்ளூர நகைததுககொண்டது வாயுவையும அந்த யக்ஷன் யாரெனறு கேட்டான்.;வாயுவும் மார்பு நிமிர்நது, "நான உலகத்தையே காகிதப் பநதுபோல் ஆட்டி வைக்கும் வாயுவென்பான," எனறு சொன்ஞன். யக்ஷன முன் போலவே ஒரு புல்லை முன இட்டு, "இதை முடியுமாஞல் நகர்த்து" எனறு சொலலிறறு ஆஞல அந்தச் சக்தியின்அருளனறி யாரா எனன செயய முடியும்? வாயு தேவனும்திடமெ று இழநதவலுவிற்குக்காரணம் தெரியாமல தலையைத் தொஙகவிட்டுககொண்டு திருமபி வந்தான. அக்னியும், வாயுவும் தோற்ற கதையைக கண்டு தேவாகள அச்சம் கொண்டு தங்கள் அரசஞன இந்திரனிடம் சொல்லினர் அவாகள பிரார்த்தனையை ஏறறு இநதிரன் தானே செனருன். அரசனுக்கேற்றபடி பெரும் பாடம கறபிக்க வேண்டும் என்று எண்ணி அந்தப் பரம சக்தி தன் அழகிய உருவத்தை மறைததுக் கொணடது. தேவர்க்கரசன அதஞல மனம் கலஙகவில்லை. மறைநத காரணத்தாலேயே அதைப்பற்றி அறியவேணடும் என்ற ஆவல் உணடாயிற்று. திருமபாமல முன்னேறிச் சென்ருன்... .எதிரே அவன் பார்த்தான். அதிசயம்! இமயன் மகளான உமாதேவி அருள் கை ஏந்தி நின்ருள். அவளிடம் கேட்டு, 'அநதயக்ஷன் வேறு ஒருவருமலல. தேவதைகளுக்கு அருள வநத அந்தப் பரம பொருளே' என்று தெரிந்து கொணடான். உமாதேவி, "நீங்களே உங்கள் சக்தியாலே ஜெயித்து விட்டோம் என்று எண்ணுவது முட்டாள்தனம," என்று எச்சரித்தாள்.

உள் சாரம : கதையை மட்டும் படித்தால் அராபிய இரவுகளில் வரும் கதைகளை விட எந்த விதத்திலும்

சிறந்ததாகத் தோன்றுது. ஆனால ஊக்கம் கொண்ட சாதகனுக்கு இநதச சிறுபிள்ளைக கதையில் மிக ஆழ்ந்த கருத்துக்கள் தோன்றும். சுருதி கூறும இந்தக கதையின் ஆழ்ந்த பொருளை அறிய முயல வேண்டும்.

இது வரை நாம் சொல்லி வந்த உபநிஷத உண்மைகள் இநதக கதையில எடுத்துச் சொலலப்படுகின்றன. இதுவரையில் நாம் ஆதமாவின் தனமை, அதன் பெருமை, இவறறைப்பறறிப் பார்த்துவந்தோம் ஆனால் சொன்ன வகை தத்துவ ரீதியாகவும் உள்ளூர உணாநது பாாக்க வேண்டியதாகவும் இருந்தது. இபபொழுது புறத்தே கணடு தெளியும்படியாக ஒரு சிறநத முயற்சி செயயப் பட்டிருக்கிறது.

கதையைப் புரிந்துகொள்ள சாஸதிரபரம்பரையும, சாஸ்திரீய நம்பிககையும ஓரளவு தெரிந்திருகக வேணடும். தோறறமிலலாத ஒனறிலிருந்து தோனறும் உலகம் எப்படிததோனறியது என்று நாம் பார்ததோம். ஆகாசம, வாயு, அக்னி ஜலம், கடைசியாக பிருதவி எனற வகையில படிபபடியாக அதிக ஸ்தூலமான பொருளகள ஏறபட்டன. பூமிதான் மிகவும ஸ்தூல மானது.

இந்த ஐந்துக்கும தனித்தனி குணங்கள் உணடு. ஆகாசத்திறகு சப்தகுணம். சூக்ஷ்மமான அடுத்த வாயுவுககு ஆகாசத்தின குணமான சப்தத்துடன் அதிகப்படியாக "ஊறு" (தொடும உணர்வு, ஸபரிச உணாவு) குணமும் உண்டு. இப்படியே பினனால வரும் ஒவ்வொரு தத்துவத்திற்கும் தன்முன் தத்துவத்திற்குள்ள குணத்துடன் சேர்நது தனக்கென்ற குணமும் உண்டு நெருப்புக்குச சப்தம், தொட்டால் உணரப்படும் சகதி, இவறறுடன் தோற்ற மென்ற விசேஷ அதன் குணமும உண்டு. நீரில நெருபபுக்குள்ள தன்மைகளுடன் ருசி என்ற அதற்கே உரிய குணமும் உண்டு. பூமியில் முன் சொனன நாலு குணங்கள் தவிர வாசனை என்ற தனக்குள்ள விசேஷ குணமும் உண்டு. சாஸ்திரஙகள் தங்களுக்குரியதான மொழியில் இந்தத் தத்துவஙகள் இந்தக் குணங்களைக் காட்டும இந்திரியஙகளை ஆளுகின்றன எனறு சொல்லுகின்றன. காது, ஆகாசத்தின குணத்தை உடையது. அது நெருப்பு ஆளும் கண்ணுககு உரியதான பார்வையைப் பெறவில்லை. இந்த சாஸ்திரீயக் கருத்துக்களை மனதில் கொண்டு, அர்த்தமற்றதாகத் தோன்றும்

(கேஞேப நிஷத்தில் வரும்) கதையை மீண்டும் படிந் தால் அதன உட்பொருளை உணாந்து கொள்ளலாம.

உப நிஷத்தின் இந்தப் பாகம் வெறும் கதையைச் சொல்லுகிறது. ஆகவே அறிந்து கொள்வதில் சிரமம் இருக்காது. ஆகவே சுலோகங்களும், மொழி பெயர்ப் பும் ஒரே தொடராகக் கொடுககப் படுகின்றன.

மந்திரங்கள் :

ப்ரஹ்ம ஹ தேவேப்யோ விஜிக்யே, தஸ்ய
ஹ ப்ரஹ்மணோ விஜயே தேவா அமஹீயந்த
த ஐக்ஷந்த, அஸ்மாக மேவாயம விஜயோ
அஸ்மாக லேவாயம் மஹி மேதி 3.1

குரு : பிரம்மன் ஒரு முறை தேவதைகளுக்காக (அசுரர்கள் மேல்) வெற்றி கொணடு வந்தான் என்று சொல்லப்படுகின்றது பிரும்மத்தின் காரணமாகத் தான் வெற்றி கிட்டிற்று எனறாலும் தேவர்கள் அதனல் பெருமை கொண்டனர். 'வெறறி நமககு, பெருமை நமககு' எனறு அவாகள் எணணினா

தத்தைதஞாம விஜஜ்ஞௌ தேப்யோஹ
ப்ரா துர்ப்பபூவ, தந்ந வ்யஜானநத கிமிதம யக்ஷமிதி 3.2

பிரும்மன அவர்களுடைய வீண் தற்பெருமையை அறிநது அவர்கள் எதிரே தோன்றினர் ஆனல் அவாகள் அநத யக்ஷன் (போற்றத் தகுந்த ஆத்மா) யாரென்று தெரிந்து கொள்ளவிலலை.

தே க்னிம அப்ருவன் ஜாத வேத யேதத விஜானீஹி
கிமேதத யக்ஷமிதி, 3.3

அவர்கள் அக்னியிடம் இவவாறு சொன்னாகள். "ஜாதவேத (எல்லாம் அறிந்தவனே) அந்தப் பெரிய சகதி யாரெனறு கணடுபிடி." அவன் சரி எனறான்

ததேதி ததப்யத்ரவத தமப்யவதத கோஸீதி யகனிரவா
அஹமஸ மீதயப்ரவீஜ ஜாத வேதா வா அஹமஸமீதி 3.4

அக்னி அதனிடம் சென்றான். அது அவனை 'நீ யார்?' என்று கேட்டது. அக்னி சொன்னான்: "நானதான் அக்னி. எல்லாம் அறிநதவன்."

தஸ் மின்ஸ் தவயி கிம் வீர்யமிதயபீதம் சாவம்
தஹேயம் யதிதம் ப்ருதிவ்யா மிதி

யக்ஷன் உருவிலுள்ள அது (பிரும்மம்). அந்தத் தன்மையிலுள்ள உன்னிடத்தில என்ன ஆற்றல் இருக்கிறது? அக்னி பதில் சொன்னான்: "நான் உலகத்தின மேல் இருக்கும் எதையும் எரிக்க முடியும்."

தஸ்மை த்ருணம் நிததா வேதத் த3ஹேதி, தது3பப்ரேயாய ஸர்வஜவேன, தன்னசாக தக்தும், ஸ தத ஏவ நிவவ்ருதே நைததசகம் விஜ்ஞாதும ய தேதத் யக்ஷ மிதி [கே 3.6

அது (பிரம்மன) அவனுக்கெதிரே ஒரு புல்லை வைத்து 'அதை எரி' என்று கேட்டுக் கொண்டது. அகனி தன் ஆற்றல எலலாம் கொண்டு அதனமேல் பாயந்தது. அவனால அதை எரிக்க முடியவில்லை. எனவே அவன தேவாகளிடம் திரும்பி வநது 'அநத யக்ஷன் யார் என்று எனக்குத தெரியவிலலை' எனறு சொல்லி விட்டான.

அத வாயுமபருவன் வாயவேதத விஜாநீஹி கிமேதத யக்ஷமிதி ததேதி 3.7

பிறகு தேவாகள வாயுவிடம் சொனனார்கள. "காற்றுககுத் தேவனே. அந்த யக்ஷன் யார் என்று கணடு வா". அவனும சரி எனறான.

தத‌பயதரவத, தமபயவதத கோ ஸீதி, வாயுர்வா அஹமஸ மீதயப்ரவீன மாதரிச்வா வா அஹமஸமீதி 3.8

வாயு யக்ஷனிடம சென்றது, யக்ஷன அவனை யார என்று கேட்டது. வாயு சொனனான்; "நானதான் வாயு நான சாக்ஷாத மாதரிச்சவன (ஆகாயத்தில் சஞ்சரிப்பவன)."

தஸமினஸ தவயி கிம வீாயமிதயபீதம ஸர்வமாததீயம யதிதம ப்ருதிவயாமிதி. 3.9

"உன்னிடம் என்ன சக்தியிருககிறது? நீ எநதத் தன்மை பெற்றிருககிறாய்?" என்று யக்ஷன் கேட்டது. வாயு சொன்னான். "உலகில் எதையும் அடித்துத் தள்ளி விடுவேன்."

தஸ்மை த்ருணம நிததா வேததாதத ஸவேதி, தது3பப்ரேயாய ஸர்வ ஜவேன, தந்நசசாகாதாதும், ஸதத ஏவ நிவவ்ருதே நைததசகம விஜஞாதும யதேதத யக்ஷ மிதி. 3.10

யக்ஷன் அவனுக் கெதிரே ஒரு புல்லை வைத்துச் சொல் லிற்று. 'இதை அடித்துத் தளளிவிடு'. வாயு தன் முழுச் சக்தியுடன் அதை நெருங்கினுன். ஆனுல் அதை நகர்த்த முடியவில்லை. எனவே அவன் தேவர்களிடம் வந்து சொன்னுன். "என்ருல் அந்த யக்ஷன் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை."

அதேதந்நர மப்ருவன—மகவந் நேதத விஜாநீஹி,
கிமேதத யக்ஷமிதி, ததேதி ததப்யதரவத தஸமாத
திரோ ாத ேத 3.11

பிறகு தேவர்கள தேவர் தலைவனுன இந்திரனிடம் சொன்னுர்கள். "ஓ மகவனே! (சொத்தும் சக்தியும் பெற்ற பெரியோனே அல்லது பூஜைக்குரியவனே என்று பொருள்) யக்ஷன யார் எனறு நீ கண்டுபிடி." அவனும் ஒததுககொண்டு யக்ஷனை நோக்கி விரைந்து சென்ருன். ஆனுல் யக்ஷன் பார்வையிலிருந்து மறைநதுவிட்டது.

ஸ தஸ்மின்னே வாகாசே ஸ்தரியமாஜகாம
பஹு சோபமானும் உமாம, ஹைமவதீம, தாம
ஹோவாச—கிமேதத் யக்ஷமிதி 3.12

அந்த இடத்திலேயே அவன் ஒரு மங்கையைக் கண்டான், அழகியான உமா — இமய மலையின் மகள். அவன் அவளை அந்த யக்ஷன் யார் என்று கேட்டான்.

நான்காம் அத்தியாயம்

இந்தக் கதையை, நாம் ஏற்கனவே பேசிவநதுள்ள சாஸ்திர சித்தாந்தங்களைப் பின்னணியில் வைத்துப் பார்த்து, பார்ப்பதற்குச் சிறு பிள்ளைக்கான கதையைப் போல் இருக்கும் இந்தக் கதையின் ஆழ்ந்த கருத்தை அறியலாம். ஐந்து தத்துவங்களும், ஐந்து இந்திரியங் களின் தேவதைகள் என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

அப்படிப் பார்த்தால்: வாழ்க்கையின் சிறந்த மதிப்புக்களான அன்பு, பொறை, பொறுமை, கருணை தானம், தயை இரக்கம் எல்லாம் தேவர்கள் என்று பொருள்படும். அவர்கள் அரககர்களை (வெறுப்பு, ஆதாரமற்ற விருப்பு வெறுப்புக்கள, கோபம், பொருமை, சுய நலம், அகங்காரம், வீண் பெருமை முதலிய கீழ்த்தரமான மிருகக் குணங்களை) நித்திய ஆத்மாவின் உதவியால் வெற்றி கொணடு விட்டு ஒரு

தப்பபிப்பிராயத்திலும், தான் என்ற வீண் கர்வத்திலும் ஆழ்ந்து சிதறினா. ஒரு சாதகன்கூட ஆரம்பத்தில் ‘இவ்வளவு நேரம தியானத்தில செல்கிறேன். இந்தப் பெரிய குணங்களை யெல்லாம் பழகுகிறேன். இநத அனுபவங்களெலலாம் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன,’ எனறு பெருமையடித்துக் கொண்டு திரியலாம். அந்தச் சமயங்களிலெல்லாம பரமேஸ்வரன் யக்ஷ உருவததில அதாவது மெய்ம்மையின் தனமையைப் பற்றிய ஒரு சநதேக உருவததில் தோன்றி அவனைத் தன்பால இழுத்துக் கொாளுகிறார்.

மீண்டும் உண்மையைத் தேடும் அவர்கள் வளாசிக குறைவின் காரணமாக அந்தப் பரம் பொருள், தனனைவிட்டு அப்பால் உள்ள ஒரு பொருள் போன்று எணணி அதை எங்கேயோ தேட விளைகிறார் கள். அகனி செனறு யக்ஷனை அறிய முடியாமல் திருமபி னான் என்றால் இந்திரியங்களால், கண், காது, வாய் முதலிய பொறிகளால அந்தப் பரம உணமையை புறத்தே உள்ளே ஒரு தனிப் பொருள்போல் பார்த்து அறியமுடியாது எனறு ஒரு ஆழ்ந்த கருத்தைக் காட்ட எழுந்த கதையாயிருக்கலாம். அக்னி அந்தச் சகதிககு எதிரே அதன் அருள் இல்லாமல் ஒரு புல்லை எரிகக முடியவில்லை என்றால் அதைப் போல நம்முடைய கணணும் கண்ணின கண்ணான அந்தப் பரம் பொருள் இல்லாமல் தன் செயலில ஈடுபட முடியாது. அதைப் போலவே வாணியின் வாணியான அந்தப் பொருள் இன்றி மௌனமாயிருகக வேண்டியதுதான்.

‘என் தனிப் பலத்தால் உலகத்தையே ஆட்டி விடுவேன்’ எனறு மாாதட்டிச் சென்ற வாயுவும் வெட்கத் துடன் திரும்பி வர வேண்டியதாயிற்று. உண்மையில் வாயுதேவனும் யக்ஷனின் சக்தி இல்லாமல் தான் ஒரு புலலைககூட அசைகக முடியாது என்ற பெரும் உண்மை யைக் கண்டு கொணடான். வாயு நம்முள்ளே கந்தம், பிள்ளைப்பேறு இரண்டுக்குமான அதி தேவதையாம். ஆகவே கதையின கருத்து நாம் அந்தப் பரம் பொரு ளில்லாமல் நுகரவும் முடியாது. பிள்ளை குடடிகள் பெறவும் முடியாது.

சுருங்கக் கூறின் வாயு அக்னி என்ற இரண்டு பெரிய தேவதைகள் ‘யக்ஷன் யார்’ என்று அறியச் சென்று அடைந்த தோல்வி உபநிஷத்தின் கருத்தை மீண்டும் எடுத்துச் சொல்லுவதுதான். அந்தக் கருத்தாவது :

"அநய தேவ தத் விதி தாததோ அவிதிதா ததி"

அதாவது அது அறிந்ததற்கு மாறுபட்டது, அறியாத தற்கு அப்பாற்பட்டது அது அறிகிறவனன்றி வேறில்லை.

கடைசியாக சாதகனிடம் உள்ள நற்பண்புகளான தேவர்கள் இந்திரனை அணுகுகின்றனர். இந்திரன் இந்திரியங்களுக்கு அரசன் என்றும் பொருள்படலாம். அந்தக் கருத்தில அது மனது என்ருகும். உயர்ந்த பொருளைத் தேடும் சாதகன் அந்த யக்ஷனை ஆத்மாவைத் தேடத் தனியாகத் தாகம் கொள்ளும் போது அறிவின்மை, மயக்கம் காரணமாக முதலில் இந்த ஞான கர்மேநதிரியங்கள் உதவியால் அதை அறிந்து கொண்டு விடலாம் என்று எண்ணலாம். அவன் தாகம் உள்ளபடி பெருத்ததாக இருந்தால் அவன் இந்திரியங் களின் அரசனை மனதை அணுகி அதைப்பற்றி அறிந்து சொல் என்று கேட்டுக் கொளவான்.

சாதகனின் மனது இநதிரன் நிலையை அடைந்து விடும் பொழுது அந்தப் பொருளைப் பணிவுடனும் சுய நலம் தற்பெருமை இன்றியும் நெருங்குகிறது. மனம் நெருங்கநெருஙக அந்தத் தரிசனம் மறைகிறது. சாதகன் ஆத்ம தரிசனத்திலும் இந்த அனுபவம்தான் ஏற்படும். அநேக சாதகர்கள் இந்த நிலையிலிருநதே அவசரப்பட்டுக் கொண்டு திரும்பி 'யக்ஷன்' இல்லை என்று சொல்லி விடுகிருர்கள். தர்க்க வாதிகளும், புத்தர்களுள் சூன்ய வாதிகளும், லட்சியத்தை அடையாமல் ஏமாந்து திரும்பிய இந்திரனுக்கு உதாரணமாகும்.

சுருதி இந்த மாதிரி ஏற்படவல்ல பெருங் கெடுதலை எடுத்துக கூறுகிறது. உண்மையைப்பறறி ஒரு காரிய சாத்தியமான அறிவைப் பெறும் வரை திரும்பககூடாது என்ற புத்திமதியை இந்திரன் தன்மை அவன் அடைந்த வெற்றி இவற்றின் மூலம் சொல்லித் தருகிறது. உண்மை யில் இநதிரன் நிலையை அடைந்த சாதகன்தான் 'உண்மைப் பொரு'ளைக் காண ஏற்றவன்.

தான் தேடி வந்த பொருளின் திடீர் மறைவில் மனம் கலங்காமல் இந்திரன், நம்பிக்கையும், காண வேண்டும் அறிய வேண்டும் என்ற ஆவலும் துடிக்கக் காட்சி மறைந்த இடத்தைக் குறிவைத்துப் பார்க்கிறுன். பார்ககும்போது அவன் ஒன்றையும் எதிர்பார்க்க வில்லை. ஒன்றுக்கும் ஆசைப்படவில்லை. விருப்பம்

கொள்ளவில்லை. ஏற்கவில்லை. உள் அமைதியும் விழித்த உணர்வும் கொண்ட அந்த நிலையில்தான் யோகிகள் ஞான தேவியை உணர முடியும் என்று சுருதித் தாய் சொல்கிறாள்.

சாதகன் இந்திரனைப் போன்ற உதாரமான மன ஆற்றல், தெய்வீக உறுதி, உண்மையான இதயம், விருப்பமற்ற மனது, என்றும் விழிப்புடன் இருக்கும் புத்தி ஆகியவற்றை சாதனைமூலம் பெற்றிருந்தானானால் அவன்தான் மிகவும் தகுதி வாய்ந்த அதிகாரி என்று வேதாந்தம் சொல்கிறது. வாழ்க்கையில் உடனடியாக ஏற்படும் பிரசினைகளை ஏதோ ஒருமாதிரி தவிர்க்க உதவும் ஒரு ஏற்பாடாக மதத்தைக் கொள்ளக்கூடாது. ரேசில் கடைசிப் பத்து ரூபாயையும் வைத்துத் தோற்று விட்டுக் கோவிலுக்குள் சென்று பிரார்த்தனை செய்பவன் மதத்தை அழுக்காக்குகிறான். அந்தச் சமயங்களில் ஆண்மையிழந்து வெறியில் தன்னை மாய்த்துக்கொள் கிறானே அவனை விட இழிந்தவன் இவன்.

ஈசுவர தரிசனத்துக்கென இந்திரன் அதிக நேரம் காத்திருக்கவில்லை. நம இதயேசுவரன் கருணை நிறைந்த வன். உண்மையான பக்தர்களை ஒரு நிமிடம் கூட அதிக மாக ஏங்கிக் களைக்க விடுவதில்லை. ஹிமவானின் மகள், இமயக் குகைகளிலேயே பிறந்த பிரும்ம வித்தையின் தேவதை, யக்ஷன் மறைந்த இடத்திலேயே தோற்றம் அளித்தாள். வளர்ச்சியடைந்த ஆத்மசாதகனுக்குச் சுருதித் தாய் என்றும் அருள்புரிகிறாள். ஆசுவாசம் தந்து வழிகாட்டி அழைத்துச் செல்ல என்றும் தயாராய் இருக் கிறாள். இந்திரன் முதன்முறையாக இமய குமாரியிட மிருந்து யக்ஷன் பரமாத்மா கொண்ட நேரான தோற் றம் தவிர வேறில்லை என்று தெரிந்து கொள்கிறான். கனவில் இருந்து மயக்கம் அதன் காரணமாக ஏற்படும் காயங்கள் இவற்றில் உழலும் ஜீவனை அதன் அர்த்த மற்ற பெருமைகளிலிருந்து காக்க அது அந்தத் தோற் றம் எடுத்தது.

வித்தையின தேவியின் வாயிலிருந்து தெரிந்து கொண்ட அநதப் பேச்சளவு ஞானத்தை பரோக்ஷ ஞானம் என்கிறோம் இதுமட்டும் ஒருவனைப் பரம லட்சி யத்திற்கருகே அழைத்துச் செல்லமுடியாது. அழுகை கள், சோதனைகள் இவற்றிற்கு அப்பால உள்ள முழுமை யின் தவத்திற்குச் செல்ல இந்தக் கேள்வியறிவு போதாது. கட்டுகள், எல்லைகள் நீங்கிய இடமே

மோக்ஷம். அங்கே, தேசம், காலம், ஆபத்து என்ற மூன்று முனை கொண்ட பாவி வரமுடியாது. சிஷ்யன் ஆசாரியர்கள் கூறும் உண்மைகளைக் கேட்டுக்கொண்டு அவைகளை நேரடி அனுபவத்துக்குள் கொண்டு வருதல் வேண்டும். அப்பொழுதுதான் அந்த நிலையை அடைய முடியும். இந்த ஆத்மாதான் எங்கும பரவி நிற்கும் அகண்ட ஆத்மா என்று உணரவேண்டும. அப்பொழுது தான் மயக்கங்களும், லாபமற்ற துன்பங்களும் ஒழியும்.

பாதிக்கப்பட்ட பிரும்மன் (Conditioned Brahman
(நிலை மாற்றத்திற்குட்பட்ட பிரும்மன்)

உதாரணங்கள், விளக்கக் கதைகள், ஒப்புமைகள் கதைகள் எல்லாம் விவரிக்கமுடியாத ஒன்றை விளக்குவதற்காக உபநிஷத்தில் உபயோகப்படுத்தப்படு கின்றன. ஆகவே அவை ஒன்றும் வார்த்தைக்கு வார்த்தை உண்மையாய் இருக்கமுடியாது, அது போலவே அந்தப் பொருளும் பூராவாக விளககிவிட முடியாது. எனவே கதையால் லாபமடைய வேண்டு மென்றால் சிஷ்யன் நன்றாக ஆழ்ந்து யோசித்துப் புரிந்து கொள்ளவேணடும்.

ஒரு விதத்தில் பார்க்கப்போனால் பக்தி மார்க்கத் தில் மூர்த்திகளைப்போல, கதைகள் வேதாந்த மார்க்கத் தில் உபயோகப்படுத்தப்படுகின்றன. கோவிலிலுள்ள எந்தக் கல் உருவமும பக்தனுக்கு அமைதியையும் இன் பத்தையும் பூரணமாகத் தந்து விடமுடியாது. ஆனால் மூர்த்தியில்லாமல் ஆத்ம முன்னேற்றம சாத்தியமா காது. மூர்த்தி வழிதான்-ஆத்மபோதம்தான்-இலட்சி யம். இலட்சியத்திற்குப் பதில் வழியை வைத்துக கொண்டு குழம்புவது வருத்தத்திற்கு அழைத்துச் செல் லும வழியில் நடந்து செல்வதாக முடியும். பக்தி மார்க் கத்தில் மூர்த்தி சம்சாரத்திலிருந்து எகிறித்தன்னுள்ளே ஆழும் நிலைக்குள் குதிக்க உபயோகப்படும குதிபலகை யாம். பக்தன் ஆத்ம சமர்ப்பணத்தின் மூலமோ அல் லது விவேகத்தின் மூலமோ பொய்யான 'தன்' கனவி லிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு தானே ஆத்மன் என்கிற உண்மையில ஒன்றும்போதுதான் உயர்ந்து சிறந்த அந்தத் தெய்வ உணர்வு அடையப்படுகிறது.

இந்த மெய்மையற்ற பொருள்களிலிருந்து ஒதுங்கி மெய்மைப் பொருளுடன் ஒட்டும் செயல்தான் பூர ணத்துவம் அடையும் முறையாம். மனதையும் புத்தி

யையும் தன் இஷ்டப்படி நடத்தும் வகை தெரிந்தவன் தான் இந்த முறையை நல்ல முறையில் கையாள முடியும். ஈசுவரனின் பெருமையையும் அழகையும் சிந்திக்க எண்ணி தியானத்தில் அமர்ந்தவன் வழியை மீறிப் புதர்களில் சிக்கிக்கொள்ளும்படி மனதை அனுமதிப்பவனின் ஆன்மீக யாத்திரை வருந்தத்தக்க ஒரு முறையில் முடிந்துவிடும். மனதை அடக்கி ஒருமுகமாகச் செலுத்தும் ஆற்றல் சாதகர்களுக்கு இஷ்டமூர்த்தியின் பாதாரவிந்தங்களில் பக்தி செலுத்துவதினுலோ அல்லது விளக்கங்கள கருத்துக்களில் மனதை நிறுத்திச் சிந்திப்பதாலோதான் கிடைக்கமுடியும்.

ஒருவனுக்குப் பக்தி மூலமாகவோ கர்மம் அல்லது ஞானப் பாதை வழியோ, இந்தத் தியான சக்தி என்ற விலைமதிப்பற்ற பொக்கிஷமும், உள் தூய்மையும், கடவுளின் அருளும் கிடைத்துவிட்டதனுல் வழியின் கடைசிப் பகுதிப் பிரயாணத்தை அவன தானே முடித்துவிடுவான். சாதகன் தானே ஆத்மன் என்று உணரும் அநத வேளையில்—பக்தன் தன் இஷ்ட தேவதையுடன் பூரணமாக ஒட்டிவிடும் அநத வேளையில்தான் ஞானியும பகதனும் பரம பூரணத்வத்தை அடைகிருன். சாதகர்கள் எந்த வழியும் நடந்து இந்தக் கடைசிப் பகுதியை நடந்து முடிக்கலாம். உண்மையாகவும் தொடர்ந்தும ஒரு வழியைப் பின் பற்றுவதால் ஒருவன் தான ஏற்றுக்கொண்ட வழியிடம் ஒருமாதிரி அன்பு கொண்டு விடுகிருன். சில சமயம் அந்தப் பள்ளததிலிருந்து வெளியேறித தெய்வ ஒளி வெளியில் வருவதற்குத் தைரியமும், துணிவும ஏன் சில சமயத்தில் பலாத்காரம் கூடத தேவையாய் விடுகிறது. கடைசிப் பகுதியைத் தாண்ட குரு ஒரு எத்து எத்திவிட வேண்டியிருக்கிறது.

பாரசூட்டில் ஏறும் ஒருவன் உதாரணத்தை நாம் எடுத்துப் பார்க்கலாம். இன்று எவ்வளவு கெட்டிக்காரனுயிருந்தாலும் முதன் முதலில் முதல்தரமாகக் குதித திருக்க வேணடும். அறைக்குள்ளே பலகை சாக்குகட்டி இவைகளுடன் பலவித விளக்கங்களுடன் படங்கள வரைந்து காட்டி, குடையுடன் குதிககும் வகையெலலாம் சொல்லித் தந்திருப்பார்கள். குதிப்பதில் பயம் ஒன்றுமில்லை என்றும் சொல்லியிருப்பார்கள். இவவளவு கேட்டும், குதித்தவர்களின் நேரடி அனுபவத்தை அவர்கள சொல்லக் கேட்டும் தன் கண்ணுலேயே அவாகள் குதித்ததைப் பார்த்தும்கூட ஒருவனுக்குத் தைரி

யம் வராது. ஏரோப்ளேன் வாசலில் குதிக்கவேண்டிய கதவருகில வந்து கீழே பார்த்தவுடன், குதிககவேண்டிய உயரத்தையும், தூரத்தையும் பாரத்தவுடன் மனித இயறகை படைதத எவனும் அருதித்தான் நிற்பான். அவனுக்குச் சொல்லித் தந்தவாகளும், அவனுடைய தோழர்களும் சேர்ந்து அவனைக் குண்டுகட்டாயக் கட்டி வீசி எறியவேணடும். அநத நிலையில் 'புது அனுபவம் உள்ள அறியா உலகத்தில' அவன படிதத பாடங்கள் எல்லாம் தாமாகவே உதவ வந்துவிடும இப்படி முன் பின் அறியாத இந்த அனுபவ உலகத்தில் இறங்கும வாயப்புக்கள் சில கிடைத்துவிட்டால் பிறகு அவன், எணணம் வந்தவுடனேயே தாராளமாக மனத் துணிவுடன் 'சததமிடும் ஆகாயககோட்டை' (விமானங்களிலிருந்து) ஈசுவரனுடைய வெளியில் இனிமையாக இறங்கும ஆசசரியமான அனுபவத்தைப பெற முடியும.

குருதான் அந்த 'உபாத்தியாயா'. அன்பும் உதவும் எண்ணமும் கொணடு உண்மை அனுபவ உலகத்திற்கு அந்த மாணவனை—தகுதி வாய்ந்த சாதகனை—தளளி விடுகிறுா. இந்தத் தளளிவிடுதல் என்கின்ற செய்கை உபநிஷத மந்திரஙகளின பொருளை அறிவிககுமபோது செயயப்படுகிறது. உபநிஷதங்கள் நம்முடைய மதத்தின் தத்துவப் பகுதியாகும். மத சாஸதிரம் எனபது குட்டையான கூரையுடைய உலகமாம். பகுத்தறியும் விவேகம் தலைதூக்கியவுடன் மத சாஸ்திரம் உடைந்து தூளாகி விழுந்து அழிகிறது. அந்த மாதிரி சமயங்களிலதான் மனிதன் பொறுமைகள், தப்பு அபிப்பிராயங்கள் ஆகிய உததரம தாழகுகட்டைகள் முதலியவற்றைத தாணடித தலையைத் தூக்கித் தத்துவம் எனகிற வானத்தில் பார்க்கிறுன.

அந்த யக்ஷன் கதையில் இந்திரன் அந்த மாதிரித் தகுதியடைந்த மாணவன. உமா தேவி தானே அவனுககுத தீக்ஷை செய்து வைககிறுள். 'அதுதான் பிரம்மன்' என்ற அறிவு மட்டும் ஆதம அமைதியான லட்சியத்திற்கு அழைத்துச் செல்லாது. அந்தக் கருத்தில் பிரம்ம வித்தையில் இந்திரனுக்குக் கிடைத்த இந்தத் தீக்ஷை முழுமையுள்ளது என்று சொல்ல முடியாது. இந்திரனுககு லட்சியத்தைப் பறறிப் பேச்சு அறிவுதான் கிடைததது.

ஸா ப்ரஹ்மேதி ஹோவாச ப்ரம்ஹணோ வா ஏதத்
விஜயே மஹீயத் தவமிதி ததோ ஹைவ விதாஞ்சகார
ப்ரஹ்மேதி. 4.1

குரு: அவள் வியந்து கூறினாள். "பிரும்மம். பிருமமத்தின் வெற்றி காரணமாக நீ பெருமை பெறறாய." அப்பொழுதுதான இந்திரன் அந்த யக்ஷன் பிருமமன் என்று அறிந்தான்.

இந்திரனுக்கு யக்ஷன் தன்மையைப் பற்றிக் கிடைத்தது செய்திதான் எனறாலும் சுருதி அந்த ஞானததின் பெருமையைப் பற்றித் தொடர்ந்து பேசுகிற தன்மை உபநிஷத ரிஷிகள் பிரும்ம வித்தையை மிகவும் உயர்த்திப பேசுகிறார்கள். தற்பெருமையும், கர்வமும் கொணட அக்னி, வாயுவும் கூட தேவ லோகத்தில தேவர்கள இடையே மதிபபுப பெற்றிருககின்றனர். ஏன் என்றால மூலப் பொருள்களின் தேவர்களான இவர்களுககுத்தான் தோறறம கொணட பரம்பொருளின் அருகே வரும வாயப்புக கிடைத்தது.

தஸ்மாத்வா ஏதே தேவா அதிதராமிவாந்யான் தேவான்
யதக்னிர் வாயுரிந்த்ரஸ தேஹயே நந்நேதிஷ்டம்
பஸ்பர் ஸாஸ் தேஹ்யே நத ப்ரதமோ விதாஞ்சகார
ப்ரஹமேதி 4.2

ஆகவே இந்தத் தேவர்கள் (வாயு, அக்னி, இந்திரன்) மற்ற தேவாகளை மிஞ்சியவர்களாகிறார்கள. ஏன் எனில் அந்த (பரமனுடைய தோற்றமான) யக்ஷனை நெருங்கினாகள் (அணுகினர்). அது பிரும்மன் என்று முதலில் அறிந்தவர்கள் அவாகளதான்.

விஞ்ஞானச் சிறப்பை யெல்லாம் அறிந்த நவீன உலகத்தில் இருக்கும் நமக்கு இந்தப் புகழ்ச்சி மிகவும் சீர் பெறாத ஒன்றாகத் தோன்றலாம. சுருதி அத்துடன் நிற்கவில்லை. சுய பூரணத்வம பெறும் ஞானத்தை மேலும புகழுகிறது. அது இந்திரன் வாயுவுக்கும் அக்னிக்குமே அரசனாகும் பெருமை பெற்றான் என்று பேசுகிறது. ஏன் என்றால் அவன் உமாதேவியின் வாயாலேயே நேரடியாகப் பிரும்மத்தின் தன்மையைத் தெரிந்து கொள்ளும அபூரவ வாயப்புப் பெற்றான்.

தஸ்மாத்வா இந்த்ரோ அதிதராமிவான்யான் தேவான்
ஸ ஹ்யேநந் நேதிஷ்டம் பஸ்பார்ச ஸ ஹ்யேநம் ப்ரதமோ
விதாஞ்சகார ப்ரஹ்மேதி. 4.3

அதனால் இந்திரன் மற்ற தேவர்களையும் மிஞ்சி நிற்கிறான். ஏன் என்றால் அவன் 'அதை' மிகவும் நெருங்கினான். அதைப் பிரும்மன் என்று முதலில் அறிந்தவனும் அவனே.

இந்திரன் தேவர்களுள் எல்லாம் சிறந்தவன் போலவே, யார் சுருதிகளைப் படித்துப் பிருமமத்தின் தன்மையை உணர்கிறானோ அவன் தன மக்களினத்துக்குள் சிறந்தவனாகிறான் அந்தப் பொருளைப்பற்றிக் கேட்டறிய சிஷ்யன மேலே விவரிக்கப்பட்ட வண்ணம் இந்திர ஸ்திதியை அடைய வேண்டும. அறியத் தீவிர ஆவல் வேண்டும். பணிவும சுயநலமற்ற தன்மையும கொண்டு தேட வேண்டும். தன வெற்றியில் வற்றாத நம்பிக்கை வேணடும். அந்த நிலையடையுவனைத் தான இந்திரன் நிலையில் இருப்பவனாகக் கொளகிறோம. அந்தச் சிஷ்யனுக்குக் குரு சொனனவுடனேயே உண்மைப் பொருள தன் பூரணத் தன்மையுடன் தானே வெளியாகும்.

முதன் முதலில் ஏற்படும உண்மை தரிசன நேரம் அதிகம் நீடித்திருககாது. திடீர் என்று மின்னல் வேகத்தில தோன்றி வரும். ஆகவே சாதகன் மிகவும் விழிப்புடனும், எதிர் பாரத்து நிறகும் புததியுடனும் இல்லாவிட்டால் அந்த ஒளி தோன்றும நேரததில் ஏமாந்து விடுவான். அதைத்தான் சுருதி பின்வரும் சுலோகத்தில நம் உடல், பிரும்மாண்டம் இந்த இரண்டிற்குமான இரணடு உதாரணம் கொடுத்து விளக்குகிறாள்.

தஸ்யைஷ ஆதேசோ யதேதத் வித்யுதோ வ்யத்யுததா
இதீந் ந்ய மீமிஷதா இத்யதிதைவதம 4.4

இது பிரம்மனின் விவரணம். அது மின்னொளியுடன் பிரகாசித்தது. இமை கொட்டுவதற்குள் மறைந்தது. இதுதான் தேவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும போது பிரும்மனின் விவரணமாம். (உலக சக்திகளாக அவன தோற்றம் தரும் விதம்.)

ஆதேசம் என்றால பிரும்மனை விளக்க மேற்கொள்ளும் ஒரு உதாரண விளக்கம். சாதகன அதை

நேரடியாக ஆத்மாவே என உணரும்அந் நிலை மிகவும் குறுகிய அளவில் மறையக் கூடியது. மிகவும் நெருங்கி உணர வல்லது என்பதைக் காட்ட மிகவும் அழகிய உதாரணம் தரப்படுகிறது. மின்னல் சற்று நேரமே நிற்கும். ஒளியும் கண்ணைப் பறித்து எங்கும் பரவும். அதைப் போலவே அந்த உண்மை உணர்வு நேரம் மிகவும் குறுகி இருந்தாலும் கடைசியில் அதன் பயனால் ஏற்படும் தெய்வ வாழ்வு அவனுள் மட்டும் இராது. அவனைச் சுற்றி எங்கணும் இருக்கும். அந்த உண்மை ஜோதி தரிசன நேரத்தில் அறிந்தது அறியாதது என்றெல்லாம் ஒன்றும கிடையாது. இரண்டற்ற அந்த ஒன்றுதான் இருக்கும. நானே அது என்ற உறவுதான் அது.

இமை கொட்டும் உதாரணம், தியானத்தில் அப்பாலுள்ள அந்தப் பரம பொருள் நிலையை அடைவது எவ்வளவு எளிது, மிகவும் இயற்கையாகவே தானே ஏற்படக் கூடியது என்பதை எடுத்துக் காட்டுகிறது. தியானத்தில் சிரமம எல்லாம் ஆரம்பத்தில்தான. நீந்தக் கற்றுக கொள்பவன் ஆரம்பத்தில்தான் முழுகுவது, தண்ணீர் குடிப்பது தத்தளிப்பது எல்லாம். அந்தக கலையை கற்றுககொண்டு விட்டால் பிறகு கயிற்றின் மேல் நடப்பவன் மிகவும் சுலபமாகத் தினம இரவில அதைச் செய்துகாட்டுவான் ஒரு சிரமமுமின்றி. அதைப் போலத் தியானம் பழகுபவனும் ஆரம்பத்தில் அவதியுறுவான. ஆனல் சீக்கிரமே நம்பிககை வளர வளர அவன் மேலேறி மிதப்பான். சுலபமாகவே ஆத்ம தரிசனம் செயவான்.

பிரும்மாண்டத்திலிருந்து கொடுத்த உதாரணம் போதாதென்று சுருதித் தாய் அன்பு காரணமாக மற்றொரு ஆதேசத்தை உடலிலிருந்தே கொடுக்கிறாள்.

அதாதத்யாதமம் யதேதத கசசதீவ ச மநோநேந
சைத துபஸ்மரத யபீக்ஷணம் ஸங்கல்ப: 4.5

உடலுக்குள்ளே ஆத்மனாக அந்தப் பொருள் எடுக்கும் தோற்றத்தைப் பார்வைக் கோணமாகக் கொண்டு விவரம் தந்தால்—ஒருவன் மனதால் பிரும்மத்தை நினைப்பது போல—மனம் இச்சை கொள்வது போல—அவ்வளவு வேகமாக.

சிரமமில்லாது சிக்கிரமாக ஒரு உண்மைச சாதுகன் உணமைப் பொருளை அடைவதில் பெறும் வெற்றியை விளகக இந்த மந்திரத்தில் மற்றொரு உதாரணம் தரபபட்டிருக்கிறது. கச்சதீவ, (வெளியே போவது போல) அபீக்ஷ்ணம (மீண்டும் மீண்டும்) என்ற இரண்டு சொற்களும் மனோ விஞ்ஞானத்தில் 'மனதால அறியும்' தததுவத்தைப் பற்றிப் பேசப்படும விதத்தை அப்படியே குறித்து நிற்கின்றன வேதாந்தம் அதுடே சும்விதத்தைப்பறறி நாம முன்னமேயே பேசியிருக்கிறோம். சைதன்யம் பெறறு இயங்கும் மனது, இந்திரியங்களின் மூலம் வெளியேறுகின்றது. அங்கே அவ்வப் பொருளாக உருவெடுககிறது அப்பொழுது மனதின் அதிகாரி (உடையவன்) அந்தப் பொருள்களைப்பற்றி அறிந்துகொள்கிறான்.

மீண்டும் மனம் ஒரு பொழுதும் இளைப்பாறி சும்மா இருப்பதில்லை என்பது மனோ விஞ்ஞான அனுபவமாம். மனது அதன் ஆழ்ந்த தூக்க நிலையில தமஸில் முழுகிக் கிடக்கும நேரம தவிர மற்ற நேரம் எல்லாம் ஒரே ஆரவாரமதான. விருப்பம் தூண்டிய எண்ணங்களாகிற பேய்கள தங்கள சாவுத தாணடவங்களை நிறகாமல் ஆடும் ஆட்டக் கூடமாக இருக்கிறது உள்ளே மௌனம் ஏறபட்டால அது அசண்ட ஆனந்தம்; பரிபூரண இன்பம, அது யோகி ஒருவனுககுத்தான் தெரியும. சாதாரண மனிதனுக்கு மனது பயங்கரப் புயல்களின் உத்வேக ஆர்ப்பாட்ட இடம். அலைகள் அலைகளாக எணணஙகள் எழுகின்றன. ஒன்றுக சொன்று மோதிகசொண்டு வெற்றிலிருந்து கிளம்பியது போலவே அங்கேயே அழிகின்றன.

ஒரு எண்ணம எழுகிறது என்று கொள்வோம். அது எழுகிறது. மிகவும குறுகிய நேரம நிலைக்கிறது, பிறகு அழிகிறது. கடல் அலையற்று இருப்பது நடவாதது போல மனமும் எணணமின்றி இருக்க முடியாது. ஆகவே ஒரு எண்ணம் மறைநதவுடன் மற்றொரு எணணம் எழுநது பல எண்ணங்களை வளர்க்கும் வண்ணம் மடிகிறது

எப்படியும இரண்டு எண்ணங்களின் இடையே ஒரு இடைவெளி இருக்கவேண்டுமல்லவா? அந்தச் சமயத்தில் மனம் எண்ணமின்றி இருக்கும். ஏற்கனவே நாம் பார்த்தபடி மனம் என்பது எண்ணஙகளின் நீரோட்டம்

தான். எண்ணம் இல்லாத நேரத்தில் மனமும் இல்லை, சுருதிகளின் முடிவு, மனம் அற்றுப்போன அந்த நேரத்தில் யோகி உண்மையில் ஆழ்ந்துவிடுகிறான்.

இப்பொழுது அபீக்ஷணம் என்ற அந்தச் சிறிய சொல் எவ்வளவு கருத்தை உள்ளடக்கி நிற்கிறது என்று தெரிய வரும். உண்மை தோன்றி மறையும் அந்தத் தன்மையை விளக்க நம் முன்னே உள்ள மிக சூட்சுமமான தத்துவம் உதாரணமாகத் தரப்பட்டிருக்கிறது. தியானத்தில் பெறப்படும் உண்மை திடீரென்று தோன்றி மின்னல் போல் மறையும். உண்மையை விளக்க இது எவ்வளவு சரியான உதாரணம் என்று உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிய வந்திருக்கும்.

தத்த தத்வனம் நாம தத்வன மித்யுபாஸிதவ்யம
ஸ ய ஏததேவம் வேதாபிஹைனம் ஸர்வாணி
பூதானி ஸம்வாஞ்சந்தி

பிரும்மன் தத்வனம் என்று அறியப்படுகிறது— எல்லா ஜீவன்களுடைய ஆத்மனைப் பூஜிக்கத் தக்கவன்.. எனவே அது தத்வனம் என்ற முறையில் தியானம் செய்யத் தக்கது. அதை இவ்விதம் எல்லோரும் அன்பு செலுத்துகிறார்கள்.

உபநிஷதம் இதுவரை சொல்லிவந்தவைகளை உணர இயலாத குறைந்த நிலை மாணவர்களின் உதவிக்காக உபநிஷத ஆசிரியர் இங்கே உபாசனைக்கு ஒரு வழி சொல்லித் தருகிறார்.

இந்நாட்களில் ஆத்மீக, மதத் துறைகளில் உபாசனை முறைகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. ஆனால் வேத காலத்தில் எல்லாச் சாதகர்களும் உபாசனை முறைகளை நன்கு தெரிந்துகொண்டிருந்தனர். குறிப்பிட்ட கருத்தைப் பற்றி அறிந்து அதைப் பிரும்மாண்டத்திலே செலுத்திப் பார்க்கும் ஒருமுக முயற்சியிலேயே நன்கு உறுதிப்பாட்டுடன் சிந்தனை செய்து நிற்க அவர்கள் முயன்று வந்தனர். மற்ற எண்ணங்கள் எல்லாம் அறவே ஒதுக்கி ஒரே எண்ணத்தைப் பற்றித் தியானம் செய்யும் தியானிக்கு உபாஸனையின் பயன் கிட்டுகிறது. வேதாந்தம் காட்டித் தரும் உண்மைப் பொருளைப் பெற விரும்புபவனுக்கு உபாஸனையின் பயன் விலைமதிப்பற்ற புனிதமான ஆன்மீகப் பொக்கிஷ

மாம். அதை அவன் தன் தியான சக்தியாலும் உள்புற வளர்ச்சியாலும் அடைகிறான்.

இந்தச் சமயம் மிகச் சில ஹிந்துக்களே உபாஸனை பழகுகிறார்கள். ஏற்கனவே அமைதியானதும் புத்தியை அடிப்படையில் கொண்டதுமான தியானமுறை இருந்து வந்தது. அதற்குப் பதில் இன்று அதன் புதுமுறை பக்தியில் இடம் பெற்றிருக்கிறது. அந்த வழியிலும் அன்பு, உதவேகம் இவைகளின் புயல் எழுப்பப்பட்டு தியான அமைதி நிலையை அடைகிறது. அந்தச் சிறந்த பக்தி மார்க்கம் நமக்கு வியாசரின் மேதை பொருந்திய புராணங்கள் மூலம் தந்ததாம. அது புராணக் காலங்கள் வரும்வரை ஆரியாகள் வெளியே அமைதியும் உளளே ஞானமும் வளர்நத ஒரு சூழ்நிலையில இடை யறாத ஆதம சோதனை மூலம் சுயநிறைவை அடைய முயனறிருபபதையே வாழ்வாகக கொணடிருந்தனர்.

தியானத்தைப் போலவே அதே ஆற்றலுடன் பக்தியும் சாதகனைப் பரிசுத்தனாகப் பகவானைப் பரம் பொருளாகத் தியானிக்கத் தயாராக்குகிறது. நிறைவு பெறாத சாதகர்களுக்கு நிர்விகல்ப சமாதி தியான நிலைக்குப் போவதற்கு முன் இந்தப் பயிற்சி அவசியம் தான். அதைததான் சுருதி அன்பும் கருணையும கொண்டு சொல்லித் தருகிறது. வேதாந்த சாதகன் பரம மெய்மைப் பொருளை தத்வனமாகத் தியானம் செய்ய வேண்டும் என்று அது சொல்லுகிறது. அதாவது எங்கும் ஊடுருவி நிற்கும் பொருளாகத் தியானம் செய் என்பது அதன் கருத்து.

சுருதியைக் கவனத்துடன் படிக்கிறவனுக்கு இங்கே சுருதி ஏறு மாறாகப் பேசுகிறதோ என்று தோன்றலாம். ஏன எனில் முனனே அது இந்தத தேவதையையும் உபா சிபபதை வன்மையாகக் கண்டித்திருக்கிறது. ஆனால் நன்கு கூர்நது பார்த்தால் சுருதி மூர்த்தி பூஜையை அப்படியே கண்டிக்கவில்லை, ஆனால் அது வழி மட்டுமே என்று உணராமல் முடிவாகவே ஏற்றுக் கொள்வதைத் தான் கண்டித்திருக்கிறது. பூஜையோ, உபாஸனையோ, தம்முள் தாமே இறுதி இலட்சியங்களல்ல. மனம, புத்தி, அநதககரணங்களைப் பதம் செய்ய அவைகள் வழியாக இருககின்றன. அவ்வளவுதான். இது கிடைத்தவுடன் சாதகன் மேலே சென்று அந்தக் கருவிகளை உயர்ந்த தியானத்திற்கு உபயோகிக்க வேண்டும். ஆனால்

ஜனங்கள விவேகம், துறவு மனபபானமை இல்லாத காரணத்தால் உபாசனையால் கிடைத்த தங்கம் போன்ற பயனை இந்திரிய சுகத்துககான விலை பேசிவிடத் தயாராய்விடுகிருர்கள். 'நைதம் யதிதமுபாஸதே'--இதல்ல நீ உபாஸனை செய்வது—என்று சொல்வது ஒரு எச்சரிக்கை. உபாஸனையைக் கேவலம் சிலலறைச் சுகங்களுக்கு, அல்லது அடுத்த உலகத்தில இடம் பிடிக்க என எண்ணுபவர்களுக்கு இது ஒரு எச்சரிககையாகும்.

"எண்ணுகிறபடி ஒருவன் ஆகிருன்" என்பது ஒரு நித்திய உண்மை. இந்த இயற்கைத் தத்துவத்தை எல்லாப் பெரிய மதங்களும் ஏற்றுக் கொள்கின்றன. ஈசுவரன் எங்கும் பரவி நிற்பவன், ஒவ்வொரு ஜீவனுள்ளும இருக்கும் இயக்க சக்தி அவனதான் என்ற உருவத்தில் தியானம் செய்யும சாதகன் தியானப் பொருளாகவே ஆகித் தன் தலைமுறை மக்கள எல்லோராலும் போற்றப் படுகிருன்.

சுய நிறைவு முறை

(ஆத்ம பூரணத்வம் அடையும் வழி)

உபநிஷதம் போ ப்ரூஷீதயுக்தா த உபநிஷத
ப்ராஹ்மீம வாவ த உபநிஷத மப்ரூமேதி 4.7

சிஷ்யன . ஐயா, எனக்குக் காபபாற்றும் ஞானத்தைச் சொலலித் தாருங்கள்.

குரு . காக்கும் ஞானம் உனக்குத் சொல்லித் தரப்பட்டு விட்டது. உண்மையிலேயே நாம் உனக்கு பிரும்மனுடைய காக்கும் அறிவைச் சொல்லித் தந்து விட்டோம்.

குரு சொன்ன உபநிஷத்தை அறியாத சிஷ்யன் போட்ட கேள்வி அல்ல அது. அதன் முறையில் இனிப் பாகித் தரவேணடிய அறிவு மிச்சம் இலலை என்பதைக் குறிக்க உபயோகிககும் முறைப்படி இநத விதம் சொல்லப்பட்டிருக்கலாம். தவிரவும் குரு புனிதமானதும் அவசியம வேணடியதுமான ஏதாவது விஷயத்தைப பாக்கி வைத்துக் கொண்டிருநதாலும் உபநிஷத்தின் பூரண அறிவுககாக மேலும்மேலும் குருவிடம் கேட்டுக் கொள்ள சிஷ்யன் கொண்டுள்ள ஆவலைக் குறிக்கிறதாகவும் இருக்கலாம்.

மேலும் இந்தக் கேள்வி சிஷ்யன் யோக முறையைப் பற்றியும், அதாவது உள் சுத்தம் பெறும் முறையைப்

பற்றிக் கேட்க விரும்புவதாகவும் கொள்ளலாம். உபநிஷத உண்மைகளைப் புரிந்துகொள்ளவே அந்தப் பயிற்சி தேவை. உண்மையை அனுபவித்து தெய்வத் தன்மை எய்த அது இல்லாமல் ஆகாது. இந்தக் கருத்துக்கு அடுத்த உபநிஷத மந்திரம் வலுத் தருகிறது. உபநிஷத மந்திரங்களைப் பூரணமாக அறிந்துகொள்ள தபஸ் தேவையென்று கூறுகிறது.

தஸ்யை தபோ தம : கர்மேதி ப்ரதிஷ்டா வேதா
ஸர்வாங்கானி ஸத்ய மாயதநம் 4.8

தவம், தன்னடக்கம், அர்ப்பணிக்கப்பட்ட காமம்— இவைகள் அதற்கு உபநிஷத்தின் காலகும் ஞானத்திற்கு ஆதாரம் வேதம் அதற்கு அங்கங்கள். உண்மை அதன் இருப்பிடம்.

முதல் மந்திரத்திலேயே குரு உபநிஷதம் பூராவையும் சொல்லி விட்டதாகச் சொல்லிவிட்டார். அப்படிச் சொல்லியும்கூட சுருதி பிறகு ஏன மந்திரங்களைச் சேர்க்கிறது என்று ஆச்சரியமாயிருக்கிறது. சம்பாஷணை நடையில் எழுதப்பட்ட உபநிஷத்தில் இப்படிச் செய்வது இலக்கிய நடையில் குற்றமாகாது. 'சிஷ்யன் எனக்குக் காககும் ஞானத்தை உபதேசித்து அருளுக' என்று கேட்டான் என்பது ஞாபகம் இருக்கும். இந்தப் பேச்சுக்கு இரண்டு கருத்துக்கள் இருக்க முடியும்: 1. உபநிஷதம் முடிந்து விட்டது என்ற அறுதியான பேச்சை அவன் குருதேவரிடம் நேரடியாக எதிர் பார்த்து இந்த விதம் கேட்டிருக்கலாம். 2. மறைமுகமாகப் பூரணத்வம் அடையும் முறை வகையைப் பற்றி இன்னும் தெளிவாகச் சிஷ்யன் அறிய விரும்பியிருக்கலாம்—குரு இந்திரியங்கள் இவைகளைச் செலுத்தும் ஆற்றற் பொருளைப் பற்றி ஒன்றும் விடாமல் விபரம் தந்துவிட்டார். என்றாலும் அவர் அந்தப் பரம ஞானத்தை மயக்கத்தில மறந்து நிற்பவன் அடையும் வகையை விவரமாகச் சொல்லவில்லை.

சுருதி சொன்ன இந்த ஆதம நிறைவை எப்படி அடையலாம் என்று கேட்பது ஹிந்து வேதாந்தத்தின் சிறந்த தனிப் போக்காம். பகுத்தறிவுக்கு மிகவும் ஒத்ததும், மற்றவைகளைச் சகித்துக் கொள்ளக்கூடியதும் உண்மை அன்பு கொண்டதுமான வேதாந்த மதத்தைக் கண்ட ஆரியப் பெரியார்களின் பண்பட்ட சிந்தனையைப் போல் வேறு எந்த இனமும் இவ்வளவு முழுமையும் நிறைவும் கொண்ட சிந்தனை செய்ததில்லை.

ரியச் சிந்தனையாளருக்குத் தத்துவ சாஸ்திரம் வாழ்க்கையைப் பற்றிய ஒரு கண்ணோட்டம் அல்ல. உணர்ச்சிக் கற்பனைப் பூப் பின்னல் அல்ல. சுவர்ககக் கனவுமல்ல. அவர்கள் நேரடியாக வாழ்க்கையில் ஈடு பட்டுச் செயலாற்றினவர்கள். இன்னும் கூட மேலே நாட்டினருக்குத் தததுவம் என்பது வாழ்க்கையைப் பற்றிய ஒரு நோக்குதான். ஆகவே அவர்களிடம் அடிப்படை ஆதாரங்கள் கிடையாது, உபதேசம் செய்ய. ஆகவே தலைமுறைக்குத் தலைமுறை வாழ்கையின் இலட்சியங்களை அந்தக் கால மக்களுக் கேற்றவாறு மாற்றவேண்டியிருந்தது. மாற்றுவது சுலபமாகவும் இருந்தது.

நம் மூதாதையருக்கு அது வாழ்க்கையைப் பற்றிய நோக்கு மட்டுமல்ல. அது வாழும் ஒரு வழியுமா யிருந்தது. வேதாந்தத்திற்கு சமஸ்கிருதத்தில் தரிசனம் என்று பெயர். அறிதல் என்ற கருத்துக்கொண்ட மூலச் சொல்லிலிருந்து வந்தது. உண்மை எவ்வளவு சூட்சும மாயிருந்தாலும்கூடத் தரிசிகளான நேரடிச செயலில் ஈடுபட்டிருந்த அவர்கள் ஒரு வெற்றுக் கனவுக் கருத்தைக் கொண்டு உண்மையைக் காணும் ஆசையைத் திருப்தி செய்து கொண்டிருக்க முடியாது. புத்தியின் உதவியால் ஒரு இலட்சியத்தின் பெருமையைக் கண்டார்கள் என்றால் உடனே அதை அவர்கள் வாழ்க்கைக்கு வழியாகக் கொண்டார்கள். அதைப்போல உண்மைப் பொருளைப்பற்றிச் சிந்தித்து அறிந்தார்கள் என்றால் மண்டியிட்டுப் போற்றிப் பூஜை செய்ய ஒரு மூர்த்தியைச் சிருஷ்டி செய்துவிட்டு அத்துடன் திருப்தியடைந்திருக்கவில்லை. ஆரியனுடைய சனாதன தர்மத்தில் 'நேரடியாக உணர்தல்' தான் உண்மைப் போக்காம். கவிதை எழுதுவது பல வர்ண வார்த்தைப் பின்னல்கள் செய்வது எல்லாம் அவர்களுக்குச் சிறு பிள்ளை விளையாட்டு. அவர்கள் பண்பாடு கனவுப் பரம்பரையல்ல.

உபநிஷத் தலைமுறைக்குத் தக்க பிரதிநிதியாக இருக்கும் தகுதியுடைய அந்தச் சிஷ்யன் கேட்ட கேள்வியில கருத்துக்கள் அதிக ஆழத்தில் இருக்கின்றன. இலட்சியத்தைப் பிடிக்கக் கருத்துக் கொள்வது ஆரிய சிந்தனையாம். அதையே வாழ்க்கையில் கொள்வது அவர் வாழ்க்கை வழியாம். அதை நன்கு உணர்ந்த குரு

தேவரும் இந்த மந்திரத்தில் சனாதன தர்மத்தின் நான்கு எல்லைகளாக உள்ள பொருளை நன்கு விளக்குகிறார்.

அந்தப் பரம உண்மைப் பொருள் அதாவது இன்றைய பேச்சில் தெய்வ தத்துவம், தவம் (பிடிவாத மான நல்ல வாழ்க்கை) புலனடக்கம் அர்ப்பணம் செய்யப்பட்ட சுயநலமற்ற வேலை இவைகளின் ஆதாரத்தின் மேல்தான் தங்கியிருக்கிறது என்று உபநிஷதம் கூறுகிறது. ஜீவன் சூட்சுமத்தில் சூட்சுமமான அந்தப பொருளை உணர்ந்து பெறத் தகுதியான பக்குவத்தை அடைய வேண்டுமானால் இந்தக் குணங்களைக்கொண்டு வாழவேண்டும் என்பது உபநிஷத்தின் கருத்து. இதை சாதாரண அறிவுள்ளவன்கூடக் கண்டு கொள்ளலாம. உலகில் எந்த மதமும் வேறு கொள்கைகளைப போதிக்காது. இன்று இவைகளை விட்டுப் பொல்லாத வாழ்வு வாழ்கின்றோம என்றால் அதுதான் நம் தனி வாழ்வு, சமூக வாழ்வு, தேசீய வாழ்வு உலக வாழ்வுகளை அழிக்கும் பாம்பு. அந்த வாழ்வின் காரணமாகவே இந்தச் சிறந்த பண்பாடுகள் கெட்டன. அந்த நற்பண்புகள உண்மை வாழ்வை ஆக்கி நலம் பயக்கக கூடியவை. அவற்றை நாம் யோசனையின்றி ஒதுக்கி விட்டோம்.

சாதகன் மனம் கேட்கும் இன்பத்தைத் தர மறுக்கும் ஆற்றல் கொண்டவனாதல் வேண்டும். இல்லை என்றால் அவன் ஆத்மீகத்துறையில் முன்னேறமுடியாது மனம் உள்ளேயுள்ள கனவுலகத்தின் அச்சு. அது அப்படித்தான் எதையாவது பித்துப்பிடித்துக் கேட்டுக் கொண்டேயிருக்கும். அதை ஒதுக்கித் தனித்து நிற்கும் சுதந்திரமும் ஆற்றலும் இல்லாத பெண்மை கொண்டவனுககு ஏற்பட்டதலை மதம். புலனின்பப் பொருள்களான மணற் குவியல்களிடையே ஆசைகளின் கூட்டில் விளையாடவே ஓடும் இந்த மனதின் அசட்டு ஆசைகளுக்கு 'முடியாது' என்று சொல்லும் துணிவுகொண்ட பலசாலிதான், குறிப்பிட்ட திட்டப்படி ஆத்மீகப் பாதையில் முன்னேற முடியும். அதனால்தான் சுருதி பண்பட்ட நல்ல வாழ்க்கையை (தவத்தை) வலியுறுத்துகிறது. 'உண்மைக் கோவிலுக்கு' தபஸ் அஸ்திவாரத்தில் ஒரு பகுதி என்று சொல்லுகின்ற வரையிலும் கூட அது அதன் பெருமையை எடுததுச் சொல்கிறது.

இந்திரியங்கள் தங்கள் மிருக இச்சைகள் காரணமாக மறையும் இன்பத்தைக் காணும் ஆவலுடன் புறப்

பொருள்களிடம் பாயும் பாய்ச்சலைத் தடுப்பதற்குத் தபஸ உதவிபுரியும். தமம் (புலனடக்கம்) என்பது ஆசையை முளையிலேயே அடக்குவதாம். இரண்டுமே தன்னடக்கத்தின் இரணடு பக்கங்கள்தாம். ஒன்று உடல் அளவில உள்ள கட்டுப்பாடு, அடுத்தது மனமும் ஏற்றுக்கொள்ளும் அடக்கமாம். சுருக்கமாக, ஓரளவு தன்னடக்கம் இல்லாமல் சுயபூர்ணத்துவம் இயலாத ஒன்ருகும். குருடன் தன் ஒரே மகனை ஒரு முறையாவது பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுவது போல்தான் ஆகும்.

சாதகனின் உடல் மனம் இரண்டும் சுத்தம அடைந்து, புனிதமடைந்து, தெய்வீகத் தன்மையை அடைந்த பிறகு, சுருதி அவனிடம் சுயநலமற்று அர்ப்பணிக்கப்பட்ட செயலை எதிர பாரக்கிறது. நீங்கள் ஆச்சரியமாகக கேட்கலாம். "நீர் சொல்வது உண்மையாஞல் 'கர்மம் பரம உண்மையின எல்லைக் கற் களில் ஒன்று' என்று சொல்லும் சுருதி வாக்கியத்திற்கு என்ன பொருள் ?"

பிரும்ம வித்தையில் கர்மம் என்ருல் தார்மீகக் கிரி யைகள் அல்லது முழுசாக ஆனமீக சாதனைகள் அனைத தையும் குறிக்கும். பூஜை, பிரார்த்தனை, சத்சங்கம், ஜபம், தியானம் என்று பகதன் செய்யும் எல்லாமே கர் மததின்பாற்படும். ஏதோ உடனே லாபம் கிடைக் கும் அல்லது அடுத்து ஏதோ நன்மை ஏற்படும் என்று விரும்பி ஒருவனும் பூஜை, பிரார்த்தனை இந்தச் செயல் களில் ஈடுபடக் கூடாது என்று சுருதி புத்திமதி சொல்லுகிறது.

சுயநலமற்ற 'கோபியர் அன்பு'டன் பக்திசெய்தால் அந்தந்தத் தெய்வ ஒளி நம்முள்ளேயும் வெளியேயும பரவும். அந்தக் கண்ணன் நம் உண்மைத் தன்மையி லிருந்து கடைந்து எடுத்த வெண்ணெய்போன்ற பதிவு களையும் திருடித் தின்று மறைந்துவிடுவான்.

உள்ளேயும் வெளியேயும் உண்மை, நம்பிக்கை நேர்மை இவற்றுடன் கட்டுப்பாடு தன்னடக்கம் பயின்ற ஒருவன் இந்தக் கருமங்கள் செய்யத் தகுதி யுடையவஞக ஆகிருன். அவன்தான் உண்மைப் பிரா மணன். அப்படிப்பட்ட கர்ம யோகி ஒருவன் ஒப்பற்ற

நம் ஹிந்து மதம் சொல்லித் தந்த நான்கு முக்கிய சாதனை வழிகளைப் பக்தியுடனும், உறுதியுடனும், மேற் கொண்டானானால் அவன் தியான வகுப்புகளுக்கு அரிச் சுவடி தூக்கும் தகுதியை அடைகிறான். பழக்கம் ஏற் பட்டு பொறுமையுடன் நீண்டகாலம தியானங்கள் செய்து அவன் உண்மைப் பொருளை உணர்ந்து அதில் வாழும் வாயப்பைப் பெறுகிறான்.

அநேகமாகக் கடைசி மந்திரமான இதில்தான் உபநிஷதம் தருகிற தத்துவப பொருளகள், வாழ்ககை யாக அமைய ஒருவன் ஏற்றுக்கொள்ள வேண்டிய வாழக்கை முறை தரப்பட்டிருக்கிறது. அதனாலதான அதன் கருததுக்கள் ஆழநதிருககினறன அதன் சுட்டுக் கள தொலைவுவரை தொளைத்திருக்கின்றன ஒவ்வொரு முறை புத்திப் பட்சி பாயுமபோது அலகு நிரமபப் புதுப் புதுக் கருததுககளை எடுத்துத் தருவது சாத்தியமாகிறது.

இந்த மந்திரம வேதங்கள அதன் அங்கங்கள் என்று பேசுகின்றன. பரம மெய்மைப் பொருளுககு அங கங்கள ஏது? அது என்ன பெயர் தோறறம ஏறகும் ஒரு பொருளா? கருதது இது தான். உபநிஷதம் பேசும் ஆத்மப் பொருளை அடைய விரும்பும் மாணவனுக்கு ஆறு உபவேதஙகளும ஆதாரமாம. அதை நாம் இப்படி யும் கொள்ளலாம். படிக்காத ஒருவன பயிற்சியில் மட்டுமே உணமைப பொருளை உணாநது விட்டானானல் அது மகா ஆச்சரியமதான. என்றாலும் சுருதி சொல் வதன பொருள இதுதான: கல்வி வீணல்ல. எந்த ஞானமும் அனுவசியமலல எந்த அனுபவமும் அதிக மாகாது. அவை எல்லாம மெய்மைப் பொருளை நோககி நாம் செல்லும யாத்திரைகதும உதவுமபடி நாம் செயது கொளளமுடியும்.

சத்யமாயதனம்—உண்மையின் இருப்பிடம் அந்த மெய்ப பொருள்—என்ற பேசமுடியாத இநதச சொலலில்தான் எவவளவு கருத்துககள பொதிநதிருக கினறன? அரிச்சந்திரனை ஒத்த உணமை விரதம் எடுத் துக் கொள்ளாத எந்தச சாதகனும் உணமையின கர்ப் பககிரகத்திறகுள் செல்ல முடியாது. ஆகவே பிராமணன் (சாதகன எனறு கருத்து) மனம், வார்த்தை, செயல் மூன்றிலும் உணமையைக் கடைப் பிடிககவில்லை எனறால் அவன் உபநிஷத நிலையிலிருந்து பார்க்குங்கால்

'சண்டாளனே'. அவனுக்கு உண்மைப் பொருளை நெருங்கும் தகுதி கிட்டாது.

உபநிஷதம, மெய்ப்பொருள் உண்மையில் இருக்கிறது என்று அறுதியிட்டுப் பேசுகிறது. வியவகாரத்தில் சுத்தமில்லை என்றால் பரமார்த்தமான வழியில் எந்தச் சாதனையும் பயன் பெறாது. சாதகன் எல்லாச் சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டுத் தொலைவில் ஒதுங்கி இருக்க வேண்டும். அவன் ஆத்மீக வாழ்வோ உலகியில் நீதி வாழ்வோ சுத்தமாக இருக்க வேண்டும்.

யோ வா ஏதா மேவம் வேதாபஹத்ய பாப்மான மனந்தே ஸ்வர்கே லோகே ஜ்யேயே ப்ரதி திஷ்ட்டதி ப்ரதிதிஷ்ட்டதி. 4.9

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

எவன் ஒருவன் அதை இவ்விதம் அறிகிறானோ அவன் (உண்மையில்) பாபத்தை அழிக்கிறான். எல்லை யற்றதும் உயர்ந்ததும் ஆனந்த ரூபியுமான அந்தப் பிரும்மத்தில் நிற்கிறான் ஆம் அதில் நிற்கிறான்.

கடைசி மந்திரம் இது. இதைப் பேசும் மெய்ப் பொருள் கண்டார், இதுவரை பேசி வந்த பேச்சைப புரிந்து கொண்டவன் அந்தப் பரம்பொருளை அடைவான் என்று வலிவுடன் கூறுகிறா. உபநிஷதங்கள் அப்படித்தான் பேசுகின்றன. "பிரும்மத்தை அறிதல் என்பது பிருமமமாதலே." மென்னியைப் பிடிக்கும் கட்டுககள், தூற்றத்தக்கச் செயலின்மை எல்லாம் நாம் உணமைத் தனமையை அறியாமல் ஏற்றுக் கொண்ட அசட்டுத் தனமே. தொலைநது விட்டோம் என்று தப் பாக எண்ணி நாம அழுது கண்ணீர் விட்டுக் கண்களைக் கசக்கி நிற்கிறோம்! இது மயக்கம, இதை ஒழித்து மீண் டும் நம்மை நாம் அறிய வேண்டும. நம் உண்மைத் தன்மை அந்தப் பரமானந்த நிலைதான். ஞானம்தான் இந்த அறியாமை வியாதிககு மருந்து. பாம்பில் உள்ள கயிறைக காணுவதுதான் இருட்டில் அது கடித்து ஏறிய விஷத்தைத் தணிக்கும் உண்மை மருந்தாம்.

ஒரு முறை ஒரு பெண் தன் தங்கச் சங்கிலியைத் தொலைத்ததாக எணணினுள். வீட்டிலும அடுத்த வீட்டு வாசலிலும் தேடினுள். அதை நினைகக நினைக்க அவள அழுகையும் ஆத்திரமும் அதிகமாயின. அப்படி அழுது

அலங்கோலமாய விழுந்து கிடந்த நிலையில் வந்தான் அவள் கணவன். அவள அவனிடமும் அழுதாள் தன் கதையைச் சொல்லி. அவன் விழித்தான் ''அதோ உன கழுத்தில என்ன?'' என்றான் அவளுக்கு அவனிடம் மட்டற்ற மரியாதை உண்டு. நடுங்காத நமபிக்கையுண்டு. மெதுவாகக் கைவிரல்களால் தன் கழுநதைத் தடவிப் பார்த்தாள். விரல் சங்கிலியின் ஒரு கணுவில் பட்டது. சங்கிலி தன்னிடம்தான் இருக்கிறது என்ற எணணம் உடனே வர அவளும் தொலைநதிருந்த தன் அமைதியை யும் ஆனந்தத்தையும மீணடும் பெறறாள.

சங்கிலி புதிதாக வரவில்லை. அங்கேதான் அது இருந்தது. இல்லையென்று அவள கொணட பிரமை தான அவள் அழுகைக்குக்காரணமாயிறறு. எப்பொழுது தொலையவில்லை என்ற அறிவு வந்தவுடன் பரபரப்பு அடங்கிப் பிரமைஏற்படும் முன்பு கொண்டிருந்த அமை தியை அந்தப் பெண் அடைந்து விட்டாள். அதாவது சங்கிலி பூண்டு ஏற்கனவே இருந்த அநதப் பெண்தான இப்பொழுது நான் எனறும அதைச் சொல்லலாம் ஆகவே அறியாமை அறிவுக்கு இடம் தந்தவுடன் அவள் பழைய பெண்ணாக மாறிவிட்டாள்.

நாம் ஈசுவரனேதான் என்றாலும் நம்முள்ளே உள்ள ஆத்மா தான் ஜீவன் என்று நம்புமா அறி யாமையை ஏற்றுக் கொள்கிறது. இவ்விதம் நம்பி அது தெய்வத் தன்மையை இழந்து கஷ்டத்தையும், வருத தத்தையும் அனுபவிககிறது. ஜீவனுக்குப் பதி சற்குரு தான். அவர் ஜீவனின் வாழ்க்கை வீட்டில் நுழைகிறார். 'தெய்வத்தன்மை தொலையவிலலை; அங்கேதான் ஒளிவீசி அழகாயிருககிறது'' என்று சொல்லித் தருகிறார். ஜீவன் முதலில் அவரிடமுள்ள பக்தி காரண மாகவே நம்புகிறான். பிறகு தானாகவே தான் தான் அது என்று கண்டு பிடித்து அந்த நிலையை அடைகிறான். ஆத்ம போதம் ஏற்பட்டவுடன் அவன் ஆத்மாவாக ஆகி விடுகிறான்.

ஆத்ம ஞானத்தின் இந்தத் தத்துவம்தான் வேதாந் தத்தின் ஆதாரத் தத்துவம். கேனோப நிஷத்தின் கடைசி மநதிரம் இந்தக் கருத்தைத்தான் குறிக்கிறது. அதைஅறிந்த யாரும் உபநிஷத இலககியம் முற்றிலுமே இது ஒரு மிகச் சிறந்த மந்திரம் எனறு ஒத்துக்கொள்ளா மல் இருகக மாட்டார்கள். ஒரு வாசகன் மந்திரத்தின்

உள்ளே பிரவேசித்தால் அவன் இந்த உண்மையின் அப்சரஸமான மந்திரத்தின் சிறப்பையும், ரகசியமான அழகையும் கண்டு கொள்வான்.

ஓம் ஸஹ நாவவது ஸஹநௌ புனக்து ஸஹ வீர்யம் கரவாவஹை தேஜஸ்வி நாவதீத மஸ்துமா வித்விஷாவஹை

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி

"அவன் (ஈசுவரன்) நம்மிருவையும் காக்கட்டும் அவனை நாம் சேர்ந்தே உணர்வோம். நாம் சேர்ந்து முயறசி எடுப்போம். நம் படிப்பு பயன பெறட்டும். நாம சண்டையிடாமல் இருப்போமாக."

'ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி'